டிசம்பர் 2009

115

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

பொன்னுத்துரை உலக இலக்கியத் தரத்தினைத் தொடுவதற்கு ஓடிக்கொண்டிருக்கும் ஒரு எழுத்தாளர்

-மு. தளையசிங்கம்

பாரதி, புதுமைப்பித்தனுக்குப் பிறகு தமிழின் மிகச் சிறந்த ஆளுமையென்று என்னால் எஸ். பொ. வை மட்டுமே கருதமுடிகிறது

-முனைவர் பா. இரவிக்குமார்

... வள்ளுவர், இளங்கோ, பாரதீ, புதுமைப்பித்தன் முதலியவர்களை உள்ளடக்கிய முதல்வரிசையில் இடம்பெறும் முழுத்தகுதி எஸ். பொ வுக்கு உண்டு

-கோவை . ஞானி

தமிழுக்கு புதிதும் உயிர்ப்பும் புகுத்தியவர்கள் மூவர். அவர்களுள் பாரதியும் புதுமைப்பித்தனும் காலத்தால் மூத்தவர்கள். மூன்றாமவர் இன்று நம்மத்தியில் வாழும் எஸ். பொ.

பேராசிரியர் ஆ. சி. கந்தராஜா



எஸ். பொ. சிறப்புமலர்

விலை: 50/=

www.gnanam.info

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

ஒளி – 10 சுடர் – 07

**பகிர்தலின் மூலம்
விரிவும்
ஆழமும்
பெறுவது
ஞானம்**

ஆசிரியர் :
**தி. ஞானசேகரன்**

இணை ஆசிரியர் :
**ஞானம் ஞானசேகரன்**

ஓவியர்கள் :
**கௌதமன்**

தலைமை அலுவலகம் :
**19/7, பேராதனை வீதி, கண்டி.**

தொடர்புகளுக்கு... :
**தி. ஞானசேகரன்**
**ஞானம் கிளை அலுவலகம்**
**3-B, 46ஆவது ஒழுங்கை,**
**கொழும்பு – 06.**
**தொலைபேசி : 011 –2586013**
**0777–306506**
**+61 02 80077270**
**தொலைநகல்: 2362862**
**E-mail : editor@gnanam.info**
**Web : www.gnanam.info**

**வெளிநாட்டு, உள்நாட்டு வங்கித் தொடர்புகள்:**
**Swift Code :- HBLILKLX**
**T. Gnanasekaran**
**Hatton National Bank - Wellawatte Branch**
**A/C No. 009010309024**

## ● கவிதைகள்

நாச்சியாதீவு பர்வீன் 26
வே. தினகரன் 28
வட அல்வை க. சின்னராஜன் 35
அல்வாயூர் சி. சிவனேசன் 37
த. ஜெயசீலன் 63

## ● எஸ்.பொ. பற்றிய கட்டுரைகள்

முனைவர் பா. ரவிக்குமார் (தமிழ் நாடு) 03
கோவை ஞானி (தமிழ் நாடு) 07
பேராசிரியர் ஆ. சண்முகதாஸ் 13
கலாநிதி துரைமனோகரன் 21
க. இரகுபரன் 24
தெளிவத்தை ஜோசப் 27
கலாநிதி செ. யோகராசா 32
செங்கை ஆழியான் 34
பேரா. த. பழமலய் (தமிழ் நாடு) 36
காவேரி (டெல்கி) 39
ச. முருகானந்தன் 40
கலாநிதி முல்லைமணி 41
சை. பீர்முகம்மது (மலேசியா) 43
மா. பாலசிங்கம் 45
கே. எஸ். சிவகுமாரன் 48
எஸ். சந்திரபோஸ் (கனடா) 49
சின்னராஜா விமலன் 52
ஜீவகுமாரன் (டென்மார்க்) 56
திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் 58
தம்பையா கயிலாயர் 62
ஏ. சபாரட்ணம் 64
திருமதி லலிதா நடராஜா 66
கலாபூஷணம் மாத்தளை கார்த்திகேசு 68
என். செல்வராஜா (லண்டன்) 70
பாடுமீன் சு. ஸ்ரீகந்தராசா (அவுஸ்திரேலியா) 72
குறமகள் (கனடா) 74

## ● சிறுகதைகள்

எஸ்.பொ. 14
அகளங்கன் 29
வேல் அமுதன் (குறுங்கதை) 81

## ● விமர்சனம்/ முன்னுரை

தி. ஞானசேகரன் 77

## ● சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

குறிஞ்சிநாடன் 84

## ● பத்தி எழுத்து

மானாமக்கீன் 79
கே. விஜயன் 82

## ● வாசகர் பேசுகிறார் 86

ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகட்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல் வேண்டும். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு. **– ஆசிரியர்**

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்.

# எஸ்.பொ. என்கிற தலைமைப் படைப்பாளி

எஸ்.பொ. இன்றைய தமிழிலக்கியத்தின் தலையாய படைப்பாளி. அறுபது வருடங்களுக்கு மேலாகச் சளைக்காது எழுதிவரும் எஸ்.பொ. தடம்பதிக்காத இலக்கியத் துறைகள் எதுவுமே இல்லை எனலாம். சிறுகதை, நாவல், நாடகம், வானொலி நாடகம், கட்டுரை, உருவகக்கதை, கவிதை, Creative essays, ஆய்வு, மொழி பெயர்ப்பு, பத்தி எழுத்து, பதிப்பு முயற்சிகள் என இவர் சகல துறைகளிலும் தடம் பதித்துள்ளார். இவ்வாறு சகல துறைகளிலும் தடம் பதித்த ஒரேயொரு ஈழத்து எழுத்தாளர் எஸ்.பொ. மட்டுமே.

இவரது எழுத்து நடை சிறப்பு வாய்ந்தது என்பதை இவரது கருத்துக்களுடன் முரண்படுபவர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர். சொற்களைச் செதுக்கியும் புதுக்கியும் வீரியம் ஏற்றும் வல்லாளர் இவர்.

2000 பக்கங்களைக் கொண்ட இவரது 'வரலாற்றில் வாழ்தல்' என்ற நூல் தமிழில் வெளிவந்த அதிக பக்கங்களைக் கொண்ட சுயசரிதையாகும்.

அறுபதுகளில் முற்போக்கு அணியினருடன் முரண்பட்டு இவர் முன்வைத்த 'நற்போக்கு' இலக்கியக் கோட்பாடு பெருஞ் சர்ச்சைக்கு உள்ளாகியது.

முன்னணி ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள் சிலர் எஸ்.பொ. பற்றி பின்வாறு பதிவு செய்துள்ளனர்:

"பொன்னுத்துரை உலக இலக்கியத் தரத்தினைத் தொடுவதற்கு ஓடிக்கொண்டிருக்கும் ஓர் எழுத்தாளர்" என்கிறார் மு. தளையசிங்கம்.

"பாரதி, புதுமைப்பித்தனுக்குப் பிறகு தமிழின் மிகச்சிறந்த ஆளுமையென்று என்னால் எஸ்.பொ.வை மட்டுமே கருத முடிகிறது" – இது முனைவர் பா. இரவிக்குமார் கணிப்பு.

"வள்ளுவர் இளங்கோ, பாரதி, புதுமைப்பித்தன் முதலியவர்களை உள்ளடக்கிய முதல்வரிசையில் இடம்பெறும் முழுத்தகுதி எஸ்.பொ.வுக்கு உண்டு." என்பது கோவை ஞானியின் கூற்று.

"தமிழுக்கு புதிதும் உயிர்ப்பும் புகுத்தியவர்கள் மூவர். அவர்களுள் பாரதியும் புதுமைப்பித்தனும் காலத்தால் மூத்தவர்கள். மூன்றாமவர் இன்று நம்மத்தியில் வாழும் எஸ்.பொ." என்கிறார் பேராசிரியர் ஆ.சி. கந்தராஜா.

"தமிழ்ச்சிறுகதை இலக்கியத்திற்கு முன்பு இல்லாத ஓர் ஆழத்தையும் புதுமையையும் தந்தவர் புதுமைப்பித்தன் என்றால் அந்த இலக்கியத்துக்கு ஒரு கனிவான செறிவையும் மெருமையையும் தந்தவர் எஸ்.பொ." என்பது முனைவர் சாலினி இளந்திரையன் கணிப்பீடு

யாழ்ப்பாண வழக்குத் தமிழைக் கையாள அவரைவிட்டால் வேறுயார் இருக்கிறார்கள்? என வியக்கிறார் பிரபல எழுத்தாளர் அ. முத்துலிங்கம்.

இத்தகைய பெருமை வாய்ந்த எஸ்.பொ.வை ஓரங்கட்ட முயன்றவர்கள் முற்போக்கு அணியினர். ஆனாலும் அவர் தனது எழுத்து வல்லபத்தால் தன்னை இலக்கிய உலகில் திடமாக நிறுத்திக் கொண்டவர்.

எஸ்.பொ. வின் திறமைகளை மதித்து ஞானம் அவரது தொடர் நேர்காணலை முன்னர் பிரசுரித்தது. அந்த நேர்காணல் பின்னர் "தீதும் நன்றும்" என்ற மகுடத்தில் நூலுருப் பெற்றது.

இப்போது எஸ்.பொ. சிறப்புமலரை வெளியிடுவதில் ஞானம் பெரு மகிழ்வு கொள்கிறது.

இலக்கியப் போராளி

# எஸ். பொ.

– முனைவர் பா. இரவிக்குமார்

**பாரதி, புதுமைப்பித்தனுக்குப் பிறகு தமிழின் மிகச் சிறந்த இலக்கிய ஆளுமையென்று என்னால் எஸ். பொ.வை மட்டுமே கருத முடிகிறது. மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக இதனைச் சிலர் கருதலாம். எஸ். பொ.வின் எழுத்துக்கள் அனைத்தையும் வாசித்த ஒரு வாசகன், இத்தகைய ஒரு முடிவிற்கு வருதல் தவிர்க்கவியலாதது. துரதிர்ஷ்டவசமாக, இன்றைய வாசகனுக்கு எஸ். பொ. போதுமான அளவு அறிமுகமாகவில்லை. எஸ். பொ.வை அறிந்த ஈழத்து விமர்சகர்கள் அவருடைய இலக்கியச் சாதனைகளை அறிந்தும் கூட, அதை மறைக்கப் பார்க்கிறார்கள்.**

பாரதி, புதுமைப்பித்தனுக்குப் பிறகு தமிழின் மிகச் சிறந்த இலக்கிய ஆளுமையென்று என்னால் எஸ். பொ.வை மட்டுமே கருத முடிகிறது. மிகைப்படுத்தப்பட்ட கூற்றாக இதனைச் சிலர் கருதலாம். எஸ். பொ.வின் எழுத்துக்கள் அனைத்தையும் வாசித்த ஒரு வாசகன், இத்தகைய ஒரு முடிவிற்கு வருதல் தவிர்க்கவியலாதது. துரதிர்ஷ்டவசமாக, இன்றைய வாசகனுக்கு எஸ். பொ. போதுமான அளவு அறிமுகமாகவில்லை. எஸ். பொ.வை அறிந்த ஈழத்து விமர்சகர்கள் அவருடைய இலக்கியச் சாதனைகளை அறிந்தும் கூட, அதை மறைக்கப் பார்க்கிறார்கள். அல்லது அவருடைய சாதனைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். மு. தளைய சிங்கத்திற்குப் பிறகு, எஸ். பொ.வின் எழுத்துக்கள் குறித்து கோவை ஞானி, ஜெயமோகன் போன்ற ஒரு சிலர் மட்டுமே பொருட்படுத்தத்தக்க கட்டுரைகளை எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது. 'யாழ் நிலத்துப் பாணன்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதிய ஜெயமோகன் கூட, அவருடைய 'தீ', 'சடங்கு' போன்ற பழைய நாவல்களைச் சிலாகித்துப் பேசுகிறாரேயன்றி, எஸ். பொ.வின் சுயசரிதைப் படைப்பான 'வரலாற்றில் வாழ்தல்' மற்றும் அண்மைக்கால நாவலான 'மாயினி' போன்ற படைப்புகள் குறித்துப் பேசவில்லை. மாயினி நாவல் குறித்து தமிழ்நேயம் இதழ் மட்டுமே சில நல்ல கட்டுரைகளை வெளியிட்டுள்ளது.

கடந்த ஐம்பதாண்டுகளுக்கும் மேலாக எழுத்துத் துறையில் இயங்கி வரும் எஸ். பொன்னுத்துரையின் இலக்கியச் சாதனை பிரமிப்பைத் தரவல்லது. கவிதை, நாடகம், சிறுகதை, நாவல், பதிப்புப் பணி, மொழிபெயர்ப்பு, விமர்சனம் என்று இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் ஒரு போராளியாக இயங்கி வந்துள்ளார் எஸ். பொ. 'வரலாற்றில் வாழ்தல்' நூல் நோபல் பரிசு பெறுவதற்குத் தகுதியான நூல் என்று கோவை ஞானி அண்மையில் 'தீராநதி' இதழில் அளித்துள்ள நேர்காணலில் கூறியுள்ளதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஒரு தனிமனிதனின் வாழ்க்கை வரலாறாக மட்டும் விளங்காமல், அந்நூல் தமிழின் அண்மைக்கால இலக்கிய வரலாறாகவும், சமூக வரலாறாகவும், அரசியல் வரலாறாகவும் விளங்குகிறது. ஆங்கிலத்திலோ, பிரெஞ்சு மொழியிலோ அந்த நூல் எழுதப்பட்டிருந்தால், இந்நேரம் உலகம் முழுவதும் விவாதிக்கப்பட்டிருக்கும். பாதகமில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, தமிழின் ஆக்க பூர்வமான இலக்கியங்களைத் தேடும் ஒரு வாசகன், நிச்சயம் வரலாற்றில் வாழ்ந்த எஸ். பொ.வைக் கொண்டாடுவான்.

எஸ். பொ.வையும், எஸ். பொ.வின் இலக்கிய நோக்கத்தையும் புரிந்துகொள்ள அவருடைய சில வரிகளையாவது மேற்கோள் காட்டுவது அவசியமெனப்படுகிறது.

'உண்மையாக, உண்மை பேசி, உண்மைக்காக உழைத்து, தமிழை நேசித்து, தமிழை இறக்கும் வரை மூச்சாகக் கொண்டு, தமிழ்ப்பணி செய்துவருவது தப்பானால், நான் அந்தத் தப்பைச் செய்துகொண்டே சாவேன். யதார்த்தவாதி வெகுஜன விரோதி என்பது மற்றவர்களுக்கு மட்டுமல்ல... எனக்கும் பொருந்தும்...' (தீதும் நன்றும்... ப. 64)

எஸ். பொ அடிக்கடி இலக்கிய ஊழியம் என்று பேசுவார். சத்தியம், உண்மை, தர்மம், நேர்மை என்று பேசுவார்.

'என்றைக்கும் நான் என் தனிமனித சாதனை என்று எதையும் சொல்லவில்லை; ஒன்றைத் தவிர. எழுத்தில் நான் ஊன்றிய சத்தியமும், ஆளுமையும், நேர்மையான பக்தியும் என் தனித்துவத்தை வனையும்...' (தீதும் நன்றும்... ப. 66)



எஸ். பொ. என்கிற இலக்கியவாதியை மட்டுமல்ல... எஸ்.பொ. என்கிற மனிதரையும் புரிந்துகொள்ள மேற்கூறப்பட்ட வரிகள் உதவுகின்றன. தர்மம் என்றும், சத்தியம் என்றும் ஓயாமல் பேசும் எஸ். பொ.விற்கு ஆதர்சம் பாரதிதான்.

புதுமைப்பித்தன், லா. ச. ரா. வெல்லாம் எஸ். பொ.வின் உள்ளம் கவர்ந்த எழுத்தாளர்கள். புதுமைப்பித்தன் இன்று உயிருடன் இருந்திருந்தால் எத்தகைய இலக்கியத்தைச் செய்திருப்பாரோ அதைத்தான் எஸ். பொ. செய்துகொண்டு வருகிறார் என்று தோன்றுகிறது. புதுமைப்பித்தனின் எழுத்துக்களை எவ்வாறு ஒரு சட்டகத்திற்குள் கொண்டுவந்து முத்திரை குத்த இயலாதோ, அவ்வாறே எஸ். பொ.வின் எழுத்துக்களையும் சில சட்டகங்களுக்குள் கொண்டுவர இயலாது. தேர்ந்தெடுத்துக் கொண்ட கதைக்கரு, அல்லது சூழலுக்கேற்ப தன் மொழிநடையை மாற்றிக் கொண்டு எழுதுவதில் எஸ்.பொ. விற்கு நிகர் எஸ். பொ. தான். காரணம், அடிப்படையில் எஸ்.பொ. கவிதை ரசனை மிக்கவர். கம்பர், திருத்தக்க தேவர், இளங்கோவடிகள் போன்ற காப்பியக் கர்த்தாக்களை ரசிப்பவர். 'பெருங்காப்பியம் பத்து' என்ற நூலைத் தொகுத்தவர். தமிழ்மொழியின் பாரம்பரியத்தையும், மரபுத் தொடர்ச்சியையும் உணர்ந்தவர். நவீன மொழியைக் கையாள்வதில் வித்தகர்.

II

எஸ். பொ.வை விமர்சனம் செய்யப் புகுவோரில் பலர் 'தீ', 'சடங்கு' நாவலுடன் நிறுத்திக் கொள்கிறார்கள். 'இந்திரிய எழுத்தாளர்' என்ற முத்திரை குத்துவதுடன் தங்கள் கடமை முடிந்துவிட்டது என்று ஓய்ந்துவிடுகிறார்கள். 'அப்பாவும் மகனும்' என்னும் காவியம் தொடங்கி, 'மாயினி' நாவல் வரை சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராய்ப் போர்க்குரல் எழுப்பிவரும் எஸ். பொ.வின் எழுத்துக்கள் குறித்துக் கள்ள மௌனம் காப்பதனால் இவர் புகழ் மங்கிவிடும் என்று இவர்கள் கருதுகிறார்களா? மூத்த படைப்பாளிகளுள், சிங்களப் பேரினவாதத்தை மூர்க்கமாக எதிர்க்கும் போராளி என்று எஸ். பொ.வைத் தவிர இவர்களால் யாரை அடையாளம் காட்ட இயலும்?

"சகுனிப் பேச்சும்
கூனி நோக்கும்
ஓநாய்களின்
ஒப்பனை உறவும்
பௌத்த சிங்களவர்
பயின்ற அரசியல்
இன்று வரலாறாகியது" (அப்பாவும் மகனும் ப. 109)

என்று எழுதிய எஸ். பொ.வின் எழுத்து இன்று எவ்வளவு உண்மையாகிவிட்டது? 'அப்பாவும் மகனும்' என்னும் காவியத்தை என்னால் உறவுகளுக்கிடையேயான இடையேயுள்ள பாசப் பிணைப்பாக மட்டும் அடையாளம் காண இயலவில்லை. சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக எஸ். பொ. எழுப்பிய போர்க்குரலாகவும் அக்காவியத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

"வாழும் போதே
விடுதலை தேசத்தைக்
காண நினைத்த
'அந்தக்' கண்களைப்
பிடுங்கி
காலில் போட்டு
மிதித்து
சிங்களச் சிறுமைகள்
பூட்ஸ் கால்களால்
நசுக்குண்ட
அந்தக் கண்கள்
மரிக்கவேயில்லை"

என்னும் வரிகளைப் படிக்கும் பொழுதெல்லாம், நிலைகுலைந்து போவான் தமிழ்வாசகன். எஸ். பொ.வின் கவிதை முகத்தைக் காண, இலக்கிய சாட்சியாய் நிலைத்த படைப்பு 'அப்பாவும் மகனும்'.

சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகச் சிறுகதைகளையும் எஸ். பொ. படைத்துள்ளார். 'பலிபீடம்' என்ற சிறுகதை எஸ்.பொ. வின் மிக முக்கியமான படைப்பு. இராஜகிருகத்தில், ஆட்டுக்குட்டியைக் காப்பாற்றுவதற்காகத் தன்னையே பலியிடத் துணிந்த புத்தனின் அறிமுகத்துடன் கதை தொடங்குகிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, அநுராதபுரத்தில் பௌத்த பிக்குகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைச் சில வரிகளில் சொல்லி, இன்றைய வரலாற்றின் போக்கைச் சொல்லிவிடுகிறார் எஸ். பொ. புத்தரின் சிலையின் கீழ் தியானத்தில் அமர்ந்திருந்த பிக்கு, இப்படிப் பேசுகிறார்:

"எல்லாம் ஏற்பாடாகி உள்ளது. கைதிகளுடன் கைதியாக நீங்கள் கலந்துகொள்ளலாம். தமிழ்ப் பயங்கரவாதிகள் அடைக்கப்பட்டிருக்கும் பகுதிக்குச் செல்லுங்கள். "நான் தூக்கிலிடப்பட்டாலும், என் விழிகளை ஒரு தமிழனுக்குத் தானம் செய்யுங்கள். அந்த விழிகள் மூலம் தமிழ் ஈழத்தைப் பார்ப்பேன் என்று வீரவசனம் பேசினானே ஒரு பறைத் தமிழன், அவனுடைய விழிகளைப் பிடுங்கி எறிந்த பிறகே, அவனைக் கொலை செய்யுங்கள். அப்பொழுதுதான் ஆரிய பௌத்த சிங்கள இனத்தின் கௌரவம் காப்பாற்றப்படும். (எஸ். பொ. கதைகள் – பக். 296 – 297) பிரச்சாரத் தொனியுடன் எழுதப் பட்டிருந்தாலும், எஸ். பொ.வின் 'பலிபீடம்' கதையை அவருடைய ஆகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகக் கருதுகிறேன்.

'ஆண்மை' தொகுப்பிலுள்ள 'மித்தியை'ப் போன்ற கதையைத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் நான் படித்ததில்லை. ஒரு தந்தைக்கும் மகனுக்குமான பாசத்தைச் சொல்லும் இத்தகைய படைப்பை உலகச் சிறுகதைகளிலும் காண இயலுமா? தமிழீழ விடுதலைப் போரில் தன்னைப் பலியாக்கிக் கொண்ட மித்ரவின் கதை அது. 'மித்ர' எஸ். பொ.வின் உணர்வு; வேதம்; வாழ்க்கை; எஸ். பொ.விற்கு உயிரை மீட்ட தந்தை. 'மித்தி, உன்னிடத்தில் நான் மகனாகப் பிறந்தேனடா என்ற வரியைக் காட்டிலும் உயர்ந்தவொரு கவிதையை எஸ். பொ.வின் எழுத்தில் நான் படித்ததில்லை. 'மித்தி' கதையில் எஸ். பொ. வின் சுயசரிதம் இருந்தாலும், அந்தக் கதை வாசகனுக்குள் எழுப்பும் பேருணர்வு எல்லோருக்குமானது. உலகம் முழுவதற்கும் பொதுவானது என்பதாலேயே அதனைச் சிறந்த கதையென்று கருதுகிறேன்.

எஸ்.பொ. எப்பொழுதும் ஒரே விதமான கதைகளை, ஒரே விதமான நடையில் எழுதியதில்லை. 'பசி', 'Adieu', 'தேர்' போன்ற கதைகளெல்லாம் வெவ்வேறு பாணிகளில், வெவ்வேறு மொழிநடைகளில் எழுதப்பட்ட கதைகளாகும். அதேபோல், 'சில நேரத்தில் சில தோழர்கள்' என்ற கதையும். இரண்டு தோழர்களுடைய (தோழர் மார்க்கான், தோழர் V) டயறிக் குறிப்புகள் மூலம் இக்கதை புதுமையான முறையில் எழுதப்பட்டிருக்கிறது. தேவையின் காரணமாக, இக்கதையிலும், 'Adieu' என்ற கதையிலும் தாராளமாக ஆங்கிலச் சொற்களைக் கலந்துள்ளார் எஸ். பொ.

எஸ்.பொ. ஓர் உண்மையான மார்க்ஸியவாதி. மார்க்ஸியத்தை வேதம் என்று ஓயாமல் பேசி வரும் எஸ்.பொ. வைப் போல் பிறிதொரு எழுத்தாளரை நான் கண்டதில்லை. ஆனால், வாழ்க்கையின்

அடிப்படைகள் அனைத்தையும் மார்க்ஸியம் மட்டுமே போதிக்கிறது என்று பேசி, மார்க்ஸியத்தைக் குழி தோண்டிப் புதைத்தவரில்லை. வாழ்க்கையையும், இலக்கியத்தையும், நெருக்கமாக உணர்ந்தவர் என்ற காரணத்தால்தான் எஸ்.பொ.வை உண்மையான மார்க்ஸியவாதி என்கிறேன். அவருடைய 'பசி' என்கிற கதை எனக்கு முக்கியமானதாகப்படுகிறது. இக்கதையில் இடம்பெறும் ஒருவன் (பெயர் குறிக்கப்படவில்லை) வறுமையின் காரணமாகத் தற்கொலை செய்து கொள்கிறான். சொர்க்கத்திற்குச் செல்கிறான். தேவர்களைச் சந்தித்து வரம் வேண்டுகிறான். அதன்படி, பூமிக்கு மறுபடியும் வருகிறான். உறவுகள் யாவும் பொய் என்பது அவனுக்குப் புரிகிறது. பூமியிலுள்ள மனிதர்கள் சார்பாகப் 'பசி' என்ற ஒன்று என்றென்றும் நிலைக்க வேண்டும் என்று வரம் வேண்டுகிறான். எவ்வளவு கல்நெஞ்சம் இவனுக்கு என்று தேவர்கள் கருதுகின்றனர். மனிதர்களிடத்தில் இவனுக்கு அன்பே இல்லையா? என்று கருதுகின்றனர்.

''அன்பாவது, மண்ணாவது! பசியென்ற ஒன்று இல்லா விட்டால் அன்பு எங்கே இருக்கப் போகிறது? பசிதான், அன்பு – உறவு – உரிமை எல்லாவற்றையும் இணைக்கும் அபூர்வக் கயிறு...'' (எஸ். பொ. கதைகள் – ப. 270) என்று பேசுகிறான்.

எஸ். பொ. என்கிற மார்க்ஸியவாதியின் மிகப்பெரும் தனித்தன்மையாக இதைத்தான் நான் கருதுகிறேன். படைப்பு – வாழ்க்கை – சமூகம் – இவற்றுக்கான உறவைப் புரிந்து கொண்ட உன்னதமான எழுத்தாளர் அவர்.

III

எஸ்.பொ.வின் அனைத்துப் படைப்புக்களும் உன்னத மானவை என்று கூற நான் விழையவில்லை. ஆனால், தீ, சடங்கு, நனவிடை தோய்தல் போன்ற படைப்புக்களை எஸ்.பொ.வின் உன்னதமான படைப்புக்கள் என்று தயக்கமின்றி என்னால் கூற இயலும். ஐம்பதுகளில் இருந்த யாழ்ப்பாணத்தின் புவியியல் அமைப்பையும், கலாசாரத்தையும் புரிந்துகொள்ள 'நனவிடைத் தோய்தலை'த் தவிர வேறு படைப்பு தமிழில் ஏது? சடங்கில் இடம்பெறும் அன்னலெட்சுமி, செந்தில்நாதன், செல்லப்பாக்கிய ஆச்சி போன்ற பாத்திரங்களை எஸ். பொ.வே நினைத்தாலும் இனிப் படைக்க முடியுமா?

''தொடைகளைச் சொறியும் லாவகத்தில் வலக் கையை உட்புகுத்தி... வேட்கை திமிர்த்து முதிர... இவ்வுணர்ச்சியின் உற்பத்தி நிலையத்தை அதன் பிடிக்குள் நெருக்கி, ஆட்காட்டி விரலுக்கு செந்தில்நாதனின் உருவம் கற்பித்து... கண்களை மூடிய கற்பித நிலையிலும், கையின் கிரியை முனைப்பிலும், ஏதோ ஸ்கலிதமாகவே தன் உணர்ச்சிகள் இற்றுச் சுகாநுபவம் கிட்டுவதான திருப்தி குதிருகின்றது...'' (சடங்கு – ப. 154).

அன்று இவ்வரிகள் மார்க்ஸிய இலக்கிய வட்டாரத்தில் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்பதை உணர இயலுகிறது. ஆனால், தான் படைக்க நினைத்த இலக்கியத் திற்கு எஸ். பொ. நேர்மையாக இருந்திருக்கிறார் என்பதையே சடங்கு, தீ ஆகிய நாவல்கள் நிரூபிக்கின்றன.

எஸ்.பொ.வை இத்தகைய நாவல்களுடன் மட்டுமே அடையாளம் காணக்கூடாது என்பதைத்தான் முக்கியமாக நான் வலியுறுத்த விரும்புகிறேன்.


முறுவல் நாடகத்தில் சண்டாளன் பிராமணனிடம் கேட்கும் வார்த்தைகள், எஸ்.பொ.வின் சமூகப் பொறுப்புணர்விற்குத் தக்க சான்று.

சண்டாளன் : பிராமண சிரேஷ்டா! தண்டனிட்டேன். அஞ்சலி – தோஷம் விளையும் நான் உங்களைத் தொட்டால். ஆனால், தர்மமா நான் தொட்டு ஆக்கிய மாமிசத்தை உண்பது? (முறுவல் – ப. 103)

இத்தனைக்கும், முறுவல் நாடகம் தமிழகத்தில் தலித்தியம் பேசப்படுவதற்கு முன்பே, 1970களில் எழுதப்பட்ட நாடகம்.

எஸ்.பொ.வை விமர்சனம் செய்யும் முன்னால், ஒரு வாசகன் அல்லது விமர்சகன் அவருடைய அனைத்துப் படைப்புகளுடனும் பரிச்சயம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எஸ்.பொ.வின் பதிப்புப் பணிகள், மொழிபெயர்ப்புப் பணிகள், புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தின் மீதான அவருடைய அக்கறை, இந்த வயதிலும் ஓய்ந்துவிடாமல் எழுத்துப் போராளியாகத் தொடர்ந்து இயங்கும் அவருடைய தீவிரம் முதலியவற்றைப் புறக்கணித்துவிட்டு விமர்சனம் செய்யப் புகுவது இலக்கிய தர்மமாகாது.

சிறுகதைகள், நாவல்கள் தவிர, எஸ்.பொ. எழுதிய கட்டுரைகள் அநேகம். தன்னைப் பலி கொடுத்து, கடந்த ஐம்பதாண்டுகளில் எஸ்.பொ. மிகுதியாக எழுதிக் குவித்திருக்கிறார். எஸ்.பொ.விற்குள் இயங்கிய அழகியல் வாதியை, தத்துவவாதியை, சிந்தனையாளனை அடையாளம் காணவேண்டியது நம் வரலாற்றுக் கடமை. நாம் அதைச் செய்யத் தவறினாலும், எஸ்.பொ. தன் எழுத்துக்களின் வலிமையினால், வரலாற்றில் வாழ்வார் என்பது என் அழுத்தமான நம்பிக்கை.



## தமிழ்த்துவமும் தமிழ்த் தேசியமும்

**இருபத்தியோராம் நூற்றாண்டிலே இந்த நற்போக்கு இலக்கியத்தின் பிரதான அம்சம் என்பது தமிழ்த்துவம் என்று விளங்கப்படுத்தினேன். இந்தத் தமிழ்த்துவம் என்பது மரபு ரீதியான தமிழ் இலக்கியங்களினுடைய வேரிலிருந்து உறிஞ்சப்பட்டு புதிய இலக்கியம் படைக்கப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், தமிழ்மொழியும் தமிழ் இலக்கியத்தின் தனித்துவங்களும் பேணப்பட வேண்டுமென்றால், தமிழ்த் தேசிய உணர்வும், தமிழ்த் தேசியத்தை வளப்படுத்துவதற்கான சுதந்திர சுயாதீனமுள்ள தமிழ் மண்ணும் இருக்கவேண்டும் என்பதை விளங்கப்படுத்தினேன்.**

(ஞானம் நேர்காணல் ''தீதும் நன்றும்'' தொகுப்பிலிருந்து - பக்கம் - 89)

# POOBALASINGHAM BOOK DEPOT

**IMPORTERS, EXPORTERS, SELLERS & PUBLISHERS OF BOOKS, STATIONERS AND NEWS AGENTS.**

***Head Office :***

202, Sea Street, Colombo 11, Sri Lanka.
Tel. : 2422321. Fax : 2337313, E-mail : pbdho@sltnet.lk

***Branches :***

340, Sea Street,
Colombo - 11, Sri Lanka.
Tel : 2395665

309A-2/3, Galle Road,
Colombo 06, Sri Lanka.
Tel. : 4-515775, 2504266

4A, Hospital Road,
Bus Stand, Jaffna.

# பூபாலசிங்கம் புத்தகசாலை

புத்தக விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

**தலைமை :**

இல. 202 செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை.
தொ. பே. 2422321. தொ. நகல் 2337313, மின்னஞ்சல் : pbdho@sltnet.lk

*கிளைகள் :*

340, செட்டியார் தெரு,
கொழும்பு 11, இலங்கை
தொ.பே. 2395665

இல. 309 A–2/3, காலி வீதி,
கொழும்பு 06, இலங்கை
தொ. பே. 4–515775, 2504266

இல. 4A, ஆஸ்பத்திரி வீதி,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

## புதிய வரவுகள்

| புத்தகத்தின் பெயர் | எழுத்தாளர் | வெளியீடு/விற்பனையாளர் | விலை |
|---|---|---|---|
| ● பத்திரிகையியல் வழிகாட்டி | த. சபாரத்தினம் | இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் | 675/= |
| ● கைகேயி சூழ்வினைப்படலம் புதிய பாடத்திட்டம் - 2009 க.பொ.த (உ/த) | கிருஷ்ணபிள்ளை நடராஜா | பூபாலசிங்கம் புத்தகசாலை | 190/= |
| ● மனைவி மகாத்மியம் (சிறுகதைகள்) | சுதாராஜ் | தேசிய கலை இலக்கியப் பேரவை | 300/= |
| ● வியத்தகு இந்தியா | A. L. பசாம் | இலங்கை வெளியீட்டுத் திணைக்களம் | 495/= |
| ● காம்பு ஒடிந்த மலர் | தமிழ்ப்பிரியா | மீரா பதிப்பகம் | 250/= |
| ● விடுமுறைக்கு விடுமுறை (சிறுகதைகள்) | பவானி தேவதாஸ் | புரவலர் புத்தகப் பூங்கா | 150/= |
| ● வெற்றிலை நினைவுகள் (கவிதைகள்) | ஜோ. ஜெஸ்ரின் | புரவலர் புத்தகப் பூங்கா | 150/= |
| ● மேட்டு நிலம் (சிறுகதைகள்) | மு. சடாட்சரன் | ,, | 150/= |
| ● வேர்கள் அற்ற மனிதர்கள் (கவிதைகள்) | மருதநிலா நியாஸ் | புரவலர் புத்தகப் பூங்கா | 150/= |
| ● துயரம் சுமப்பவர்கள் | நீ. பி. அருளானந்தம் | திருமகள் பதிப்பகம் | 630/= |
| ● ஒரு கூடும் இரு முட்டைகளும் | கெக்கிராவ ஸஹானா | - | 150/= |
| ● பட்டுப்பூச்சியின் பின்னுகை போலும் | - | - | 150/= |
| ● தனித்துத் தெரியும் திசை | த. அஜந்தகுமார் | புதிய தரிசனம் | 200/= |
| ● ஒரு சோம்பேறியின் கடல் | - | - | 200/= |
| ● இன்றைய அரசியல் நிலைமை பற்றிய ஒரு நேர்காணல் | சி. கா. செந்தில்வேல் | புதிய பூமி வெளியீட்டகம் | 50/= |
| ● சிகத்த இருட்டு | அஸாறுதீன் | - | 200/= |



# எஸ்.பொ வின் இலக்கிய ஆளுமை

## 'தீதும் நன்றும்' ஞானம் நேர்காணல் தொகுப்பின் அடிப்படையில் எழுதப்பட்ட கட்டுரை

தமிழிலக்கியத்தில் வள்ளுவர், இளங்கோ, பாரதி, புதுமைப்பித்தன் முதலியவர்களை உள்ளடக்கிய முதல் வரிசையில் இடம்பெறும் முழுத்தகுதி எஸ். பொ வுக்கு உண்டு.

- கோவை ஞானி

1. 'வரலாற்றில் வாழ்தல்' எஸ்.பொ.வின் தனிப்பட்ட வாழ்க்கையை மட்டுமல்லாமல் அவரது இலக்கிய வாழ்க்கை, கல்வி வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, அரசியல் வாழ்க்கை, தமிழகத்தில் வாழ்க்கை, நைஜீரியாவில் வாழ்க்கை, உலகளவிலான புலம்பெயர்ந்த தமிழர்களோடு உறவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலைநாடு, கொழும்பு என்ற பல்வேறு பிரதேசங்களோடு கூடிய வாழ்க்கை, சிறுகதை, நாவல், நாடகம், திறனாய்வு, பதிப்பகம் என்று இலக்கியத் தொடர்பான பன்முக பரிமாணங்கள் – இப்படி எஸ். பொ.வுக்குள் வரலாற்றின் வழியே வந்த பேராற்றலும் பெருமிதமும் மிகுந்த வாழ்வை ஆற்றல் மிக்கத் தமிழ் நடையில் சொல்கிறது. ஒரு படைப்பாளி தமிழுலகில் இத்துணையளவுக்கு ஆற்றல்மிக்க வாழ்வை வாழ்ந்திருக்க முடியுமா என்று வியக்கிறோம். இப்படி ஒரு தன் வரலாறு தமிழுக்கு ஒரு புது வருகை. தன் வாழ்க்கைக்குள் சுய பரிசோதனை என்ற முறையிலும் சத்தியம் தேடும் நோக்கிலும் வரலாற்றுக்குள் நுழைந்து அதன் ஆழ அகலங்களுக்குள் பயணம் செய்து இத்துணையளவு ஒரு பாரிய படைப்பை எஸ். பொ. வடித்துள்ளார்.

எஸ். பொ. வரலாற்று மாணவர் இலங்கை வரலாறு உட்பட உலகளவிலான வரலாற்றுக்குள் ஆழ்ந்த தேடலை எஸ். பொ. நிகழ்த்துகிறார். எஸ். பொ. வின் ஆளுமைக்குள் இந்த வரலாற்றுப் பரிமாணம்தான் அடிப்படையும் ஆதாரமுமாக விளங்குகிறது. ஒரு வகையில் அவரது தமிழுணர்வு என்பது அவரது நாடி நரம்புக்குள் தலைமுதல் அடிவரை வேரூன்றி பல நூறு கிளைகளை விரித்துள்ளது. தமிழ் மரபின் மீது இவரது நேசம் வியக்கத்தக்கது. எத்தனை பேர்களோடு இவர் முரண்பட்டு, அவர்களோடு கடுமையாக போராடிய போதும் யாரோடும் சமரசம் செய்து கொள்ளவில்லை. தன் நிலைப்பாட்டை விட்டுக் கொடுக்கவில்லை. ஒரு வகையில் தமிழின் வீறு இவருக்குள் இத்தகைய மன உறுதியை, நேர்மைத் திறத்தை தந்திருக்கக் கூடும். இவரே பல முறையும் குறிப்பிடுவது போல, நெடுங்கால தமிழ் வரலாற்றுக்குள் இவர் வேரோடியிருக்கிறார். அந்த வேரிலிருந்து புதிய கிளைகள் தளைக்கின்றன. இவரது ஆளுமை, உலகளவில் பரந்துள்ள தமிழர் அனைவரையும் உள்வாங்கிக் கொள்கிறது. இவரை நேசிக்க முடியுமே ஒழிய பகைத்துக் கொள்ள முடியாது. இவரைப் பகைத்துக் கொண்டவர்கள் தமக்கு வீரியம் அற்றவர்கள் தன்மானம் அற்றவர்கள் என்றுதான் சொல்ல முடியும்.

இவரோடு சில கூறுகளில் முரண்படலாம். இவரே கூறுவது போல, தப்பபிப்பிராயங்கள் எனினும் உரத்து இவர் பேசுகிறார். இவரது நோக்கம், விவாதிக்க வேண்டுமென்பது. பலநூறு அறிஞர்களின், சிந்தனையாளர்களின் கருத்துக்கள் ஒரு முனையில் குவிக்கப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும். இத்தகைய கலந்தாய்வின் மூலமே இன்றைய உலக வரலாற்றுச் சூழலில் தமிழன் தன்னை நிறுவிக் கொள்ள முடியும். சமரசம் செய்து கொள்பவன் தமிழ் வரலாற்றை, முன்னெடுத்துச் செல்லும் தகுதியில்லாதவன்.

2. எஸ். பொ. வின் வரலாற்றில் வாழ்தல், ஒரு மாபெரும் படைப்பு. இந்த நூல் படைப்பா, விமர்சனமா என்ற கேள்விக்கு இடமில்லை. ஒரு படைப்பே விமர்சனமாகவும் (அ) ஒரு விமர்சனமே படைப்பாகவும் இருக்க முடியும் என்பதற்கு இந்த நூலே மிகச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

எஸ். பொ. ஒரு விமர்சகரா என்ற கேள்வி கூட பொருளற்றது. எந்த ஒரு படைப்பிலும் ஈடுபடும் ஒரு எழுத்தாளன் (அ) கலைஞன், தன்னை உள்ளடக்கிய சமூகச் சூழலையும், சமூக முரண்பாடுகளையும், இத்தகைய சமூகச் சூழலின் வழியே வந்திருக்கிற வரலாற்றை உள்வாங்கிக் கொள்ளாமல், தனக்குள்ளும் வந்திருக்கிற முரண்பாட்டுக்கு சமூக அளவிலான எதிர்வினை என ஒன்றைப் படைத்துக் கொள்ளாமல், தன் மொழி சார்ந்த வளமான இலக்கிய மரபைத் தனக்குள் வரித்துக் கொள்ளாமல் தன்படைப்பில் வெற்றி பெற முடியாது. இவ்வகையில் எந்த ஒரு படைப்பாளிக்குள்ளும் இயல்பாகவே ஒரு திறனாய்வாளன் இயங்குகிறான். திறனாய்வு உணர்வில்லாமல் வெற்று அலங்காரத்தோடு முற்றிலும் வணிக நோக்கத்தோடு எவரையோ மகிழ்விக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு எழுதப்படும் ஒன்றை படைப்பு என்று கூட நாம் மதிக்க வேண்டியதில்லை.

டி. எஸ். எலியட்டை இத்தகைய இயக்கத்திற்கு ஒரு உயர் வகையான சான்று என்று நாம் கருதமுடியும். தமிழ் மரபினுள்ளும், வள்ளுவருக்குள்ளும், இளங்கோவுக்குள்ளும் ஆற்றல் மிக்கத் திறனாய்வாளர்கள் இயங்கி இருப்பதைக் கண்டுகொள்ள முடியும். காந்தியடிகள் எழுதியது சத்திய சோதனை. எஸ். பொ. வும் தன் வாழ்வுக்குள் முற்றான சுய பரிசோதனையோடு சத்தியம் தேடுகிறார். தன் வாழ்விற்குள் மறைத்துக் கொள்ள வேண்டியது எதுவுமில்லை என்ற முறையில் எத்தனையோ அனுபவங்களைக் குறிப்பிடுகிறார். வரலாற்றில் வாழ்தல் நூலைப் படித்தவர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்வார்கள். எஸ். பொ. ஒரு மகத்தான மனிதர் என்பதை இந்த நூல் உறுதிப்படுத்துகிறது.

3. இந்த பாரிய நூல் ஈழத்தமிழ் வாசகர்களுக்குள் மட்டுமல்லாமல் 'இந்திய' தமிழ் வாசகர்களுக்குள்ளும்

எத்தனையோ சலனங்களை ஏற்படுத்தக் கூடும். இலங்கையில் வாசகர்களுக்குள் ஏற்பட்ட சலனங்களை முன்னிறுத்தி ஞானம் அவர்கள் எஸ். பொ விடம் தொடர்ச்சியாகக் கேள்விகளை எழுப்புகிறார். எஸ். பொ. தரும் விடைகள் பல வரலாற்றில் வாழ்தல் நூலினுள்ளும் இருக்கின்றன என்பதில் ஐயமில்லை. எனவே இவை புதிய விடைகள்தானா என்று அறிவதற்கு இன்னொரு முறை இந்த நூலை நானும் படிக்கத்தான் வேண்டும். அன்றியும் இரண்டாயிரம் பக்க அளவிலுள்ள எஸ். பொ. வின் பாரிய நூலை படிப்பதற்கான வாய்ப்பில்லாத வாசகர்களைப் பொறுத்தவரை ஞானம் அவர்களின் கேள்விகளும், எஸ். பொ. வின் பதில்களும் அடங்கிய 'தீதும் நன்றும்' என்ற நூல் 'வரலாற்றில் வாழ்தல்' நூலுக்கு ஓரளவுக்கு மாற்றாக, பதிலீடாக இருக்கவும் முடியும். 'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்ற ஒரு வரி 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனின் பாடலின் இரண்டாவது வரி. மாபெரும் தமிழிலக்கியத்திலிருந்து தமிழின் நீர்மையை வடித்தெடுத்துப் பேசுவதென்றால் அதற்கு முற்றிலும் பொருத்தமானது இந்தப் பாடல்.

எந்த ஒன்றினுள்ளும் தீதும் நன்றும் கலந்து இருக்கலாம். நமக்கு வரும் தீமையையோ நன்மையையோ பிறர் தருவதில்லை. நமக்குள் நாம்தான் ஏற்படுத்திக் கொள்கிறோம் என்ற ஆழமான கருத்துடையது இந்த வரி. நமக்குள்ளிருக்கும் தீய குணத்தையும் நல்ல குணங்களையும் தொடர்ந்து ஆராயும் பொழுது இவை நமக்குள் எங்கிருந்து வந்தன, ஏன் இவற்றை நாம் பற்றிக் கொண்டோம், என்றெல்லாம் தொடர்ந்து ஆராய்ந்து உண்மை காண்கிறபோதுதான், நம்மைப் பற்றிய முழுமையான அறிவை, புரிதலை பெறமுடியும். நம்மைப் பொறுத்தவரை விரிந்த தமிழ்ச் சமூகத்துள் வாழ்கிறோம். தமிழ் சமூகத்தினுள்ளும் எத்தனையோ குறைகளும் நிறைகளும் இருக்கின்றன. வரலாற்றுக் காலத்தில் எவ்வளவோ செய்தோம். யார் யாரையோ நமக்குள் அனுமதித்தோம் எதிராளிக்கும் இடங் கொடுத்தோம் நாமும் சமரசம் செய்தோம். சதி செய்தவர்களோடும் ஒத்துழைத்தோம். நமக்கான ஆளுமையை இழந்து நம்மை அழித்துக் கொண்டோம். எவ்வளவோ இழந்தோம். சிலவற்றையேனும் பெற்றோம். வரலாறு குறித்து இத்தகைய புரிதலோடு இனியேனும் நம்மை மீட்டுக் கொள்ள நாம் போராடியாக வேண்டும். புறத்தில் மட்டும்தான் நமக்கு பகைவர்கள் இருக்கிறார்கள் என்றில்லை. அகத்தினுள்ளும் பகையாளிகள் தங்கியிருக்கிறார்கள். அகத்தினுள் இருக்கிறார்கள் என்பதற்காக இவர்களோடு நாம் கொள்ளும் கள்ள உறவோ, நேசமோ நம்மைக் காப்பாற்ற முடியாது. நம் அழிவுக்கும் இது காரணமாகிவிடும். இத்தகைய புரிதலோடு தான் நமக்கான வாழ்வை, வரலாற்றை தேசத்தை பெறமுடியும். 'தீதும் நன்றும்' என்ற தலைப்பை இந்த நூலுக்கு மிகச் சரியாகவே வைத்துள்ளார். எஸ். பொ. அவர்களைப் பற்றி, அவரது இலக்கிய ஆளுமையைத் தொகுத்துக் கொள்ளும் முறையில் இந்த நூலை நான் பயன்படுத்திக் கொண்டேன். ஒரு தொகுப்புரையாக மட்டுமின்றி விளக்க உரையாகவும் கொஞ்சம் விமர்சனமாகவும் எழுதியுள்ளேன்.

4. இந்த நூலின் இறுதியில் ஞானம் அவர்களின் கேள்விக்கு பதில் தந்து வரும்போது, கடந்த சில பத்தாண்டுகளுக்குள் உருவாகிவரும் உலகத் தமிழிலக்கியம் பற்றி எஸ். பொ. பேசுகிறார். இத்தகைய உலகத்தமிழ் உருவாக்கத்திற்கு சென்னையில் பதிப்பகம் ஒன்றை அமைத்து தான் தொடர்ந்து செய்து வரும் பணிகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார். உண்மைதான் ஈழத்தமிழர்கள், இலங்கைச் சிக்கல் காரணமாகப் புலம்பெயர்ந்து செல்வதற்கு முன்பே தென்னாபிரிக்காவுக்கும், மலேசியாவுக்கும், சிங்கப்பூருக்கும் சென்று தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். புலம்பெயர்ந்து சென்றவர்கள் ஆஸ்திரேலியா முதல் கனடா வரையில் பல்வேறு தேசங்களில் ஆயிரம் பத்தாயிரம் என வாழ்கின்றனர்.

இந்திய தமிழர்களும் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் படிப்பதற்காகவும், தொழில் செய்வதற்காகவும் சென்று வாழ்கிறார்கள். தமிழர் என்ற முறையில் இவர்கள் அங்கங்கே கோவிலெடுக்கிறார்கள், திருவிழாக்கள் நடத்துகிறார்கள். ஈழத் தமிழர்கள் இத்தகைய செயற்பாடுகளோடு தம் குழந்தைகளுக்கு பரதநாட்டியம் கற்பிக்கிறார்கள். தேவாரம் கற்றுக் கொடுக்கிறார்கள். ஈழத்தமிழரைப் பொறுத்தவரை தமிழின் உறவு அற்று விடாமலிருக்க சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழ்ப் பள்ளிகள் அமைத்து குழந்தைகளுக்குத் தமிழ் கற்பிக்கிறார்கள். அந்நிய தேசங்களில் பிறந்து அந்தந்த தேசத்து மொழியில் கல்வி கற்கும் சிறுவர்/சிறுமியர்கள் தமிழுணர்வில் குறைந்து விடுவதற்கான வாய்ப்பு இருந்த போதிலும் சில குடும்பங்களில் பெற்றோர் தமிழ் மூலம் தமிழுணர்வைக் குழந்தைகளுக்குத் தருகிறார்கள்.

எவ்வாறாயினும் ஈழத் தமிழர்கள் நெஞ்சில் தமிழ் நிற்கும் என்பதில் ஐயமில்லை. அன்றியும் எஸ். பொ. கூறுவதுபோல புதிய மொழிகள் வழியே புதிய உத்திகளைக் கற்றுக் கொள்வதோடு புதிய வரலாற்றுச் சூழலில் பலரது அனுபவங்களையும் இவர்கள் உள்வாங்கிக் கொண்டு தம் தேசத்து வரலாற்றையும் மரபையும் திறனாய்ந்து புதிய பார்வை பெறமுடியும். ஈழத்தமிழர்களின் வியக்கத்தக்க நுண்ணுணர்வு குறித்து நமக்கு நன்கு தெரியும். சிங்கள வெறியர்களால் பல்வேறு அதிர்வுகளுக்கு, அழிவுகளுக்கு உள்ளான நிலையில், 'இந்தியத்' தமிழனைப் போல மிதப்புகளில், மாயைகளில், போதைகளில் அவர்களால் வாழ்ந்து விடமுடியாது.

வாழ்வின் ஆதாரங்களில் எவற்றுக்கு முதன்மை என்பது குறித்து அவர்கள் தீர்மானிக்க வேண்டும். அசலான இலக்கியத்தின் தரவுகளும் தரமும் ஆழமும், அகலமும் நோக்கும் எதுவாக இருக்க முடியும் என்றும் அவர்கள் தீர்மானிக்க வேண்டும். ஒரு வகையில் இவை வேதனை எனினும் இவை மூலமே அவர்கள் ஆற்றல் மிக்கப் புதிய வாய்ப்புக்களையும் பெறுகிறார்கள். இவ்வகையில் அவர்கள் தமிழுக்கு முற்றிலும் புதியதான படைப்புக்களைத் தரமுடியும். இத்தகைய வாய்ப்புகள் இந்திய தமிழனுக்கு இல்லை.

எஸ். பொ. கூறுவது போல புத்தாயிரத்தில் தமிழில் படைப்பிலக்கிய சாதனையில் ஈழத்தமிழர் உச்சங்களைத் தொட முடியும். இப்படி நேர வேண்டுமென்பது எஸ். பொ.வின் வேட்கை என்று நாம் நம்பலாம். ஏற்கனவே இலங்கையில் 150 / 200 ஆண்டுகளாக யாழ்ப்பாணம், மட்டக்களப்பு முதலிய பல்வேறு பிரதேசங்களில் கவிதைகள் என்றும், சிறுகதைகள்

என்றும், நாடகம் திறனாய்வு என்றும் ஒரு நூறு படைப்பாளிகளேனும் தரமானப் படைப்புக்களை விட்டுச் சென்றுள்ளனர். ஆறுமுக நாவலர், விபுலானந்தர் தொடங்கி எத்தனையோ பெரும் புலவர்கள், பேராசிரியர்கள், இலங்கையர் கோன் முதலிய எழுத்தாளர்கள். மகாகவி போல கவிஞர்கள். கனக செந்தில்நாதனைப் போலத்திறனாய்வாளர்கள். மட்டக்களப்பு வட்டாரத்தில் நாடகங்களும் கூத்துக்களும் பல்வேறு வகையான தொழிற்திறன்கள் இப்படி இன்று ஈழத்தமிழர்களுக்கு தன் முன்னோர் வழியே வந்த பல வகையான படைப்புக்கள், அனுபவங்கள்.

இலங்கை வரலாற்றுச் சூழலில் பல நூற்றாண்டுகளாகவே ஈழத்தமிழர்கள் சிங்களவர்களால் மட்டுமல்லாமல் புத்த சமயத்தாராலும் போர்த்துக்கீசியர் முதற்கொண்டு பல அந்நியர்களாலும் கடுமையான உளைச்சல்களுக்கும் உலுக்குதல்களுக்கும் உள்ளான நிலையில் எப்படியோ கூடுதலான வரலாற்றுணர்வு கொண்டு வாழ்வின் எதார்த்த உணர்வோடு, படைப்புகளை, ஆய்வுகளை உருவாக்கியிருக்கியிருக்கிறார்கள். முற்போக்கு வாதிகள் குறித்து நம் திறனாய்வுகள் எத்தகையவையாக இருந்த போதிலும் 'இந்திய' தமிழ் படைப்பாளிகளின் வரலாற்றுணர்வைக் காட்டிலும் முற்போக்குவாதிகளால் தூண்டி வளர்க்கப்பட்ட சமகால வரலாற்றுணர்வோடு ஈழத்தமிழர் தம் படைப்புகளை உருவாக்கியிருக்கின்றனர்.

இத்தகைய புரிதல்கள் அனுபவங்கள் மூலம், இந்திய தமிழ் நவீனகாலப் படைப்புக்களிலிருந்து பெருமளவு மாறுபட்டதாக ஈழத்தமிழ் படைப்புகள் உருவாகியுள்ளன. இத்தகைய படைப்பிலக்கிய புதுமைகள் உலக தமிழிலக்கியம் உருவாக நல்ல வாய்ப்பாக அமைய முடியும்.

எஸ்.பொ.வின் 'மித்ர' பதிப்பக உருவாக்கத்தின் முதன்மை யான நோக்கம் உலக தமிழிலக்கியம் என ஒன்றை உருவாக்குவதாக அமைகிறது. தமிழன் இன்று உலகைத் தனக்குள் உள்வாங்கிக் கொள்ளவேண்டும். இங்கிலாந்தின் வரலாறு, அமெரிக்க வரலாறு, இரஷ்ய வரலாறு, சீன வரலாறு மற்றும் இந்த நாடுகளைச் சார்ந்த இலக்கியங்கள், திறனாய்வுகள், வாழ்க்கை முறைகள் முதலியவற்றோடு இன்னும் பல நாடுகளின் வாழ்க்கை என்று தமிழன் கற்றுச் செரித்துக் கொள்ள வேண்டும். தமிழே போதும் தமிழ் நாடே போதும் என்ற குறுகிய பார்வை இனி தமிழினத்தின் வாழ்வு மேன்மைக்கு பயன்படாது. ஈழத்தமிழர்களின் அண்மைக்காலப் போராட்ட அனுபவங்களுக்குப் பிறகாவது உலகளவில் நேற்றும் இன்றும் நடைபெற்ற விடுதலைக்கானப் போராட்ட வரலாறுகள் குறித்து அறிந்து கொள்ள வேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல 'இந்தியத்' தமிழரும் பாலஸ்தீனம் பற்றி, சச்சனீயா பற்றி, திபெத் பற்றி, தென் அமெரிக்க நாடுகள் பற்றி, ஆபிரிக்க நாடுகள் பற்றி என்ன அறிவார்? தமிழன் இனி உலகத்தை உள்வாங்கிக் கொண்ட தமிழனாக மாறவேண்டும். சீன மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று தொடங்கி எவ்வளவோ கற்றுக் கொள்ள வேண்டும், எத்தனையோ தத்துவங்களை கற்றாக வேண்டும். மார்க்சியம்கூட போதாது. முற்போக்கு இலக்கியவாதிகளின் இரஷ்ய/சீன மார்க்சியம் இன்றைக்கு செல்லுபடியாகாது.

இப்பொழுது நாமும் எஸ். பொ. வொடு சேர்ந்து சொல்ல முடியும். உலகத்தமிழிலக்கியம் உருவாக வேண்டும். நவீன தமிழிலக்கியம் உட்பட பழந்தமிழிலக்கியமும் உலகில் முன்னிலையிலுள்ள ஒரு பத்து மொழிகளிலாவது மொழி பெயர்க்கப்பட வேண்டும். எஸ்.பொ. இத்தகைய நோக்கங்களோடுதான் ஈழத்தமிழகத்தில் கடந்த ஒரு நூற்றாண்டளவில் வாழ்ந்த , வாழ்கின்ற படைப்பாளிகளின் தரம் வாய்ந்த படைப்புக்களை – சிறுகதைகள் – கவிதைகள் – குறுநாவல்கள் ஆகியவற்றைத் தொகுத்து நான்கு தொகுதிகள் – 4000 பக்கங்களில் வெளியிடும் முயற்சியை மேற்கொண்டுள்ளார். ஈழத்தமிழ் தேசம் தற்போது ஈழத்தமிழனின் கைக்கு அகப்படவில்லை என்றே வைத்துக் கொண்டாலும் ஈழத்தமிழிலக்கிய பாரம்பரியம் அவனுக்குள் வாழ்கிறவரை ஈழத்தமிழனை அழிக்க முடியாது.

இத்தகைய நோக்கத்தோடும் எஸ். பொ.செயல்படுகிறார். இப்பொழுது உறுதியாகச் சொல்ல முடியும் எஸ். பொ. என்ற ஆளுமையின் முக்கியத்துவத்தை எவராலும் குறைத்துப் பேச முடியாது. எஸ்.பொ. நம் காலத்தில் நமக்கு கிடைத்த ஒரு பெரும் பேறு.

தமிழிலக்கியவாதிகள் பலரை நினைத்துப் பார்க்கும் பொழுது சிலர் சிறுகதைகள் மட்டும் படைக்கிறார்கள். இன்னும் சிலர் கவிதைகளோடு மட்டும் நின்று விடுகிறார்கள். சிலருக்கு நாடகங்கள். சிலர் திறனாய்வாளர்கள். சிலர் மொழிபெயர்ப்பாளர்கள். சிலர் பேராசிரியர்கள். ஒரு சிலர் அரசியல்வாதிகள் எஸ்.பொ.வைப் பொறுத்தவரை தமிழிலக்கியத்தின் அனைத்து பரிமாணங்களோடும் தன்னை இணைத்துக் கொண்டு படைக்கிறவர், வாழ்கிறவர். கூடுதலாக வரலாற்று அறிஞர். ஒரு சில பரிமாணங்களில் மட்டும் வாழ்வோரின் வாழ்க்கை அரைகுறை வாழ்க்கை. அறிவு மற்றும் கலைத்துறையின் அனைத்து பரிமாணங்களோடும் தன் கால வரலாற்றுச் சூழலை பெருமளவு உள்வாங்கிக் கொண்டு, அதற்கு எதிர்வினையாற்றும் ஒருவரின் வாழ்க்கைதான் நிறைவான அசலான வாழ்க்கை. இத்தகையவர்தான் தற்செருக்கின்றி, தன் ஆற்றலை அறிந்து தான் செய்வது, இலக்கிய ஊழியம் – தவம் – தான் அடைவது பேரானந்தம் – பரவசம் – தன் இனத்தின் வாழ்வை நானும் முழு அளவில் வாழ்கிறேன். என்னால் சமரசம் செய்து கொள்ள முடியாது. உரத்து என்னால் பேசமுடியும். இப்படியெல்லாம் தன்னையறிந்து பேசுபவராக இருக்க முடியும். இது எஸ். பொ.வின் ஆளுமை. இவரது பாரிய ஆளுமையில் இலக்கிய ஆளுமை என்பது ஒரு கூறு மட்டும்.

5. எஸ். பொ. என்ற பேராளுமை குறித்து மதிப்பீடு செய்யும் தகுதி எனக்கு உண்டா? என்ற கேள்வியை எவரும் எழுப்ப முடியும். எஸ்.பொ.வை நான் ஆராதிக்கிறேன், கொண்டாடுகிறேன் என்று எழுதியும் பேசியும் வருகிறேன். எஸ்.பொ வை அவரது சடங்கு, தீ ஆகிய படைப்புகள் வெளிவந்த காலமுதல் நான் அறிவேன். அவரது சில படைப்புக்கள் தவிர அச்சில் வெளிவந்த அனைத்துப் படைப்புக்களையும், நான் அக்கறையோடு படித்துப் பயன்பெற்றிருக்கிறேன். 'வரலாற்றில் வாழ்தல்', படித்த பிறகு எஸ்.பொ. குறித்த என் பார்வை மேலும் விரிவு

பெற்றிருக்கிறது. இந்த நூல் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு தேவையான அளவிற்கு உலகளவில் அறிமுகம் ஆகும் என்றால் தமிழில் நோபல் பரிசுக்குத் தகுதியான ஒரு படைப்பாக இந்த நூல் இருக்க முடியும் என்று நான் எழுதியிருக்கிறேன். எஸ். பொ. வின் நாடகங்களைப் பொறுத்தவரை என் வாசிப்பனுபவம் போதாது என்பதை உணர்கிறேன். சிறுகதையில் அவர் தமிழின் மிகப்பெரும் சாதனையாளர். கவிதையில் சாதனையாளர் என்று அவரைச் சொல்வதற்கில்லை. அவரளவுக்கான வாழ்வியல் அனுபவங்களில் ஒரு சிறு பகுதிகூட எனக்கில்லை.

தமிழிலக்கியத்தை மட்டுமல்லாமல் மார்க்சியத்தை விரிவாகவும் ஆழமாகவும் நானும் கற்றிருக்கிறேன். தமிழுக்குள் நானும் ஊறியிருக்கிறேன். தமிழ்த் தேசியம் என்று நானும் உரத்துப் பேசுகிறேன். கோவை வட்டாரத்தில் எஸ். என். நாகராசன் அவர்களை மையத்தில் வைத்து நானும் நண்பர்களும் மார்க்சியத்தை விரிவாகக் கற்றுப் புரிந்து கொண்டிருக்கிறோம். கட்சி மார்க்சியரோடு பல்வேறு சமயங்களில் நாங்கள் கடுமையாக முரண்பட்டிருக்கிறோம். கட்சி மார்க்சியரின் அதிகாரத்துவத்தால் நாங்களும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறோம். கட்சி மார்க்சியர், எங்கள் அளவுக்கு மார்க்சியத்தை விரிவாகவும் நேசத்தோடும் பயின்றவர்களாய் இல்லை என்றுகூட எங்களால் சொல்ல முடியும். தமிழிலக்கியத்தின் வளமான மரபோடு மார்க்சியம் எளிதாக இணைய முடியும். மார்க்சியம் கற்றதன் மூலம் தமிழிலக்கியத்தை நான் கூடுதலாக நேசிக்கிறேன். புரிந்து கொள்கிறேன்.

அதேபோல தமிழிலக்கியம் கற்றதால் மார்க்சியத்தை எனக்குள் ஆழமாக உணர்ந்து கொண்டிருக்கிறேன். கைலாசபதி, சிவத்தம்பி வானமாமலை முதலியவர்களிட மிருந்து நான் எவ்வளவோ கற்றிருக்கிறேன். ஆனால் அதே சமயம் இவர்களோடு நானும் முரண்படுகிறேன். தமிழ் மரபின் மீது இவர்களுக்கு மரியாதையில்லை. தமிழ் கற்றதால் என் வாழ்க்கை அர்த்தச் செறிவுடையதாக இருக்கிறது என்று நான் உண்மையாக நம்புகிறேன்.

சமயம் குறித்து வறட்டுத்தனமான பார்வை எனக்கில்லை. 'இதயமற்ற உலகின் இதயம்', 'ஆன்மாவற்ற உலகின் ஆன்மா' என்று தொடங்கி மார்க்சு மட்டுமல்லாமல் எத்தனையோ மார்க்சியர் சமயம் குறித்து கூடியவரை சார்பான மதிப்பீடுகளை முன்வைத்திருக்கிறார்கள். இத்தகைய பார்வையை எனக்குள் செறித்துக் கொண்டிருக்கிறேன். ஒசோ, ஜேகே முதலியவர் கூறுவது போல கடவுள் என்பதை ஒதுக்கிவிட்டு கடவுள் தன்மை என்பது குறித்து நானும் பேசுகிறேன். இப்படி என்னைப் பற்றி நான் எவ்வளவோ சொல்ல முடியும்.

எஸ். பொ வுக்கு சமய நம்பிக்கை இல்லை. அன்றியும் சமய நம்பிக்கையை இவர் பாராட்டுவதில்லை. இவ்வகையில் இவர் வறட்டு நாத்திகவாதி என்றுதான் நான் கருதுகிறேன். 'வரலாற்றில் வாழ்தல்' நூலில் தன் தாய் தன் இறுதிக் காலத்தில் தான் செய்த தவம் பற்றி உணர்வோடு எழுதுகிறார். நூலின் இறுதியில் உள்ளுணர்வின் ஆற்றல் குறித்துச் சில சான்றுகள் தருகிறார். இவை குறித்து எஸ். பொ. தனக்குள் தொடர்ந்து ஆய்வு செய்திருப்பாரென்றால் சமயம் குறித்தும் ஒரளவுக்கேனும் மரியாதையோடு பேசியிருக்க முடியும். முற்போக்கு இலக்கியக்காரர்கள் குறித்து இவர் விடாப்பிடியாக முன்வைக்கும் விமர்சனங்கள் எனக்கு ஏற்புடையவை.

எஸ். பொ. மக்களுக்கு – அடித்தட்டு மக்களுக்கு பச்சையான வாழ்வுக்கு மிகமிக நெருக்கமாக இருக்கிறார் என்பதனால் மார்க்சிய உணர்வு அவருக்குள் ஊறியிருக்கிறது என்பதில் ஐயமில்லை. மார்க்சியத்தை உலகளவில் பல்வேறு நாடுகளில் விரிவு பெற்று வரும் பல்வேறு பரிமாணங்களோடு கூடிய மார்க்சியத்தை அவர் தொடர்ந்து கற்கவில்லை. இலக்கியப் படைப்பு அவரை முழுமையாக ஆக்கிரமித்து விட்டதால் மார்க்சிய தேடலில் அவர் நெடுந்தொலைவு செல்ல வில்லை. இவரும் தம் காலத்தில் கற்ற மார்க்சியமே போதும் என்று தனக்குள் நிறைவு கொண்டிருக்கிறார்.

எனக்கும் குறைந்த அளவுக்கேனும் படைப்பனுபவம் உண்டு. இதன் காரணமாக திறனாய்வாளர் எவருக்கும் படைப்பனுபவம் இல்லாமல் முடியாது என்ற புரிதலுக்கு நான் வந்திருக்கிறேன். படைப்பும் திறனாய்வும் முற்றாக முரண்படுவதுமில்லை. படைப்பில்லாமல் திறனாய்வில்லை. திறனாய்வில்லாமல் படைப்பில்லை. கட்சியின் அரசியல் அளவுகோலை முன்வைத்து இலக்கியத்தின் தரத்தை தீர்மானிப்பது, இலக்கியத்திற்கு மட்டுமல்லாமல் மார்க்சியத்துக்கு செய்யும் துரோகம். கட்சி மார்க்சியர் இவ்வகையில் மனித வாழ்வுக்கும் வரலாற்றுக்கும் கூட துரோகம் செய்திருக்கிறார்கள். மார்க்சியம் தவிர நமக்கு வேறு வாழ்வில்லை என்பதை உரத்துப் பேசும்பொழுதே மார்க்சியம் ஒன்றுதான் ஒரே தத்துவம் என்றும் என்னால் பேச முடியாது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பட்ட பல்வேறு கருத்தியல்களுக்கு மத்தியில், அவற்றிலிருந்து பல உண்மைகளை உள்வாங்கிக் கொள்வதன் மூலமே மார்க்சியம் செழுமை பெறுகிறது. இத்தகைய மார்க்சியம் வளமான மார்க்சியம். மார்க்சியத்திலிருந்து விலக்கி அவரை வைக்காமல் எஸ். பொ வை நான் கொண்டாடுகிறேன். தமிழிலக்கியத்தில் வள்ளுவர், இளங்கோ, பாரதி, புதுமைப்பித்தன் முதலியவர்களை உள்ளடக்கிய முதல் வரிசையில் இடம்பெறும் முழுத்தகுதி எஸ். பொ வுக்கு உண்டு.

6. எஸ். பொ. முதன்மையாக ஒரு இலக்கியப் படைப்பாளி என்று வரையறை செய்து கொள்ளலாம். இலக்கியம் என்பது மனிதனுக்கு முகப்பூச்சுபோல, அணிகலன் போல, ஓர் அலங்காரம் போல இல்லை. ஆடை என்றும் கூட சொல்ல முடியாது. மனிதனின் ஓர் இன்றியமையாத உள்ளுறுப்பு இலக்கியம் என்று சொல்வது தகும். இலக்கியம் இல்லாமல் மனிதனுக்கு வாழ்வில்லை. கதை சொல்லாமல், இசையில்லாமல், இயற்கையழகு பார்க்காமல், உழைப்புத் திறனை இரசிக்காமல், குழந்தையை நிலவை இரசிக்காமல், அறவுணர்வு இல்லாமல், மனித ஆற்றலை மதிக்காமல், அனுபவங்களைத் திரட்டி அர்த்தம் செய்யாமல் வாழ்க்கையில்லை. வாழ்வில் மேன்மையில்லை. நீதிக்காக உயிர் வாழ்வது (அ) உயிரை இழப்பது அர்த்தச் செறிவுள்ள வாழ்க்கை. வாழ்க்கைக்கு பிரபஞ்சத்திற்கு வரலாற்றிக்கு அர்த்தம் காண்பது – இப்படி நூறு முறைகளில் மனிதனுக்குள் படைப்பியக்கம், இலக்கிய இயக்கம் பற்றி பேசமுடியும். 'ஒன்றாக காண்பதே காட்சி', 'அன்பில் தழைப்பது வையம்' மனிதனுக்குள்

இலக்கியம் இவ்வாறுதான் செயல்படுகிறது. தாய்மை ஒரு பேரிலக்கியம். இவ்வாறுதான் மனிதனின் இதயம் போல என்று இலக்கியத்தைச் சொல்ல முடியும்.

அரசியல் வரையறையை முன்வைத்து இலக்கியத்தை மதிப்பீடு செய்வது மனிதனைக் குறுக்கும் முயற்சி. தியாகம் போலவே காமமும் பசியும் உழைப்பும் மனித உணர்வுகள். இலக்கியவாதி மனிதனை நேசிக்கிறான். உலகியலை மதிக்கிறான். உலக வாழ்வில் அறம் தழைக்க வேண்டும் என்கிறான். சமதர்மம் உயரிய அறம். இலக்கியம் எப்பொழுதும் சமூக வாழ்வின் குறைகளைக் களைந்து அனைவருக்குமான வாழ்வு என்ற இலக்கை முன் வைக்கிறது. ஆதிக்கத்திற்கு சேவை செய்வது நல்ல இலக்கியமாகாது. சமூக வாழ்வை முன் நகர்த்தும் நோக்கில் செயல்படும் இலக்கியம் நற்போக்கு இலக்கியம் இது முற்போக்கு இலக்கியம்.

வாழ்வில் காமம் மிகும் என்றால் எந்தச் சூழலில் ஏன் என்று கண்டறிந்து எழுத வேண்டும். காமம் பற்றி ஒருவர் எழுதினாரென்றால் எத்தகைய சமூகச் சூழலில் இது நேர்ந்தது என்று திறனாய்வாளன் விளக்க வேண்டும். ஒருவன் திருடுகிறான் என்றால் அதற்கு முதன்மையாக அவனை மட்டுமே குற்றம் சொல்ல முடியாது. அவன் திருட ஏன் நேர்ந்தது என்று விளக்க வேண்டும். தவிர்க்க முடியாமல்தான் குற்றச் செயலில் இவன் ஈடுபடுகிறான். இதன் காரணமாக இவன் நல்லவன் என்றும் ஏற்க முடியாது. சமூகம் தன்னைத் திருத்திக் கொள்வது பற்றிப் பேசவேண்டும். திருடுவதைக் காட்டிலும் சமூகத்தைத் திருத்து, நீ திருடனாக வேண்டியதில்லை என்று அவனுக்குச் சொல்ல முடியும். உண்மையில், ஒரு திருடன், சமூகம் எவ்வளவு சீர்கெட்டு இருக்கிறது என்பதை விளக்கும் ஒரு குறியீடு.

முதலாளிக்குள் அதிகாரம் செறிவதன் மூலம் அவன் தீயவனாகிறான். கொடியவனாகிறான். இதனால் மனித வாழ்வின் தரத்தை அவன் இழக்கிறான். இவனுக்குள் இசையில்லை. கலையில்லை. வரலாற்றின் இயக்கம் இவனுக்குள் இல்லை. இவன் தனக்குள் முடங்கியவன். ஒரு மார்க்சியனால்தான் இவனைப் புரிந்து கொள்ள முடியும். இப்படிச் செயல்படும் மார்க்சியம்தான் அசலான மார்க்சியம்.

டால்ஸ்டாயை லெனினால் புரிந்து கொண்டு போற்ற முடியும். பால்சாக்கே மார்க்ஸ் புரிந்து கொண்டார். கட்சி சார்ந்தவர்களும் நல்லிலக்கியம் படைக்க முடியும். கட்சிக்கு சேவை செய்வதாகக் கருதி இலக்கியத்தின் விரிவை முடக்க வேண்டாம். டேனியல் தரமான இலக்கியம் படைக்கவும் செய்திருக்கிறார். கணபதிப்பிள்ளை முதலியவர்கள் தமிழ் வரலாற்றுக்கு அர்த்தம் கண்டு பிடித்திருக்கின்றனர். மகாகவியை மார்க்சியர் எப்படி கண்டு கொள்ளாமல் இருந்தனர்? நாவலரின் சாதி உணர்வு எப்படிக் கண்ணுக்குத் தெரியாமல் இருக்க முடியும்? விபுலானந்தரை மார்க்சியர் எப்படியெல்லாம் கொண்டாடியிருக்க வேண்டும்! தமிழ்த் தேசிய உணர்வு மார்க்சியனுக்கு எப்படி எதிரானதாக இருக்க முடியும்? எஸ். பொ. இத்தகைய தவறுகள் எதனையும் செய்யவில்லை.

எஸ். பொ வின் படைப்பியக்கம் தமிழ் வரலாற்றோடு இயங்குவது இலக்கியம் என்றால் என்ன என்பதை எஸ். பொ. மூலம் கண்டுகொள்ள மார்க்சியன் தவறியிருக்கிறான். இதன் காரணமாகவும் நான் எஸ். பொ வைக் கொண்டாடுகிறேன். எஸ். பொ. தான் செய்வது இலக்கியத்திற்கு ஊழியம் – தவம் என்று பேசுகிறார். படைப்பியக்கத்தில் ஆழ்ந்திருக்கும் உணர்வைத் தியானம் என்கிறார். படைப்பின்போது தனக்குள் எழுவது பேரானந்தம் – பரவசம் என்கிறார். இவ்வாறெல்லாம் உணர்வோடு ஆவேசத்தோடு எஸ். பொ. சொல்லுவதை கட்சி அரசியலை முதன்மைப்படுத்தும் இலக்கியவாதியால் ஏற்க முடியாது. படைப்பிலக்கிய அனுபவத்தில் ஊறியவர் எஸ். பொ வை ஒப்புக் கொள்வார். படைப்பிலக்கிய அனுபவம் ஒரு கலைஞனுக்குள் இத்துணையளவு ஆழமாகச் செயல்படுகிறது. படைப்பிலக்கிய அனுபவத்துக்குள் நுழைந்து வந்தவர் எவரும் சமூகத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வை, ஆதிக்கத்தைச் சாதியை ஒப்புக் கொள்ளமுடியாது. எஸ். பொ. தவம் என்றும் தியானம் என்றும் பரவசம் என்றும் பேசுகிறார். இவை சமய அனுபவத்தில் ஊறியவரின் சொற்கள். இப்படி பேசுவதனால் எஸ். பொ வையும் இப்படி பேசும் கலைஞர்களையும் சமயவாதிகள் என்றோ, சமயவுணர்விலிருந்து விடுபடாதவர் என்றோ, ஒரு அரைகுறை மார்க்சியன் குற்றஞ்சாட்டலாம். உண்மையில் ஆழ்ந்த மனித அனுபவத்திலிருந்து எடுக்கப்படும் சொற்கள் இவை. மனித வாழ்வுக்கு ஆழமும், அர்த்தமும் தேடும் எவருக்குள்ளும் இத்தகைய உணர்வுகள் இயல்பானவை. அர்த்தச் செறிவுள்ள மனிதனின் இத்தகைய அனுபவம், சமயவாதிக்கும் உண்டு என்பதால் கலைஞரின் அனுபவமும், சமயவாதியின் அனுபவமும் ஒரு புள்ளியில் சந்திக்கின்றன என்பதைத் தவிர வேறு வகையில் இதை விளக்க முடியாது. கம்யூனிஸ்ட் என்பவன் ஒரு Saint – சித்தன் என்று லெனின் கூறினார். பாரதியைப் போல எஸ். பொ. வும் ஒரு சித்தன்.

*15.06.2009*

## முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் தமிழ் இலக்கியமும்



**முற்போக்கு மகாநாட்டிலே புதிய திசையிலே அந்த மகாநாடு மலரும் என்ற நம்பிக்கையுடன் நான் சென்றிருந்தேன். அதற்கான காரணம் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கம்யூனிஸ்டுகளுடைய தொழிற்சங்கமாக அன்றி, அஃது எழுத்தாளர் இயக்கமாக மாறி, மார்க்சியக் கருத்து வட்டத்திற்கு அப்பாலும் கலை இலக்கியத்தில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர்களையும் எங்கள் அணிக்குள் சேர்த்துக் கொண்டு இலக்கியம், கலை பற்றிய சிந்தனைகளை ஒரு பெரிய வட்டத்திற்கு விரிவுபடுத்த வேண்டும் என்பதிலே எனக்கு முனைப்பான ஆர்வம் இருந்தது. இந்த முனைப்பான ஆர்வத்திற்குப் பிரதான காரணம், தமிழ் இலக்கியத்தின் சகல சாங்கங்களையும் மார்க்சியத்துக்குள் மட்டுமே, அந்தக் குறுகிய வட்டத்துக்குள் மட்டுமே, தரிசித்து விடமுடியாது என்பதை நான் நேர்மையாக உணர்ந்திருந்தேன்.**

(ஞானம் நேர்காணல் ''தீதும் நன்றும்'' தொகுப்பிலிருந்து – பக்கம் 70)

ADD KUMARAN

# நீண்டநாள் நினைவு

- பேராசிரியர் அ. சண்முகதாஸ்,
Ph.D. (Edinburgh)

'எஸ்.பொ.' பற்றிய என்னுடைய நீண்டநாள் நினைவொன்றினை எழுதும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு 'ஞானம்' ஆசிரியருக்கு நன்றி கூறுகிறேன். நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நான் மட்டக்களப்பு கல்லடி உப்போடையிலுள்ள இராமகிருஷ்ண மிஷன் கல்லூரியான சிவானந்த வித்தியாலயத்தில் உயர் கல்வித் தராதர வகுப்பிலே படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எங்களுடைய ஆசிரியர்களாக இருந்தவர்களுள் திரு. வே. இராமகிருஷ்ணனும் (பிற்காலத்தில் கலாநிதி இராமகிருஷ்ணனாக பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கற்பித்து, பேராசிரியராகி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலும் பணியாற்றியவர்) ஒருவராவர். அவர் எங்களுக்கு அரசியலும் அரசாங்கமும் என்னும் பாடம் படிப்பித்தார். அப்பொழுது பல்கலைக் கழக புகுமுகத் தேர்விலே 'சமகால விவகாரங்கள்' என்னும் வினாத்தாள் கட்டாயமானதாகப் போதிக்கப்பட்டது. திரு. இராமகிருஷ்ணன் அதிலே கணிசமான பகுதியைப் படிப்பித்தார். அது எல்லாத் துறைகளையும் உள்ளடக்கிய தாயிருந்தது. ஒரு நாள் வகுப்பில் "நீங்கள் சந்தித்துப் பயன்பெறக்கூடிய ஒருவர் புளியந்தீவில் இருக்கிறார். அவருடைய பெயர் எஸ். பொன்னுத்துரை. அவரைக் கட்டாயம் நீங்கள் சந்திக்க வேண்டும்" என்றார்.

நாங்கள் ஐந்து பேர் அவரைக் காண அவருடைய வீட்டுக்குச் சென்றோம். "பெடியள் என்ன விசயம் வந்தனீங்கள்" என்றார். திரு. இராமகிருஷ்ணன் கூறியவற்றை ஒப்புவித்தோம். "சரி, இருங்கோ" என்று தானும் எங்களுடன் வீட்டு முற்றத்து மணலில் உட்கார்ந்தார். பின்னர் தமிழ் இலக்கியம் தொடர்பாக அரசியல் தொடர்பாக வரலாறு தொடர்பாக தமிழ் சினிமா தொடர்பாக பல விடயங்களை அவரிடமிருந்து அன்று நாம் கற்ற அந்த நாள் என்னுடைய நீண்ட நாள் நினைவாகும். அதனைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்பு எப்பொழுதும் ஏற்பட்டதில்லை. அவரைப் பிற்காலத்திலே பல இடங்களிலே சந்தித்துள்ளேன். அந்நாள் அவருக்கு நினைவிருக்கின்றதா எனக் கேட்கவேண்டும் போல் இருந்தது. ஆனால் வாய்ப்புக் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் நான் கைலாசபதியின் மாணவனாக இருந்தது காரணமாக இருந்திருக்கலாம்.

'எஸ்.பொ'விடம் ஓர் ஆக்க இலக்கியகாரனிடம் இருக்க வேண்டிய புதுமைமிகு ஆக்கத்திறன், ஆக்கத்திமிர், ஆக்கத்திறன்சார் சண்டித்தனம் ஆகியன நிறைய இருக்கின்றன. சில வேளைகளில் இலக்கிய உலகில் சண்டித்தனமும் தேவைப்படும். 'எஸ்.பொ'வினுடைய இத்தகைய சண்டித்தனத்தை பல சந்தர்ப்பங்களில் நான் ரசித்துள்ளேன். அவருடைய எழுத்திலும் பேச்சிலும் சில வேளைகளில் இதனைக் காணலாம். இம்முகத்தினை அவர் காட்டுகின்ற பொழுது "மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே" என்று முருகன் காட்டும் முகத்தினை அருணகிரியார் குறிப்பிடுவது என் நினைவில் வருவதுண்டு.

'எஸ்.பொ'வின் அற்புதமான படைப்பு அவருடைய "பந்த நூல் மூலமும் நச்சாதார்க்கினியருரையும்" என்னும் நூலாகும். நட்டுவச் சுப்பையனாருடைய "கனகி புராணம்", பண்டிதமணியின் "நவீன பாரதம்" ஆகிய அங்கத எழுத்துக்களுக்குப் பின்னர் 'எஸ்.பொ.' வின் இந்நூல் சிறப்பிடம் பெறுகின்றது. பண்டைத்தமிழ் இலக்கிய உத்திகளிலும் நவீன இலக்கிய உத்திகளிலும் 'எஸ்.பொ.'வுக்கு இருந்த தாடனத்தை இந்நூல் நன்கு புலப்படுத்துகின்றது.

பாடநூல் ஆக்கத் திணைக்களத்தில் ஒரு தடவை அவரைச் சந்தித்தேன். "இப்பொழுது எங்கே இருக்கிறீர்கள்" என்று கேட்டேன். "ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக" என்று தொடங்கியவர், "இவ்வளவு காலமும் பள்ளிக்கூடங்களிலிருந்து மாணவர்களைப் பிசக்கினாய், இனிப்போய் ஆசிரியர்களைப் பிசக்கு" என்று அனுப்பியுள்ளார்கள் என்றார்.

புளியந்தீவில் 1958ஆம் ஆண்டு நான் கண்ட அந்த மெல்லிய ஆனால் வைரம் பாய்ந்த உருவம் இன்று இலக்கிய உலகில் நிமிர்ந்து நிற்கின்றது. அவருக்கு என்னுடைய அன்பான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கிறேன்.

**வழமையாக இடம்பெறும் தொடர்கள் அடுத்த இதழில் இடம்பெறும்.**
ஆசிரியர்.

# தேர்

எஸ்.பொ.



முகத்தார் என்றழைக்கப்படும் ஆறுமுகம் துயிலெழுவது ஒரு திருக்காட்சி. தலையணையையும் போர்வையையும் உட்திணித்துப் பாயைப் பக்குவமாகச் சுருட்டி வைப்பது ஒரு கலை. கொட்டாவியை மறை பொருளெதுவுமின்றி ஊளையிட்டு, கைகளை நீட்டி மடக்கி, உடலை உலுப்பிச் சோம்பலை முறித்தால், துயிலெழு படலத்தின் ஓரம்சம் நிறைவுறும். தலைமாட்டில் நெருப்புப் பெட்டியும், தாவடிப் புகையிலைச் 'சுத்து'ம் எப்பொழுதும் தயாராக இருக்கும். 'சுத்தை' நேர்த்தியாகப் பற்றவைத்தால், கால்கள் தம் இச்சையாகவே கொல்லைப் பக்கம் நடக்கத் தொடங்கும். எப்பொழுது தொடக்கம் வைகறை துயிலெழும் வழக்கத்தை வாலாயப்படுத்திக் கொண்டார் என்பது அவருக்கே ஞாபக மில்லாத சங்கதி.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்துவிட்டார். கடிகாரத்தைப் பார்க்காது, கடிகாரத்தின் விநாடி முள்ளைப் பார்க்கிலும் நுணுக்கமான நேரக் கணக்கில் இயங்குவது அவருடைய இரத்தத்திலேயே ஊறியிருக்கின்றது. கொல்லையிலே கழிவுக் கருமத்தை முடித்து, அடிக் கழுவி, கிணற்றடிக் கமுக மரத்திலே தொங்கும் குரும்பைப் பாதியிற் கிடக்கும் உமிக்கரியினாற் பற்களைச் சுத்தஞ் செய்து, திண்ணைக்கு மீளுவார். 'இறப்பில்' தொங்கும் வெண் சங்கிலே கதிர்காமத்து விபூதி இருக்கும். வலது கை விரல்களுக்குள் எடுத்து, ''சிவ சிவா....'' என்று உச்சரிக்கும் பொழுது, நல்லூர்க் கந்தனின் உதயகாலப் பூசைமணி கேட்கும்.

இன்றும் ''சிவ... சிவா...'' என்று விபூதி பூசும்பொழுது, உதயகாலப் பூசை மணி கேட்கின்றது. கால ஓட்டத்திலே தரிக்காது நடைபெறும் நித்திய கருமங்கள்.

'இன்று வருடப்பிறப்பு...' – முதன்முதலில் இந்த எண்ணந் தான் முகத்தாருக்கு ஏற்படுகின்றது. எத்தனையோ வருடப் பிறப்புகள் வந்து போய்விட்டன. அவற்றுடன் எத்தனையோ வருடங்களும் ஓடி மறைந்து விட்டன. பார்வதிப்பிள்ளையைக் கல்யாணஞ் செய்த முதல் வருடம் வந்த வருடப்பிறப்பு; இராமேசுவர நேர்த்திக் கடனுக்குப் பிறகு சுப்பிரமணியனைப் பெற்று, முருகண்டியிலே மயிர்நீக்கக் கடன் செய்த மறுநாள் வந்த வருடப்பிறப்பு; சௌந்தரம் கல்யாணமாகி, மருமகனுடன் வந்த வருடப்பிறப்பு; தகப்பனுக்குத் தலைக் கொள்ளி வைத்து, கோடி கட்டாதே கழிந்த வருடப்பிறப்பு; பார்வதிப்பிள்ளை போய், நாளே காடாகிக் கிடந்த வருடப்பிறப்பு; – இப்படிப் பல. கால ஓட்டம் அவர்தம் உழைப்பை விழுங்கி, உடலைச் சருகாக்கி விட்டது. முன்னர் போல சுறுசுறுப்பில்லை. நல்லெண்ணெயில் வெதுப்பிய கத்தரிக்காயுடன் மூன்று நீற்றுப்பெட்டி பிட்டுச் சாப்பிட்டும், நாலு மரவள்ளிக் கிழங்கைச் சுட்டுப் பச்சைமிளகாய் சகிதம் போட்டுக் கொண்டாற்றான் காலைப் பசி அடங்கும் என்பன இளைஞப் பருவ நினைவுகள். பிள்ளைகளைப் படிக்க வைத்து உத்தியோகக்காரராக்கியதனால் இரண்டு பாண் துண்டுகளைக் 'கொறி'க்கும் பழக்கம் முகத்தார் வீட்டிலும் பரவி விட்டது. படுத்த படுக்கையாக வைக்கும் படியாக உடம்பிற்கு அப்படியொன்றுமில்லை. முதுமை உணர்வு வலுக்கின்றது. சிறிது வாதக்குணம் போன்ற எண்ணமும் மேலிடுகின்றது. திடீரெனக் குந்தி எழும்பச் சிரமப்படுகின்றார். இதனைப் பிள்ளைகள் அறிந்து கொள்ளாத வகையில் நடந்து கொள்ளுகின்றார். கடைக்குட்டி மகளைப் பற்றித்தான் கொஞ்சம் கவலை.

திண்ணையிற் குந்தி, கப்புடன் சாய்ந்துகொள்கின்றார்.

'அவள் பொடிச்சிதான் பாவம். தாயத்தின்னியாப் போயிட்டுது. படிப்பை முடிச்சுப் போட்டு, மூலையிலே கிடந்து பெருமூச்சு விடுகுது. அவளை மேலை படிக்க வைக்கலா மெண்டு மூத்ததுகள் விரும்பினதுதான். வேணுமெண்டால், உதுகளின்ரை பொம்பிளைப் பிள்ளையள் படிச்சு உத்தியோகம் பாக்கட்டும். இளையவனின்ரை பாடு பிழையில்லை. ஒரு மாதிரி ஒரு வேலையிலை கொழுவீட்டான். ஏதோ கொம்பனியிலை தான் வேலையாம். ஆனா, சம்பளம் புழையில்லை. மேலுக்கு நல்லா வரலாமெண்டு மூத்தவனும் மச்சான்மாரும் சொன்னாங்கள். அவன் கடைக்குட்டி எண்டு வீட்டோடை இருந்து சாப்பிட்டுப் பழகியவன். மூண்டு நாலு மாசம் அதுவுமில்லை. கயிற்றப்பட்டு வாழ்ந்தால்தானே, பேந்து பின்னடிக்குத் தங்கடை பாடுகளைத் தாங்களே பாக்குங்கள். நல்லூரான்ரை புண்ணியத்திலை எல்லாம் தங்கடை சீவியப்பாடுகளைப் பாக்கக்கூடிய நிலைக்கு வந்துட்டுதுகள். என்ரை கெட்டித்தனம் என்ன இருக்கு? ஆண்டவன் அளந்தபடி நடக்குது... விடியப்புறக் கோச்சியிலே மூத்தவன் வருவான். அவன் மறந்தாலும் அலுத்தாலும் அவன்ரை மனுஷி கமலா இஞ்சை வராமலிருக்காள். என்னெட்டைக் கைவியளம் வாங்கிறதிலை அவளுக்கு அவ்வளவு நம்பிக்கை.... ஓம்... அதுகளின்ரை மூத்ததுக்கும் – உந்தப் புது நாணயப் பேர் சட்டெண்டு மனசிலை வாறேல்லை... அவள்தான் அம்சதொனிக்குப் பத்து வயசுக்கு மேலை இருக்க வேணும்... என்ன பத்து? பதினொண்டுக்கு மேலை. கடுக்கண்ணுற பருவம்... ஓ, இவ போயே நேற்றெண்டாப் போலை இருக்குது.... ஆனா, வருசம் அஞ்சாகுது. அவள் புண்ணியஞ் செய்தவள். எல்லாப் பாரத்தையும் என்ரை தலையிலை சுமத்திப் போட்டுப் போயிட்டாள்.

இடைவெட்டில், மனோகரன் நேற்று எழுதியிருந்த கடிதம் முகத்தாருடைய ஞாபகத்துக்கு வருகின்றது. வருடப் பிறப்பன்றே கொழும்புக்குத் திரும்பிவிட வேண்டுமென்று எழுதியிருந்தான்.

'அதுவும் சரிதான். எங்கடை வாகடங்கள் நெடுகச் சரிவருமே? இப்ப தான் போய் வேலையிலை சேந்திருக்கிறான். லீவு கீவு எடுத்துப் பழுதாக்கப்படாது.'

"அப்பனே முருகா"

வீட்டின் சின்ன அறைக்கதவு திறக்கப்படுகின்றது. 'கடைக்குட்டி' பத்மாதான் வருகிறாள்.

'என்னதான் பேரளவிலை பெரிய பிள்ளை எண்டாலும், வீட்டிலே சின்னப்பிள்ளைதானே? சரியா, இவ பார்வதிப் பிள்ளையை உரிச்சுவைச்ச மாதிரி இருக்கிறாள். இவளை ஒப்பேத்திப் போட்டனெண்டால், பேந்தென்ன? சிவனே எண்டு கண்ணை மூடலாம். இவன் மனோகரனை இவவின்ரை அண்ணரின்ரை பொடிச்சிக்குத்தான்... பெடியங்களின்ரை காரியத்தை நிதானமாச் சொல்லேலா...'

முதற் காரியமாகப் பத்மா வீட்டு முற்றத்தைக் கூட்டி, சாணகத் தண்ணீர் தெளித்து முடிக்கின்றாள். வருடப் பிறப்பன்று விடியு முன்னரே, அன்றைய வழமையான கடமைகளைச் செய்து முடிக்கும் வேட்கை. வருடப்பிறப்பன்று எல்லாக் காரியங்களையும் விக்கினமின்றி உரிய முறைப்படி நிறைவேற்றிவிட்டால், வருடம் முழுவதும் அவ்வாறே அமையுமென்னும் நம்பிக்கையில் ஊறித் திளைத்த மனம், வருடப்பிறப்பன்று பழங்கறிகளுக்கு மதிப்பில்லை. கறிச் சட்டிகளை அடுக்களைக்கு வெளியே, இடப்பக்கமாகவுள்ள செவ்விளநீர்க் கன்றடியிற் பரப்பி வைத்து, சாம்பல் தோய்த்தெடுக்கப்படும் 'பொச்சு' மட்டையாற் தேய்த்துக் கழுவத் தொடங்குகின்றாள். திண்ணையிலே குந்தியிருந்து சிந்தனை யிலாழ்ந்திருக்கும் தந்தையை அவள் கண்கள் கவனிக்கின்றன. மரவள்ளிக் கிழங்கு காய்ச்சிய சட்டியில் அடிப் பிடித்திருந்த பாகத்தைப் பொச்சுமட்டையால் நன்றாகச் சுரண்டிக்கொண்டே பேச்சுக் கொடுக்கின்றாள்.

"என்ன அப்பு... இண்டைக்கு காலமைக் கோச்சியிலை மூத்தண்ணர் வருவாரல்லே?"

"ஓம் புள்ளை. சுப்பிரமணியம் வராமல் வருஷம் பிறக்குமே? என்னதான் இருந்தாலும் அவன் வருஷத்துக்கு வராமல் இருப்பானே?"

'எப்பிடியும் அவன் வருவான். காதுப் பிடியிலை கமலா கூட்டியந்திடுவாள். கோச்சி இன்னும் நாவற்குழியைத் தாண்டி யிருக்காது. இப்ப நடக்கத் துவங்கினாலும், நேரத்தோடை ஸ்ரேஷனுக்குப் போயிடலாம். ஆனா, அவனுக்கு உதொண்டும் புடிக்கிறேல்லை. "நான் எங்கடை வீட்டுக்கு வாறதுக்கு ஆரும் வந்து வழிகாட்டத் தேவையில்லை" எண்டு எத்தினை கோசு கோவிச்சது எனக்கல்லோ தெரியும்?...'

"புள்ளை. தேத்தண்ணிக்கு உலை வைக்கல்லையே?"

"வைச்சிட்டன்"

"கொக்கா பரிமளம் இன்னும் எழும்பல்லையே?... உங்கடை அத்தாரும் வலு நேரஞ்செண்டுதான் வந்தவர். சரியாச் சாப்பிட்டிருக்கவும் மாட்டார்."

முகத்தாரின் இன்னொரு மகளான பரிமளத்தின் கணவனும் கொழும்பிலே தான் வேலை பார்க்கின்றான். பரிமளம் தைப்பொங்கலுக்குத் தந்தையின் வீட்டிற்கு வந்தவள், திரும்பிப் போகவில்லை. கணவன் சதாசிவம் நேற்றிரவு யாழ்தேவியிலே தான் திரும்பியிருக்கிறான்.

'பாவம். அதுகளுக்கு ஆண்டவன் ஒண்டும் குறை வைக்கேல்லை. இதுக்கிடையிலை முப்பதினாயிரம் கொட்டி புது மோடியிலை ஒரு வீடும் கட்டிப் போட்டுதுகள். கதைச் சாங்கத்திலை வைகாசி நாளுக்குத் தான் குடியேறுவினம் போலை கிடக்குது. பேந்தென்ன நெடுகிலும் குடியிருக்கப் போகினமோ? வாடகைக்குத்தான் விடுவினம். காரும் ஒண்டு வாங்கியிருக்கினமாம். அதை இன்னும் ஒருநாளும் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரல்லை. அதுகளின்ரை அன்புக்கும் அந்நியோன்யத்துக்கும் ஒரு குழந்தையைத்தான் ஆண்டவன் குடுக்கேல்லை. சாதகத்திலை பின்னடிச் சந்ததி விருத்தி எண்டுதான் இருக்கு. ஏழு வருஷத்துக்குப் புறகுதான் சதாசிவமும் தலைச்சனாப் பிறந்தவனாம். கொழும்பிலை பேர் போன டாக்குத்தரிட்டை எல்லாம் காட்டினவை. அதுகளுக்கு ஒரு குறையுமில்லை எண்டுதான் சொன்னவையாம்...'

"கோப்பியை ஆர்றதுக்கிடையிலை குடியுங்கோ அப்பு" என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள்.

"என்ன புள்ளை, முட்டைக்கோப்பி அடிச்சிருக்கிறாய். அத்தாரும் நிக்கிறார். இப்ப சுப்பிரமணியமும் வந்திடுவான்... அவன்ரை அசோகன் முட்டைக் கள்ளனல்லே?"

"இஞ்சை தாராளமா முட்டையள் இருக்குது. புட்டுக்குப் பொரிச்சும் வைக்கலாம்."

முகத்தார் கோப்பியைக் குடிக்கின்றார்.

"மெய்ய புள்ளை... கொக்கா சௌந்தரம் இஞ்சை நேத்து வந்திட்டுப் போனவளல்லே? என்ன சொல்லிப் போட்டுப் போனவள்? மத்தியானச் சாப்பாட்டிற்கு வருவாளாமோ?"

"அத்தான் நேத்துத்தான் வந்தவராம். அவரின்ரை சகோதரி–அவைதான் பறங்கித் தெருவார் – மத்தியானச் சாப்பாட்டுக்கு வீட்டை வருவினமாம். பின்னேரம் போலைதான் வர வசதிப்படும் எண்டு சொன்னவ. எதுக்கும் கைவியளத்துக்கு முகுந்தனை அனுப்பி வைக்கிறாவாம்."

சௌந்தரம் பெரிய குடும்பக்காரிதான். இருந்தாலும் சீமாட்டி ஒரு சீதேவி. ஆறு பஞ்சானும் குஞ்சுகளையும் ஒரு குறையுமில்லாமல் படிப்பிக்கிறாள். ஏதோ ஆனை சேனையையே சீதனமாக் குடுத்தனான்? புருஷன் தங்கராசா உண்மையிலை ஒரு தருமராசாதான். புள்ளையளின்ரை படிப்புக்காகக் குடும்பத்தை ஊரோடை விட்டிட்டுப் போயிட்டான். அங்கை கடைச் சாப்பாட்டோடை வயித்தை வாயைக் கட்டிச் சீவிக்கிறான். அங்கையும் இங்கையுமாக ரெண்டு சிலவுகளைச் சமாளிக்கிறதுக்கு கந்தோர் விட்டாப்புறகு வேற வேலயளையும் பாக்கிறதாம். அந்தந்த வயசிலை ஓடியாடிப் பிரயாசைப்பட்டு உழைச்சு சம்பாரிக்கத்தான் வேணும். அதுக்கு ஏத்த சாப்பாடு வேண்டாமே? நல்ல வேளை... பெட்டையள் கீழ்க்கண்டுகள் தான். அந்த அளவிலை ஒரு ஆறுதல்... வந்தவனுக்கு ரெண்டு வேளை தன்ரை கையாலை சமைச்சுக் குடுக்காமல் இஞ்சை ஓடியாறாளோ? பொம்பிளைப் புள்ளையள் கரை சேருமட்டுந்தான் எங்கடை.'

"என்ரை மடிசஞ்சையும் சால்வையையும் எடுத்துத்தா புள்ளை."

"இவ்வளவு வெள்ளணத்தோடை கடைக்குப் போகப் போறியளே?"

"இல்லை, உந்த முச்சந்தி மட்டும் போயிட்டு வாறன். தச்சேலா ஏதேன் அரியது நரியது கிடைச்சால்..."

சாறணை உதறிக் கட்டிக்கொண்டு, 'மடிசஞ்சை' இடுப்பிலே சொருகி, ஏகாவடமிடச் சால்வையை எறிந்து படலையைக் கடக்கிறார்.

ரோஜா இதழ்ப் படுக்கையான மென்மைசேர் நினைவுகளில், ஏதோ ஒரு முள்ளின் உறுத்தல். கால்களின் இயக்கத்திலேயே படரும் நடை. சந்திக்கடைப் பசுபதியின் குரல் அவரைக் கடைப்பக்கம் ஆகர்ஷிக்கின்றது.

"எப்பிடி அண்ணர்? வருஷம் எத்தினை மணிக்குப் பிறக்குதாம்? கைவியளம், நாள்வேலைக்கு நேரம் எப்பிடிப் போட்டிருக்கு" பத்துப் பேரிடம் கேட்டும் பசுபதிக்குப் பொச்சந் தீரவில்லை.

"பத்து இருபத்தெட்டுக்குத்தான் வருஷம் பிறக்குது. கைவியளத்துக்கு இண்டைக்கு நாள் போடேல்லை. ஆனா, பொதுநாள். உடனையே குடுத்தாலும் பாதகமில்லை."

முகத்தார் பஞ்சாங்கம் பார்த்து வைப்பதில் வெகு ஒழுங்கு. கடிகாரம் பார்க்கும் பழக்கமில்லாத அவர், எந்தச் சுபவேளையையும் விநாடி தப்பாமற் சொல்லுவார்.

"நான் ஒருநாளும் இந்த நேரம் காலம் பாத்துக் கொண்டிருக்கிறேல்ல... வருஷப் பிறப்பண்டைக்கே துவங்கீட்டால் சரிதானே? இல்லாட்டில் இழுவல், ரெண்டு மூண்டு நாளைக்கும் நாள் போடமாட்டாங்கள்... அதுக்காகக் கடையைப் பூட்டி வைக்கிறதே?"

"ஓமோம்... எல்லாம் நம்பிக்கையைப் பொறுத்ததுதான், பசுபதி" என்ற முகத்தார், "கோச்சி இன்னும் வரேல்லைப் போலை" என வேறு திசையிற் கதையைத் திருப்புகின்றார்.

"நேரமாயிட்டுது... வருஷத்துக்கு இஞ்சினை வாற சனக்கூட்டத்தோடை வாற ரயில் கொஞ்சம் முந்திப் பிந்தித்தான் வந்து சேரும். உங்கட மற்ற மேன் குமாரசாமியும் இண்டைக்கு வாறார்போலை இருக்குது. தம்பியும் இஞ்சாலைப் பக்கம் வந்து வெகுகாலமாப் போச்சுது."

நெஞ்சிற் குத்திக்கொண்டிருந்த முள், ரோஜா இதழ்ப் படுக்கைக்குள் இனிதாக மறைகின்றது.

குமாரசாமி வருவான் என்பது முகத்தாருக்குத் தெரியாது. அவனை எந்த விசேடத்திற்கும் வீட்டில் யாருமே எதிர்பார்ப்பதில்லை. அவனுடைய போக்கு அப்படி. இருப்பினும், குமாரசாமி வருவது தனக்குப் புதினம் என்பதை முகத்தார் வெளியே காட்டிக்கொள்ளவில்லை.

"இஞ்சை பாத்தியளே நோட்டீசை. முத்தமிழ் மன்றம் வருஷக் கொண்டாட்டம் நடத்துதாம். நாடகங்களும் நடத்துறாங்களாம். அதுகளுக்குத் தலைமைதாங்க குமாரசாமி வருகுதாம்."

பசுபதி நோட்டீசைக் கொடுக்கின்றான்.

இப்பொழுது முகத்தாருக்குக் கண் கொஞ்சம் வெள்ளெழுத்து. ஆனாலும் கொட்டை எழுத்தில் அச்சடிக்கப் பட்டுள்ள மகனுடைய பெயரைக் கண்டுபிடிக்கின்றார். மனம் மலர்கின்றது. முகபாவம் மாறாமல் நோட்டீசைத் திருப்பிக் கொடுக்கின்றார்.

"கண்ணும் புகைச்சலாய்க் கிடக்குது."

"நான் வாசிச்சுக் காட்டட்டே?"

"வேண்டாம் பசுபதி. நான் வாறன். மூத்தவன் போறான் போலை இருக்குது காரிலை."

மூத்தவனைச் சொல்லி விடைபெற்றுக் கொண்டாலும் முகத்தாருக்குக் குமாரசாமியைப் பற்றிய எண்ணமே மேலோங்கியிருக்கின்றது. குமாரசாமி முகத்தாரின் இரண்டாவது புத்திரன். சிறுவயதிலேயே படித்து முன்னுக்கு வந்து கொண்டிருந்தான்.

'அவன்ரை மூளைக்கு அவன் உப்புடியே இருக்கவேணும்? சீமைப் படிப்பெல்லாம் முடிச்சு, ரெண்டு மூண்டு காரும் நாலைஞ்சு பங்களாவும் வைச்சல்லோ வாழவேணும்? அந்தக் காலத்திலை கண்ணூறுபட்டுப் போறாப் போலை சொல்லுவானுகள். சுப்பிரமணியனைச் சாட்டி சௌந்தரத்துக்கு மாப்பிள்ளை; குமாரசாமியைக் காட்டி பரிமளத்துக்கு மாப்பிள்ளை...'

அதே நாக்குகள் திசை திரும்பி, அவரை மல்லாத்திக் கிடத்திக் குறி சுட்டபொழுது...

'பிஞ்சிலை பழுத்தவன், தமையன் இருக்கக் கூடியதாக, ரெண்டு குமருகள் வீட்டுக்குள்ளை பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கக் கூடியதாக, இவனுக்குக் கலியாணப் பைத்தியம்... அதுவும் ஊர் பேர் தெரியாத வேதக்காரிச்சியாம்... தூ, இவன்ரை படிப்பு நாக்கு வழிக்கத்தான் உதவும். இவன் தன்ரை படிப்பை தூக்கி எறிஞ்சு போட்டு கக்கூசு வாளியைத் தூக்கித் திரியட்டும்...'

இத்தகைய வார்த்தைகள் மார்பு மயிரைப் பொசுக்கி, இதயக் குலையை வெதுப்பியெடுத்தபொழுது... குறுக்கு இழைகளைத் தறி தலையிலே மின்சார வேகத்தில் இணைக்கின்றன. சின்னத் தலையிடிக்கும், காய்ச்சலுக்குங்கூட சீனிச் சுருளும், தேயிலைச் சரையும், வெற்றிலை பாக்குப் பெட்டியுங் 'காவி'க் கொண்டுவந்தவர்கள் குமாரசாமியின் அவசரக் கலியாணத்தின் பின்னர், முகத்தார் வீட்டுப் படலையைத் திறக்க முகஞ் சுழித்துக் கூசினார்கள். அப்பொழுது சுப்பிரமணியம் எல்லாவற்றிற்கும் ஆறுதலாக இருந்துங்கூட, முகத்தார் இந்தப் பென்னம்பெரிய உலகத்திலே தன்னந் தனியாக விடப்பட்ட உணர்வுகளுடன் தத்தளித்தார்.

'நானோ, அவனோ என்னத்தைச் செய்யிறது? எல்லாம் அளந்தபடிதான் நடக்கும். அவன்தான் ஒரு புத்தியிலை செய்திட்டான். இனி, விரலை வெட்டியே எறியிறது? வெக்கம் ரோஷத்தை விட்டிட்டு ஒருக்காப் போய் அதுகளைப் பாத்தன். அவள் பொடிச்சி புழையில்லை. குணவதி எண்டதை முகத்தைப் பார்த்தோடனை சொல்லுவினம். இவன்ரை குணத்துக்கு அவளிலைதான் பச்சம் வைக்கவேணும். வேதக்காரிச்சி எண்டாப்போலை என்ன? சாதி குலம் பாத்துக் கூழ்ப்பானைக்கை விழுந்தவை எத்தனை பேர் இருக்கினம்? இவன் எண்டாப்போலை ஒழுங்காக் கோயில் குளம் போறவனே? விபூதி பூசுறவனே? அவள் பொடிச்சியையும் கோயிலுக்குப் போகாமல் மறிச்சுப் போட்டானாம். அவனுக்கு உடம்பு மட்டும் பயித்தங்காய் போலை. ஆனா, உடும்பைப் போலைத்தான் பிடிவாதம். இவ பார்வதிப்பிள்ளை எண்டாப்போல குறைஞ்ச பிடிவாதக்காரியோ?... அவன்ரை போக்கு ஒரு தனிப் போக்கு. இஞ்சை ஒருத்தருக்கும் விளங்கிறேல்லை. "உங்கை யாழ்ப்பாணத்துக் கிடுகு வேலியளாலை சங்கையை மறைச்சுக் கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாக நடித்துக் கொண்டே வாழ்பவருக்கு என்ரை போக்கு விளங்காது. என்ரை போக்கு என்ன விளங்கும்" எண்டு ஒருநாள் உங்கினை சத்தம் போட்டான். இதுகளிலையும் புழையில்லை. ஒட்டி நடக்காதவனோடை என்ன சகவாசம் எண்டு விலகிக்கொண்டுதுகள். புறம்பு காட்டி நடக்கிற உவையளோடை எனக்கென்ன தொடர்சல் எண்டு அவனும் விலகிக்கொண்டான். அவன்ரை மூண்டு பிள்ளையளும் படிப்பிலை வலு விண்ணராம். எனக்கெண்டா அதுகளைப் பார்க்க ஆசைதான். இவவின்ரை ஆண்டுத்

திவசத்துக்குத் தான் ஒரு பொடியனைக் கூட்டியந்தான். 'அப்பப்பா' எண்டு அவன் வாழைப்பழத்தோடை என்ரை மடியைவிட்டு இறங்கவும் மாட்டான். பொங்கல் – புதுவருஷம் – தீவாளி எண்டு மூண்டு கொண்டாட்டம் வருகுது. ஒண்டுக்கும் வாறேல்லை. எப்பவாவது இருந்திட்டு ஒருநாள் தனியா வருவான். புள்ளையளின்ரை சுகபலனைப் பற்றிச் சளப்புவான். குசினிக்கை போய் ஏதாவது போட்டுத் தின்னுவான். அங்கை கூட்டம் இஞ்சை கூட்டம் எண்டு சொல்லுவான். உடனேயே போயிடுவான். பேந்து விசாரிச்சுப் பாத்தால் அண்டைய கோச்சியிலையே ஊருக்குத் திரும்பீட்டான் எண்டு தெரிய வரும்..... மெய்தான். அவன்ரை போக்கு இஞ்சை ஒருத்தருக்கும் விளங்கேல்லை. அதோடை அந்தப் போக்கிலை ஒருத்தருக்கும் விருப்பமுமில்லை. ஒரு மாதிரியான கோபத்தனம் இவையளின்ரை மனங்களிலை இருக்குது. என்ன இருந்தாலும் சகோதர பாசம் எண்ட சாம்பல் அதுகளை மூடி வைச்சிருக்குது. வீட்டிலை எல்லாரும் அவனைக் குறையாத்தான் பேசுவினம். நான் மட்டுந்தான் அவன்ரை பக்கத்திலை பேசுறது. என்ன இருந்தாலும் அவனும் என்ரை மேன்தானே? இதுகள் இதுகளின்ரை போக்கு. அவன் அவன்ரை போக்கு. கையிலே இருக்கிற அஞ்சு விரலும் சமமே? ஒண்டுக்கொண்டு வித்தியாசமில்லையே? வீட்டுக்குள்ளையும் உப்புடித்தான். ஊருக்குள்ளை அவனுக்குத்தானே பேரும் நடப்பும்? அவன் இவ்வளவு உதவரங் கெட்டவனெண்டால் ஊரிலை உப்புடிப் பேர் இருக்குமே? இதுகளுக்குப் படிச்சும் புத்தியில்லை. இவங்களைக் குடும்பத்துக்காகப் பெத்தன். குடும்பம் தேர்போலை நடக்குது. அவனை ஊருக்காகப் பெத்தன். அவன் றோட்டளக்கிறான் எண்டு வைச்சுக்கொள்ளுவம். அதுக்காக அவனை நான் மெச்சிக்



கதைக்கிறதும் இதுகளுக்குச் சில நேரம் புடிக்கிறேல்லை. ஓரவஞ்சக மனுஷன் எண்டு கூட நினைக்குதுகள். "நீங்கள் என்னத்தைத்தான் சொன்னாலும், அவனும் என்ரை புள்ளைதான்" எண்டு சொல்லுவன். இதுகளும் பேக்கூத்துத்தான் ஆடுகிறது. ஏதோ நான் அவன்தான் என்ரை புள்ளை எண்டு சொல்லிப் போட்டதைப் போலை. தாய் மனம் பித்துத்தான். இவவும் இப்ப இல்லை. என்ரை மனமும் பித்துத்தான். இது ஒண்டை மட்டும் நான் குமாரசாமியைப் பற்றி மறக்கமாட்டன். இவையள் ஆயிரத்தைச் சொல்லட்டும். சுப்பிரமணியமா இருக்கட்டும்; சவுந்தரம் – பரிமளமாக இருக்கட்டும்; மனோகரன் – பத்மாவாக இருக்கட்டும் ;– முகத்தார் ஆறுமுகத்தின்ரை புள்ளையெண்டு தான் ஊர் தேசத்திலை தெரியும்... ஏன், சதாசிவம் தங்கராசா எண்டாப் போலை என்ன? என்ரை மருமக்கள் எண்டாத்தான் நல்ல விளப்பமாத் தெரியும். ஆனா, கடைத் தெருவிலை எத்தினை பேருக்கு என்னைக் குமாரசாமியின்ரை அப்பனெண்டு தான் தெரியுமெண்டு இவையளுக்குத் தெரியுமே? அண்டைக்கு பஸ்ஸிலை நான் தெல்லிப்பழைக்குப் போகேக்கிள்ளை ஒரு பொடியன் "நீங்கள் குமாரசாமியின்ரை தகப்பனல்லோ?" எண்டு கேட்டுப்போட்டு, தான் குந்தியிருந்த இடத்தை எனக்குத் தாறான். அந்தப் பொடியனும். பெரிய படிப்புத் தானாக்கும்.

"என்ன முகத்தார்? என்ன பொடியள் எல்லாம் வந்திட்டினமோ?" ஐயம்பிள்ளை தன்னுடைய படலையில் நின்றபடி குரல் கொடுக்கிறார்.

"கோச்சி அப்பவே வந்திட்டுது. வந்திருக்கவேணும்."

"சுப்பிரமணியம் வராமல் நிற்கமாட்டான். மனோகரனும் வாறானாமோ?"

"ஓம், கடுதாசி போட்டிருந்தான்."

"படலையிலை நிண்டு கதைக்கிறியள்? கடைக்குப் போறதுக்கு முந்திக் கொஞ்சம் பாவிச்சிட்டுப் போகலாமெண்டால் என்ரை மனுஷியைத் தெரியாதே? ஆற்றையேன் சாட்டிலைதான்... உள்ளுக்கை வாருங்கோவன்..."

"இப்ப வாதக்குணமாவும் இருக்குது. ஒத்துக் கொள்ளுதுமில்லை."

"இது நித்தமே முகத்தார்? ஒரு வருஷம் பெருநாளுக்குத் தானே? உங்களைத் தூரத்திலை கண்டோடனையே உங்களோடை தான் வருஷத்தைத் துவங்க வேணுமெண்டு ஆசை வந்திட்டுது."

"ஏன்தான் உன்ரை ஆசையையும் கெடுப்பான்?"

முகத்தார் ஐயம்பிள்ளையுடன் கொஞ்சம் 'முஸ்பாத்தி' பண்ணிவிட்டு, அவருடனேயே கடைக்குச் சென்று, மக்கள் – பேரப்பிள்ளைகள் ஆகிய சகலருக்கும் இதமாகக் கறி – காய்கறி – பழவகைகள் வாங்கிக் கொண்டு வீடு திரும்பும்பொழுது பத்து மணியாகிவிட்டது.

வீடு கலகலப்பு நிறைந்து காணப்படுகின்றது. சுப்பிரமணியமும் குடும்பமும் வந்தால் சத்தத்திற்குக் குறைவில்லை. பிள்ளைகள் புத்தாடை புனைந்து காணப்படுகின்றார்கள்.

'ஐயம்பிள்ளையோட மினக்கட்டு நான்தான் நேரம் பிந்தீட்டன்போலை கிடக்குது. சுப்பிரமணியம் எல்லாப் புள்ளைகளுக்கும் ஒரு நிறத்திலைதான் உடுப்புகள் வாங்கி யிருக்கிறான். ...இஞ்சை பாருங்கோவன், இவன் கடைக்குட்டி

தன்ரை சட்டை தான் திறமெண்டு சண்டை பிடிக்கிறதை... ஓ, பரிமளமும் சதாசிவமும் கூட முழுகீட்டினம். உந்த உடுப்புகள் சரியான விலையாம். வருஷப்பிறப்புக்கு நெடுகிலும் உவை உப்புடித்தான் எடுக்கிறவை. கோயிலுக்குப் போகப் புறப்பட்டு நிற்கினை போலை. நல்லூரானே இதுகளுக்கு ஒரு புள்ளைப் பாக்கியத்தைக் குடு... சே, கண்ணூறு பட்டிடப்பிடாது... பத்மாவுக்கு உந்தச் சீலை வடிவாத்தான் கிடக்குது. சாமத்திய வீட்டுக்குள்ளை சீலையோடு பாத்ததுக்கு இப்பதான் சந்தனக் கலர்நிறத்திலை தனக்கொரு சீலை வாங்கியரவேண்டும் எண்டு மனோகரனுக்கு எழுதினவள். அவன்தான் வாங்கியந்திருக்க வேணும்... இன்னும் சுப்பிரமணியமும் கமலாவும் முழுகி முடிக்கேல்லைப் போலை... உங்கை கிணத்தடியிலை நிக்கினம்.'

''புள்ளை பத்மா. இந்தக் கறி சாமான்களைக் கொண்டு போய் குசினிக்கை வை.''

''அப்பு காலைச்சாப்பாடும் இல்லாமலே கடைக்குப் போனவர்? நீங்கள் வருவியளெண்டு முட்டையும் பொரிச்சுக் காத்திருந்தது தான் மிச்சம்.''

''அவன் ஐயம்பிள்ளை விடேல்லை. அவனோடை அப்படியே கடைக்குப் போனதும் நல்லதாப் போச்சுது. சவ்வு கிவ்வு இல்லாத நல்ல இறைச்சி கிடைச்சுது. சின்னதுகள் உறைப்புத் தின்னாயினம். பால்கறி வைக்க ஈரல் கிடைச்சுது. கொத்தார் இறைச்சிவகை தின்னாதவர். நல்லொரு பாரை கிடைச்சுது. மிச்சம் பொரியலுக்கும் உதவும். கைவியளத்தை முடிச்சிட்டுப் போயிருந்தால் கடையிலை ஒரு மண்ணும் வாங்கியிருக்கேலாது.''

''அப்புவுக்கு இந்த வருஷப்பிறப்பு நல்ல முழுவியளத் தோடை துவங்கியிருக்குது'' என்று சொல்லிக் கொண்டே, பெரிய உமலைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு அடுக்களைப் பக்கம் பத்மா போகின்றாள்.

''இந்த வேட்டிதான் பெத்தப்பாவுக்கு'' என்று கூறிக் கொண்டே 'பீஸ்' வேட்டி ஒன்றை 'ரீப்போ'வில் அசோகன் வைக்கின்றான். ''சித்தப்பாவும் அப்பாவுக்குக் கரை போட்ட வேட்டி ஒண்டு வாங்கியந்தவர்'' என்பதையும் அறிவிக்கின்றான். எவ்வளவோ தடுத்தும் பரிமளம் கேட்கவில்லை. அவள் நேற்றே 'பரமாஸ்' சோடி ஒன்று எடுத்துக் கொடுத்துவிட்டாள். தான் முன்னர் கொண்டுவந்த வேட்டியுடன் பெத்தப்பாவின் மற்றைய உடுப்புகளையுங் கொண்டுவந்து அடுக்கி 'டோய், பெத்தப்பாவுக்கு இந்த முறை நாலு புதுவேட்டி' என்று உரக்கக் கத்தினான்.

''மூன்று வேட்டிதானே? ஒன்று சால்லையல்லோ?'' என்று மூலையில் நின்று ஹம்ஸதொனி திருத்துகின்றாள்.

'வீண் சிலவு. எவ்வளவு சொன்னாலும் கேக்கமாட்டுதுகள். அதுகளுக்கு ஏதோ செய்யவேணுமெண்ட ஆசை. வீட்டோடை நிக்கேக்கிள்ளை உதெல்லாத்தையும் மனோகரன்தான் உடுத்துக் கிழிப்பான். இப்ப அவருமல்லோ எடுத்துத்தரத் துவங்கியிருக்கிறார்? இதுகளை இனி உடுத்துக் கிழிக்கிறதற்கு சௌந்தரத்தின்ரை மூத்தவன் முகுந்தன்தான் இருக்கிறான். அவனும் இந்த மார்கழியிலை சீனியர் சோதினை எடுக்கப் போறானாக்கும்.

ஈரச்சீலையுடன் கமலா பெரிய அறைக்குள் ஒடுகிறாள். முற்றத்தில் கம்பிக் கொடிக்குப் பக்கத்தில் நின்று தலையைத் துவட்டிக் கொண்டிருந்த சுப்பிரமணியம், ''மருத்துநீர் அந்தா கிணத்துக்கட்டிலை இருக்குது. போய்க் குளிச்சிட்டு வாருங்கோ அப்பு'' என்கிறான்.

''என்ன அவசரம்? மனோகரனும் முழுகீட்டு விடட்டன். எங்கை அவனைக் காணேல்லை?''

''உதுகள் ஏதோ ஐஸ்கிறீம் வேணும் சீனிச் சித்தப்பா எண்டதுகள். அவன் வாங்கப் போயிட்டான் போலை கிடக்குது. அவன் ஆறுதலாகக் குளிக்கட்டும். நீங்கள் முதலிலை குளியுங்கோ. வருஷம் பிறக்கப்போகுது. கும்பம் வைக்கவல்லோ வேணும்?''

''ஓமோம்.'' முகத்தார் கிணற்றடிக்குப் போகின்றார். கட்டியிருக்குஞ் சாறத்துடன் குளிப்பது அவருடைய வழக்கம். 'சனி நீராடு' என்று வாரத்திற்கு ஒருமுறை; மூன்று பெருநாள் நீராட்டம் பிரத்தியேகமாக வந்து சேரும். தலையிலே மருத்துநீரை வைத்து நன்றாகத் தப்புகின்றார்.

''சித்தப்பா, சித்தப்பா'' என்று அசோகன் ஆர்ப்பரிக்கிறான்.

'குமாரசாமி வந்திட்டானோ?'

ஆசையுடன் எட்டிப்பார்க்கின்றார். தொட்டாச் சுருங்கி இலைகள் கூம்புகின்றன.

'இல்லை, அவன் மனோகரன்தான். மூண்டு நாலு மாசத்திலை கொஞ்சம் வளந்திருக்கிறான். சொந்தமாச் சம்பாரிக்கத் துவங்கீட்டால் கொஞ்சம் பூரிப்புத்தானே? நல்ல தாராளமாச் சிலவழிக்கிறார். ஓம், போய்க் கொஞ்ச மாசந்தானே? இன்னும் கொழும்புப் பழக்கங்கள் நல்லாப் புடிபடேல்லைப் போலை... குமாரசாமியை இன்னும் காணேல்லை. சிலவேளை, நல்ல நாளும் பெருநாளுமா எல்லாரும் கொண்டாட்டத்திலை நிக்கேக்கிள்ளை நான் ஏன் குழப்புவான் எண்டுபோட்டு நிண்டிடுவானோ?'

இந்த எண்ணம் ஏற்பட, காலையில் இலேசாக உறுத்திய நெஞ்சில் முள் ஆழமாக இறங்குகின்றது. வலி தாங்கமாட்டாது அவஸ்தைப்படுகின்றார். அவஸ்தைப் பரிகார எத்தனத்தில் பெருமூச்சொன்று நீள்கின்றது... இயந்திர வேகத்தில் கைகள் துலாக்கயிற்றை மேலும் கீழுமாக இழுக்க வாளி வாளியாகத் தண்ணீர் தலையிலேயே கொட்டப்படுகின்றது.

''நானும் நல்ல வேளைக்குத்தான் வந்திருக்கிறன். எல்லாரும் மருத்துநீராட்டம் முடித்தாயிற்றுப்போலை... பத்மா இதைப் புள்ளையளுக்குப் பிரிச்சுக் குடு.''

'இது நிச்சயமாக் குமாரசாமியின்ரை குரல்தான். உந்த வெண்கலக் கடை யானையின்ரை குரல் அவன்ரைதான்.'

தண்ணீர் காதுக்குள் புகுந்து, தன் மனக்குகை நினைவுகளுக்கு உருவங் கொடுத்தது. மாரீச ஜாலம் நடைபெறுகின்றதோ என்று கூட ஒரு கணம் நினைக்கின்றார். இருந்தாலும் ஆசை இழுக்கின்றது.

''அப்பு எங்கை?''

''அவர் குளிக்கிறார்... அப்பு! சின்னண்ணர் வந்திருக்கிறார்'' என்று பத்மா குரல் வைக்கின்றாள்.

துளிர்க்கும் நம்பிக்கை, பச்சையின் பசுமையை உறிஞ்ச, மறைப்புத் தட்டிக்கு மேலால் எட்டிப் பார்க்கின்றார்.

முற்றத்தில் குமாரசாமி சிரித்தபடி நிற்கிறான். அவன் பக்கத்தில் பத்மா நின்று, அவன் கொடுத்த 'சரை'யிலிருந்த இஞ்சி விசுக்கோத்துகளைப் பங்கிடுகின்றாள். சுப்பிரமணியத்தின் கடைக்குட்டி, வேற்று முகத்தைக் கண்டு பயந்தமாதிரி, கதிரையின் பின்னால் மறைவதை அவன் கவனிக்கத் தவறவில்லை. அவனுடைய பயத்தைக் கவனித்த குமாரசாமி ''நானுஞ் சித்தப்பாதான்... ஒருத்தருஞ் சொல்லித் தரேல்லையா? என்று சொல்லி மீண்டுஞ் சிரிக்கிறான்.

'அதே சிரிப்பு. இவன்ரை சிரிப்பு ஒருநாளும் மாறாது... என்னைப் போலை அந்தச் சுருட்டை மயிர் முன் குடும்பி வைச்சது போலை நிக்கிறதும் மாறாது. என்ன தான் மனக் கோவங்கள் இருந்தாலும், அவன்ரை அந்தச் சிரிப்பைக் கண்டோடனை ஒருத்தருக்கும் அவனை ஏசப் பேச மனம் வராது. ஆரையும் மருட்டும்.'

"என்ன வாறனெண்டு அறிவிக்க ஒரு போஸ்டு கார்டு கிடைக்காமல் போச்சுது உனக்கு" என்று முகத்தார் கடிந்து கொள்ளுகிறார்.

"எல்லாம் அவசரந்தான், அப்பு... போஸ்ட் காட் என்னத்துக்கு? நான் தான் நேரிலை வந்திட்டனே... அது கிடக்க, பத்மா வருஷத்துக்குச் சீலை கட்டியிருக்கிறாள்..." குமாரசாமி பத்மாவை அந்தக் கோலத்தில் அப்பொழுதுதான் முதன்முறையாகப் பார்க்கின்றான்.

"ஓம். இவன் மனோகரன் தன்ரை முதல் சம்பளத்திலை எடுத்துக் கொண்டந்து குடுத்திருக்கிறான்" வாளிக் கயிற்றைப் பிடித்துக் கொண்டே முகத்தார் சம்பாஷணையில் ஈடுபடுகின்றார்.

"அத்தான் எங்கை பத்மா? காரிலையே வந்தவர்?"

"இல்லை. ராத்திரி உத்தரதேவியிலை வந்து சேர்ந்தவர். இப்ப அக்காவோடை கோயிலுக்குப் போயிட்டார்" என்று கூறிக்கொண்டே பத்மா அடுக்களைப் பக்கம் போகின்றாள்.

"புதுக் காரொண்டு எடுத்ததெண்டு கேள்விப்பட்டன். என்ன சாதிக் காராம்?"

"எனக்கென்னடா தெரியும்?"

"காரின்ரை விலையளும் இப்ப என்ன மாதிரி ஏறிக் கிடக்குத் தெரியுமே? உங்காலை வீட்டுப் பொடியன் – அவன் தான் ரத்தினகோபால் – காரை வித்துப்போட்டு 'ஸ்கூட்டர்' வாங்கியிருக்கிறானாம்..."

"காரை விக்கேல்லையாம்... இசுக்கூட்டரும் வாங்கினவனாம்."

"இப்ப ஏதும் சாமான் கீமான் வாங்க முடியுமே? அதுதான் வித்துப் போட்டான். அவன்ரை காரை ராசாந்தோட்ட சங்கரப்பிள்ளைதான் வாங்கினதாம்... அவன்ரை கல்யாணப் பேச்சுக்கால் எப்பிடியாம்?"

"அது குழம்பிப்போய்க் கிடக்குதாம்."

"நீங்கள் மானிப்பாய்ப் பகுதியிலை இருந்து வந்த சம்பந்தத்தையல்லோ சொல்லுறியள்? இது இங்காலை கோப்பாய்ப் பகுதியிலையாம்..."

"அதைப் பற்றி நான் கேள்விப்படேல்லை."

தூணுடன் சாய்ந்து கொண்டு நிற்கும் மனோகரனைப் பார்த்து, "தம்பி உங்கடை கொம்பனியை அரசாங்கம் கெதியா எடுக்கப் போகுது போலை. தென் யூ வில் ஓல்சோ பிக்கம் ஏ கவுண்மென்ட் சேவண்ட்..." என்கிறான்.

"அப்பிடி நடக்காது..."

"நீ இருந்து பாரன் தம்பி... அப்பு! தங்கராசா அத்தானுக்கு அடுத்த மாசம் உத்தியோக உயர்வு கிடைக்கப் போகுதாம். தெரியுமே?"

"உதுகள் எனக்குத் தெரியுமே?"

"முந்தநாள் அவரை ஸ்ரேசனிலை கொண்டந்து விடேக்கிள்ளைதான் அப்பிடி ஒரு புரமோஷன் கிடைச்சாலும் கிடைக்கும் எண்டு அத்தான் சொன்னவர்." மனோகரன் தனக்குத் தெரிந்த சமாச்சாரத்தைச் சொல்லுகின்றான்.

'இவன் ஊருக்கு வாறதோ அத்தி பூத்தாப்போலை. ஆனா, ஊரிலை நடக்கிற ஒண்டையும் விடாமல் அறிஞ்சு வைச்சிருக்கிறான்.'

முகத்தார் அவசர அவசரமாக மூன்று நான்கு 'பட்டை'களை ஊற்றி 'முழு'க்கைச் சுபத்துடன் முடிக்கிறார்.

வந்துகொண்டே, "ஆனைக்கோட்டை வைத்தி யரின்ரை பொடிச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டனீயே..." என்கிறார்.

"ஓமோம். நான் கேள்விப்பட்டன். சாதி ஒரு மாதிரி எண்டு தான் இவை கூத்தாடினவை. அவன் நல்ல பொடியன். கெலகதரையிலை படிப்பிக்கிறான்."

"ஓ... என்னவோ உப்பிடித்தான் ஒரு பேர் சொல்லுகினம்..."

தலையைத் துவட்டும்பொழுது, எந்தப் புத்தாடையை அணிவது என்னும் யோசனை அவரை ஆக்கிரமித்துக் கொள்ளுகின்றது. சிறுபிள்ளைத் தனமன்று. பெரிய பிள்ளைகளுக்குள் தன்னுடைய செயலால் மனத்தாங்கல் ஏற்படக்கூடாது என்பதில் அக்கறை.

அதற்கிடையில், "நீங்கள் ஏன் ஈரத்தோடை நிக்கிறியள்? இதைக் கட்டுங்கோ. நீங்கள் விரும்பிக் கட்டுவியளே, நீலக்கட்டம் போட்ட சாறன்" என்றபடி கையில் வைத்திருந்த ஒரு பார்சலை நீட்டுகின்றான்.

குசேலனின் அவல் முடிச்சை அவிழ்த்து உண்ட கண்ணனின் உள்ளத்திலே கூட இவ்வளவு மகிழ்ச்சி தோன்றியிருக்க முடியாது.

விரித்து உடுக்கின்றார்.

சலனமெதுவுமின்றி மற்றவர்களைப் பார்க்கின்றார்.

மௌனம்.

"அப்புவுக்கு நல்லாத்தான் இருக்குது..." வெளியே வந்த பத்மா மௌனத்தைக் கலைக்கினறாள்.

"நீ நிண்ட ஊராலை வந்தனீயே? இரன்; கும்பம் வைக்கப் போறன். பொது நாளா இருக்கிறதாலை உடனையே கைவியளம் குடுக்கலாமெண்டிருக்கிறன்."

"இல்லை அப்பு. எனக்கு உதுகளிலை அவ்வளவு நம்பிக்கை இல்லை எண்டது தெரியுந்தானே? அதோடை விடியக் காலமையே கார்க்காரனிட்டைக் கைவியளம் வாங்கீட்டன்."

முகத்தாரின் முகத்தில் மூட்டம்.

"இவன்தான் புது நாணயமாப் புறந்தவன். ஒண்டிலும் நம்பிக்கை இல்லாதவன். டேய்! புத்தகப் படிப்பும், நீ எழுதுற கதையளும் நாடகங்களும் படிப்பில்லை. ஆவது அறிவது அறிவல்ல; வீட்டிலை வேவது அறிவதுதான் அறிவு. ஊரோடை ஒத்து வாழுறதுதான் படிப்பு." – இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த சுப்பிரமணியம் சொல்லுகிறான்.

"அதுக்கில்லை அண்ணை. நான் அஞ்சாறு பேரோடை வந்திருக்கிறன். ஊராங்கடை காசிலை அவங்களை இவ்வளவு தூரம் கூட்டியந்தனான். இந்த ஊருக்கு அவங்கள் புதிசு. அவங்களை ஹோட்டலிலை விட்டிட்டு நான் இஞ்சை மினக்கடுறது அவ்வளவு வடிவில்லை எண்டுதான் சொல்ல வந்தனான்... அப்ப நான் வாறன்" பதிலுக்குக் காத்திருக்காமல் திரும்புகின்றான்.

'என்ன இருந்தாலும் மரியாதை தப்பாது. ஆர் சொன்னாலும் தலையைக் கவண்டு கொண்டுதான் கேப்பான். மரியாதைக்காகத்தான். ஆனா, தான் நினைச்சதைத்தான் செய்வான்.'

“சின்னண்ணை... இஞ்ச கோப்பி கொண்டந்துட்டன். குடியுங்கோவன்...” என்று பத்மா கோப்பி கிளாஸை நீட்டுகிறாள். பதிலொன்றும் பேசாமல் அதை வாங்கிக் குடித்துவிட்டு, கிளாஸைத் திருப்பிக் கொடுக்கின்றான்.

முற்றத்து மாங்கன்றில், கும்பத்துக்கு மாவிலைகள் ஒடித்துக் கொண்டே, “அப்ப மத்தியானச் சாப்பாட்டுக் கெண்டாலும் வாறியோ?” என்று முகத்தார் கேட்கின்றார். நப்பாசையின் உள்முடிச்சு அவ்வினாவிற் காளத்திரியாட்ட மிடுகின்றது.

“அவன்தானே அப்பு சொல்லிப் போட்டான். கூட்டாளியளை விட்டுப் போட்டு வரேலாது எண்டு” என்று சுப்பிரமணியம் சொல்லுகின்றான். வழக்கத்தில் மூத்தவன் அதிகம் பேசுவதில்லை.

“அப்ப வாறன்... எல்லாருக்கும் வாறன்” என்று கூறி அவசரமாகப் படலையைத் திறக்கும் குமாரசாமி, ஒரு கணந் தரித்து, “அப்பு, இண்டைக்கு எங்கடை நாடகம் பின்னேரம் முத்தவெளியிலை நடக்கும்... நல்லா இருக்கும்... நேரம் இருந்தா வாருங்கோவன்” என்று குரல் கொடுத்துச் செல்லுகிறான்.

கும்பம் வைத்து கைவிசேடம் பரிமாறப்பட்டாகிவிட்டது. விறாந்தையிலுள்ள ‘செற்றி’க் கதிரைகளில் அமர்ந்து சுப்பிரமணியமும், சதாசிவமும் பேசிக்கொண்டிருக் கின்றார்கள். அவர்களுடைய பேச்சு சதாசிவம் புதிதாக வாங்கியுள்ள காரைச் சுற்றிச் சுழல்கின்றது. அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில், தூணிலே சாய்ந்தவாறு சௌந்தரத்தின் சார்பாக கைவிசேட வைபவத்திற் கலந்து கொண்ட முகுந்தன் நிற்கிறான்.

‘அவன் மூத்த மாமனுக்கு நல்ல மரியாதை.’

கமலா, பரிமளம், பத்மா ஆகிய மூவரும் சமையல் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கின்றார்கள். ஹம்ஸதொனியும் பெரிய மனுஷி மாதிரிக் கூடமாட வேலை செய்கின்றாள். ‘குத்திப்’ பலகையில் இருந்து கொண்டு, அவர்களுக்கு மனோகரன் தன்னுடைய கொழும்பு அநுபவங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறான்.

கறித் தேங்காய்களையெல்லாம் ‘போர்’த் தேங்காய்களாக்கி, முற்றத்திலே போர்த் தேங்காயடி நடைபெறுகின்றது. யாருடன் என்ன விளையாட்டில் ஈடுபட்டிருந்தாலும், அசோகன் ‘குழப்’பாமல் இருக்க மாட்டான். கல்லிலே பட்டுத்தான் தன்னுடைய ‘கையான்’ உடைந்ததாக அவன் சண்டை பிடிக்கிறான்.

புதுவருடத்துக்கு ஏனைய மக்களின் அன்பளிப்பாகக் கிடைத்த புத்தாடைகள் ‘ரீப்போ’யில் இருக்கின்றன. அவற்றை முகத்தாரின் கண்கள் மேய்கின்றன.

“புள்ளை பத்மா!”

அவள் கைவேலைகளை விட்டுவிட்டு வருகின்றாள்.

“உந்த உடுப்புகளை எடுத்து வை புள்ளை. பின்னேரம் ஒருக்கா முத்தவெளிக்குப் போகவேணும் நாடகம் பாக்க. போகேக்கை மூத்தண்ணர் வாங்கித்தந்த வேட்டியையும், கொத்தார் வாங்கித் தந்த சால்வையையுந் தான் போட்டுக் கொண்டு போகவேணும்...”

“ஐயோ, இளையண்ணர்தான் பாவம்...”

“ஓம் தங்கச்சி. எளியவனாப் பிறந்தாலும், இளையவனாப் பிறக்கக்குடாது” என்று மனோகரன் அடுக்களையிலிருந்த படியே சொல்லுகின்றான்.

இதிலே என்ன நகைச்சுவையைக் கண்டார்களோ? அண்ணரும் அத்தானும் விழுந்து விழுந்து சிரிக்கின்றார்கள். மனோகரன் கையில் ஒரு நெருப்புக் கொள்ளியைத் தூக்கிக் கொண்டு, அடுக்களையின் மறைவான மூலையைப் பார்த்து நகருகின்றான்.

“இப்ப தம்பியும் பெரியாக்களைப் போலை...” என்று பரிமளம் குரல் எழுப்புகின்றாள்.

“சும்மா சத்தம் போடாதை பரிமளம். இளையவன் எண்டாப்போலை நெடுகிலும் சின்னப்பொடியன் எண்ட நினைப்பே? அவனும் உழைக்கிறான்; சம்பாரிக்கிறான்” என்று மச்சான் சார்பில் கமலா பேசுகின்றாள்.

‘மனோகரன் சிகரெட் குடிக்கத் துவங்கீட்டான்போலை. ஓ, உங்கை கிறாதியாலை புகை வருகுது. வளந்தாப் பிறகு, அதுஅது, அதுகளின்ரை விருப்பம்.’

“என்ன மருமகன்? சயன்ஸ் பாடங்கள்தானே? பேத்தனமா இங்கிலீஸை நெக்லட் பண்ணாதை.”

“ஹி இஸ் குட் இன் இங்லிஸ். கிறடிற் எடுப்பான்” என்று சதாசிவம் முகுந்தனின் சார்பாக உத்தரவாதமளிக்கின்றான்.

“தூண் விழுந்திடப் போகுது. அந்தக் கதிரையிலை இரன்.”

“அத்தான், உந்தத் தூணடியிலை நிண்டு பாத்தால் ஹம்ஸதொனி அடுப்படியிலை இருந்து வேலை செய்யிறது தெரியுதாக்கும்.”


“சதாசிவம்... வானதிக்குக் கூடப் பிந்தீட்டியள்... அசோகனுக்கெண்டாலும் முந்தலாம்.”

சதாசிவத்தின் கண்கள் பரிமளத்தைத் தேடுகின்றன.

வாயைப் பொத்தும்படி சுப்பிரமணியத்திற்குக் கமலா சைகை காட்டுகின்றாள்.

விறாந்தை ஓரத்தில் விழுந்து கிடந்த ஓர் இஞ்சி விசுக்கோத்தை எட்டியெடுத்த முகத்தார், குழந்தையின் சுபாவத்துடன் ஒருவருக்குந் தெரியாமல் தன்னுடைய தளர்ந்து போன பற்களுக்கிடையில் நசுக்குகின்றார்.

## தமிழ் மரபு



மரபு சம்பந்தமான தேடலிலே நான் தீவிர அக்கறை செலுத்தினேன். பலராலும் தமிழறிஞராக மதிக்கப்பட்ட மகாவித்துவான் F.X.C. நடராஜாவை அணுகினேன். அவரிடம் இலக்கண பாடங்கள் கேட்கும் அற்புதம் வாய்த்தது. அப்பொழுதுதான் தமிழ்மொழியின் பாரம்பரிய மரபுகள் இணையாது, ஆரோக்கியமான தமிழ் இலக்கியத்தை முன்னெடுத்தல் சாத்தியம் இல்லை என்பதை உணரலானேன். கம்யூனிஸ்டுகளின் தேசிய இலக்கியம் பற்றிய கோஷம் மிக அபத்தமான, தவ்வல்தனமான ஒரு கோஷம் என்பதையும் நான் உணரலானேன். அதற்கான காரணம், ஒரு தேசிய இனமாகத் தமிழ் இனம் பிரேரிக்கப்படாத ஒரு நிலையில், ஓர் அடிமைப்பட்ட இனத்திற்குத் தேசிய இலக்கியம் தோன்றும் எனப் பிரேரிப்பது சிந்தனைக்குழப்பம் நிறைந்ததாக இருந்தது. எனவேதான், நான் “நற்போக்கு” இலக்கியம் என்ற ஒரு கோட்பாட்டை முன்வைத்தேன். (ஞானம் நேர்காணல் “தீதும் நன்றும்” தொகுப்பிலிருந்து - பக்கம் 17)



# எஸ்.பொ.வின் தேர்
## - ஒரு மதிப்பீடு -

- கலாநிதி துரை மனோகரன்

எஸ்.பொ. எனச் சுருக்கமாகக் குறிப்பிடப்படும் எஸ்.பொன்னுத்துரை இலங்கையின் வித்தியாசமான ஆளுமை மிக்க ஓர் இலக்கியவாதி. பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கு பவராகவும், பல்வேறு சர்ச்சைகளில் உள்ளடக்கப்படுபவராகவும் அவர் விளங்குகின்றார். கண்டனக்காரராகவும், கண்டனத்துக்கு உட்படுத்தப்படுபவராகவும் அவர் விளங்குவது உண்டு. சிறுகதை, நாவல், நாடகம், திறனாய்வு, மொழி பெயர்ப்புப் போன்ற பல்வேறு துறைகளிலும் தமது தனித்தன்மையை வெளிப்படுத்தி வந்திருப்பவர். ஆற்றலும், ஆளுமையும் மிக்க ஓர் எழுத்தாளராக எஸ்.பொ. திகழ்கிறார். அவரது சிறுகதைகளோடும், நாவல்களோடும் எனக்கு நல்ல பரிச்சயம் உண்டு. அவரது சிறுகதைப் படைப்புகளுள் ஒன்று 'தேர்'. உலகத்தரமான இலங்கைச் சிறுகதைகளில் ஒன்றாக நிச்சயம் தேர் இடம்பெறும் என்பது எனது கருத்து. எஸ்.பொ.வின் உயர் படைப்பாற்றலை இனம் காட்டும் ஓர் அற்புத சிருஷ்டி தேர்.

ஒரு புதுவருடப் பிறப்பன்று இடம்பெறும் ஒரு குடும்பத்தின் நிகழ்ச்சிகளையும், ஒரு பாத்திரத்தின் மனவோட்டங்களையும் 'தேர்' காட்டுகின்றது. இச் சிறுகதையின் மையப் பாத்திரமாகவும் முக்கிய பாத்திரமாகவும் முகத்தார் எனப்படும் ஆறுமுகம் விளங்குகிறார். வயது அறுபதுக்கு மேல் முதுமை, வாதக்குணம், குந்தியெழும்பக் கஷ்டம் என்றாலும், மற்றவர்களுக்குத் தெரியாமல் சமாளிக்கும் போக்கு என்பன அவரோடு இணைந்தவை.

கதாசிரியர் முகத்தாரை இவ்வாறு அறிமுகப் படுத்துகின்றார்.

''முகத்தார் என்றழைக்கப்படும் ஆறுமுகம் துயிலெழுவது ஒரு திருக்காட்சி. தலையணையையும் போர்வையையும் உட்திணித்துப் பாயைப் பக்குவமாகச் சுருட்டி வைப்பது ஒரு கலை. கொட்டாவியை மறைபொருளெதுவுமின்றி ஊளையிட்டு, கைகளை நீட்டி மடக்கி உடலை உலுப்பிச் சோம்பலை முறித்தால், துயிலெழு படலத்தின் ஓரம்சம் நிறைவுறும். தலைமாட்டில் நெருப்புப் பெட்டியும், தாவடிப் புகையிலைச் 'சுத்து'ம் எப்பொழுதும் தயாராக இருக்கும். 'சுத்தை' நேர்த்தியாகப் பற்றவைத்தால், கால்கள் தம் இச்சையாகவே கொல்லைப் பக்கம் நடக்கத் தொடங்கும் எப்பொழுது தொடக்கம் வைகறை துயிலெழும் வழக்கத்தை வாலாயப்படுத்திக் கொண்டார் என்பது அவருக்கே ஞாபகமில்லாத சங்கதி''

தேரின் கதை, முகத்தாரின் நினைவுகளுக்கேற்ப அசைந்து செல்கிறது. முகத்தாரின் மனவோட்டங்கள் மூலமும், அவரது இயக்கத்தின் மூலமும் கதையை நடத்திச் செல்வது புதுவகை உத்தியாக விளங்குகிறது.

முகத்தாரின் குடும்ப அம்சங்கள் அனைத்தும் அவரது மனவோட்டம் மூலம் புலப்படுத்தப்படுகின்றன. மூத்தமகன் சுப்பிரமணியம், அவனது மனைவி கமலா, மகள் ஹம்சத்வனி, முகத்தாரின் இன்னொரு மகள் பரிமளம், கணவன் சதாசிவம், பிறிதொரு மகள் சௌந்தரம், கணவன் தங்கராசா, பிள்ளைகள், மகன் குமாரசாமி, அவன் மனைவி, இளையமகன் மனோகரன், இளைய மகள் பத்மா என்று பெரிய குடும்பம் முகத்தாருடையது. முகத்தாரின் மனைவி பார்வதிப்பிள்ளை காலமாகி ஐந்து வருடங்கள் ஆகின்றன.

வருடப் பிறப்பன்று முகத்தாரின் எண்ணங்கள் குடும்பத்தைச் சுற்றிச் சுற்றியே வருகின்றன. மனைவி பார்வதிப்பிள்ளையின் நினைவும் அவருக்கு இடையிடையே வருகிறது. ''ஓ இவ போயே நேற்றெண்டாப் போலை இருக்குது... ஆனா, வருசம் அஞ்சாகுது. அவள் புண்ணியஞ் செய்தவள். எல்லாப் பாரத்தையும் என்ரை தலையிலை சுமத்திப் போட்டுப் போயிட்டாள்'' இளைய மகள் பத்மாவைப் பற்றிச் சிந்திக்கும் போதும் முகத்தாருக்குப் பார்வதிப்பிள்ளையின் நினைவே வருகிறது. ''சரியா, இவ பார்வதிப்பிள்ளையை உரிச்சு வைச்ச மாதிரி இருக்கிறாள்'' முகத்தார் தமது இன்னொரு மகனான குமாரசாமியைப் பற்றி நினைக்கும் போதும் பார்வதிப்பிள்ளையின் நினைவுதான் வருகிறது. ''அவனுக்கு உடம்பு மட்டும் தான் பயித்தங்காய் போலை... ஆனா, உடும்பைப் போலைத்தான் பிடிவாதம். இவ பார்வதிப் பிள்ளை எண்டாப்போல குறைஞ்ச பிடிவாதக்காரியோ?''

தமது ஒவ்வொரு பிள்ளையைப் பற்றியும் முகத்தார் வருடப் பிறப்பன்று யோசிக்கிறார். மூத்தவன் சுப்பிரமணியம் வருடப் பிறப்பன்று காலையில் தான் 'கோச்சி'யில் வருகிறான். அவனது மனைவி கமலா எப்படியும் அவனைக் காதுப் பிடியில் வீட்டுக்குக் கூட்டிவந்துவிடுவாள் என்ற நம்பிக்கை. கமலாவுக்கு முகத்தாரின் கையால் 'கைவியளம்' வாங்கினால் தான் திருப்தி. இன்னொரு மகள் சௌந்தரம் பெரிய குடும்பக்காரி. கணவன் தங்கராசா வருடப்பிறப்புக்கு முதல்நாள் வந்திருக்கிறான். சௌந்தரத்துக்கு அவனைக் கவனிக்கவே நேரம் சரி. 'கைவியளத்துக்கு' மகன் முகுந்தனை அனுப்பி வைப்பதாகச் சொல்லியிருக்கிறாள்.

முகத்தாரின் இன்னொரு மகளான பரிமளமும் கணவன் சதாசிவமும் வசதியாக வாழ்கிறார்கள். ஆனால், குழந்தையில்லாக் குறையொன்றுதான் அவர்களுக்கு உண்டு. ''அதுகளின்ரை அன்புக்கும் அந்நியோன்யத்துக்கும் ஒரு

குழந்தையைத்தான் ஆண்டவன் குடுக்கேல்லை. சாதகத்திலை பின்னடிச் சந்ததி விருத்தி எண்டுதான் இருக்கு... கொழும்பிலை பேர்போன டாக்குத்தரெட்டை எல்லாம் காட்டினவை. அதுகளுக்கு ஒரு குறையுமில்லை எண்டுதான் சொன்னவையாம்'' என்று அவர்களது குடும்பம் பற்றியும் முகத்தார் சிந்திக்கிறார்.

இளையமகன் மனோகரன் கம்பெனி ஒன்றில் வேலை பார்க்கிறான். அவனது வேலை சம்பளம் பற்றியெல்லாம் முகத்தாருக்குத் திருப்தி. அவனைப் பார்வதிப்பிள்ளையின் அண்ணன் மகளுக்குத் திருமணம் செய்து வைக்கவே முகத்தார் விரும்புகிறார். ஆனாலும், ''பெடியங்களின்ரை காரியத்தை நிதானமாகச் சொல்லேலா'' என்றும் மனத்துக்குள் கருதுகிறார்.

கடைக்குட்டி மகள் பத்மாவைப் பற்றித்தான் கொஞ்சம் கவலை அவருக்கு இருந்தது. ''அவள் பொடிச்சிதான் பாவம். தாயத்தின்னியாப் போயிட்டுது. படிப்பை முடிச்சுப்போட்டு, மூலையிலே கிடந்து பெருமூச்சு விடுகுது. அவளை மேலை படிக்கவைக்கலாமெண்டு மூத்ததுகள் விரும்பினதுதான்'' என்று அவளைப் பற்றி முகத்தாரின் சிந்தனை அலைகள் சென்றன.

ஆனால், முகத்தாரின் நெஞ்சிலே முள்போல எப்போதும் தைத்துக்கொண்டிருந்தவை அவரது இன்னொரு மகனான குமாரசாமி பற்றிய எண்ணங்களே. வருடப்பிறப்புக்கு அவரது மற்றைய பிள்ளைகள் குடும்ப சகிதம் வந்துபோவார்கள். ஆனால், குமாரசாமியை எந்த விசேடத்திற்கும் வீட்டில் யாருமே எதிர்பார்ப்பதில்லை. அவனுடைய போக்கு அப்படி ''அவன்ரை மூளைக்கு அவன் உப்பிடியே இருக்கவேணும்? சீமைப் படிப்பெல்லம் முடிச்சு, ரெண்டு மூண்டு காரும் நாலைஞ்சு பங்களாவும் வைச்சல்லோ வாழவேணும்?'' என்று அவனைப் பற்றி முகத்தாரின் சிந்தனைகள் சென்றன.

அவனைப் பற்றி உயர்வாகப் பேசிய ஊர்வாய்களும் பின்னர் தமது நாக்கைத் திசை திருப்பிவிட்டன. ''பிஞ்சிலை பழுத்தவன், தமையன் இருக்கக்கூடியதாக ரெண்டு குமருகள் வீட்டுக்குள்ளை பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கக் கூடியதாக இவனுக்குக் கலியாணப் பைத்தியம். அதுவும் ஊர்பேர் தெரியாத வேதக்காரிச்சியாம்... தூ, இவன்ரை படிப்பு நாக்கு வழிக்கத்தான் உதவும். இவன் தன்ரை படிப்பை தூக்கி எறிஞ்சுபோட்டு கக்கூசு வாளியைத் தூக்கித் திரியட்டும்'' என்பது குமாரசாமியைப் பற்றிய ஊராரின் விமர்சனம். சின்னத் தலையிடிக்கும், காய்ச்சலுக்குங்கூட சீனிச் சுருளும், தேயிலைச் சரையும் வெற்றிலை பாக்குப் பெட்டியுங் 'காவி'க்கொண்டு வந்தவர்கள், குமாரசாமியின் அவசரக் கலியாணத்தின் பின்னர் முகத்தார் வீட்டுப் படலையைத் திறக்க முகஞ் சுழித்துக் கூசினார்கள். அப்பொழுது சுப்பிரமணியம் எல்லாவற்றிற்கும் ஆறுதலாக இருந்தும் கூட, முகத்தார் இந்தப் பென்னம்பெரிய உலகத்திலே தன்னந்தனியாக விடப்பட்ட உணர்வுகளுடன் தத்தளித்தார்.

தேர் என்ற சிறுகதையின் மையப்பகுதியே குமாரசாமி பற்றிய முகத்தாரின் மனவோட்டங்களும், செயற்பாடுகளும் தான். குமாரசாமியை உற்றார் உறவினரும், ஊரவர்களும் தவறாக மதிப்பிட்டிருந்தாலும், முகத்தார் அவனைச் சரியாகவே மதிப்பிட்டிருந்தார். முகத்தாரின் பலவித மனவுணர்வுகளைக் கதாசிரியர் எஸ்.பொ. வெளிப்படுத்தினாலும், முகத்தாரின் மனத்திலும் கதையிலும் குமாரசாமியே மையக்கருவாக விளங்குகிறான். ''நானோ, அவனோ என்னத்தைச் செய்யிறது? எல்லாம் அளந்தபடிதான் நடக்கும். அவன்தான் ஒரு புத்தியிலை செய்திட்டான். இனி, விரலை வெட்டியே எறியிறது? வெக்கம் ரோஷத்தை விட்டிட்டு ஒருக்காப் போய் அதுகளைப் பார்த்தன். அவள் பொடிச்சி புழையில்லை. குணவதி எண்டதை முகத்தைப் பார்த்தோடனை சொல்லுவினம். இவன்ரை குணத்துக்கு அவளிலைதான் பச்சம் வைக்கவேணும். வேதக்காரிச்சி எண்டாப்போலை என்ன? சாதிகுலம் பார்த்துக் கூழ்ப்பானக்கை விழுந்தவை எத்தனை பேர் இருக்கினம்? இவன் எண்டாப்போலை ஒழுங்காக கோயில்குளம் போறவனே? விபூதி பூசுறவனே? அவள் பொடிச்சியையும் கோயிலுக்குப் போகாமல் மறிச்சுப் போட்டானாம். அவனுக்கு உடம்பு மட்டும்தான் பயித்தங்காய் போலை... ஆனா, உடும்பை போலைத்தான் பிடிவாதம்'' என்று குமாரசாமி பற்றிய அறிமுகத்தை முகத்தார் மூலமாக வாசகர்களுக்குக் கொண்டு வருகிறார், ஆசிரியர்.

குமாரசாமியின் இயல்பை முகத்தார் மூலமாக ஆசிரியர் புலப்படுத்துகிறார். ''உங்கை யாழ்ப்பாணத்துக் கிடுகுவேலியாலை சங்கையை மறைச்சுக் கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமாக நடித்துக் கொண்டே வாழ்பவருக்கு என்ரை போக்கு விளங்காது. என்ரை போக்கு எனக்கு விளங்கும்'' எண்டு ஒருநாள் உங்கினை சத்தம் போட்டான் என்று குமாரசாமியின் தர்மாவேசம் முகத்தாரால் புலப்படுத்தப்படுகின்றது.

குமாரசாமிக்கு இருக்கும் பெயர் புகழ் முகத்தாருக்கு ஒருவிதப் பெருமையையும் கொடுத்தது. ''இவங்களைக் குடும்பத்துக்காகப் பெத்தன்... அவனை ஊருக்காகப் பெத்தன்... இவையள் ஆயிரத்தைச் சொல்லட்டும் முகத்தார் ஆறுமுகத்தின்ரை புள்ளையளெண்டுதான் ஊர்தேசத்திலை தெரியும்.... என்ரை மருமக்கள் எண்டாத்தான் நல்ல விளப்பமாத் தெரியும். ஆனா, கடைத்தெருவிலை எத்தினை பேருக்கு என்னைக் குமாரசாமியின்ரை அப்பனெண்டுதான் தெரியுமெண்டு இவையளுக்குத் தெரியுமே'' என்று தமக்குள் சிந்திப்பதை ஆசிரியர் காட்டுகிறார்.

முகத்தாரின் பிள்ளைகளுள் குமாரசாமி வித்தியாசமானவன். அவன் எழுத்தாளன், நாடகாசிரியன், பேச்சாளன். அவனைப் பற்றிய பெருமித உணர்வு எப்போதும் முகத்தார் மனத்தில் உண்டு.

இச்சிறுகதையில் சகல பாத்திரங்களும் சிறப்பாகவும், யதார்த்த பூர்வமாகவும் வார்க்கப்பட்டிருப்பது, இதன் பெரும் பலமாகும். முகத்தார் எஸ்.பொ.வின் பாத்திர சிருஷ்டித் திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. கதையின் தொடக்கம் முதல் முடிவு வரை முகத்தாரே கதையில் நிறைந்து நிற்கிறார். சின்னச் சின்ன விடயங்களையும் ஆசிரியர் அழகாகக் கதையில் பதிவு செய்துள்ளார். ''இவ்வளவு வெள்ளணத்தோடை கடைக்குப் போகப் போறியளே?'' என்று பத்மா கேட்க, ''இல்லை, உந்த முச்சந்தி மட்டும் போயிட்டு வாறன்.... தச்சேலா ஏதேன் அரியது நரியது கிடைச்சால்....'' என்று கூறிக்கொண்டு வெளியிலே போகிறார். முகத்தாரின் நண்பர் ஐயம்பிள்ளை

முகத்தாரைக் கண்டபோது, தம்மோடு சேர்ந்து கொஞ்சம் மது, அருந்துவதற்கு முகத்தாரை அழைக்கிறார். "இப்ப வாதக்குணமாகவும் இருக்குது. ஒத்துக்கொள்ளுதுமில்லை" என்ற முகத்தார், ஐயம்பிள்ளை வற்புறுத்தவே, "ஏன்தான் உன்ரை ஆசையையும் கெடுப்பான்?" என்று கூறி, தமது ஆசையையும் தீர்த்துக்கொள்கிறார். முழுகிவிட்டுத் தலையைத் துவட்டும் பொழுது, எந்தப் புத்தாடையை அணிவது என்ற சிறு குழப்பத்தில் இருக்கிறார். தனது செயலால் பிள்ளைகளிடையே மனத்தாங்கல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதே அவரது குழப்பத்துக்கான காரணம். ஆயினும், அவர் தெரிவு செய்யாமல் பிள்ளைகளுள் ஒருவனே தெரிவுசெய்து கொடுத்ததால் குழப்பம் நீங்கியது.

சிறுகதையின் இறுதியில், முகத்தாரின் குழந்தைத்தனமான சுபாவம் காட்டப்படுகிறது. "விறாந்தை ஓரத்தில் விழுந்துகிடந்த ஓர் இஞ்சி விசுக்கோத்தை எட்டியெடுத்த முகத்தார், குழந்தையின் சுபாவத்துடன் ஒருவருக்குந் தெரியாமல் தன்னுடைய தளர்ந்துபோன பற்களுக்கிடையில் நசுக்குகின்றார்."

எஸ்.பொ.வின் கதை கூறும் திறன் மெச்சத்தக்கது. முகத்தாரின் முழுக் குடும்பக் கதையையும் கலைத்துவத்தோடு கதாசிரியர் கூறிவிடுகிறார். நீண்ட சிறகதையாக இருந்தபோதிலும், வாசகருக்கு எத்தகைய சலிப்பினையும் ஏற்படுத்தாது சுவாரசியமாக அவர் கதையைக் கூறிச் செல்கிறார். யாழ்ப்பாணத்துக் கிராமிய வாழ்வியலின் மணம் கதை முழுவதும் வீசுகின்றது. கிராமிய மொழியை அதியற்புதமாகப் பயன்படுத்தியுள்ளார். இலங்கையில் பேச்சுமொழியைத் திறம்படக் கையாள்வதில், பேர் பெற்ற எழுத்தாளர்கள் கூட இடர்ப்படுவதுண்டு. அவர்கள் பேச்சு வழக்கைக் கையாளும்போது, அவர்களை அறியாமலே செந்தமிழ் வழக்கும் புகுந்துவிடுகிறது. இரண்டும் கெட்டான் நிலையிலேயே பெரும்பாலும் இலங்கையில் பேச்சுமொழிப் பிரயோகம் புனைகதைகளில் இடம்பெற்று வருகின்றது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரே பேச்சுமொழியை அக்கறையுடனும், அவதானத்துடனும் பயன்படுத்தி வருகின்றனர். அத்தகைய ஒருசிலரின் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவராக எஸ்.பொ. விளங்குகின்றார்.

யாழ்ப்பாண வாழ்வியலின் ஒரு வெட்டுமுகத் தோற்றம் போலத் 'தேர்' விளங்குகின்றது. இயல்பான கதையம்சம், யதார்த்தமான பாத்திரவார்ப்பு சிறப்பான கதைகூறும் திறன், சிறுகதைக்குரிய கட்டுக்கோப்பு, பொருத்தமாகப் பயன்படுத்தப்படும் பேச்சுவழக்குக் கையாளுகை போன்ற பலவற்றால், இப்படைப்பு தனது தரத்தை இயல்பாகவே உயர்த்திக் கொள்கிறது.

இலங்கைத் தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாகத் 'தேர்' திகழ்கிறது. இப்படைப்பு எஸ்.பொ.வின் சிறந்த படைப்பாற்றலை மிக நேர்த்தியாக இனம் காட்டுகிறது. தேர் எஸ்.பொ.வின் சிறந்த படைப்புகளுள் ஒன்று மாத்திரமல்ல, தமிழின் சிறந்த சிறுகதைப் படைப்புகளுள் ஒன்றாகவும் திகழ்கிறது. தேர் எஸ்.பொ.வின் பெயரை நிலைத்திருக்கச் செய்யும். அதேபோன்று, தமிழ்ச் சிறுகதையின் பெயரையும் இப்படைப்பு பாதுகாக்கும் என்பது நிச்சயம்.


# 'ஞானம்' சந்தா விபரம்

**உள்நாடு**

| | |
|---|---|
| தனிப் பிரதி | : ரூபா 50/= |
| ஆண்டுச் சந்தா | : ரூபா 600/= |
| ஆறு ஆண்டுச்சந்தா | : ரூபா 3000/= |
| ஆயுள் சந்தா | : ரூபா 20000/= |

சந்தா காசோலை மூலமாகவோ, மணியோடர் மூலமாகவோ அனுப்பலாம். மணியோடர் *வெள்ளவத்தை* தபால் நிலையத்தில் மாற்றக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

**இலகுவாக மேலதிகச் செலவின்றி சந்தா அனுப்பும் வழி :-**
உங்கள் பகுதியில் உள்ள ஹட்டன் நஷனல் வங்கியில்
**T. Gnanasekaran, Hatton National Bank - Wellawatte**
நடைமுறைக் கணக்கு இலக்கம் – 009010309024 என்ற கணக்கில் வைப்பு செய்து வங்கி ரசீதை எமக்கு அனுப்புதல் வேண்டும்.

**வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்ப : Swift Code : HBLILKLX**

***அனுப்ப வேண்டிய பெயர்/ முகவரி :***
**T. Gnanasekaran**
**Gnanam Branch Office**
3-B, 46 th Lane, Wellawatte.

**ஞானம் விளம்பர விகிதம்**

| | |
|---|---|
| பின் அட்டை | : ரூபா 10000/= |
| முன் உள் அட்டை | : ரூபா 8000/= |
| பின் உள் அட்டை | : ரூபா 8000/= |
| உள் முழுப்பக்கம் | : ரூபா 5000/= |
| உள் அரைப்பக்கம் | : ரூபா 3000/= |

| *வெளிநாடு* | ஓராண்டு | இரண்டு ஆண்டு | மூன்று ஆண்டு |
|---|---|---|---|
| Australia (AU$) | 35 | 70 | 100 |
| Europe (€) | 25 | 50 | 70 |
| India (Indian Rs.) | 500 | 950 | 1400 |
| Malaysia (RM) | 50 | 95 | 140 |
| Canada ($) | 35 | 70 | 100 |
| UK (£) | 15 | 30 | 40 |
| Other (US $) | 25 | 50 | 70 |

மூன்று சந்தாதாரர்களைச் சேர்த்துத் தருபவர்களுக்கு ஒரு வருடம் 'ஞானம்' இனாமாக அனுப்பப்படும்.




எஸ்.பொ. என்னும் முதலெழுத்துக்களால் நன்கு அறியப்பட்ட எஸ்.பொன்னுத்துரை ஈழத்து எழுத்தாளர்களுள் தனித்துவ ஆற்றல் வாய்க்கப்பெற்றவர். இலக்கியம் அரசியல் ஆகிய துறைகளில் அக்கறையோடு செயற்பட்டவர்; செயற்படுபவர். அதாவது வெறும் எழுத்தாளராக மாத்திரமின்றி, செயற்பாட்டாளராகவும் திகழ்பவர். அதனால் அத்துறைகளைச் சார்ந்தவர்களோடு இணங்கியும் பிணங்கியும் வாழவேண்டிய சூழ்நிலைகள் பலவற்றுக்கு ஆளானவர். அவரது தனிப்பட்ட வாழ்க்கைகூட பல்வேறு தன்மைகளையுடைய களங்களைக் கண்டதாகவே அமைந்தது. மிகச் சொற்பமான காலத்துக்குள், பல்வேறுபட்ட அரசியல் நிலைமாற்றங்களுக்கு உள்ளாகிவிட்ட இலங்கையை அதன் உள்ளேயும் வெளியேயும் இருந்து தரிசித்தவர். கொள்கை அடிப்படையில் தன்னை ஒரு மார்க்சீய வாதியாகப் பிரகடனப்படுத்திக் கொண்டவர்; அதேவேளை தமிழ்த் தேசியத்திலே சலியாத பற்றுறுதி கொண்டவர். இத்தகையவரான எஸ்.பொ.வின் படைப்புக்கள் பல தனிமனித அவலங்களை – பலங்கள், பலவீனங்களை மையப்படுத்தியவை; சில இலங்கை அரசியலை மையப்படுத்தியவை; இன்னுஞ் சில தத்துவார்த்த நிலைப்பட்டவை; சில கேலிச்சித்திரங்களாக அமைபவை. இத்தகையனவான படைப்புக்களுள் சிறுகதைகளை மாத்திரம் எடுத்துக்கொண்டு எஸ்.பொ.வின் அரசியலை, இலங்கையின் தேசிய இனங்கள் பற்றிய அவரது நிலைப்பாட்டைக் கண்டுகொள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

இன முரண்பாடுகளாற் சீரழிந்த ஒரு நாடு இலங்கை. அச் சீரழிவுக்கு மூல காரணமாய் அமைந்தது அதன் பெரும்பான்மை அரசியலிற் காணப்படும் சிங்கள பௌத்த வாதமே. ஆனால் அந்த சிங்கள பௌத்த வாதம் உண்மையில் அதிகார வெறிபிடித்த சில சுயநலமிகள் தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக மக்கள் சமூகத்தை மயக்குவதற்குக் கையாண்ட ஒரு வழிமுறையே. அத்தகையதான அச் சிங்கள பௌத்த வாதம் இன்று நேற்றுத் தோன்றியதல்ல; அதற்கு ஒரு நெடுங்கால வரலாறு உண்டு.

அந்த வரலாற்றின் களங்கள் வேறுபடலாம்; பாத்திரங்கள் வேறுபடலாம்; ஆனால் கதையோட்டம் ஒன்றே. எஸ்.பொ. இலங்கையின் அத்தகைய வரலாற்றுக் கட்டங்கள் சிலவற்றைக் கதைகளாகப் படைத்துள்ளார். அவற்றால் உணர்த்தப்படுவது கடந்தகாலம் மட்டும் அல்ல; சமகாலமுமே எனலாம்.

'ஆகுதி' என்பது அத்தகையதொரு கதையே. அதிகார வெறி பிடித்தவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அல்லது கைப்பற்றிய அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக சிங்கள பௌத்த திரைக்குள் மறைந்து கொண்டு அந்த பௌத்தத்துக்கு அடுக்காத மகாபாதகங்களை மிகச் சர்வசாதாரணமாக எவ்வாறு செய்து முடிக்கிறார்கள் என்பதை அந்த கதையூடாகக் கண்டு கொள்ளலாம்.

இலங்கைத் தீவுக்குள் நுழைந்த போர்த்துக்கீசியர், கண்டியில் உள்ள பௌத்தரை கத்தோலிக்கராக்க முயலும் முயற்சியை முறியடித்து, சிங்கள பௌத்த ஆட்சியை நிலைநிறுத்தும் மகாநாயக்க புத்ததாஸ தேரர், தான் விரும்பியபடி ஆட்சி செய்யக்கூடிய ஒரு அரசை நிறுவுவதற்காக கொலைகளையும் தயங்காது செய்விக்கிறார். தன்னை நம்பியவர்களையும் சதிசெய்து கொலை செய்கிறார். ஜெயசிம்மனுக்கும் அவனுக்குப்பின் விமலதர்ம சூரியனுக்கும் மனைவியாக இருந்தவள் தோனகதரினா. அவள் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்து இருந்தவள். ஆயினும், கண்டி அரசுக்கு உரித்துடையவள். கண்டி இராச்சியத்துக்கான அரசனாக தன்னால் உருவாக்கப்படும் சேனரதனுக்கு அரச அங்கீகாரம் ஏற்படவேண்டும் என்பதற்காக அவளை அவனுக்கு மனைவியாக்குகிறார். தன் சதிவேலைகளுக்கெல்லாம் உதவியாக நந்தாதேவி என்பவளை அவளது கணவனான கவிஞனைக்கொன்று – பயன்படுத்திக் கொள்கிறார். அவரலால் அரசனாக உருவாக்கப்பட்ட சேனரதன் அவரது ஆலோசனைப்படி தன் அரசுக்குப் பாதுகாப்பாக, முஸ்லிம்களை இலங்கையின் கிழக்குப் பிராந்தியத்தில் குடியமர்த்துகிறான். அந்த முயற்சியிலே தமிழரின் பலத்தைக் குறைக்கும் எண்ணமும் குடிகொண்டுள்ளது. புத்ததாஸரால் உருவாக்கப்பட்ட சேனரதன் புத்ததாஸர் இருந்தால், அவர் சொற்படியே நடக்கவேண்டியிருக்கும் என்ற எண்ணத்தால் இறுதியில் அவரையே நயவஞ்சகமாகக் கொலை செய்கிறான். தன் சொற்படி நடக்கத்தக்க மகா நாயக்கர் ஒருவரை உருவாக்க விரும்புகிறான்.

மேற்படி கதை இலங்கையில் இந்தக் கணத்தில் நிகழ்ந்தேறிக் கொண்டிருக்கும் அரசியல் நாடகத்தைக்கூட குறியீட்டுப் பாங்கில் உணர்த்தவல்லது என்ற உண்மை விண்டுரைக்க வேண்டிய ஒன்றல்ல.

எஸ்.பொ.வின் வேறொரு கதை (ஆண்மை – கதை பன்னிரண்டு) இலங்கையில் அண்மைக்கால அரசியல் வரலாற்றை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றது. ஏறக்குறைய ஐம்பது வருடகால இலங்கை அரசியலின் இனவாதத்தை ஒரு கதைக் கோப்புக்குள் கெட்டித்தனமாகக் கொண்டுவந்திருக்கிறார் எஸ்.பொ. வெசாக் பண்டிகை ஒன்றின்போது கிளம்பும் நினைவுச் சுழிக் கூடாக வரலாறு பின்போக்கிப் பார்க்கப்படுகின்றது. பாணந்துறையிலே ஒரு அரசமரத்தின் கீழ் ஒரு புத்தர் சிலை; அருகே பிரமாண்டமான வெசாக் பந்தல்; ஆயிரம் பேரைக் கொன்ற

கொலை வெறியனான அங்குலிமாலா என்பவனை புத்தர்பெருமான் மன்னித்தருளிய ஜாதகக் கதை வெசாக் பந்தலிலே சித்தரிக்கப்பட்டுள்ளது. சிங்கள பௌத்த வாதத்தின் போலித்தனமான முகத்தில் அறைவதுபோல கதையில் இடையிடையே பொருத்தமான இடங்களில் ''ஆயிரம்பேரைக் கொன்ற கொலை வெறியன் அங்குலிமாலாவை மன்னித்தருளினார் புத்தபகவான்'' என்ற வாசகம் பல்லவி போலத் திரும்பத்திரும்ப வருகிறது.

பாணந்துறையில், பெருங்கேடியாகத் திரிந்து சிறைப்பட்டு புத்தரின் 2500ஆவது ஜயந்தி தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு விடுதலை வழங்கப்பட்ட சோமா என்னும் சிங்கள இளைஞன் திருந்திவிட்டான் என்ற நினைப்பில் அவனுக்குத் தொழில் வழங்கி ஆதரிக்கிறான் கணபதி. கணபதியின் தந்தை வேலாயுதம் பாணந்துறையிலே முதலாளியாக வாழ்ந்தவர். ஐம்பத்தெட்டுக் கலவரத்திற் பலியான அவரது கடையைப் பொறுப்பேற்று நடத்தும் கணபதி, வேலாயுதபிள்ளை இருந்த காலம் முதலாகவே அவருடன் நெருங்கிய நட்போடு வாழ்ந்த ஒரு முஸ்லீம் குடும்பத்தோடு அக்குடும்ப உறுப்பினன் போலவே பழகுகிறான். முஸ்லீம் குடும்பத் தலைவி தன் பிள்ளைபோலவே இவனை ஆதரிக்கிறாள். ஒத்த வயதினனான அசாரூதீனும் கணபதியும் உயிருக்குயிரான நண்பர்கள். அருகருகேயுள்ள தங்கள் தங்கள் கடையை இருவரும் ஒத்தாசையோடு நடத்தி வருகிறார்கள். 1983இல் கலவரம் வருகிறது. கணபதியால் ஆதரிக்கப்பட்ட சோமாவே அவனைக் கொல்ல வருகிறான். தடுக்க முயன்ற அசாரூதீன் கத்திக்குத்துக்கு ஆளாகிறான்; அசாரூதீன் உடலில் குத்தப்பட்ட கத்தியை உருவமுயன்ற சோமாவை அடித்து விழுத்தி, அதே கத்தியால் சோமாவைக் கொன்று விட்டு, தூரத்தில் ஓடிவந்து கொண்டிருக்கும் காடையர் கூட்டத்தையும் எதிர்கொள்ளத் தயாராகிறான் கணபதி. காடையர் கூட்டம் பின்வாங்குகின்றது.

தமிழர் பிரச்சினைக்கு எஸ்.பொ. முன்வைக்கும் தீர்வு – விடுதலைக்கான வழி – ஊகிக்கத்தக்கது. சிறுபான்மைச் சமூகங்களான தமிழ், முஸ்லீம் சமூகங்களின் ஒற்றுமை வலியுறுத்தப் பெறுவதும் ஊகிக்கத்தக்கதே. கதையோட்டத்தோடு, சுதந்திரத்துக்குப் பிற்பட்ட இலங்கையின் அரசியலை – பேரினவாதிகள் நாட்டைச் சிதைத்த வகையை – வரலாற்றுணர்வோடும் கலாபூர்வமாகவும் வெளிப்படுத்துகிறார். உதாரணத்துக்கு ஒரு பகுதியை – 83ஆம் ஆண்டுக் கலவரக் காட்சியைக் காண்போம்.

> ''இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஒப்புயர்வற்ற தர்மிஷ்ட ஜனநாயகப் பண்புகளைப் பாதுகாக்க, வடக்கே தோன்றியுள்ள பயங்கரவாதத்தினைப் பூண்டோடு கிள்ளியெறிந்து, உதவி நன்கொடை செய்யும் நாடுகளின் நன்மதிப்பினைப் பெற வேண்டிய அவசியத்தை அதி உத்தம – அதிமேன்மையுள்ள, நிறைவேற்று அதிகாரமுள்ள முதலாவது ஜனாதிபதி ஜூலியஸ் ரிச்சட் ஜெயவர்த்தனா அநேக சந்தர்ப்பங்களிலே மக்களுக்கு நினைவுபடுத்தியிருக்கிறார். எனவே, 'தமிழ்ப் பிரச்சினைக்கு அவர் ஓர் இறுதித் தீர்வினை' முன்வைக்க வல்லவர் என்கிற நம்பிக்கையும் மக்கள் மனதிலே இருந்தது. அந்த இறுதித் தீர்வினைச் செயற்படுத்தும் உரிமையைத் தமது கட்சியின் தொழிற்சங்கத் தலைவர் சிறில் மத்யூவிடம் ஒப்படைத்தாரா அல்லது அவராகவே அந்த உரிமையை எடுத்துக் கொண்டாரா என்கிற சர்ச்சைக்கு இலேசிலே தீர்வுகாண ஏலாது. ஆனால் அமைச்சர் சிறில் மத்யூவின் முகாமையிலே இறுதித் தீர்வுக்கான நடவடிக்கைகள் காலி வீதியிலே எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அஸாருத்தீன் அப்பொழுது தன் கண்ணாரக் கண்டான். சீருடை தரித்த ஆசாமிகள் – அவர்கள் பொலீஸ்காரர்களாகவும் இருக்கலாம், அவர்களே ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்யும் அதிகாரிகள் – கைகளிலே சில தஸ்தாவே ஜுகளுடன் காணப்பட்டார்கள். அவற்றிலிருந்து தமிழர்களுடைய வதிவிடங்களும் அவர்களுடைய சொத்துக்களும் பிசகில்லாமல் அடையாளம் காணப்படுகின்றன. அன்று ஆயிரம் பேரைக் கொன்ற கொலை வெறியன் அங்குலிமாலாவை மன்னித்தருளினார் புத்தபகவான்''

இத்தகைய கதைகளைப் பார்க்கும் போது எஸ்.பொ.வுக்கு சிங்கள பௌத்த சமூகத்தின் மீது தீராத வஞ்சம் இருப்பதாக அர்த்தம் கொண்டுவிடலாகாது. அவர் சிங்கள சமூகத்தை நேசிக்கிறார்: அதைவிட பௌத்த தத்துவத்தை நேசிக்கின்றார். பேரினவாதிகள் மீதே அவருடைய வஞ்சமெல்லாம்.

வெசாக் பண்டிகையின் பின்னணியில் வைத்தே சிங்கள பௌத்த பேரினவாதத்தைச் சாடிய எஸ்.பொ. அதே வெசாக் பண்டிகையின் பின்னணியிலே சிங்கள பௌத்த மக்களின் மானிடத்தை ஆண்மையை உணர்த்துகிறார். வழக்கமாக வெசாக் பண்டிகைக்கு வெசாக் கூடுகளை அழகாகச் செய்து பண்டிகையைக் களைகட்டச் செய்கிற இளைஞனான ரணபண்டா வெசாக்கூடு தயாரிப்பதற்கு மூங்கில் வெட்டச் சென்ற வேளை பாம்புக் கடியுண்டு இறந்து போனான். அதன் பின் அந்தக் குடும்பம் வெசாக் கொண்டாடுவதையே நிறுத்திவிட்டது. இம்முறை அவனது தம்பி கிரிபண்டா வெசாக் கூடு கட்டுகிறான். தன் வீட்டுக்கு மட்டுமல்ல அயல் வீடுகளுக்கும் சேர்த்து. அந்தக் குடும்பம் புத்துயிர்ப்புப் பெறுகின்றது. இந்தக் கதைக்கும் எஸ்.பொ. வைத்த 'ஆண்மை' சிங்கள பேரின வாதத்தின் பயங்கரவாதத்தை எதிர்த்து நின்ற கணபதி பற்றிய கதைக்கும் எஸ்.பொ. வைத்த பெயர் 'ஆண்மை'யே. எஸ்.பொ. கதைகளில் இனவெறி இல்லை. அதீதிக்கு எதிரான தர்மாவேசமே தொனிக்கின்றது.

எஸ்.பொ. பௌத்த மதத்தை – அதன் தத்துவ மேன்மையை எடுத்துரைப்பதான கதைகளையும் படைத்துள்ளார். புத்த ஜாதகக் கதைகளில் வந்த செய்திகளை மெருகுபடுத்தி, சிறுகதைகள் ஆக்கியிருக்கிறார். 'வீடு' என்னும் கதை அத்தகையதொன்று. புத்த தர்மத்தை மட்டுமல்ல எந்த தர்மத்தையும் எஸ்.பொ. மதிக்கத் தவறவில்லை. அவ்வகையில் 'சுவை' என்னும் 'குட்டிக்கதை' குறிப்பிடத்தக்கது. அது நபி பெருமானாரின் மனிதாபிமானத்தை உணர்த்துவது. அது ஒரு சிறுகதையா என்று கேட்கலாம்; சிறுகதை இல்லாமலும் இருக்கலாம். ஆனால் அக்கதையை எஸ்.பொ. ஏன் கூற முற்பட்டார் என்று கேட்கும் போதுதான் அவரிடமுள்ள மதங்கடந்த தர்ம உணர்வு புலனாகும். 'சுவை' போன்றதே 'முள்' என்ற கதையும். அது கிறிஸ்துவின் மேன்மையை விளங்கிக் கொண்டு எழுதப்பட்டது; புதிய ஏற்பாட்டிற் காணப்படுகின்ற சுவிசேஷங்களின் அடிப்படையில் எழுதப்பட்டது.

சுருக்கமாகக் கூறினால் உலகின் பன்மைத்துவத்தை அவர் மதிக்கத் தவறவில்லை. தமிழிலும் தமிழ்த் தேசியத்திலும் உள்ள பற்றுறுதி காரணமாக மானிட நேசிப்பை அவர் புறந்தள்ளி விடவில்லை.

இலங்கையின் இன முரண்பாடு அரசியல் வாதிகளால் விதைக்கப்பட்ட நச்சு விதையின் விளைச்சல் என்பதை எஸ்.பொ. உறுதியாக நம்புகிறார். சாதாரண மக்கள் இன உணர்வு கடந்து மனிதர்களாக வாழ்வதை அவர் விரும்புகிறார். அதனூடாக இலங்கைத்தேசம் ஒற்றுமைப்படவும் அதன் வழி முன்னேற்றவும் முடியும் எனக் கருதுகிறார். 'களரி' என்ற கதைமூலம் எஸ்.பொ. அதைத்தான் வலியுறுத்துகிறார். யாழ்ப்பாணத்தின் தீவுப் பகுதியிற் பிறந்து அப்பாறை சென்று வியாபாரம் செய்து ஜீவிதம் நடாத்தி 58ஆம் ஆண்டுக் கலவரத்தோடு யாழ்ப்பாணம் மீண்ட ஒருவர் பல ஆண்டுகள் கடந்து அக்கரைப்பற்றுச் செல்வதற்காக கல்முனை வந்து பஸ் நிலையத்திற் பஸ்ஸுக்காகக் காத்து நிற்கிறார். குத்தகைக்கு விட்டிருக்கும் தன் காணியை குத்தகைக் காரனாகிய அப்புஹாமிக்கே விற்றுவிடும் நோக்கிலே அவனைக் காண்பதற்காகவே அவர் அக்கரைப் பற்றுக்குச் செல்கிறார். பஸ்ஸுக்குக் காத்து நிற்கும் போது பீடா வியாபாரியொருவன் பீடாவை விளம்பரப்படுத்துகிறான். இடையிடையே கடந்த காலம் கண்முன் விரிகின்றது. கல்லோயக் குடியேற்றத் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் அம்பாறையில் குடியேறி வியாபாரத்தில் ஈடுபட்டு முன்னேறி தன் மனைவியோடு வாழும் காலத்தில் தனிச்சிங்களச் சட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தின் போது கொல்லவந்த காடையர்களிடமிருந்து தம்மை காப்பாற்றிய சிங்களத் தம்பதி பற்றிய எண்ணம் விரிகிறது. தம்மைக்காப்பாற்றிய ரத்னாயக்காவைத் தற்செயலாகச் சந்திக்கவும் நேரிடுகிறது. இருபக்கத்திலும் பழைய அன்பு அப்படியே மாறாமல் இருப்பது புலனாகின்றது. பீடாக்காரன் குறுக்கிடுகிறான். யாருக்கோ பீடா மடித்துக் கொடுகிறான். 'சுண்ணாம்பு தடவிய வெற்றிலையுள் பீடாக் கலவையை வைத்து முக்கோண வடிவில் மடித்துக் கிராம்பு குத்துகிறான்' அதைப் பார்த்த அவனது நெஞ்சிலே ஒரு நினைவு மிதக்கிறது. 'களுதாவளை வெற்றிலையும் – காலிப் பாக்கும் – தாவடிப் புகையிலையும் சேர்ந்து சுவையான தாம்பூலமாக ஒன்று சேர்கின்றன. சிங்களவர் – தமிழர் – முஸ்லீம்கள் என்னும் மூன்று இனங்களும்...

முக்கோண வடிவிலுள்ள பீடா, கிராம்பினால் முழுமையான உருவம் பெறுகின்றது. முஸ்லீம்கள் – தமிழர் – சிங்களவர் என்ற மூன்று இனங்களும் தேசிய ஒற்றுமையின் வாய்ப்பட்டு, ஈழத்தாய்க்கு நறுமணமூட்டும் தாம்பூலமாக அமைந்தால், என்று எண்ணுவதாகக் கதை முடிகின்றது. இந்த எண்ணம் எஸ்.பொ.வின் உண்மை எண்ணமோ என்னவோ? உண்மையில் எஸ்.பொ.விடம் இனமதங் கடந்த சிந்தனைதான் முனைப்புற்று நிற்கின்றது. 'கடவுள் அடிமையானார்' என்ற கதை அதைத்தான் காட்டுகின்றது. அந்தக்கதை இவ்வாறு தொடங்குகின்றது.

"ஆரம்பத்தில் கடவுளும் சாத்தானும் நண்பர்களாகத் தான் இருந்தார்கள். ஆனால் திடீரென்று ஒருவரையொருவர் விரோதித்துக் கொண்டு பகைவர்களாக மாறினார்கள். போட்டியும் பூசலும் ஏற்பட்டன. கடவுளுக்கு ஆசை. சாத்தானைப் பணியவைக்க வேண்டுமென்று; சாத்தானுக்கு ஆசை, கடவுளைப் பணிய வைக்க வேண்டும் என்று"

இவ்வாறு தொடங்கும் கதையை எஸ்.பொ. இவ்வாறு முடித்துக் கொள்கிறார்:

"சாத்தான் பலமாகச் சிந்தித்தான், சாத்தான் பசியைப் படைத்தான்; காமத்தைப் படைத்தான். கடவுள் சற்றே திக்குமுக்காடினார். ஆனாலும் கடவுள் உழைப்பைப் படைத்தார்; காதலைப் படைத்தார். மனிதன் இன்பமாக வாழ்ந்தான்; கடவுள் மகிழ்ச்சி கொண்டார்."

சாத்தான் மொழிகளைப் படைத்தான்; மதங்களைப் படைத்தான்; வேறு வழியில்லை, கடவுள் தோல்வியை ஒப்புக் கொண்டார்; கடவுள் அடிமையானார்.

---

# நிலவு இராச்சியம்

– நாச்சியாதீவு பர்வீன்

குழம்பிக் கிடந்த
நட்சத்திரங்கள்
தமக்குள் பேசிக் கொண்டன
நிலவின் பிறந்த
நாள் பற்றி...
தமது எல்லைக்குள்
நிலவின் ஆட்சி பற்றி...
அவைகள் அலட்டிக் கொள்ளவில்லை
வெளிச்சம் தர மறுக்கும்
நிலவின் கர்வம் பற்றி
எந்த நட்சத்திரமும்
கதைப்பதாக இல்லை

குட்டி நட்சத்திரங்கள்
குசு குசுத்தாலும்
ஆக்கிரமிப்பின் கால்த்தடங்கள்...
அழுத்தத்தினால்...
ஏதும் அர்த்தப்படுவதாய் இல்லை
ஏக்கம் நிறைந்த மனதுடன்
சில நட்சத்திரங்கள்
பேசிக்கொண்டன
இன்னொரு
நிலவின் வருகை பற்றி.

என் நினைவுகளில்

# எஸ்.பொ

- தெளிவத்தை ஜோசப்



ஈழத்துப் படைப்பிலக்கியத்துறையின் உச்சத்தில் எஸ்.பொ. இருந்த 1960களில் படைப்பிலக்கியத்துக்குள் காலடி வைத்தவன் நான்.

1963ல் என்னுடைய பாட்டி சொன்ன கதை வீரகேசரியில் வந்திருந்தது. அதுவும் வீரகேசரி மலைநாட்டு எழுத்தாளர்களுக்காக நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசுபெற்ற கதை என்னும் ஒரு துணை அந்தஸ்துடன். தமிழ் நாட்டின் பிரபல ஏடுகள் ஈழத்துக்கெனத் தனியாக நடத்தும் சிறுகதைப் போட்டிகள் போலத்தான் இதுவும்.

தீ, சடங்கு போன்ற நெருப்பைக் கிளப்பிய நாவல்கள், வீரகேசரி, தினகரன், சுதந்திரன், என்று சிறகடிக்கும் சிறுகதைகள் என்று நான் அண்ணாந்து பார்த்து வியந்து நின்ற உச்சத்தில் இருந்தவர் அவர். அருண் மொழித்தேவரின் தேனருவியில் எஸ்.பொ.வின் மேய்ச்சல் வாசித்து ஒரு அதிர்ச்சி கலந்த சந்தோஷத்தில் இருந்திருக்கின்றேன்.

யாழ்ப்பாணத்துத் தமிழை ஒரு புனைகதைத் தமிழாக உயிர்ப்பித்துக் காட்டிய படைப்பாளி அவர். எஸ்.பொ.வின் எழுத்துக் கூடாக அந்தத் தமிழ் கிளப்பும் துள்ளல் காலமெல்லாம் நினைத்து நினைத்து ரசிக்கவும் சந்தோஷிக்கவும் வைக்கும்.

யாழ் நிலத்துப் பாணன் என்று மிகப் பொருத்தமாகக் குறிக்கின்றார் ஜெயமோகன் அவர்கள் தன்னுடைய 'ஈழ இலக்கியம்' நூலில்.

மிகவும் பின் தள்ளப்பட்டுக் கிடந்த மலையகத்தில் இருந்து எழுதத் தொடங்கியவன் நான். கள்ளத்தோணிகள் என்ற செல்லப் பெயருடன் தோட்டக்காட்டான்கள் என்றும் அபிஷேகிக்கப்பட்ட கூட்டம் இது.

அதற்குள் இருந்து முளைவிட்ட எங்களைக் கவனத்தில் கொள்ள யாருமற்ற சூழல் கொண்ட அந்த நாட்களில் மலையக எழுத்துக்கள் பற்றி முதல் முதலாகக் குரல் எழுப்பியவர் எஸ்.பொ. அவர்கள்.

கிழக்கிலங்கையின் மட்டுநகர் மாநகரத்தில் நடந்த இலக்கிய மாநாட்டில் இன்னும் ஒரு பத்து வருடங்களில் முஸ்லிம் எழுத்தாளர்களும் மலையக எழுத்தாளர்களும் ஈழத்து இலக்கியத்தில் முன்வரிசையில் இருப்பார்கள் என்று உரத்துக் கூறியவர் அவர்.

''ஈழத்து இலக்கியத்துக்கு மலையக எழுத்துக்கள் புதுரத்தம் பாய்ச்சும் வல்லமை கொண்டுள்ளது'' என்னும் கருத்தை தான் உரையாற்றிய மேடைகளில் எல்லாம் வலியுறுத்தியவர் அவர்.

என்னுடைய எழுத்துக்கள் பற்றி அவர் அறிந்து வைத்திருந்தார் என்பதே அந்த அறுபதுகளில் ஒரு மகிழ்வைத் தந்தது எனக்கு.

அந்த நாட்களில் வானொலியில் குரல் வருவது என்பது ஒரு மகத்தான விஷயம். வானொலி ஒரு சக்தி மிக்க ஊடகமாக இருந்த காலம் அது. என்னை முதன் முதலாக ரேடியோவுக்கழைத்து ஒலிவாங்கியின் முன் அமர்த்திப் பேச வைத்தவர் அவர்.

பேசி முடித்து வெளியே வந்ததும் தட்டிக் கொடுத்து 'ஜமாய்த்து விட்டாயப்பா' என்றார். உடனிருந்த இளம்பிறை ரஹ்மான் அவர்கள் தெளிவத்தையின் குரல் வானொலிக்குப் பொருந்தி வருகிறது என்றார். ஒரு ஆறு அல்லது ஏழு நிமிட உரை அது.

அதன் பிறகு 19ஆம் நூற்றாண்டு ஈழத்து இதழ்கள் என்னும் தலைப்பில் பதினைந்து நிமிடம் உரையாற்ற சந்தர்ப்பம் கொடுத்தார். அதைத் தொடர்ந்து 20 ஆம் நூற்றாண்டு இதழ்கள் பற்றியும் அரை மணி நேர உரையாற்றக் கூப்பிட்டார்.

இந்த உரையைக் கேட்ட பிறகுதான் தேசாபிமானி இராமநாதன் அவர்கள் கணேஷின் 'பாரதி' பற்றி இன்னும் விரிவாகப் பேசி இருக்கலாம் என்று பாரதி இதழ்களுடன் என்னைத் தேடி வந்தார்.

20ஆம் நூற்றாண்டு ஈழத்து இதழ்களும் இலக்கியமும் பற்றிய என்னுடைய இன்றைய செயற்பாடுகளுக்கான ஒரு தேடல் உணர்வையும் உன்னிப்பையும் ஏற்படுத்த அத்திவாரமாயமைந்தது எஸ்.பொ. எனக்களித்த வானொலி உரைக்கான சந்தர்ப்பமே!

அந்த நாட்களில் மேடையில் ஏறிப்பேச எனக்குப் பயமாக இருக்கும். கூட்டத்தின் முன்னால் வந்து நிற்கவே மாட்டேன்.

அப்படியான நாட்களில் ஒரு பொழுது எஸ்.பொ. என்னைச் சந்திக்கின்றார்.

சு.வே. அவர்களின் மண்வாசனையைக் கையில் கொடுத்து பம்பலப்பிட்டி சரஸ்வதியில் வெளியீட்டு விழா. நீர் பேசுகின்றீர் என்றார்.

என்னை மறுத்துக் கூற அவர் விடவில்லை ஏற்றுக் கொண்டேன்.

ஒரு விதமாகப் பேசி முடித்தேன். இறுதியாகப் பேச வந்தார் எஸ்.பொ.

பொதுவாகவே கூட்டங்களில் இறுதிப் பேச்சாளராகவே மேடை ஏறி தனக்கெதிராகப் பேசியவர்களை மூட்டை கட்டி ஒரு ஓரத்தில் வைத்து விடும் லாவகம் கொண்டவர்.

அன்றும் மேடை ஏறியதுமே 'கோட்டேஷன் மன்னர்கள்' என்று தொடங்கியவர் தெளிவத்தை மன்னிக்கட்டும் அவரையல்ல நான் குறிப்பது என்றார்.

அந்த அளவுக்கு சு.வே.யின் கதைகளில் இருந்து எடுத்துக் காட்டுக்கள் கூறியிருக்கின்றேன் என்பது எனக்கு 'சுரு'க்கென்றது.

கொழும்பில் ஒரு மேடையில் என்னை ஏற்றி விட்டுப் பேச வைத்தவரும் எஸ்.பொ.வேதான். மறக்க முடியாப் மனப்பதிவுகள் அவை.

1964ல் நான் கொழும்பு வந்து விட்டேன். எனக்கு முன்பாகவே என்.எஸ்.எம். ராமையாவும் ஓடிவந்து விட்டார். ஆமர் வீதி பஸ்தரிப்பில் நானும் ராமையாவும் தினமும் சந்தித்துக் கொள்வோம். ஆபீஸ் முடித்து அப்படிச் சந்தித்துப் பேசி மகிழும் ஒரு நாள் மாலை எஸ்.பொ. எங்களைப் பஸ் ஸ்டாண்டில் கண்டு உடன் வரும்படி கூட்டிச் சென்றார்.

இளம்பிறை ரஹ்மானின் றெயின்போ பிரஸ் அது.

காந்தி நூற்றாண்டு பற்றியும் அரசு வெளியீடு மூலம் காந்தீயக் கதைகள்; நூல் தயாரிப்புப் பற்றியும் கூறினார். ஏறத்தாழ ஒரு பதினைந்து சிறுகதைகள் கொண்டதாக அது அமையலாம் என்றெல்லாம் கூறி உங்கள் இருவரினதும் சிறுகதை வேண்டும் என்றார்.

காந்தீயக் கதைகள் தொகுதியில் என்னுடைய 'கத்தியின்றி ரத்தமின்றி'யும் ராமையாவின் 'ரகுபதி ராகவ'வும் வெளிவந்துள்ளன. காந்தீயக் கதைகள் மட்டுமின்றி மேலும் வெவ்வேறு தலைப்புக்களில் காந்தி நூற்றாண்டு நூல்களை அரசு வெளியிட்டிருந்தது. அந்த நாட்களில் வெகுவாகப் பேசப்பட்ட கதை 'கத்தியின்றி ரத்தமின்றி'

அண்மையில் கூட 'செங்கதிர்' இக்கதையை மறுபிரசுரம் செய்திருந்தது. வேறும் சில சஞ்சிகைகள் இந்தச் சிறுகதையை அப்போதே மறுபிரசுரம் செய்தன.


எஸ்.பொ.வின் நேர்காணல்கள் விசேஷமானவை. அவர் தமிழ் நாட்டில் வாழ்ந்தபோது கோமல் தனது சுபமங்களாவுக்காகச் செய்த நேர்காணலில் ஒரு கேள்வி 'ஈழத்து இலக்கிய உலகை ஓரளவு அறிந்து கொள்ள யார் யாரைப் படிக்கலாம்' என்பதாக அமைந்தது.

எஸ்.பொ. இப்படிக் கூறுகின்றார் மற்ற மற்றப் பகுதிகளைப் பற்றிக் கூறிவிட்டு மலையகம் என்று வந்ததும் ராமையாவையும் தெளிவத்தை ஜோசப்பையும் என்று கூறுகின்றார்.

இப்படிக் கூறுவதற்கும் ஒரு இலக்கிய மனம் வேண்டும். அந்த மனம் எஸ்.பொ.வின் உடல் முழுக்க இருந்திருக்கிறது. தலைமுழுக்கமூளை என்பதைப் போல.

என் நினைவுகளின் இனிமையாக இருக்கும் எஸ்.பொ.வை மனதுக்குள்ளால் தூண்டிவிட்டுக் கொள்வதும் ஒரு சுகமான அனுபவமே.

---



அந்தப் பிணம் புறப்பட்டது
உறவினர் சிலர் அழ,
ஊரார் சிலர் வாட,
பட்டாசு, பறை முழங்க
பயணப்பட்டது.

"ஆண்டு அனுபவிச்சது
அழுவதற்கு என்ன இருக்கு"

காடு திருத்தி - நல்ல
கன்றுகளை நாட்டி
ஊர் செழிக்க தன்
உழைப்பை ஈந்தவன்
தேயிலை மலைகளுக்கு
தெம்பைத் தந்தவன்.
வெள்ளைத் துரையிடமும்
கருப்புத் துரையிடமும்
உழைத்துக் களைத்தவன்
களைத்து உழைத்தவன்

குழந்தையாய்
இம்மண்ணில் புரண்டவன்
வாலிபனாய்
இம்மண்ணில் ஆடியவன்
தந்தையாய்
இம்மண்ணைக் கிண்டியவன்.
பாட்டனாய்
இம்மண்ணை நோக்கியவன்
வாழ்காலம் முழுதும்
வறுமையில் உழன்றவன்
பிணமாய்
மண்ணுக்குப் போகிறான்.

இந்த தோட்டமே உலகமாய்
முழு உலகுமே தோட்டமாய்
தேயிலையே வசந்தமாய்
லயவீடே சொர்க்கமாய்
வாழ்ந்தவன்.

அந்தப் பிணம் புறப்பட்டது
உறவினர் சிலர் அழ,
ஊரார் சிலர் வாட,
பட்டாசு, பறை முழங்க
பயணப்பட்டது.

"ஆண்டு அனுபவிச்சது
அழுவதற்கு என்ன இருக்கு"

கூந்தல் கலைத்து
சேலை அவிழ்த்து
தலையிலும், மார்பிலும்
அடித்துக் கொண்டு
ஆயுளை இழுத்துப்பிடித்து
"ஆண்டு அனுபவிச்ச கதை"யை
கூவிய படியே செல்கிறாள் கிழவி

"......
தனியா விட்டுட்டு
போறியலே.... எஞ்சாமி...."

அமரர் செம்பியன் செல்வர் நினைவுச் சிறுகதைப் போட்டியில்
3 ஆம் பரிசு பெற்ற சிறுகதை.

# இந்தப் பிள்ளைக்கு

அகளங்கன்
நா. தர்மராஜா



"தம்பி! எப்பிடியெண்டாலும் என்ன வெளீல எடுத்திரு. எத்தின நாளைக்குத்தான் இஞ்ச இருக்கிறது."

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சுப்பையர் மகனிடம் மிகவும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டார்.

அவனால் என்ன செய்யமுடியும்.

வவுனியா வைத்தியசாலையும் சைவப்பிரகாச மகளிர் கல்லூரி இடைத்தங்கல் நலன்புரி முகாமுமாக மாறிமாறி அவர் அலைக்கழிந்து கொண்டிருப்பது மிகவும் பரிதாபகரமானது தான்.

ஆனால் அவர் மட்டுமா...

மூன்றாவது தடவை வைத்தியசாலைக்கு வந்திருக்கும் போது தன்னைப் பார்க்க வந்திருந்த மூத்த மகனிடம் மிகவும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார் சுப்பையர்.

சுப்பையரின் மூத்த மகன் வவுனியாவிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் ஆசிரியர். மருமகளும் ஆசிரியை.

இரண்டாவது மகன் வவுனியா பெருந்தெருக்கள் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர். இரண்டாவது மருமகளும் ஆசிரியை.

இவர்கள் யாவரும் வவுனியா நகருக்குள் மிகவும் வசதியாக வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

சுப்பையரின் ஒரே மகள் லண்டனில் கணவன் பிள்ளைகளோடு வசதியாக வாழ்கிறாள்.

செல்வத்துக்குக் குறைவில்லை. அவரை வைத்துப் பராமரிக்க இரண்டு மகன்கள் குடும்பமாக நல்ல நிலையில் இருக்கிறார்கள்.

ஆனால் அவரோ அகதிமுகாமில்.

திருகோணமலை வைத்தியசாலையிலிருந்து கொண்டு வரப்பட்ட பல நோயாளிகளில் சுப்பையரும் ஒருவர்.

அவருக்கு வவுனியாவிற்கு வரச் சிறிதும் விருப்பம் இல்லை. தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்த முல்லைத்தீவு மண்ணை விட்டுப் பிரிய மனமில்லாமல் எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியில் அங்கேயே இருந்து வந்தார்.

காணி பூமி சொத்துச் சுகம் அதிகம். அந்த மண்ணிலே வாழ்ந்து பழக்கப்பட்டவர். வேற்றிடம் சென்று வாழ விரும்பவில்லை.

அவரது மனைவி யுத்த அரக்கனால் விழுங்கப்பட்டு முல்லைத்தீவு மண்ணிலே ஐக்கியமாகியபோது அவருக்கு ஆறுதல் கூறக் கூட மூன்று பிள்ளைகளில் ஒருவருமே அங்கில்லை.

சண்டை உக்கிரமடைந்ததால் வவுனியாவிலிருந்த மக்கள் மருமக்களாலேயே அங்கு செல்லமுடியவில்லை.

அப்படியிருக்க லண்டனில் இருக்கும் மகளை எப்படி எதிர்பார்க்க முடியும்.

தங்கள் தாய் இறந்த செய்தியைக் கூட மூன்று நாட்களின் பின்புதான் வவுனியாவிலுள்ள பிள்ளைகள் அறியக் கூடியதாக இருந்தது.

அதுவும் லண்டனிலிருந்துதான் அவர்களுக்கு அந்தச் செய்தி கிடைத்தது.

தங்களுக்குள்ளே கூடி, ரகசியமாக அழுது தீர்த்துவிட்டு தந்தையைப் பற்றிய தகவலை அறியமுடியாமல் அவர்கள் தவித்த தவிப்பு, தவித்தவர்களுக்குத்தான் புரியும்.

சுப்பையருக்கும் காயம் ஏற்பட்டதாகச் செய்திகள் கசிந்த போதும் உண்மைநிலையை அவர்களால் அறியமுடியவில்லை. அந்தக் கொடூரமான செல் தாக்குதலினால் தனது மனைவியைப் பறிகொடுத்த சுப்பையர் நிலை கலங்கிப் போனார்.

சிறு காயங்களோடு தப்பிய அவர் அதன்பின் அங்கிருக்க விரும்பவில்லை.

பல நோய்களின் இருப்பிடமான அவரின் உடம்பு போதிய மருத்துவ வசதியில்லாத அந்த மண்ணில் அதற்குமேலும் தாக்குப் பிடிக்காது என்பது அவருக்குத் தெரியும்.

மனைவி இல்லாத, பிள்ளைகள் இல்லாத அந்த மண்ணில் தனது நோயையும், தனிமையையும் போக்க நினைத்தார். நோய் நொடி இல்லாமல் பாய் படுக்கை இல்லாமல் நல்ல சுகதேகியாக அங்கும் இங்கும் ஓடி ஆடி சுறுசுறுப்பாக இயங்கி வந்த அவரின் மனைவி, ஒரு நொடிக்குள் கண்முன்னே இரத்த வெள்ளத்தில் கிடந்து செத்த கோரச் சாவு அவரிதயத்தைக் கூரிய வாளாய் அறுத்தது.

பிள்ளைகளைக் கண்டு அந்தத் துயரைப் பகிர்ந்து கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டார்.

புதுமாத்தளன் பகுதியிலிருந்து கப்பல் மூலம் வந்த நோயாளிகளில் ஒருவராக திருகோணமலை வைத்திய சாலைக்கு வந்து சேர்ந்தார்.

திருகோணமலை வைத்தியசாலைக்குச் சுப்பையர் வந்து சேர்ந்த செய்தியைப் பத்திரிகை மூலம் அறிந்த பிள்ளைகள் பதறித் துடித்தனர்.

திருகோணமலைக்குச் செல்ல முயன்றனர்.

முல்லைத்தீவு அடையாள அட்டையை வைத்துக் கொண்டு மதவாச்சியைத் தாண்டுவதைவிட யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துவது சாத்தியம் போல் தெரிந்தது.

மதவாச்சியோடு திரும்பி விட்டனர்.

மூன்று நாட்களின்பின் வவுனியா வைத்தியசாலையில் தந்தையாரைச் சென்று பார்த்தனர்.

வைத்தியசாலைக்குள் நுழைவதே பயங்கரமானதாக இருந்தது. வவுனியா வைத்தியசாலையின் வழமையான வெளிநோயாளர் பகுதி இராணுவத்தினருக்கே ஒதுக்கப்பட்ட பின் அங்கு செல்வதே பயமானதாக இருந்தது.

புதிய வெளிநோயாளர் பகுதியினூடாகத்தான் உள்ளே செல்ல வேண்டும்.

அதற்குள் கண்டபடி யாரும் செல்ல முடியாது.

பாஸ் நடைமுறை, அடையாள அட்டைப் பதிவு எனப் பல நடைமுறைகள் உண்டு.

வன்னியிலிருந்து காயம்பட்டு வந்தவர்களைப் பார்ப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றால் பலரின் சந்தேகக் கண்களுக்குள் சிக்கவேண்டி வரும்.

இதற்கெல்லாம் பயந்தால் முடியுமா.

தந்தையைச் சென்று பார்த்தனர்.

தாயை இழந்த சோகத்தைத் தந்தையோடு பகிர்ந்து கொண்டனர்.

இரண்டு நாட்கள் கழித்து சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாமுக்கு அவர் அனுப்பி வைக்கப்பட்டார்.

வவுனியா நகருக்குள் இருக்கும் இரண்டு பிரபலமான தமிழ்ப் பாடசாலைகளான வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயமும், சைவப்பிரகாச மகளிர் கல்லூரியும் இடைத்தங்கல் நலன்புரி முகாம்களாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. காமினி மகாவித்தியாலயமும், நகருக்கு சற்று வெளியே இருக்கும் முஸ்லிம் மகாவித்தியாலயமும், பூந்தோட்டம் வித்தியாலயமும் இத் தேவைக்காகப் பயன்படுத்தப் படுகின்றன.

இவற்றில் சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் மட்டும் தான் திருகோணமலையிலிருந்து வருகின்ற நோயாளர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

முகாம்களில் உள்ளவர்களுக்கு அம்மாள் வருத்தம் வந்தால் பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு விடுவார்கள்.

இடைத்தங்கல் முகாம்களிற்குச் சென்று உறவினர்களைப் பார்க்க முடியாது.

சுப்பையர் இருந்த முகாமுக்குச் சென்று அவரை யாரும் பார்க்கவில்லை. பார்க்கவும் முடியாது.

இடையிடையே அவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படும்போது மட்டும் சென்று பார்க்கலாம். சாப்பாடு கொடுக்கலாம்.

இப்போது மூன்றாவது முறையாக வைத்தியசாலைக்கு வந்து கிடக்கிறார் சுப்பையர்.

பிள்ளைகள் அருகில் நிற்கின்றனர்.

''தம்பி! வெளீல விட்டிட்டாங்களெண்டா பிறைவேற்றில நல்ல மருந்தெடுத்துப் பாக்கலாம். இஞ்ச கிடந்து என்ன பிரயோசனம்...''

பெருமூச்சு விட்டுக் கொண்டார்.

''பாப்பம். நாங்களும் சும்மா இருக்கேல்ல...'' மூத்த மகன் சற்று ஆறுதலாகச் சொன்னான்.

''தம்பி! எனக்கு அரசாங்கம் ஒண்டுந் தரத்தேவையில்ல. நாங்களென்ன ஒண்டுக்கும் வழியில்லாத ஆக்களே. என்ன



வெளீல விட்டா என்ன பிரச்சினையாம். என்ர பிள்ளையளோட நான் இருந்திற்றுப் போறன். இதுக்கு ஆரிட்டயும் அனுமதி பெறவேணுமோ.''

மகனுக்குச் சொன்னதைத்தான் அவர் இடைத்தங்கல் முகாமிலும் அதிகாரிகளுக்குச் சொன்னார்.

யாரும் அதைக் கேட்பதாக இல்லை.

வெளியே விடுவதாகவும் இல்லை.

நானும் எவ்வளவோ றை (try) பண்ணிக் கொண்டுதான் இருக்கிறன்.

பிரதேசச் செயலாளர், அரசாங்க அதிபர் எண்டு கடிதங்களை வாங்கி அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறன். ஆனா சரி வருதில்ல. பாப்பம்''

சலிப்போடு கூறினான் மூத்த மகன்.

அவனது பதிலில் விரக்தியும் ஏமாற்றமும் கலந்திருந்தன.

இளையவனது முகத்தைப் பார்த்தார் சுப்பையர்.

''தம்பி! நீ மனித உரிமைக்காறரிட்டப் போய் முறையிட்டுப் பார். என்ர பிள்ளையளோட இருக்கிற உரிமை எனக்கில்லை யோண்டு பாப்பம். என்ர நோய்க்கு நான் விரும்பிறபடி நல்ல மருத்துவம் செய்யிற உரிமை எனக்கில்லையோண்டு கேட்டுப் பார். பெத்த தகப்பனைப் பாக்கிற உரிமை பிள்ளையளுக்கு இல்லையோண்டு கேள்.''

கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டவராகக் கதைத்தார் சுப்பையர்.

''அங்கயெல்லாம் போய் முறையிட்டதாத் தெரிஞ்சா நாங்கள் இஞ்ச இருக்கேலாது. உங்களுக்கு வவுனியா நிலமை

நாட்டு நிலமை தெரியாததால சொல்லுறியள். அது வேற பிரச்சனயளக் கொண்டு வரும்...''

''என்ன பிரச்சனயளக் கொண்டு வரும்...'' சற்றுக் கோபமாகக் கேட்டார் சுப்பையர்.

அங்கும் இங்கும் பார்த்து விட்டு. ''அத விடுங்கோ... அத இஞ்ச கதைக்கேலாது...'' என்று சொல்லிவிட்டு மௌனமானான் இளையவன்.

சுப்பையர் ஒன்றும் பேசவில்லை. சிறிது நேரம் அமைதியாக இருந்தார் இருப்பினும் அவரால் அமைதியாக இருக்க முடியவில்லை.

''நீங்கள் ரெண்டு பேரும் அரசாங்க உத்தியோகம் பாக்கிறியள். மருமகள்மார் ரெண்டு பேரும் அரசாங்க உத்தியோகத்தில இருக்கினம். மகள் லண்டனில வசதியா இருக்கிறாள். எப்ப கேட்டாலும் காசனுப்புவாள்.

அப்ப என்னை ஏன் அகதி எண்டு சொல்லி இஞ்ச வைச்சிருக்கினம். ஏன் அரசாங்கம் எனக்கு வீணாச் செலவழிக்கோணும்.

பேசாமல் என்ன விட்டிட்டா நான் என் பாட்டுக்கு உங்களோடை வந்திருவன். எல்லாருக்கும் நல்லது தானே. அகதி எண்டா என்ன அது ஆரும் இல்லாத ஆக்களல்லோ அகதி...''

எட்டாம் வகுப்புவரை மட்டுமே படித்திருந்த பாமர விவசாயியான சுப்பையரின் கேள்விக்கு, பட்டதாரிகளான பிள்ளைகளினாலோ மருமக்களாலோ கூடப் பதில் சொல்ல முடியவில்லை.

ஏன், அரசினாலும் தான்.

சைவப் பிரகாச மகளிர் கல்லூரி இடைத்தங்கல் நலன்புரி முகாமில் ஒரு செய்தி பரவியது.

''வயது போனவர்களை பிள்ளையள் அல்லது சொந்தக்காரர் விரும்பினால் கூட்டிச் செல்லலாம்'' என்ற செய்திதான் அது.

சுப்பையருக்கு மிகுந்த மகிழ்ச்சி.

வெளியே சென்று இந்த ந... விட்டு நீங்கி பிள்ளைகள் பேரப்பிள்ளைகளோடு தங்கிவிடலாம் எனக் கணக்குப் போட்டார்.

மீண்டும் பிள்ளைகளைச் சந்திக்க விரும்பி, நெஞ்சுக் குத்தைச் சாட்டாக்கி வைத்தியசாலைக்குச் சென்று படுத்துக் கொண்டார்.

பிள்ளைகள் தகவல் அறிந்து வந்து சேர்ந்தனர். நலன்புரி நிலையங்களில் செல்போன் பாவனைக்குத் தடை இருப்பினும் கள்ளமாகப் பலர் பாவித்துக் கொண்டுதான் இருந்தனர்.

ஒருவாறு பிள்ளைகளைத் தொடர்பு கொண்டு வைத்திய சாலைக்குத்தான் செல்லுகின்ற செய்தியைத் தெரிவித்திருந்தார்..

''மோன... வயசு போன ஆக்கள வெளீல விடுகினமாம். ஒருக்கா முயற்சி செய்து பாருங்கோ.''

''அறுபது வயசு முடிஞ்சாக்களத்தான் அப்பிடி விடுறதாத் திட்டமாம். அதுவும் இன்னும் பேச்சோடதான் கிடக்கு...'' சுவாரஸ்யமில்லாமல் கூறினான் மூத்தவன்.

சுப்பையருக்கு அளவு கடந்த கோபம் வந்தது. வன்னி மண்ணுக்கே உரித்தான ரோசமும் கோபமும் கொந்தளிக்க,

''அறுபது வயசு முடிஞ்சாத்தான் வயசு போனதெண்டு அர்த்தமோ. முந்தியெல்லாம் ஐம்பத்தைஞ்சு வயசு முடிய வயசு போச்செண்டு பென்சன் குடுத்தவங்களில்லோ. இப்ப அறுபது வயது முடிஞ்சாத்தான் வயது போனதாமோ. உத்தியோகக் காறங்களுக்கும் அரசியல்க் காறங்களுக்கும் தான் உது சரி. எங்களுக்கு உது சரிப்பட்டு வராது.

கிழவன்மாரெல்லாம் தலைக்கு கறுப்பு மை பூசி டை அடிச்சு இளந்தாரியளாத் திரியிறதால வயசு போனதெண்டா என்னண்டு ஒருத்தருக்கும் விளங்கேல்லை.'' அவரது கடுங்கோபத்துக்கும் காரணம் இருந்தது. சிறிது நேரம் மௌனமாக இருந்தார்.

''அப்ப... இப்ப என்ன செய்யிறது. ம்... ம்... இன்னும் ஆறு மாதம் அகதி வாழ்க்கைதான். எல்லா வசதியும் இருந்தும் இன்னும் ஆறு மாதங்களுக்கு அகதி தான்.'' மிகவும் கவலையோடு சொல்லித் திட்டிக் கொண்டிருந்த சுப்பையர்,

''எப்ப பிரச்சன தீரப்போகுது. எப்ப நிம்மதியா இருக்கப் போறம். வெளியில போனாலும் தமிழன் இந்த நாட்டில அகதி தான்.'' என்று சலித்துக் கொண்டவராக தனக்கு எதிரில் உள்ள கட்டிலில் நோயுற்ற தந்தையோடு காயப்பட்டுக் கிடந்த இரண்டு வயதுப் பிள்ளையை உற்று நோக்கினார். அவர்களும் அவரோடுதான் முல்லைத்தீவிலிருந்து வந்திருந்தனர்.

ஒரு பெருமூச்சு விட்டபடி சுப்பையர் தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.

''எனக்கென்ன... சரி, இன்னுமொரு ஆறுமாதப் பாடு, இந்தப் பிள்ளைக்கு...''

---


## புரவலர் புத்தகப் பூங்கா மாதம் ஒரு நூல் வெளியீட்டுத் திட்டம்

முன்பொருபோதும் நூல்வெளியிடாத எழுத்தாளர்களின் நூல்கள் இத்திட்டத்தின் மூலம் வெளியிடப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் எழுத்தாளர்கள் தமது படைப்பின் இரண்டு பிரதிகளோடு, என்னுரை அணிந்துரை, ஆசிரியர் பற்றிய விபரம், இரண்டு புகைப் படங்கள், முன்னர் நூல்கள் வெளியிடவில்லை என்ற உறுதி மொழி ஆகியவற்றை இணைத்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும். எழுத்தாளர் விரும்பினால் மூவர்ண அட்டைப்படஓவியத்தையும் சேர்த்து அனுப்பலாம்.

எழுத்தாளருக்கு 300 பிரதிகள் இலவசமாக வழங்கப்படுவதோடு, வெளியீட்டு விழா நடத்தி அதில் கிடைக்கும் பணம் முழுவதும் எழுத்தாளருக்கே வழங்கப்படும். இலங்கை எழுத்தாளர்கள் யாபேரும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். நூல் ஆக்கத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படாத பிரதிகள் எழுத்தாளருக்குத் திருப்பி அனுப்பப்படும்.

**தொடர்பு முகவரி :** தேர்வுக்குழு, புரவலர் புத்தகப் பூங்கா, இல 25, அவ்வல் சாவியா ரோட் கொழும்பு - 14.
தொ. பேசி : 077 4161616, 078 5318503

# 'எஸ். பொ'வின்

# 'மாயினி'

## - ஒரு அறிமுகம்



- கலாநிதி செ. யோகராசா

**மற்றொரு முக்கியமான சிறப்பு இந்நாவலிலிடம்பெற்றுள்ள 'பாத்திரங்கள்' பற்றியது. அதாவது, இந்நாவலில் நடமாடும் கணிசமான பாத்திரங்கள் - உதாரணமாக, வாசுதேவ நாணயக்கார, சிறிமாவோ பண்டாரநாயக்கா, எஸ். ஜே. வி, ஜே. ஆர், அநுரா பண்டாரநாயக்கா, பிரேமதாசா, சந்திரிகா, அன்ரன் பாலசிங்கம், மகாத்மாகாந்தி, எம். ஜி. ஆர், ராஜீவ் காந்தி, முதலாம் விமலதர்மசூரியன், ஹிட்லர் முதலானோர் உண்மையானவை.**

நவீன தமிழ் இலக்கிய வரலாற்றிலே 'எஸ். பொ'வின் பங்களிப்பு முக்கியமானது. இக்கட்டுரையின் நோக்கம் அது பற்றிப் பேசுவதல்லாவிடினும் இவ்வேளை அதுபற்றிச் சுருக்கமாக நினைவு கூர்வது பொருத்தமானது. பின்வரும் விடயங்கள் அது தொடர்பாக இவ்வேளை நினைவிற்கு வருகின்றன.

- தமிழ் நாவல் உலகிற்கு முதன்மையானவையாகவும் முதல்முதல் எழுந்தனவுமாகவுள்ள 'தீ', 'சடங்கு' ஆகிய இரு பாலுணர்ச்சிசார் நாவல்களை வழங்கியமை.
- சிறந்த அங்கத இலக்கிய நூலை ('?' – பந்த நூல் மூலமும் ...நச்சாதார்க்கினியருரையும்) எழுதியமை
- அருகிவரும் (யாழ்ப்பாணத்) தமிழ்ப் பண்பாட்டின் வேர்களைப் புதிய – புதுமையான – இலக்கிய வடிவத்தில் பதிவுசெய்தமை (நனவிடை தோய்தல்)
- தமிழில் அதிக பக்கங்கள் கொண்ட வாழ்க்கை வரலாற்று நூலை (வரலாற்றில் வாழ்தல்) எழுதியமை. (அதிக பக்கங்கள் ஆக இருப்பதனால் மட்டும் சிறப்புடையதன்று)
- பல்வேறு பாவடிவங்கள் கொண்ட சரம காவியத்தை எழுதியமை (அப்பையா காவியம்)
- ஈழத்தைப் பொறுத்தவரையில் தனித்துவம் மிக்க உரைநடை ஆளுமை கொண்ட மிகச் சிலருள் எஸ். பொ. ஒருவராகின்றமை.
- உள்ளடக்கத்திலும் உருவத்திலும் எடுத்துரைப்பு முறையிலும் தனித்துவ அம்சங்கள் கொண்ட சிறுகதைகள் எழுதியமையூடாக, ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் எஸ். பொ. முக்கிய இடம் பிடித்துள்ளமை.

இனி, இக்கட்டுரையின் நோக்கத்திற்கு வருவோம். எஸ்.பொ. வின் அண்மைக்கால (2007) நாவலாகிய 'மாயினி'யை அறிமுகப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகிறது. 'மாயினி' உள்ளடக்கம் எடுத்துரைப்பு முறை ஆகிய இரு விதங்களிலும் ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் முக்கிய இடம்பெறுகின்றதொன்றாகிறது.

ஈழத்து அரசியல் சார்பான இந்நாவல் ஈழத்தின் இனவாத அரசியலின் வரலாற்றை மிக விஸ்தாரமாகப் பரந்த தளத்தில் பேச முற்படுகிறது. இவ்விதத்தில் பின்வரும் விடயங்களுக்கு முக்கியம் கொடுக்கின்றது :

தொல்திராவிடர் குடியேற்ற உருவாக்கம்
ஔவை...
மஹாநாம தேரர்...
ஞானசம்பந்தரும்/திருநாவுக்கரசரும்...
விமலதர்மசூரியன்...
போர்த்துக்கேயராட்சி...
ஆங்கிலேயரது ஆட்சி...
எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்கா குடும்பம்...
சமஷ்டி பற்றிய சிந்தனை...
டி. எஸ். சேனநாயக்கா...
1956 தேர்தல்...
பண்டா – செல்வா ஒப்பந்தம்...
இனக்கலவரம்...
ஸ்ரீமாவோ...
1970 தேர்தல்...
பிரேமதாஸா...
ஆயுதப் போராட்டங்கள்...
1983...
ஹிட்லர்...
சந்திரிகா பண்டார நாயக்கா...
பிற்குறிப்பு (சொல்லாது விடுபட்டவை)...

இவற்றை நோக்கும்போதுதான், ஈழத்து அரசியல் பற்றி இதுவரை எழுதப்பட்ட (செ. கணேசலிங்கனின்) 'அயலவர்கள்', 'பொய்மையின் நிழலில்', (ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின்) 'ஒரு கோடை விடுமுறை', (தேவகாந்தனின்) 'கனவுச் சிறை' (5 பாகங்கள்), (நஸூறுத்தீனின்) 'நச்சு வளையங்கள்', (செ. யோகநாதனின்) 'நியாயப்படுத்தப்பட்ட கொலைகள்', 'இரவல் தாய்நாடு', (செங்கை ஆழியானின்) 'ஒரு மைய வட்டங்கள்',

(தி. ஞானசேகரனின்) 'குருதிமலை', (சி.வி.யின்) 'இனிப் படமாட்டேன்' முதலானவற்றிலிருந்து 'மாயினி' எவ்வளவு தூரம் வேறுபட்டுள்ளதென்பது புலப்படுகின்றது.

மேற்கூறியவை யாவும் 77 அல்லது 83 இனக்கலவரத்தை முதன்மைப்படுத்தி முன்பின் ஆகச் சுற்றிவர இவற்றுள் விதிவிலக்காகவுள்ள (அருளரின்) லங்கா ராணி, (தேவகாந்தனின்) யுத்தத்தின் முதலாம் அதிகாரம் ஆகியவற்றை இவ்வேளை நினைவுகூர்வதவசியம். 'லங்கா ராணியும்' முற்குறிப்பிட்டவற்றோடு ஒப்பிடும்போது பேரினவாத ஒடுக்குமுறை பற்றி விரிவாகப் பேசுகின்றதொரு படைப்பாக விருப்பது குறிப்பிடத்தக்கது. 77ஆம் ஆண்டுகளின் பேரினவாதச் செயற்பாடுகள், பிற்பட வடபகுதியில் நிகழ்ந்த கொடுமைகள், தனி நாடு பற்றிய கோரிக்கைக்கான காரணங்கள் விஸ்தாரமாக இடம்பெற்று இந்நாவலை வரலாற்று விவரணத் தொகுப்பாக்கி விடுகின்றன!

'யுத்தத்தின் முதலாம் அதிகாரம்' அரசியல் நாவலன்று. மாறாக, 1800 – 1975 வரையான ஈழத்தமிழரது சமூக வரலாற்றை விவரிப்பதுதான். இவ்வழி, அரசியல் வரலாறு பற்றிப் பேசும் 'மாயினி'யுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் இவ்விரு நாவல்களூடே ஈழத்துத் தமிழரது அரசியல், சமூக வரலாறு பற்றி ஓரளவாவது புரிந்து கொள்வதற்கும் பயன்படக் கூடியது என்ற விதத்தில் கவனத்திற்குரியது!

ஆயினும் இறுதியாகக் கூறிய இரு நாவல்களுட்பட இவ்விடயம் பற்றிய ஏனைய அனைத்து நாவல்களிலிருந்தும் 'மாயினி' வேறுபட்டு மிக விரிந்து, பரந்த தளத்திலே செல்கின்றதென்பதனை இவ்விடத்திலே தொடர்ந்தும் விளக்க வேண்டியதவசியமன்று.

அதுமட்டுமன்று. அவ்வாறான அரசியல் வரலாறு இந்நாவலில் வெறும் சம்பவங்களின் தொகுப்பாக மட்டுமன்றி ஆழ்ந்தகன்ற அரசியல் விமர்சன நோக்கு இழையோட வெளிப்படுகின்றதென்பதுதான் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகிறது.

மேற்கூறியவற்றைவிட மற்றொரு முக்கியமான சிறப்பு இந்நாவலிலிடம்பெற்றுள்ள 'பாத்திரங்கள்' பற்றியது. அதாவது, இந்நாவலில் நடமாடும் கணிசமான பாத்திரங்கள் – உதாரணமாக, வாசுதேவ நாணயக்கார, சிறிமாவோ பண்டாரநாயக்கா, எஸ். ஜே. வி, ஜே. ஆர், அநுரா பண்டாரநாயக்கா, பிரேமதாசா, சந்திரிகா, அன்ரன் பாலசிங்கம், மகாத்மாகாந்தி, எம். ஜி. ஆர், ராஜீவ் காந்தி, முதலாம் விமலதர்மசூரியன், ஹிட்லர் முதலானோர் உண்மையானவை. இவ்வேளை இவ்விடயந் தொடர்பாக இந்நாவலாசிரியர் பின்வருமாறு கூறுவது பொருத்தங் கருதி நினைவுகூரத்தக்க தாகின்றது.

"... ஆனால், அரசியல்வாதிகளைக் கதாபாத்திரங்களாக நடமாடவிட்டு ஓர் இலக்கியப் படைப்பு தமிழில் எத்தனிக்கப் படவில்லை. **அரசியல்வாதிகள் அதிகார மையங்களின் தலைவர்கள், அவர்களுடைய வாழ்க்கையையும் செயற்பாடுகளையும் சித்திரித்தலும் ஓரளவுக்கு விமர்சனஞ் செய்தலும் உண்மையில் அதிகார மையத்துடன் மேற்கொள்ளப்படும் போர்**. நிராயுத பாணியாக நின்று, சமர்க்களத்தின் நடுவில் மூர்க்கர்களை எதிர்கொள்வதை நிகர்த்தது. இது தற்கொலைக்குச் சமன் என்பது பொதுவாக எழுத்தாளர்களுக்குப் புரியும். எனவே, தீயனவற்றைப் பார்க்காத துறவிகள் போல நடக்க முற்படுகிறார்கள்..."

மேலே கூறப்பட்டவற்றை நாம் நன்கு உள்வாங்கி இவ் அரசியல் நாவல் பற்றிச் சிந்திக்கும்போது இவ் அரசியல் நாவலின் மற்றொரு பரிமாணம் வெளிப்படுகின்றமை கவனத்திற்குரியதாகிறது.

இவ் உள்ளடக்கச் சிறப்புகள் ஒரு புறமாக, இந் நாவலின் எடுத்துரை முறை பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். ஆயிரமாயிரம் பக்கங்களாக அமைய வேண்டிய இந்நாவல் ஏறத்தாழ 375 பக்கங்களிலே அமைந்துவிட்டமை ஆச்சரியம் தருகின்ற விடயமே. இவ்விடத்திலேதான் 'எஸ். பொ'வின் எழுத்தாண்மை நன்கு துலக்கமுறுகின்றது. மிகப் பொருத்தமான உத்தி ஒன்றினை 'வ. அ. இ'யின் உதவியோடு 'எஸ். பொ' தெரிவு செய்துள்ளார்.

"இறந்த காலத்தின் ஊடாகப் பயணிக்க வைக்கும் அற்புத மருந்து சித்த வைத்திய வாகடத்திலே சொல்லப்பட்டிருப்பதாகக் கொட்டியாரப்பற்றில் வாழ்ந்த முதிய சித்த வைத்தியர் ஒருவர் சொல்லக் கேட்டிருக்கிறேன்"

என்று 'வ. அ. இ' கூறிய தகவலைச் சிக்கெனப் பற்றிக் கொண்ட 'எஸ். பொ' அந்த 'அற்புத மருந்தை' உத்தியாகக் கொண்டே இந்நாவலை நகர்த்துகின்றார். ஆக, உள்ளடக்கத் தினதும், உத்தியினதும் கச்சிதமான பொருத்தப்பாடு பற்றி இவ்வேளை வற்புறுத்துவதவசிமாகிறது.

இவ்வேளை வெல்ஸின் விஞ்ஞானப் புனைகதையான காலக்கப்பலும் (Time Machine) எமது நினைவிற்குள் வருவது தவிர்க்கவியலாததாகி விடுகிறது. அக்கப்பல் ஒரு புறம் காட்டுமிராண்டிகளின் காலத்திற்கும் மறுபுறம் விஞ்ஞான வளர்ச்சி யுகத்திற்கும் வாசகர்களை அழைத்துச் செல்வதாக ஞாபகம். அவ்வாறு 'மாயினி'யும் ஈழத்தின் நீண்ட வெவ்வேறான அரசியல் காலகட்டங்களுக்கு வாசகர்களை அழைத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது. அதேவேளையில் வெல்ஸின் விஞ்ஞானம் தழுவியதாக அமையும் கற்பனையை விட, 'எஸ். பொ'வின் மக்களது பாரம்பரிய நம்பிக்கை தழுவியதாக அமைகின்ற கற்பனை உயர்வானதென்பதிலே ஐயமில்லை.

ஆக, புதிய – புதுமையான – எடுத்துரைப்பு உத்தி முறையும் 'மாயினி' நாவலைக் கவனிக்கப்பட்டதொரு நாவலாக்குகிறது. ஈழத்தின் பெரும்பாலான நாவல்கள் ஒரே பாணியிலான எடுத்துரைப்பு முறையினையே கொண்டிருப்பது நாமறிந்த விடயமே!

சுருங்கக்கூறின்,

"மகா கசப்பான உண்மைகளின் கோப்பாகவும் சமகால இலங்கை அரசியல் பற்றிப் படிக்கப் போகும் வருங்கால மாணாக்கருக்கு வரலாற்று நாவலாகவும் இந்நூல் அணுகப்படுதல் வேண்டும்"

என்று 'எஸ். பொ' கூறுவதற்கு அப்பால், மேற்கூறிய அடிப்படைகளில் விரிவாக இந்நாவலை அணுகுவதும் வாசகரது கடமையாகின்றது எனலாம்!

# ஈழத்தின் உச்சப் படைப்பாளி

– செங்கை ஆழியான்



எஸ்.பொன்னுத்துரை நல்லதொரு படைப்பாளியாகவும் இலக்கிய விமர்சகராகவும் இருக்கிறார். இந்த விதத்தில் தான் பேராசிரியர்கள் கைலாசபதியிலிருந்தும் சிவத்தம்பியிலிருந்தும் வேறுபடுகிறார். எஸ்.பொ. படைப்பாளியாக இருப்பதால் இலக்கிய விமர்சனத்தை அனுபவ ரீதியாகக் கூற முடிகின்றது. தனி விமர்சனத்தில் குற்றம் காணமுடிகின்றது. இவர் ஒரு பட்டதாரி. தலித் படைப்பாளிகளை ஒன்று சேர்த்துத் தலைமைத்துவத்தை பேராசிரியர்கள் அனுபவித்தார்கள். தலித்தான எஸ்.பொன்னுத்துரையால் ஒத்துக்கொள்ள முடிவில்லை. குறை கண்டார். நியாயமான குறை. விலகிக் கொண்டார். யாரியான ஒரு அறிவாளியின் எதிர்ப்பை இதுவரை தலைமைத்துவத்தை வகித்தவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பொன்னுத்துரையை அவர்களால் ஏற்க முடியவில்லை. பேராசிரியர் கைலாசபதியின் Tamil Heroic poetry ஆய்வைத் துணிந்து விமர்சித்து நாம் அறியா உண்மைகளை வெளிப்படுத்தினார். தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தைக் கொச்சைப்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். கிரேக்க கவிதைகளை இரசிப்பவரை திருப்திப்படுத்தும் வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றார்.

1963 அப்போது நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தேன். அது ஒரு அற்புதமானகால கட்டம். எழுத்தாளர் கூட்டத்தால் பல்கலைக்கழகம் நிரம்பி வழிந்தது. செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், செ. கதிர்காமநாதன், அங்கையன், துருவன் க. பரராசசிங்கம், குந்தவை, சிதம்பரபத்தினி, மௌனகுரு, கலா பரமேஸ்வரன், க. நவசோதி என இன்றைய எழுத்துலகச்சிற்பிகள் அன்று நிறைந்திருந்தார்கள். அவர்களுக்கு முதலும் பல்கலைக்கழகம் இலக்கிய ஜாம்பவான்களைக் கொண்டிருந்தது. மு. தளையசிங்கம், சு. ஜெபநேசன், அ. சண்முகதாஸ், அந்தோனிமுத்து, சி. தில்லைநாதன் முதலான படைப்பாளிகளையும் சுவைஞர்களையும் கொண்டிருந்தது. அத்துடன் நவீன இலக்கியத்தில் கரிசனையுடைய விரிவுரையாளர்களாக பேராசிரியர்கள் எஸ். வித்தியானந்தன், கைலாசபதி, சதாசிவம், செல்வநாயகம், தனஞ்செயராஜசிங்கம் ஆகியோரையும் கொண்டிருந்தது. இலக்கிய உலகம் ஆரோக்கியமாகக் காணப்பட்டது.

செங்கை ஆழியானின் வருகை முக்கியமானது. அவர் க. நவசோதியுடன் இணைந்து பல்கலைவெளியீடு என்ற ஒரு வெளியீட்டுத் தாபனத்தை நிறுவினார். அதற்கு செம்பியன் செல்வன் ஆதரவாக இருந்தார். பல்கலைக்கழக எழுத்தாளர்களின் எழுத்துக்களை நூலுருவாக்குகின்ற பணியை இந்த இயக்கம் முன்னெடுத்தது. நான்கு சிறுகதைத் தொகுதிகளை பல்கலைவெளியீடு வெளியிட்டது. கதைப்பூங்கா என்ற தொகுதி செங்கை ஆழியான், க. நவசோதி ஆகியோரின் தொகுப்பாகவும், விண்ணும் மண்ணும் என்ற தொகுதி செம்பியன் செல்வனின் தொகுப்பாகவும் வெளிவந்தன. மூன்றாவது தொகுப்பான காலத்தின் குரல்கள் என்ற சிறுகதைத் தொகுதியை கலா பரமேஸ்வரன் தொகுத்தார். நான்காவது தொகுதியான 'யுகம்' இமையவன் என்பவரால் தொகுக்கப்பட்டது.

மூன்றாவது தொகுதியான காலத்தின் குரல்களுக்கு முன்னுரை தருமாறு அன்றைய இலக்கியச் சிற்பியான எஸ். பொன்னுத்துரையை அணுகினோம். அவர் தக்கதொரு முன்னுரை தந்தார். அது அக்காலத்தில் கைலாசபதிக்கும் அவரது சிஷ்யப்பிள்ளைகளான செ. யோகநாதன், செ. கதிர்காமநாதன் ஆகியோருக்கும் பிடித்தமாக விருக்கவில்லை. எஸ். பொன்னுத்துரை தன் முன்னுரையில், பல்கலைக்கழக எழுத்தாளர்களை வாழ்த்தியிருந்தார். அவரையே காலத்தின் குரல்கள் வெளியீட்டு விழாவுக்கும் அழைத்திருந்தோம். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அவர் பங்குபற்றிய நிகழ்ச்சி அது. நல்லதொரு பேச்சு கிண்டலான பேச்சு.

இரண்டாவது முறையாக அவரைச் சந்தித்த நாள் நினைவு வருகிறது. சுதந்திரன் வார இதழில் நானும் செம்பியன் செல்வனும் 'நிழல்கள்' என்றொரு தொடர் கதையை அத்தியாயம் மாறிமாறி எழுதிவந்தோம். சுதந்திரன் வார இதழின் அவ்வேளை புனைகதைத்துறை உதவி ஆசிரியராக சங்கர் என்பவர் விளங்கினார். அவரைச் சந்திப்பதற்காகக் கொழும்பு சென்றோம். கதையோடு கதையாக அடுத்த தொடர்கதையை எஸ். பொன்னுத்துரையிடம் கேட்கலாம் என்றேன். அவர் எழுதுவாரா என்ற ஐயம் எழுப்பப்பட்டது. எனினும் ஒரு தடவை கேட்பதாக முடிவாயிற்று... மூவரும் அவரை நாடி இளம்பிறை அலுவலகம் சென்றோம். இளம்பிறை என்ற சஞ்சிகை அக்காலத்தில் ஈழத்தில் பெரும் இலக்கியப் புரட்சியை ஏற்படுத்தியது. ரஹ்மான் என்பவர் நடாத்தி வந்தார். எனினும் எஸ்.பொ.வே அதில் முதன்மை வகித்தார். எஸ்.பொன்னுத்துரையை நாம் சந்தித்தபோது அவர் முழு வெறியில் இருந்தார். 'என் நீண்ட ஆயுளின் இரகசியம் குடி தான்' என்று சிரித்தார். வந்த விடயத்தைச் சொல்லி ஒப்புக் கொள்ள வைத்தோம் சுதந்திரனில் அவர் எழுதிய ஒப்பற்ற நாவல் தான் சடங்கு. பலரின் பாராட்டுதலைப் பெற்றது.

எஸ்.பொன்னுத்துரை பல் பரிமாணங்கள் கொண்டவர். சிறுகதை, நாவல், குறுங்கதை, உருவகக் கதை, ஆன்மீகம், நாடகம், கட்டுரைகள், ஆய்வு, பத்தி எழுத்து என அவர் ஆற்றல் நீண்டு செல்லும். தமிழ் நடைக்குப் புதிய வடிவு கொடுத்தவர்.

உரை நடையை வெகு லாவகமாகத் தனக்கேற்ற விதத்தில் கையாளுவார். அவர் எழுத்தில் உரை நடை வளைந்து நெளிந்து கொடுக்கும். எழுத்தை யாகமாக மதித்தவர். எழுத்தைத் தன் ஊழியமாக மதிப்பவர். நிறைய வாசிப்பவர். முற்போக்கு அணியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவர்.

எஸ்.பொன்னுத்துரை நல்லதொரு படைப்பாளியாகவும் இலக்கிய விமர்சகராகவும் இருக்கிறார். இந்த விதத்தில் தான் பேராசிரியர்கள் கைலாசபதியிலிருந்தும் சிவத்தம்பியிலிருந்தும் வேறுபடுகிறார். எஸ்.பொ. படைப்பாளியாக இருப்பதால் இலக்கிய விமர்சனத்தை அனுபவ ரீதியாகக் கூற முடிகின்றது. தனி விமர்சனத்தில் குற்றம் காணமுடிகின்றது. இவர் ஒரு பட்டதாரி. தலித் படைப்பாளிகளை ஒன்று சேர்த்துத் தலைமைத்துவத்தை பேராசிரியர்கள் அனுபவித்தார்கள். தலித்தான எஸ்.பொன்னுத்துரையால் ஒத்துக்கொள்ள முடியவில்லை. குறை கண்டார். நியாயமான குறை. விலகிக் கொண்டார். யாரியான ஒரு அறிவாளியின் எதிர்ப்பை இதுவரை தலைமைத்துவத்தை வகித்தவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பொன்னுத்துரையை அவர்களால் ஏற்க முடியவில்லை. பேராசிரியர் கைலாசபதியின் Tamil Heroic poetry ஆய்வைத் துணிந்து விமர்சித்து நாம் அறியா உண்மைகளை வெளிப்படுத்தினார். தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தைக் கொச்சைப்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றார். கிரேக்க கவிதைகளை இரசிப்பவரை திருப்திப்படுத்தும் வகையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றார்.

தமிழில் வெளிவந்த சுயசரிதை நூல்களில் 2000 பக்கங்களுக்கு 'வரலாற்றில் வாழ்தல்' என்ற நூலை எழுதித் தீர்த்தார். சொல்ல வேண்டியவற்றைத் திட்டித் தீர்த்தார். திட்டு வேண்டியவர்கள் ஒரு பைத்தியக் காரனின் புலம்பல் என்றார்கள். உண்மையில் சிலவற்றை எஸ்.பொ. தவிர்த்திருக்கலாம். அதே போல நனைவிடை தோய்தல் நூல் யாழ்ப்பாணத்தின் ஒரு கால பண்பாட்டுக் கையேடு. ஆனால் ஓரிடத்திலும் உண்மையான வடிவில் எஸ்.பொ. இல்லை. மறைத்துள்ளார். பௌத்தக் கோட்பாடுகளை மாசுபடுத்துவதாகச் சுட்டிக்காட்டியதால் 'வீ' சிறுகதைத் தொகுதி சாகித்ய மண்டலப்பரிசு பெறவில்லை. 'வீ' தொகுதியிலுள்ள 'வீடு' என்ற அற்புதமான கதை அத்தகையது என சோமசுந்தரப் புலவரின் மகன் நடராசா சுட்டிக்காட்டினாராம். இவ்வாறான காரணத்தால் வீரகேசரியில் தொடராக வெளிவந்த 'யோகம்' தொடர் நாவல் இடை நடுவில் நிறுத்தப்பட்டது. ஓர் இலக்கியக் கலகக்காரனாகவும் சண்டைக்காரனாகவும் எஸ்.பொ. விளங்கியுள்ளார்.

என்னதான் சொன்னாலும் எஸ்.பொ.வின் இலக்கிய ஆற்றலைக் குறைத்து மதிப்பதற்கில்லை. ஈழத்திலக்கியத்தின் தலையாக அவர் விளங்குகிறார். அவர் இலக்கியத்தில் செய்யாத பரிசோதனைகளில்லை எனலாம். உருவம், உள்ளடக்கம், உத்தி, நடை என்பவற்றில் அவர் படைப்புகள் முன்னணியில் நிற்கின்றன. அவர் ஒரு யுக இலக்கிய புருஷன். அவரைப் பல தடவை சந்தித்திருக்கிறேன். ஈழத்தின் நினைவுகளோடு இந்தியாவில் மித்ர என்ற வெளியீட்டு நிறுவனத்தை நடாத்தி வருகின்றார். புத்தக வெளியீட்டில் இந்தியாவில் வெற்றி பெற்றிருக்கிறார். எனது ஆயிரமாயிரம் ஆண்டுகள் என்ற குறுநாவல் தொகுதியை வெளியிட்டுள்ளார். அதே போல ஈழத்து எழுத்தாளர்கள் பலரின் நூல்களை வெளியிட்டுள்ளார். ஈழத்து எழுத்தாளர்களின் பெரும் சிறுகதைத் தொகுதி ஒன்றையும், குறுநாவல் தொகுதி ஒன்றையும் வெளியிடவுள்ளார். அவர் பல்லாண்டு வாழ்ந்து இலக்கியப் பணி செய்ய வேண்டுகின்றேன்.

---

## குடை நிழல்

– வட அல்லை. க. சின்னராஜன்

**எங்கள் வீட்டு முற்றத்தில்**
**பூபாளக் கச்சேரி செய்ய**
**காலைக் குயில்களை**
**அழைத்து வந்த**
**சோலைக்காரர் யாரோ...?**

**இவை என்ன...!**
**முற்றம் முழுதும்**
**வைரக் கற்களா...?**
**இந்தப் பூக்களைப்**
**பட்டை தீட்டிப்**
**பரப்பி வைத்தது**
**'ஜாம்' மரச் சிற்பிகளா...?**

**பாடசாலை செல்லும்**
**வெள்ளைச் சீருடைப்**
**பட்டாம் பூச்சிகள்**
**எங்கள் முற்றத்தில்**
**சிறகடிக் கிறார்களே....!**
**"ஜாம்" மரத்தின்**
**இனிய பழங்களுக்காகவா...?**
**இது என்ன...!**
**இயற்கை அன்னை**
**பசுந்தளிர்களால்**
**நெய்து முடித்த**
**குடில் வீடா...?**
**அல்லது**
**குடை நிழலா...?**

**ஓகோ....!**
**இந்த மரத்தின் கீழ்**
**கொஞ்சம் இளைப் பாறினால்**
**கோடை வெயிலும்**
**குளிர்த் தென்றலாய் அல்லவா**
**தாலாட்டிச் செல்கிறதே...!**

# வரலாற்றில் வாழ்தல் :
# இதிகாசன் எஸ்.பொ.

– *பேரா. த. பழமலய்*, தமிழ்நாடு.

**யா**ழ்ப்பாணம் நல்லூரின் மண்ணின் மைந்தன் எஸ்.பொ.
18 –ஆம் நூற்றாண்டில் சின்னத்தம்பி புலவர் என்றால்,
19 – ஆம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் என்றால்,
20 – ஆம் நூற்றாண்டில் எஸ்.பொ.

இவர்கள் குறிப்பிட்ட நூற்றாண்டுகளின் கலை, இலக்கியச் சான்றுகளாய் வாழ்ந்தவர்கள்.

இவர்களுள் எஸ்.பொ.வின் 'எனது போராட்டங்கள்' தாம் அவருடைய 'வரலாற்றில் வாழ்தல்'. இது வெறும் 'சுயபுராணம்' 'என்கதை' அல்ல. உள் முடிச்சுகளின் அவிழ்ப்பு. வெட்டும் கூட. இதனாலேயே இது, 'சுய புராணமாகி இறுதியில் வெறுந்தாளாகும் சுயசரிதை' ஆகி விடவில்லை.

'ஒரு சாமான்னியனின் வாழ்க்கையும் சாட்சியமும், ஆகவும், 'சத்திய அறிக்கை இழையோடும்.' கதை ஆகவும் நூல் உருப்பெற்றிருக்கிறது.

இது எஸ். பொ.வின் 'வாழ்வும் காலமும்' மற்றும் 'பணியும் பாணியும்' பற்றிய அறிமுகமாகவும் உள்ளது.

சண்முகம் பொன்னுத்துரையின் 77–ஆவது வயதில் அவர் எழுத்து ஊழியம் 63 ஆண்டுகள்.

எஸ்.பொ.வின் கலை, இலக்கிய முனைப்புகளும் முயற்சிகளும் தாம் எத்தனை! எத்தனை!

14 வயதிலிருந்தே எழுதத் தொடங்கிய எஸ்.பொ. கவிஞராக அறிமுகமானவர்.

யசோதை, பாலகிருஷ்ணனின் திறந்த வாயில் அந்த நாள் உலகம் யாவையும் பார்த்தாளாம். எஸ்.பொ.வின் வரலாற்றுப் பொக்கிசமும் பெட்டகமும் ஆன இந்த நூலில், இந்த நாள் கலை, இலக்கிய உலகைப் பார்க்கலாம்.

**யா**ழ்ப்பாணம் நல்லூரின் மண்ணின் மைந்தன் எஸ்.பொ.
18 -ஆம் நூற்றாண்டில் சின்னத்தம்பி புலவர் என்றால்,

19 - ஆம் நூற்றாண்டில் ஆறுமுகநாவலர் என்றால்,
20 - ஆம் நூற்றாண்டில் எஸ்.பொ.

இவர்கள் குறிப்பிட்ட நூற்றாண்டுகளின் கலை, இலக்கியச் சான்றுகளாய் வாழ்ந்தவர்கள்.

இவர்களுள் எஸ்.பொ.வின் 'எனது போராட்டங்கள்' தாம் அவருடைய 'வரலாற்றில் வாழ்தல்' இது வெறும் 'சுயபுராணம்' 'என்கதை' அல்ல. உள் முடிச்சுகளின் அவிழ்ப்பு. வெட்டும் கூட. இதனாலேயே இது, 'சுய புராணமாகி இறுதியில் வெறுந்தாளாகும் சுயசரிதை' ஆகி விடவில்லை.

'ஒரு சாமான்னியனின் வாழ்க்கையும் சாட்சியமும், ஆகவும், 'சத்திய அறிக்கை இழையோடும்.' கதை ஆகவும் நூல் உருப்பெற்றிருக்கிறது.

எஸ்.பொவின் இலக்கியத் தடம், படைப்புலகம் குறிப்பிடத் தக்கது. அது, இலங்கை வரலாற்றோடும் ஈழப்போராட்டத்தோடும் தொடர்புடையது. குறைந்தது அரை நூற்றாண்டு வரலாறு. ஓர் அகண்ட படுதாவில் தொடர் ஓவியம். தேடிப் படிக்கும் வாசகர்களுக்குப் புதையல். ஆய்வாளர்களுக்குச் சுரங்கம்.

எஸ்.பொ.தன் எழுத்துகளைக் (பார்க்கர் 51 பேனா எழுதுத்துகள்!) குறித்துத் தான் நம்புவது போல, அவர் எதிர்வரும் நூற்றாண்டுகளிலும் பேசப்படுவார். அந்தக் கருமுகிலில் தொடர்ந்து இடிகளும் மின்னல்களும் இருந்து கொண்டே இருக்கும். அவர் விரும்பப்படும் பெருமழையாக இருப்பார்!

எஸ்.பொ. 'எழுத்தாளன் வாழ்க்கை திறந்த புத்தகமாக இருக்க வேண்டும்' என்பவர். எழுத்தும் வாழ்க்கையும் வேறாக இருக்கக் கூடாது.

எஸ்.பொ. தன் பலங்களைப் போலவே பலவீனங்களையும் அறிக்கை செய்பவர் (பாவ மன்னிப்பு) அழுங்குப் பிடியார், காட்டு மனிதர் ஆட்கொல்லிப் புலி அதன் காயம் அதற்கு!

"உலகில் பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் மேதைகளாகத்தான் பிறக்கின்றன." என்றார் அய்ன்ஸ் டைன். இருக்கலாம். மேதைகளைப் பேதைகளாக்கும் வாதைகள்தாம் எத்தனை! இந்த 'வதையும் வாழ்வுந்தான்' வரலாற்றில் வாழ்தல்.

"உங்களுக்கு நல்ல ஞாபக சக்தி சேர்," என்றாராம் மாணவர் மடத்தின் முத்து.

"நல்ல ஞாபக சக்தி பலவீனமான தீர்ப்பையே தரவல்லது" என்றார் அய்ன்ஸ்டைன்.

எஸ்.பொ. இத்தனை பக்கங்கள் எழுதிப் பழி தீர்த்துக் கொண்டார் என்பது அல்ல. அவர் தனிப்பட்ட விரோதங்களைப் பாராட்டாதவர். கருத்து வேறுபாடு உடையவர்களோடும் பழகுவார்.

எங்கிருந்தோ எப்படியோ தொடங்கும் இந்த வரலாறு ஒரு தீரா நதியின் சுழிப்பு. அது, அச்சுறுத்துகிறது. எச்சரிக்கை செய்கிறது.

'தன் வரலாற்றுப் பயணம் முள்முடி தரித்த சிலுவை சுமந்த இரட்சண்ய யாத்திரிகம்' என்கிறார் எஸ்.பொ. 'தமிழ் ஊழியம் என்கிற ஒட்டகத்திலே, பாலைகள் பல கடந்தும் அவர் தேடல் தொடர்கிறது.?'

முள்முடி... சிலுவை... பாலைகள்... எஸ்.பொ.வின் ஓட்டம் 'தடை ஓட்டம்' அவர் பல 'தடைகளைக் கடந்துள்ளார். இங்கு தரம் பற்றியது மதிப்பீடு அல்ல பிரச்சினை. அவர் எழுத்தின் மீது செலுத்திய ஈடுபாடு

சுயநலத்திற்கும் அப்பாலானது. சமூக நிகழ்வுகளுடன் சம்பந்தப்பட்டது என்பது ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்பதும் அவர் சாதனை! இதுதான் அவர் இயக்கம். இதுதான் அவரால் எற்பட்ட 'புதிய ஏற்பாடு'

இந்த இரு தொகுதிகளின் ஆயிரக்கணக்கான பக்கங்களில் புகுந்து புறப்பட்டு வெளியே வருவது நூற்றாண்டுகளில் வாழ்வது. இது அறையில் குளிப்பது அல்ல, ஆழியில் மூழ்குவது.

புடம்போட்டு எடுக்கப்பட்ட 'ஞான சூரணம்' இது. இது ஒரு போர்க்களத்தின் வரைபடம். இந்தச் சதுரங்கத்திலே அவரவர், அவரவர் வெற்றிக்காகக் காய் நகர்த்தி இருக்கிறார்கள். விளையாடியவர்கள் வென்றார்களா? தோற்றார்களா? இப்படிப் பார்க்க முடியவில்லை. இது சமூக நிகழ்வு. ஒரு வரலாற்று நகர்வு. இதில் தனிப்பட்ட பகைமை பாராட்டுதல் என்பதற்கு எல்லாம் இடம் இல்லாமல் போய் எதையும் பகிர்ந்து கொள்வது என்பதே எஞ்சுகிறது.

வரலாற்றை மக்கள்தாம் நகர்த்துகிறார்கள் – என்கிற புரிதலோடு மீளவும் எடுத்துப் புரட்ட வேண்டிய நூல் இது.

இரு தொகுதிகள். நான்கு பாகங்கள். DTP-இல் மூவாயிரம் பக்கங்கள். பிறகு சுருக்கப்பட்டு 968+984 பக்கங்கள். இது சொல்லச் சொல்ல எழுதப்பட்டது. ஏறக் குறைய ஐந்து ஆண்டு வேலை. பதிவு. ஆவணப் பதிவு.

"என் சொந்த அனுபவங்களை நான் எழுதுகிறேன். மற்றவர்களுடைய அனுபவங்கள் வேறாக இருக்கலாம் என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை."

அவசியம் கருதியும் அவசரம் வேண்டியும் 1992–இல் 'நனவிடை தோய்தல்' வெளியானது. பிறகு, ஒரு மாமங்கத்திற்குப் பிறகு 2003–இல் 'வரலாற்றில் வாழ்தல்'

எஸ்.பொவின் அவதாரம், மூர்த்தம் ஒரு யானையைப் போல, யானை மலையைப் போலப் பெருமிதம் தளும்புவது. அவருடைய வாழ்க்கை வரலாறும் அவர்தம் படைப்புகளும் அணையாத புதுமைக்கும் தணியாக வியப்புக்கும் உரியனவாக நிலைத்து நிற்பன.

"இனி என்ற வாலைப் பிடியுங்கோ!"

அன்று ஒரு 'தேங்காயடிப் போரில்'வென்ற பிறகு, தாத்தா நடந்த வெற்றி நடையை இன்று பேரன் நடக்கிறார்!

***

இக்கட்டுரை, 15.06.05இல் 23 பக்கங்களுக்கு எழுதப்பட்டது. 02.06.09இல் நான்கு பக்கங்களாகச் சுருக்கித் தரப்படுகிறது.

***

வரலாற்றில் வாழ்தல், எஸ்.பொ. மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ், சென்னை–24, முதற் பதிப்பு டிசம்பர் 2003– தொகுதி ஒன்று: பக்கங்கள் 968 டெமி, ரூ 450. தொகுதி இரண்டு : பக்கங்கள் 984 டெமி, ரூ 450.

---

# தட்டிக் கொடுங்களய்யா

– அல்வாயூர். சி.சிவநேசன்

தயவோடு ஒன்றுரைப்பேன் கேளீரோ
தமிழிலக்கிய படைப்பாளர் சிலரிங்கு
செயலாற்றும் பண்பற்ற நடைமுறையை
சிலாகித்துச் சொல்லுகிறேன் கவிதை வழி

படைப்புவழி இலக்கியம் செப்புகின்ற
பெருமைமிகு மூத்தவராம் படைப்பாளரிவர்!
கிடைக்கும் மேடைதனில் உரைப்பவையோ
அவர் புகழை அவர் பாடும் பல்லவிகளாகுதே

இளமைப் புலமைகளை மதித்தேற்கும்
இங்கிதம் இல்லாத மெத்தனங்களால்
களங்காணும் இடமெல்லாம் வளருகின்ற
இளையோரைக் காழ்ப்புரைத்து களிகொள்கிறாரே

இளையோரின் ஆக்கமதை ஆராய்ந்து
இன்னொருவர் ஆக்கத்தின் தழுவலென்று
விளையும் பயிரினைக் கிள்ளியெறியும்
விசமத்தன விமர்சன வாதமிடுவார்

பொன்னாடை விருதுகளை தன்னுடைமையாக்கி
பட்டங்களெனும் பல்லக்கில் பவனிகாண
பண்ணுவார் பரப்புரையும்! பின் கதவால்,
பேறளிப்பார் பாதமதில் வீழ்தலுற்று

இலக்கியத்துள் புதியதோர் சமுதாயம்
உருவாகிச் சிறப்பது கண்டிவர்
கலக்கம் கொண்டிங்கு ஏங்கும்
காரணந்தான் புரியவில்லை எமக்கு

மேலுயர்ந்து நிற்கும் பெருமையுள்ளோர்
மனதுள்ளே கர்வமதை நிறைத்திங்கு
காலினால் உதைக்கிறாரே கரங்கூப்பும்
இலக்கியத்துக் கடைக்குட்டித் தலைமுறையை

மூத்துயர்ந்த படைப்பாளர் இவர்களென்று
முன்னுரை மகத்துவம் நாமுமளிக்க
சாத்தானின் வேதமல்லோ ஓதுகின்றார்
சரிநிகர் எவருளரோ தமக்கென்றே

சிரமேறும் மகுடத்தால் கனமேறி
சின்னத்தன புத்திக்குள் சங்கமித்து
தரமிழந்து போகாதீர் மதி ஜீவிகளே
தட்டிக் கொடுங்களய்யா எம்முதுகில்

இலக்கியத் தேரோட ஒன்றிணைவோம்
இத்தேரில் இளையோரும் அமர்ந்துவர
வழிகாட்டி வருவீரே மூத்தோரே
விசச் செடிகளென தளைக்காதீர் எம் பாதையிலே



# எல்லைகளைக் கடந்த எழுத்து

– காவேரி, டெல்லி

**சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்றவை வழக்கமான இலக்கிய மரபுகளுடன் உருவாகுவது சகஜம். ஆனால், ஒரு சில எழுத்தாளர்களே அந்த மரபுகளைத் தகர்த்து, வழக்கமான எல்லைகளுக்கும் அப்பால் வியாபிக்கும் வெட்ட வெளியில் கால் வைக்கத் துணிந்து முன்வருகிறார்கள். பிறகு, இலக்கிய நடமாட்டமில்லாத அந்த இடத்தைக் கலைத்திறனுடன் ‘கதை’ போலப் படைக்கிறார்கள். இத்தகைய அசாதாரண இலக்கியத் தொடுவானம் ‘‘எஸ். பொ’’ என்று அன்புடன் அழைக்கப்படும் திரு. எஸ். பொன்னுத்துரைக்கு வாய்த்திருப்பது தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை.**

சிறுகதை, நாவல், நாடகம், கவிதை என்றவை வழக்கமான இலக்கிய மரபுகளுடன் உருவாகுவது சகஜம். ஆனால், ஒரு சில எழுத்தாளர்களே அந்த மரபுகளைத் தகர்த்து, வழக்கமான எல்லைகளுக்கும் அப்பால் வியாபிக்கும் வெட்ட வெளியில் கால் வைக்கத் துணிந்து முன்வருகிறார்கள். பிறகு, இலக்கிய நடமாட்டமில்லாத அந்த இடத்தைக் கலைத்திறனுடன் ‘கதை’ போலப் படைக்கிறார்கள். இத்தகைய அசாதாரண இலக்கியத் தொடுவானம் ‘‘எஸ். பொ’’ என்று அன்புடன் அழைக்கப்படும் திரு. எஸ். பொன்னுத்துரைக்கு வாய்த்திருப்பது தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை. இந்திரா பார்த்தசாரதி அவர்கள், **எஸ். பொ. கதைகள்** தொகுதியில் (மித்ரா வெளியீடு, 2005), ‘‘பாயிரம்’’ என்ற தலைப்பில் எஸ். பொ. வைப் பற்றி எழுதியதை இங்கே நினைவு கூருகின்றேன்: ‘‘எழுதத் தொடங்கிய காலத்தி லிருந்தே இவர் எழுத்துப் போராளி. எழுத்தில் தீட்டு, தூய்மை என்று எதுவுமில்லை. சிந்தனையில் நேர்மையும், சொல்லில் கபடமின்மையு மிருந்தால் போதும். அதுவே உன்னத எழுத்து என்று போராடியவர்.’’ முற்றிலும் உண்மை!

‘‘சிறுகதை மன்னன்’’ என்று சொல்லப்படும் ‘எஸ். பொ வை’ எல்லோருக்கும் தெரியும். புனைகதையில் நாம் வழக்கமாக எதிர்பார்க்கும் அம்சங்களைத் தனக்கே உரித்தான தமிழ் நடையில் ஏராளமாக அளித்திருக்கிறார்கள். இருப்பினும், இந்த மரபுகளிலிருந்து சற்றே விலகி, வித்தியாசமான பரிமாணங்கள் கொண்ட, என்னைக் கவர்ந்த சில படைப்புக்களைப் பற்றித்தான் இங்கு சொல்ல விரும்புகிறேன்.

‘‘மித்தி’’ பாகம் ஒன்று மற்றும் இரண்டு மிக நேர்த்தியான படைப்பு. ஆங்கில இலக்கியம் மற்றும் மேற்கத்திய இலக்கியக் கோட்பாட்டின்படி இதை ஒரு விரிவான ELEGY என்று வர்ணிக்கலாம். மிக உருக்கமாக நம்மைக் கரைந்து படிக்க வைக்கும் ELEGY. ‘ஒரு அபூர்வ தந்தை – தனயனின் புனிதமான உறவை எழுத்தில் கொச்சைப்படுத்தக்கூடாது’ என்ற தயக்கம் ஒரு பக்கம்; அதே சமயம், இலங்கைத் தமிழ்ப் போரில் வீர மரணமடைந்த பிள்ளை மித்ராவை எழுத்தினால் அமரனாக்க வேண்டுமென வேட்கை. இந்த மனப் போராட்டத்தின் முரண்பாடுகளில் மிக இயற்கையாக ஜனித்த ‘‘மித்தி’’ நம்மைப் பலவகையில் உலுக்கி எழுப்புகிறது. ‘‘மித்தி’’ என்ற பெயர் அழிவற்றது. அவரைப் ‘பார்த்தன்’ என்று செல்லமாகக் கூப்பிடும் தந்தையை தான் ‘அர்ஜுனன்’ என்று திருத்துவது போல, தந்தையும் பிடிவாதமாக ‘மித்தி’ என்ற பெயரைத் தன் இதயத்தில் நிலைத்துப் போர்த்துகிறார். எஸ்.பொ. வின் வரிகள்: ‘‘மித்ர என்கிற உன் பெயரை நீயாக அழித்தெழுதினாய். என் சித்தப்படி அல்ல, உன் சித்தப்படி வாழ்கிறாய்... ஆனாலும், எனக்கு – எனக்கு மட்டும் என்றாலும், நீ மித்திதான். நீ விரும்பாவிட்டாலும் அப்படித்தான். நீதான் என் நெஞ்சில் வாழ வேண்டும் இதில் மட்டும் திருத்தம் போடாதே.’’

‘‘அப்பா, இது சாகும்வரை எழுதிக் கொண்டிருப்பதற் காகவே படைக்கப்பட்ட கை’’ என்று வாஞ்சையுடன் தந்தையின் வலது கையைத் தடவி விட்ட மித்ர இன்று அவர் நெஞ்சிலும், எழுத்திலும் வாழ்கிறார்.

‘‘முள்’’ என்ற படைப்பில் (இதை ‘கதை’ என்று குறிப்பிடக் கூசுகிறது) ஒரு காப்பியத்தின் கம்பீரம் மற்றும் வித்தியாசமான குரலைக் கண்டு கொள்ளலாம். இளம் இயேசுவை வர்ணிக்க ஒரு இலக்கியத் துணிச்சலும், கவிதை நோக்கும் தேவை. எஸ்.பொ. மிகுந்த அழகுடன் வர்ணிக்கிறார். கலிலேயாக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒருவன் இயேசுவின் தோற்றத்தில், அவர் குரலில் இழைந்த காந்தத்தில் லயித்த காட்சி – ‘‘குரல் வந்த திக்கிற் சென்னி திரும்பிப் பார்த்தான். தசை ஒறுப்பில் மெலிந்த உருவம்; கடற் காற்றில் அசைந்து தோள்களிற் புரளும் கேசம்; எளிமையின் சமாசமான குறுந்தாடி; அருளை

உமிழும் அக்கண்களில், மனித மனங்களைத் தன்வயப்படுத்துங் காந்தப் பொறிகள்; தேவ வாக்குகளை உச்சரித்து கவர்ச்சி பெற்ற உதடுகள். அக்கணமே அவரால் அவன் வசீகரப்பட்டான். அன்று அங்கேயே அவரின் சீடராகப் பின் தொடர்ந்த பேதுரு இன்று வரை....''

இப்படி வரிகள் நம்மை இட்டுச் செல்கின்றன. படித்தபின் புத்தகத்தை மேஜையின் மீது வைத்தேன். கண்களை மூடியபடி இதில் வரும் நிகழ்ச்சிகளைப் படம்போலப் பார்த்தேன்.

'எழுத்து' அதை செயலாக்கும் ஒருவனே 'எழுத்தாளன்'. ''தேர்'' என்ற சுவாரஸ்யமான திருப்பங்கள் கொண்ட கதையில் ஒரு எழுத்தாளர் ''சித்தன்'' என்ற புனைபெயரில் ஒளிந்து ஒண்டிக் கொள்கிறார். இது ஒரு வகையில் அவருக்கு ஒரு பாதுகாப்புப் போல அமைந்து விடுகிறது. ஒரு நல்ல, உன்னதமான வாசகனைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைக்கிறது. அப்பேர்ப்பட்ட உண்மையான வாசகனைத்தான் எந்த ஒரு எழுத்தாளரும் தேடுகிறார். விருந்துடன் கௌரவிக்கப்பட்ட எழுத்தாளர் சக்ரதாரி 'சித்தனைப்' பற்றி விசாரிக்கிறார். சந்திக்க முடியவில்லையே என்று ஏமாற்றமடைகிறார். அப்பொழுது அங்கே நிற்கும் சித்தன் 'நீங்கள் தேடும் சித்தன் நான்தான். கண்டி ஹோட்டல் ஒன்றில் கணக்குப்பிள்ளை வேலை பார்த்த நான், சென்ற மாதத் தொடக்கந்தான் இந்த ஹோட்டலுக்கு மாறுதலாகி வந்தேன்' என்று கத்த வேண்டுமென்ற உணர்ச்சி என்னுள் மின்னல் சொடுக்கியது. அந்த மின் ஒளியில் மீண்டும் அவனையே தரிசிக்கின்றேன்.

அதற்குப்பின் அங்கே அவரைத் தேடிக்கொண்டு வந்த வாசகன், அவனை இனங்கண்ட நிறைவு. உவகையூட்டும் தருணம். 'Jack and the Beanstalk' கதையை நினைவு கூர்கிறார். 'ஓரிரவிலேயே அவரை விதை வான முகட்டைத் தொட்டு வளர்வதை ஏதோ ஒரு கதையில் வாசித்ததாக ஞாபகம். அதிலும் பார்க்க அவசர வேகத்தில் வளர்ந்த உணர்ச்சியொன்று என்னை அவருடன் பிணைக்கிறது.''

எஸ்.பொ வைப் புதுமைப் பித்தனுடன் ஒப்பிடும் தமது மதிப்பீட்டில் முனைவர் சாலினி இளந்திரையன் எழுதுகிறார். தமிழ் இலக்கியத்திற்கு ''ஒரு கனிவான செறிவையும் மெருகையும் தந்தவர் எஸ்.பொ. என்று சொல்ல வேண்டும்'' என்கிறார். 'கனிவு' எஸ். பொ. வின் நடுப்பெயர் என்றாலும் மிகையாகாது. அது அனுபவப் பரப்புடன் விரியும் அவர் எழுத்துக்குக் கிட்டுவது சுலபமில்லை. ஏனென்றால், இன வெறியர்கள் நடுவே நேரும் ஆபாசங்கள், அபத்தங்களுக்கும் அவர் எழுத்தில் இடமுண்டு.

எஸ். பொ. பொறுத்தவரை எழுத்தாளரும் மனிதரும் ஒருங்கிணைந்து இலக்கியப் பணிகளில் இயங்கும் ஒருவர். இந்தக் குணத்தை 'ஞானி'யின் துணையுடன் ஒரே ஒரு வரியில் புரிந்து கொள்ளலாம். எஸ். பொ.வைப் பற்றித் தமது 'அணிந்துரையில்' **(எஸ். பொ. கதைகள்**, 2005) எழுதுகிறார் ஞானி : 'சர்ச்சைகளுக்கு முகங்கொடுத்து எழுத்து சமரனாய் வாழ்ந்தார்'.

# ஆற்றல் ஆளுமை மிக்க படைப்பாளி எஸ்.பொ.

– ச. முருகானந்தன்

ஆரம்ப காலத்திலிருந்தே எஸ்.பொ.வின் படைப்புகள் அதிக கவனயீர்ப்பைப் பெற்றதுடன் இலக்கிய உலகில் சலசலப்பையும் ஏற்படுத்தியது. எஸ்.பொ. ஒரு சர்ச்சைக்குரிய எழுத்தாளராக சிலரால் நோக்கப்பட்டார். துணிச்சலுடன், அதே நேரம் ஆபாசமின்றி பாலியல் விவகாரங்களை தனது படைப்புகளில் கையாண்டதன் மூலம் அதிகம் விமர்சிக்கப்பட்டார். இவ்வாறான படைப்புகளைப் படித்து முகம் சுழித்தவர்களும், காட்டமாக விமர்சித்தவர்களும் பலர்.

எஸ்.பொ.வின் எழுத்து நடை தனித்துவமானது. தனக்கேயுரிய ஒரு பாணியைப் பின்பற்றினார். இவ் அழகான எளிய நடை வசீகரமாக இருந்ததுடன், அவருக்கான வாசகர் வட்டத்தைப் பெருக்கியது. மிக அதிகமாக – அதிகமான துறைகளில் எழுதியுள்ள இவருடைய ஆளுமையை பல விமர்சகர்களும் இனம் கண்டு தமது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளமை சிறப்பம்சம்.

இலக்கிய உலகில் எதையும் பட்டென்று வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் துணிவு இவரிடம் இருந்தது. நண்பர், தன் அணியைச் சேர்ந்தவர், பிற அணியைச் சேர்ந்தவர் என்ற பாகுபாடின்றி தன் மனதில் தோன்றுவதை விமர்சிப்பவர். இதனால் இவருக்கு எதிராகக் குரல் கொடுப்போரும் உளர். இவரது கருத்துக்கள் சில சமயங்களில் தவறாக இருப்பினும், பல சமயங்களில் சரியாக இருப்பதையும் மறுக்க முடியாது. பல்துறை ஆளுமை மிக்க இவரது எழுத்துக்கள் புலம்பெயர் மக்களாலும், பிறநாட்டு தமிழ் வாசகர்களாலும் விரும்பிப் படிக்கப்படுகின்றன. எஸ்.பொ. எப்போதும் படைப்பில் புதுமையை புகுத்த விரும்பியவர். எனினும் புதுமை என்ற பெயரில் 'இஸங்களு'க்குக் கட்டுப்பட்டு எழுதுபவரும் அல்லர். விமர்சகர்களுக்காக அன்றி தனக்காகவும் வாசகர்களுக்காகவும் எழுதும் இவர்; தனக்கு எதிராக விமர்சனங்களைக் கண்டு பதுங்குபவருமல்லர்.

புலம் பெயர் எழுத்தாளர்களில் அதிக முத்திரை பதித்தவர்களாக எஸ்.பொ.வையும், அ. முத்துலிங்கத்தையும் குறிப்பிடலாம். ஒரு படைப்பாளியாக மாத்திரமின்றி பதிப்பாளராகவும் இலக்கியப் பணி செய்யும் இவரைப் பாராட்டுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

# எஸ். பொ. வுடன் சில தினங்கள்

– கலாநிதி முல்லைமணி



ஆண்டு சரியாக நினைவில்லை; அறுபதுகளின் ஆரம்ப காலமாக இருக்கலாம். யாழ்ப்பாணத்தில் 'தமிழ் முரசு' என்னும் சஞ்சிகை வெளிவந்து கொண்டிருந்தது. நவாலியூர் நடேசன் சஞ்சிகையின் ஆசிரியர். ஆசிரியர் குழுவில் எனது எழுத்தாள நண்பர் அப்பச்சி மகாலிங்கமும் இருந்தார். அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அச்சஞ்சிகைக்கு வன்னி நாட்டு வரலாறு தொடர்பாகக் கட்டுரைகள் எழுதினேன். 'வன்னிநாட்டரசி' என்பது ஒரு கட்டுரை. ஏனைய கட்டுரைகளின் தலைப்பை மறந்துவிட்டேன். ஈழகேசரி சிறுவர் மலருக்கும் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். எனது கதையொன்று பத்திரிகையில் வெளிவர வேண்டும் என்று ஆசை. ஈழகேசரிக்கு ஒரு கதையனுப்பினேன். கதை கிடைத்தது குறித்துப் பதில் வந்தது அவ்வளவுதான்; கதை பிரசுரமாகவே இல்லை. அல்லி என்னும் சஞ்சிகையில் 'கருவண்டும் கலைமானும்' என்னும் இலக்கியக் கட்டுரை பிரசுரமாகியது.

ஒரு நாள் அப்பச்சி மகாலிங்கம் கூறினார் தமிழ் முரசில் பிரசுரிப்பதற்கெனப் பிரபல எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை கதையொன்று அனுப்பியிருக்கிறார். நல்ல கதை; ஆனால் அதைப்பிரசுரிக்க முடியவில்லை என்றார். ஏன் என்று கேட்டேன். அவர் மிகவும் கடுமையான நிபந்தனை போட்டிருக்கிறார்: கதையில் எந்த வித மாற்றமும் இன்றிப் பிரசுரிக்க வேண்டுமாம். 'அதிலென்ன பிரசுரிப்பதுதானே' என்றேன். "கதையில் பச்சையான செக்ஸ் வசனங்கள் இடம் பெறுகின்றன. அதுதான் யோசிக்கிறோம்" என்றார். கதை பிரசுரிக்கப்பட்டது அதில் ஒரு இடத்தில்............... என சில சொற்கள் விடுபட்டிருந்தன. அதற்காக அவர் கண்டித்துக் கடிதம் எழுதி இருந்தாராம்.

1964இல் எனது பண்டாரவன்னியன் வரலாற்று நாடகக் கையெழுத்துப் பிரதிக்கு இலங்கைக் கலைக் கழகத்தின் இரண்டாவது பரிசு கிடைத்தது. முதற்பரிசு முத்து சிவஞானம் எழுதிய சேரன் சமாதிக்கு. மூன்றாம் பரிசு. எஸ்.பொன்னுத்துரை எழுதிய வலை என்னும் நாடகத்திற்குக் கிடைத்தது. பரிசளிப்பு யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. பிரபல எழுத்தாளர் ஒருவரை எழுத்துலகில் அநாமதேயமாக இருந்த நான் முந்திவிட்டேன் என்ற புளகாங்கிதம் எனக்கு. முதற்பரிசு பெற்ற முத்து சிவஞானம் கூட அவ்வளவு பிரபலமான எழுத்தாளர் அல்ல. 3ஆம் பரிசில் அவருக்குத் திருப்தி இல்லாமல் இருந்திருக்க வேண்டும். வெகு அலட்சியமாகவே பரிசைப் பெற்றதை அவதானிக்க முடிந்தது. வலை பின்னர் நூலுருப் பெற்றது. சாம்ராச்சியங்களை உருவாக்கவும் நிர்மூலமாக்கவும் வல்லவரான சாணக்கியரின் கதை இது. இதனைப் பிற்காலத்தில் கோப்பாய் ஆசிரியகலாசாலை மாணவர்களைக் கொண்டு நடிப்பித்து மேடையேற்றினேன். சாணக்கியனாக நடித்த ஆசிரியப் பயிலுநர் செல்லத்துரையின் நடிப்பு இன்றும் என் மனதைவிட்டகலவில்லை.

எஸ்.பொவைப் பரிசளிப்பு விழாவில் கண்டேன். அவருடன் உரையாடும் வாய்ப்புக் கிட்டவில்லை. கலைக்கழகப் பரிசு பெற்றதற்காக எஸ்.பொவுக்குப் பாராட்டு விழா நடைபெற்றதாக அறிகிறேன்.

எழுபதுகளில் மட்டக்களப்பில் 'மலர்' சஞ்சிகை வெளியாகியது. அதன் ஆசிரியர் அப்போது மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் பணியாற்றிவரும் அன்புமணி இரா. நாகலிங்கம் அவர்கள். இவரே மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளராகவும் இருந்தார். மலர் சஞ்சிகையில் 1970இல் நூலுருப்பெற்ற பண்டாரவன்னியன் நாடகத்திற்கு இலவச விளம்பரம் கிடைத்தது. எழுத்தாளரின் ஒளிப்படங்களுடன் அவர்களது ஆக்கங்கள் மலரில் வெளியாகின. எனது 'வீட்டில் நடந்தது' சிறு கதையும் மலரில் வெளிவந்திருந்தது. கோஷ்டி மனப்பான்மை இன்றி நடு நிலையில் மலர் இயங்கியது. பன்னிரண்டு இதழ்களுடன் தனது ஆயுளை முடித்துக் கொண்ட இச் சஞ்சிகை காத்திரமான இலக்கியப் பணியாற்றியுள்ளதை மறுக்க முடியாது. மலரில் எஸ்.பொவின் சிறுகதையொன்று வெளியாகியிருந்தது. அதற்கு ஒரு தலைப்பை இட்டு அதனைப் புள்ளடியிட்டபின்னர் நீண்டதொரு தலைப்பைத் தந்திருந்தார் 'இருபது வருஷங்களும் ஒரு வேலியும் காதலும் இன்னும் சிலவும் பலவும்' என்பது தான் தலைப்பு. மிகச்சிறிய தலைப்பில் கதையெழுதும் எஸ்.பொ. இப்படியொரு தலைப்பை ஏன் இட்டார் என்றுதான் விளங்கவில்லை. வீ, தீ, அணி, தேர், மறு – இப்படித்தான் தலைப்பிடுவது வழக்கம். இளையதலைமுறை எழுத்தாளர் சிலர் நீண்ட தலைப்பிடுவதைக் கிண்டல் செய்வதற்காகத்தான் இப்படித் தலைப்பிட்டார் எனப் பின்னர் அறிந்தேன். அந்தக் கதையைப் பலமுறை படித்து இரசித்திருக்கிறேன். அற்புதமான கதை. கதாநாயகன் வீட்டுக் கிணற்றிற்கு வேலிப் பொட்டினூடாகக் கதாநாயகியும் வீட்டாரும் தண்ணீர் அள்ள வருவது வழக்கம். காதல் அரும்பியது கடிதங்கள் பரிமாறப்பட்டன. கமுகில் சொருகிவிட்ட காதல் கடிதத்தை காக்கை எடுத்து வீசிவிட்டதால் கதாநாயகனின் தந்தையின் கையில் அது சிக்கிவிடுகின்றது. அப்பம் சுட்டு விற்றுப் பிழைக்கும் குடும்பத்திலுள்ள அவளை மருமகளாக ஏற்கத் தந்தையார் விரும்பவில்லை. மகனை எச்சரித்ததுடன் அவசரம் அவசரமாக வேறு பெண் பேசித் திருமணத்தையும் நிறைவேற்றி விட்டார் தந்தை. வேலிப் பொட்டு அடைபடுகின்றது. பிடிக்க வேண்டியவரைப் பிடித்து மகனுக்கு உத்தியோகம்பெற்றுக் கும்பத்தையே கொழும்பிற்கு அனுப்பி விடுகிறார் தந்தை.

காதலியும் வேறு திருமணம் செய்து நான்கு ஆண் குழந்தைகளைப் பெற்று வசதியாக வாழ்கிறாள். கதாநாயகனுக்கு எல்லாம் பெட்டைக் குஞ்சுகள் தான். இருபது ஆண்டுகளின் பின்னர் ஓய்வு பெற்ற கதாநாயகன் குடும்பத்துடன் சொந்த ஊருக்கு வருகிறார். பழைய காதலியின் உதவி ஒத்தாசையுடன் வீடு துப்பரவாக்கப்படுகின்றது. 'இன்றைக்கும் சமைக்க வேண்டாம்' என்று கூறி வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு வந்து கொடுக்கிறாள் அவள். கதாநாயகன் ஈசிச் செயரில் இருந்து கோழித் தூக்கத்தை வாலாயம் பண்ணிக் கொண்டிருக்கும் போது பழைய காதலி இராசவள்ளிக் கிழங்கு அவித்து பிள்ளைகளுக்குக் கொடுப்பதற்குக் கொண்டு வருகிறாள். கொய்யாவுக்கும் கொடுங்கோ என்று அவள் கூறிய போது அவளின் குரல் இருபது ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது போலவே எதுவித உடைசலும் இல்லாமல் இருப்பதை அவர் இரசிக்கிறார். கறையான் ஏறி இற்றுப் போன இடைவேலி திரும்பவும் அடைக்கப்படுகின்றது. வேலியில் ஒரு பொட்டு விட்டு அடைக்கும் படி அவர் கூறுகிறார். 'பிள்ளையள் வந்து போகட்டும்' – இதுதான் கதை எஸ்.பொவின் ஆற்றலுள்ள மொழிநடை அளவான யாழ்ப்பாணப் பேச்சு வழக்கு உணர்ச்சி பாவங்களை வார்த்தைகளால் மடக்கிப் பிடிக்கும் பாணி எல்லாமே எனக்குப் பிடித்து விட்டது.

1972ஆம் ஆண்டு மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் நியமனம் கிடைத்தது. எஸ்.பொவும் மட்டக்களப்பிலேயே திருமணம் செய்து அங்குதான் வாழ்கிறார் என்று அறிந்தேன். எனினும் அவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைக்கவில்லை. கலாசாலையில் ஐந்து நாள் தமிழ் விழா நடத்த ஏற்பாடு. தமிழ் விரிவுரையாளர் என்ற முறையில் விழா ஒழுங்கில் பெரும் பகுதி என்னிடம் விடப்பட்டது. சங்ககால இலக்கியம் தொடக்கம் நவீன இலக்கியம் வரை சொற்பொழிவுகள் இடம்பெறுமாறு நிகழ்ச்சி நிரலைத் தயாரித் திருந்தேன். சங்க இலக்கியம் பற்றி புலவர் மணி பெரியதம்பிப் பிள்ளை உரை நிகழ்த்தினார். பக்தி இலக்கியம் பற்றி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி பேச்சு. கூத்துக் கலைபற்றிப் பேராசிரியர் வித்தியானந்தன், மௌனகுரு போன்றோரின் பேச்சு.... இப்படிக் கலாநிதி சண்முகதாஸ், கலாநிதி இந்திரபாலா எவ்.எக்ஸ்.ஸி. நடராசா போன்றோர் வெவ்வேறு தலைப்புக்களில் உரையாற்றினர். புனைகதை இலக்கியம் பற்றி அன்புமணி இரா. நாகலிங்கம் பேசினார். எஸ்.பொ. கண்டனக்காரர் இதனால் இவரை விழா நிகழ்ச்சியில் சேர்க்க விழாக் குழு இசையவில்லை. என்றாலும் பார்வையாளராக எஸ்.பொ. வந்திருந்தார். தனிப்பட்ட முறையில் உரையாடும் போது எல்லா மட்டங்களிலுமுள்ள அறிஞர்கள் பங்கு பற்ற ஏற்பாடு செய்ததைப் பாராட்டினார். அப்பொழுதுதான் எஸ்.பொ.வையும் போட்டிருக்கலாம் என்று நினைத்தேன்.


பின்னர் மட்டக்களப்பு தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்றது. இதில் சில அமர்வுகள் ஆசிரிய கலாசாலையிலும் இடம்பெற்றன. 'கிழக்கிலங்கையில் புனைகதை இலக்கியம்' என்னும் கட்டுரையை எஸ்.பொ. படித்தார். குறிப்புரை கூற எவரும் முன்வரவில்லை. அசட்டுத் துணிச்சலுடன் நான் எழுந்தேன். நிகழ்வுக்குத் தலைமை வகித்த பேராசிரியர் சு. வித்தியானந்தன் 'முல்லைமணி சரியாக வாங்கிக் கட்டப் போகிறார்' என்று முணுமுணுத்ததும் என் காதில் விழுந்தது. புனைகதை எழுத்தாளர்களில் எஸ்.பொவைப் பற்றி இரசிகமணி கனக செந்திநாதன் 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்னும் நூலில் எழுதியதை வாசித்துக் காட்டினார். முன்பு கனக. செந்திநாதனைச் சந்தித்த போது பழைய பண்டிதவர்க்க எழுத்தாளர் பற்றித் தான் எழுதியதாகவும் தற்கால எழுத்தாளர் பற்றி எஸ்.பொவே எழுதி நூலைப் பூர்த்தி செய்ததாகவும் கூறியது நினைவுக்கு வந்தது. அதனை அப்படியே சபையில் கூறிவிட்டேன். சபையில் பலத்த சிரிப்பொலி. எஸ்.பொவின் மகன் எழுந்து என்னைக் கண்டித்துப் பேசினான். எஸ்.பொ. வாய்திறக்கவேயில்லை. இந்த முரண்பாடு நட்பாக மலர்ந்து விட்டது.

எஸ்.பொவின் இல்லத்திற்குச் சென்று இலக்கியம் பற்றிக் கலந்துரையாடும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இதனால் எனது இலக்கிய வானை விசாலித்துக் கொண்டேன். சுந்தர இராமசாமியை வாசிக்கும்படி கூறினார். நனவோடை உத்தி பற்றி விளக்கந் தந்தார். பச்சையாகப் பாலியல் பற்றி எழுதுவதைப் பற்றிக் கேட்டபோது பழந்தமிழ் இலக்கியங்களில் சில பகுதிகளைக் கூறி இதைவிட விரசமாக நான் எழுதவில்லை என்றார். மூத்த எழுத்தாளர்களான கனக. செந்திநாதன், வ.அ. இராசரத்தினம் போன்றோர் கூட எஸ்.பொவிடம் ஆலோசனை பெறுவதுண்டு. ஒரு முறை கனக.செந்திநாதன் வானொலிக்கென ஒரு கதையை எழுதி அதனை எஸ்.பொவுக்குக் காட்டினார். கதை கவர்ச்சியாக அமைய வேண்டுமெனக் கூறி அதனைத் திருப்பி எழுதிக் கொடுத்ததாகக் கனக. செந்திநாதனே எனக்குக் கூறியுள்ளார். தான் எழுதிப் பிறர் பேரில் வெளியாகிய கதைகளுக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்திருக்கிறது. ஆனால், தனக்குச் சாகித்திய மண்டலப் பரிசு கிடைக்கவில்லை அதனால் பாதகமில்லை என்று கூறியதாக ஞாபகம்.

அவரின் எழுத்துலக அனுபவங்களை ஆசிரியப் பயிலுநர்க்குக் கூறும்படி கேட்டிருந்தேன். அவரை அழைத்துவர ஒரு பயிலுநரை அனுப்பினேன். அவர் மிதிவண்டியில் ஏறிவர மறுத்து நடந்தே வந்து சேர்ந்தார். பின்னொருமுறை உரையாடிய போது அதற்கான காரணத்தைக் கூறினார். "உங்கள் மாணவர் சைக்கிளில் என்னை ஏற்றிச் செல்ல விரும்பினர். கூட்டத்தில் பேசுவதற்கு முன்னர் என்னை உசார் நிலைப்படுத்த விரும்பினேன். சைக்கிளில் அவர்களுடன் சென்றால் இடையில இறங்கி உசார்நிலைப்படுத்த வாய்ப்பு இருக்காது. இதனாலேயே மறுத்தேன்" என்று கூறிச் சிரித்தார்.

எஸ்.பொவின் 'தேர்' சிறுகதை அக்கரை இலக்கியத் தொகுதியில் இடம் பெற்றது. சடங்கு என்னும் நாவல் சுதந்திரனில் தொடராக வெளிவந்து பின்னர் நூலுருப் பெற்றது. 'எஸ்.பொ. பேனாவை எறிந்து விட்டு ஒளிப்படக் கருவியைக் கொண்டு யாழ்ப்பாண நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கையை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றார் என்று விமர்சகர் ஒருவர் கூறியது நினைவுக்கு வருகின்றது. சடங்கில் வரும் செல்லப் பாக்கியம் ஆச்சி தான் தனக்குப் பிடித்த பாத்திரம் என்கிறார் அவர்.

தற்போது ஔஸ்திரேலியாவில் தனது மகனுடன் வாழ்கின்ற அவர் தொடர்ந்து எழுதிக் கொண்டே இருக்கிறார் அவரது 'நனவிடைத் தோய்தல்' என்னும் சுயசரிதை நூலாக வெளி வந்துள்ளது. அவருடனான தொடர்பு அற்றுப் போய்விட்டது எனினும் அவரது எழுத்துக்களைத் தேடிப்படித்து இரசிப்பேன். நான் சந்தித்த எழுத்தாளர்களில் எனது மனதில் நிரந்தர இடம் பிடித்திருப்பவர் எஸ்.பொ.



# எஸ்.பொ.வுடன் நீண்ட பயணம்



- சை. பீர்முகம்மது, மலேசியா

**வா**சிப்பும் தேடலும் மிதமிஞ்சிய அறுபதுகளில் என் கண்ணில்பட்டது எஸ்.பொவின் சிறுகதைத் தொகுப்பு. எம்.ஏ. ரஹ்மானின் இளம்பிறை பத்திரிகை கொழும்பிலிருந்து தற்செயலாக கிடைத்தது. ரஹ்மானின் அரசு வெளியீடாக எஸ்.பொ.வின் சிறுகதைத் தொகுப்பும் சேர்த்து வாசித்த பொழுதுதான் மலேசியாவில் முதன் முதலாக ஒரு இலங்கை எழுத்தாளரின் எழுத்தின் வழி இலங்கை வாழ் தமிழரின் அதுவும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மக்களை தரிசிக்க முடிந்தது.

எனது 16 வயதிலேயே தீவிர வாசிப்பில் இறங்கியவன் நான். எஸ்.பொ.வின் எழுத்தும் நடையும் நான் அதுவரை வாசிக்காத வகையில் இருந்ததால் தொடர்ந்து இவரின் எழுத்தைத் தேடி அலைந்தேன். இன்றுவரை நான் வாசித்த தமிழ் எழுத்தாளர்களில் இவரைப் போல சுயதன்மை கொண்ட வேறுபட்ட உத்திகளை கையாண்டவர்கள் மிகச்சிலரே.

தமிழில் சிறுகதைகளில் இவரின் புதிய உத்திமுறைகளை யாரும் சுலபமாக கையாண்டு விட முடியாது. இலங்கை படைப்பிலக்கியத்துக்கு மட்டுமல்ல உலக தமிழ்ப் படைப்புகளுக்கும் அவர் தந்த பெருங்கொடை அது! அவர் தொடர்ந்து சிறுகதைகள் எழுதாமல் போனதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அது தமிழ்ச் சிறுகதைக்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்பு என்பது மட்டும் உண்மை.

1996ம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் எனது 'வெண்மணல்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டில் அவர் மேடைக்கு வந்து எனது நூலை வாங்கிய பொழுது நான் ஆச்சரியப்பட்டேன். அந்த மகத்தான எழுத்துக் கலைஞனின் அந்த தரிசனம் பிறகு நட்பாக மாறியது.

எழுத்தில் எப்பொழுதும் யாருக்காகவும் வளைந்து போகாத தன்மையும் இலக்கியம் சார்ந்த உரத்த குரலும் என்னை அவர்பால் அதிகம் ஈர்த்தன. ஆஸ்திரேலியாவுக்கு நான் நான்கு முறை சென்றுள்ளேன். கடைசியாக மலேசிய சிலம்பக்கழகம் ஒரு 30 பேரோடு அங்கு சென்ற பொழுது அவரின் வீட்டில் பெரிய விருந்து வைத்து அனைவரையும் பெருமை படுத்தினார். எஸ்.பொ.வின் அனைத்து இலக்கிய முயற்சிகளுக்கும் அவரின் மூத்தமகன் அநுராவின் பங்களிப்பு மகத்தானது. அன்று அந்த விருந்தின் சிறப்புக்கு அவரே மூலகாரணமாக இருந்தார்.

எனது சென்னை பயணங்களில் இளம்பிறை ரஹ்மானின் அச்சகத்தில் தான் சந்திப்பு நடக்கும். நட்பு மேலும் வலுவாக அந்த சந்திப்புகள் வழிகோலின. அந்த அச்சகத்தின் பின்புறமுள்ள ஒரு வசதி குறைவான இடத்தில் தான் இவர் சொல்லச் சொல்ல கவிஞர் யுகபாரதி அன்றாடம் காலையில் வந்து 'வரலாற்றில் வாழ்தல்' நூலை 1924 பக்கங்கள் உருவாக காரணமாக இருந்தார்.

1998ம் ஆண்டு என்பது 'மண்ணும் மனிதர்களும்' நூலை அச்சிட சென்னை சென்ற பொழுது மித்ரா பதிப்பகத்தை மிகப்பெரிய அளவில் ஆரம்பிக்கும் திட்டத்துடன் அவர் சிட்னியிலிருந்து சென்னை வந்திருந்தார். ரஹ்மானின் அச்சகத்துக்குப் பக்கதில் நவீன வசதிகளுடன் மித்ரா பதிப்பகம் ஆரம்பித்த அந்த நேரத்தில் நானும் பக்கத்திலேயே இருந்தேன்.

எங்கள் இருவரின் இலக்கிய கனவுகளும் சேர்ந்தே பயணித்தன.

மித்ராவின் முதல் நூலாக எனது மண்ணும் மனிதர்களும் நூலே வெளிவந்தது. அப்பொழுது மலேசியாவில் படைப்பிலக்கியங்களை வெளியிட பதிப்பகங்கள் முன்வராத நிலையில் நானும் மற்றும் மூன்று நண்பர்களும் சேர்ந்து முகில் பதிப்பகம் என்ற நிறுவனத்தை ஆரம்பித்திருந்தோம். அந்த முகில் பதிப்பகத்தின் வழி அந்த ஆண்டு நான்கு நூல்களைக் கொண்டு வரத்தான் நான் சென்னை சென்றிருந்தேன்.

நூல்களின் பிரதிகளை அவரிடம் தந்த பொழுது "பீர், உங்களின் மண்ணும் மனிதர்களும் மட்டுமே மித்ரா வெளியீடாகக் கொண்டு வருவோம். மற்றதை வெளியே கொடுத்து விடுங்கள்." என்றார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"மித்ராவின் முதல் சிறப்பாக வரவேண்டும். அதனால் இதில் மட்டுமே கவனம் செலுத்த விரும்புகிறேன்" என்றார்.

ஓவியர் புகழேந்தியின் அட்டைப்பட வடிவமைப்புடன் அந்நூல் தயாரானபொழுது இந்த நூல் அமைப்பிலும் வேறு எந்த விஷயத்திலும் நீங்கள் தலையிடவோ மாற்றவோ கூடாது என்று ஒரு நிபந்தனையும் விதித்தார். நானும் வாயைத் திறக்க வில்லை. நூல் மிகச் சிறப்பாக வடிவம் பெற்றது. அவரே அந்நூலுக்கு முன்னீடு எழுதினார்.

அந்த நூல் வெளிவந்ததும் சென்னையில் ஒரு வெளியீடு செய்ய அவரே முன்நின்று அனைத்து வேலைகளையும் செய்தார்.

இந்திரா பார்த்தசாரதி தலைமையில் சென்னை அண்ணாசாலையில் இருந்த 'புக்பாயிண்ட்' அரங்கில் அப்புத்தக வெளியீடு நடந்தது. கவிக்கோ அப்துல் ரஹ்மான், எழுத்தாளர் பிரபஞ்சன், அனுராத ரமணன், எஸ்.பொ. என்ற பெரிய எழுத்தாளர்கள் விமர்சனத்தையும் வாழ்த்தையும் வழங்கிய அந்நிகழ்வு எனது வாழ்க்கையில் ஒரு மகத்தான நாளாக அமைந்தது. எஸ்.பொ.வின் உழைப்பும் அர்ப்பணிப்புமே அந்த வெளியீட்டு விழாவை வெற்றியடைய வைத்தது! அது மட்டுமல்ல அந்த நூலுக்குப் பிறகே நான் தமிழகத்திலும் ஏனைய தமிழ் வாசகர்களிடத்திலும் அதிகம் அறியப்பட்டேன்.

அந்த நூல் வந்த மூன்று மாதங்களில் 2000 நூலும் விற்று மலேசியாவில் வெளியீட்டிற்கு நூல் பற்றாமல் மேலும் 1000 பிரதிகள் அச்சடிக்கும் நிலை உருவானது. தமிழக நூல் நிலையங்களுக்கு அது எடுத்துக் கொள்ளப்பட்டது. இதற்கெல்லாம் காரணம் எஸ்.பொ. தான் என்று நான் நன்றியோடு நினைக்கிறேன்.

சிங்கப்பூர் அரசாங்கம் நடத்தும் எழுத்தாளர் வாரம் நிகழ்வில் கலந்து கொள்ள எஸ் .பொ. அதிகாரப்பூர்வ அரசாங்க விருந்தினராக வந்திருந்தார். அவரோடு ஒரு வாரம் சிங்கப்பூரில் ஒரே ஹோட்டல் அறையில் தங்கும் பேறு கிடைத்தது. இலக்கியத்தின் எல்லா திசைகளிலும் அவருக்கிருக்கும் அறிவையும் ஆழத்தையும் என்னால் அப்பொழுது தரிசிக்க முடிந்தது.

இதன் பிறகு "வேரும் வாழ்வும்" என்ற 43 மலேசிய எழுத்தாளர்களின் 50 ஆண்டுக் கால சிறுகதைகளின் முதல் தொகுப்பு வெளிவர நான் ஐந்து ஆண்டுகள் உழைக்க வேண்டியிருந்தது. மித்ராவின் மற்றொரு அடையாளமாக அந்நூல் வெளிவர எஸ்.பொ. மிகக் கடுமையாக உழைத்தார். மருதுவின் அட்டைப் படம், உள்ளே கதைகளுக்கான ஓவியங்கள் அனைத்திலும் கவனம் செலுத்தியதோடு 'வேரும் வாழ்வும்' என்று பெயர் வைத்ததே அவர் தான். இப்படியான ஒரு ஈழத்து எழுத்தாளர்களையும் புலம்பெயர்ந்த எழுத்தாளர்களையும் சேர்த்து 'பனியும் பனையும்' என்ற தொகுப்பை அவர் முன்பே கொண்டு வந்திருந்தார்.

வேரும் வாழ்வும் சிறுகதைத் தொகுப்போடு மேலும் மூன்று நூல்களை மித்ரா மூலமாக முகில் பதிப்பகம் அந்த நேரத்தில் வெளியிட்டது.

மலேசிய இலக்கியத்தை உலகப் பார்வைக்கு எடுத்துச் செல்லும் எனது முயற்சியில் மித்ரா வழி எஸ்.பொ.வின் பங்கும் அதிகமென்றே சொல்ல வேண்டும்.

அவரை மலேசியாவிற்கு அழைத்து எல்லா ஊர்களிலும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தேன். அவரின் மலேசிய வருகை பல்வேறு புதிய இலக்கியக் கதவுகளைத் திறந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். அவரின் வருகையே ஒரு முதல் இலங்கை தீவிர இலக்கியப் படைப்பாளியின் வருகை என்று கூறதல் மிகையாகாது!

இதன் பிறகு 2004ம் ஆண்டில் "வேரும் வாழ்வும்" 2ம் 3ம் தொகுதிகளும் வேறு ஆறு நூல்களையும் மித்ரா வழி கொண்டு வந்தேன். இந்த நூல்களின் தயாரிப்பில் பங்கேற்க முடியாமல் அவர் ஆஸ்திரேலியாவில் இருந்தார். எனக்கு அது ஒரு பெரிய மனக் குறையாகவே இன்று வரை உள்ளது.

அவரோடு ஐரோப்பிய நாடுகளுக்கு இணைந்து செல்ல எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தேன். எதிர்பாராத எனது பணி நிமித்தம் செல்ல முடியாமல் போய் விட்டது.

அவரின் வரலாற்றில் வாழ்தல் என்ற இரண்டுபாக நூல் இப்பொழுது சரியாகக் கணிக்கப்படவில்லையோ என்ற ஆதங்கம் எனக்கு உண்டு. எதிர்காலத்தில் ஈழத்து இலக்கிய வரலாற்றுக்கு இந்நூலே அடித்தளமாக அமையும்.

அவரின் வாழ்க்கையில் எத்தனையோ புறக்கணிப்புகள் நடைபெற்றுள்ளன. நைஜீரிய வாசம் இப்பொழுது ஆஸ்திரேலியா வாழ்க்கை என்று அவரே சொல்வது போல் 'பரதேசி' வாழ்க்கை என்றாலும் தமிழ் இலக்கியம் என்பதில் அவர் தனது காலை ஆழமாகவே ஊன்றியுள்ளார்.

இலக்கியப் பயணத்தில் அவரைப் போலவே நானும் புறக்கணிக்கப்பட்டுள்ளேன். அங்கீகாரம் கிடைக்காமல் இருந்துள்ளேன். ஆனால் மனதின் அடியிலும் ஊனிலும் உயிரிலும் இலக்கியம் என்பது கலந்து விட்டது. ஒவ்வொரு அணுவிலும் அது கலந்துள்ளது.

இத்தனை வயதுக்கப் பிறகும் அவரின் மனதில் ஈழத்து இலக்கியம் சுடர் விட்டு எரிகிறது. இப்பொழுது ஈழத்து சிறுகதைகள், கவிதைகள், என்று பெருந்தொகையாக நூல் கொண்டு வர இரவும் பகலும் உழைத்து வருகிறார்.

இதுபெரும் பொருட் செலவு ஆகுமென்று கவலைப்படாமல் அதை அவரின் மூத்த மகன் டாக்டர் அநுரா உதவி வருகிறார். 2008ல் அவரை சந்திக்க சென்னை சென்ற பொழுது இது பற்றி என்னிடம் கூறிய பொழுது நான் ஆச்சரியப்பட்டேன்.

ஈழத்து இலக்கியத்தை ஆவணப்படுத்தும் இம்முயற்சி இவருக்குப் பிறகு யாரும் செய்ய மாட்டார்கள். அவரவர்களுக்கு அவரவர் மிருதங்கம் வாசிக்கவே நேரம் போதாத பொழுது இப்பணியை எப்படி செய்வார்கள்?

இலங்கை இந்த மாபெரும் எழுத்துக் கவிஞனுக்கு இன்னும் அரசாங்க ரீதியில் ஒரு அங்கீகாரம் கூட வழங்கவில்லை. வரலாற்றில் இது எப்பொழுதும் ஒரு கரும்புள்ளியாக இருப்பது அவருக்கில்லை; இலங்கை தமிழ் எழுத்துலகிற்குத் தான் அவமானம்! வரலாறும் எதிர்கால சந்ததிகளும் இதற்குக் காரணமானவர்களை என்ன செய்யப் போகிறது?

ஈழத்து இலக்கியத்தில் எஸ்.பொ.வின் அடையாளத்தை அழித்து விட யாராலும் முடியாது. ஏன் அவராலேயே அதை சிதைக்க முடியாது. வரலாற்றில் வாழ்வார்!

அவருடனான எனது இலக்கியப் பயணம் மிகவும் அர்த்த முள்ளது; ஆழமானது! எஸ்.பொ.வின் 'அப்பையா' சொல்வது போல் "மெய்யாச் சொல்லுறன்!"

# கலகக்காரரல்ல எஸ்.பொ. தமிழ் இலக்கியத்தின் காப்பாளர்

– மா. பாலசிங்கம்

**புனைவியலில் பல் பரிமாணங்களைத் தருபவர் எஸ்.பொ. அந்தளவுக்குப் புதுமைப்பித்தனோ, மௌனியோ, ஜெயகாந்தனோ இலக்கியப் பரிசோதனைகளைச் செய்திருக்க மாட்டார்கள். படைப்புக்குப் படைப்பு உத்திகளை மாற்றுவார். அவரது சொல்வங்கி வற்றாதது. கொழுத்தது. தமிழும் சமஸ்கிருதமும் கைகோர்த்து நிற்கும். ஆங்கில இலத்தீன் புலமையாளர். வெல்லும் சொல் இல்லையென்றளவுக்கு படைப்புகளில் பொருத்தமானதும் இயல்பானதுமான சொற்களை விதைப்பார்.**

தமிழ் இலக்கியச் சாதனையாளர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ)க்கு, அதீத துணிச்சலோடு "ஞானம்" மாசிகை சிறப்பிதழ் வெளியிடுகின்ற அறிவித்தலைக் கண்டபோது வியப்பு மேவிய குதூகலந்தான் மனதில் சினைத்தது. இந்த "வியப்பு", "துணிச்சல்" என்ற பதங்களை ஆதாரப்படுத்துவதுக்கு 1960, 1970ஆம் ஆண்டுகளின் காலப் பிரிவில், இலக்கியம் என்ற முத்திரையோடு அரங்கேற்றப்பட்ட, எவ்விதமான தூர நோக்குமற்ற செயற்பாடுகளைக் கண்டறிதல் சாலும். இதன் உண்மை நிலையை அறியத் தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் அசோக மித்திரன் எஸ்.பொ.வின் "?" என்ற நூலுக்கு எழுதிய முன்னீட்டில் தெரிவித்திருக்கும் அநுபவக் கூற்றுப் பொருத்தமாக இருக்கும். அவரது கூற்று, "இலக்கியத் துறையில் ஓர் எழுத்தாளனை ஒழித்து விடுவது என்று சில வல்லமை மிக்கவர்கள், இலக்கியத்தின் மீது உண்மையான அக்கறை கொள்ள இயலாதவர்கள் – இலக்கியக் கருத்து என்ற போர்வையில் ஒவ்வொரு கால கட்டத்திலும் செயற்பட்டிருக்கிறார்கள். இவர்கள் செயலால் சில அசலான எழுத்தாளர்கள் சிதைக்கப்பட்டிருக்கிறார்கள்" இலக்கிய உலகின் நெடுங்காலப் பயணி ஒருவரின் கருத்திது. இந்த மரபார்ந்த செயன்முறை குறிப்பிட்ட காலகட்டத்தில் ஈழத்து இலக்கியத்தையும் ஆட்கொண்டிருக்கிறது. இதற்கு இலக்காக்கப்பட்டவர் – அவமதிக்கப்பட்ட ஒருவனாக அல்லாமல் அந்த அவமதிப்புகள் எல்லாவற்றையும் மிதித்து வெற்றியாடியவன் என்ற பெருமிதத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் – அவமதிப்புகளையும் அங்கீகாரமாக வரவேற்றுச் சுகிக்கும் இலக்கியயோகி எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ). மார்க்சிய இலக்கிய காலமெனவே இக் காலகட்டம் ஆய்வாளர்களால் வகுக்கப்பட்டுள்ளது. இதை நெறிப்படுத்தி வழிப்படுத்திய சான்றோர், மார்க்சியத்துக்கு எந்த விதத்திலும் குந்தகத்தை ஏற்படுத்தாத – அது சீரழிக்கப்படுவதைக் கண்டு வெருண்டெழுந்த எஸ்.பொவை இலக்கியப் பரப்பிலிருந்து தூக்கி எறிய எத்தனித்தனர். ஆனாலது நடக்கவில்லை!

ஈழத்து வட புலத்தின் பழுத்த பொதுவுடைமைவாதிகளான தோழர்கள் மு. கார்த்திகேசன், எம்.சி. சுப்பிரமணியம் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, மார்க்சியத் தடத்துக்கு வந்த எஸ்.பொவைப் பொதுவுடைமைக் கட்சியின் மேடைகளில் பேசவைத்தனர். கட்சியின் புத்தகசாலையை பட்டதாரி இளைஞரான எஸ்.பொ.வின் பொறுப்பில் ஒப்படைத்தனர். இன்று காணாமல் போய்விட்ட சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பிரசார ஏடான உதயாவுக்கு ஆசிரியராக்கினர். இத்தகைய நாடறிந்த மார்க்சியர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எஸ்.பொவை – மார்க்சியத்தின் ஊது குழல்களாக இருந்த அன்றைய மார்க்சியர்கள் ஏற்காதது புதினந்தான். இது புலமைக் காய்ச்சலேயன்றி வேறல்ல.

"நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே" என்ற நக்கீரக் குணம் படைத்தவர் எஸ்.பொ. அரசியல் செல்வாக்கில் குளிர் காய்ந்து கொண்டு மார்க்சியத்தின் ஆத்மாவை நெரிப்பதை விமர்சித்தார். இலக்கியத்தில் அரசியல் ஊடுருவுவதைக் கண்டித்தார். பட்டம், பதவியை நச்சத் தம்மினத்தின் எதிர்காலத்தைப் பணயம் வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருந்த குரு, சிஷ்யக் குழுமத்துக்கு இது பெரும் அதிரடியாக இருந்தது. ஓரங்கட்டி ஒழித்துவிடத் திட்டமிட்டனர். எஸ்.பொ. தானே அந்தக் குழுமத்திலிருந்து வெளியேறினார். தனி மரம் தோப்பாகாதென மனப்பால் குடித்தனர். தன் தடத்தை இழக்காது தனித்து நின்றே எஸ்.பொ. தன் தனித்துவமான ஆற்றல்களால் இன்று இலக்கிய ஊழியம் செய்து கொண்டிருக்கிறார். அவரது எதிரணியினர் இன்று தமது பிழைகளை ஒத்துக் கொள்ளும் அளவுக்கு இன்று காலம் கனிந்து விட்டது. இதுதான் எஸ்.பொ.வின் சாதனை! இதை "ஞானம்" உள்வாங்கி தமிழ் அறிஞர் எஸ்.பொ.வுக்குச் சிறப்பிதழ் வெளியிடுவது இன்றைய தமிழரது சீலமிகு பண்பாட்டில் ஊறிவரும் திருப்பத்தையே காட்டுகின்றது. பாராட்டுவது அறிவுலகின் பாரியகடமையாகும்.

எஸ்.பொ.வின் பேச்சுவன்மை அபாரமானது. அதைப் பணயமாக்கி அவர் உரத்தவொரு அரசியல்வாதியாக மிதந்திருக்கலாம். ஆனால் அவரதைச் செய்யவில்லை. பந்தம், பதவி, குத்துக் கரணமடித்தல் என்பவைகளுக்கு அவர் சிரந்தாழ்த்தாதவர். தனது பட்டதாரித் தகைமைக்கேற்ப ஆசிரியராகக் கடமை ஏற்றார். கல்வித் துறைக்குள் வேறுபல உயர் கதிரைகளும் அவருக்குக் கிடைத்ததுண்டு. ஆனால் அவரது சகல நடவடிக்கைகளிலும் Espoism என்ற துரும்பைத் தேடிப்பார்த்து அவரது உயர்ச்சிக்கு முட்டுக் கட்டையிட்டனர் அவரது எதிரணியினர். நைஜீரியாவுக்குச் சென்று ஆங்கில ஆசிரியராகக் கடமை புரிந்தார். இவைகளோடு இலக்கியச் செயல்பாடுகளைக் கிரமப்படுத்தினார். இன்றும் அவரது பேனா தமிழ் வாசகனுக்கு அற்புதமான இலக்கியங்களைத் தந்து கொண்டே இருக்கின்றது. எழுத்தால் தமிழை வளப்படுத்துகிறார். "சொற்களை அடுக்கும் கொத்தனார்

வேலைகளை மேற்கொள்பவனல்லன் படைப்பாளி. சொற்களைச் செதுக்கி, அதற்குப் பொருத்தச் சுருதி இசைத்தும் இணைத்தும் மொழியைச் செழிக்கச் செய்யும் பிரம்மாவே இலக்கியப் படைப்பாளி''

''இலக்கியச் சுவைப்பிலே, மகிழ்ச்சியல்ல, நெகிழ்ச்சி நிகழுதல் வேண்டும். இந்த இரண்டு அம்சங்களும் நல்ல இலக்கியப் படைப்பின் பின்விளைவுகளாக ஏற்படுபவை. நெகிழ்ச்சியிலே கண்ணீர், அழுகை, கோபம், வெறுப்பு, பாசம், சிரிப்பு, வியப்பு, சிலிர்ப்பு எல்லாமே சாத்தியம். இவற்றின் இணைப்பே ஆநந்த!... சுவைப்பினை, இலக்கியச் சுவைப்பினை நெறிப்படுத்தலாம் என்று இலக்கியக் கோட்பாட்டாளரும் விமர்சகர்களும் காலம் காலமாக முயன்று வந்துள்ளனர்... சுவைப்பினைப் பொறுத்தவரை, ONE MAN'S MEAT'S IS ANOTHER MAN'S POISON. மகிழ்ச்சியல்ல, நெகிழ்ச்சியே இலக்கியத்தின் பவிதம்''–(பார்க்க யுக மாயினி – 25) ஆறுதசாப்தங்களுக்கு மேலாகப் பல கழுத்தறுப்புகள், இருட்டடிப்புகள், குழிபறிப்புகள் என்பவற்றிற்கு முகம் கொடுத்து மென்மேலும் செழிப்பான இலக்கியப் பணி செய்துவரும் எஸ்.பொ.வின் இலக்கியப் படைப்புப் பற்றிய கணிப்பே மேற் கூறியவை.

புனைவியலில் பல் பரிமாணங்களைத் தருபவர் எஸ்.பொ. அந்தளவுக்குப் புதுமைப்பித்தனோ, மௌனியோ, ஜெயகாந்தனோ இலக்கியப் பரிசோதனைகளைச் செய்திருக்க மாட்டார்கள். படைப்புக்குப் படைப்பு உத்திகளை மாற்றுவார். அவரது சொல்வங்கி வற்றாதது. கொழுத்தது. தமிழும் சமஸ்கிருதமும் கைகோர்த்து நிற்கும். ஆங்கில இலத்தீன் புலமையாளர். வெல்லும் சொல் இல்லையென்றளவுக்கு படைப்புகளில் பொருத்தமானதும் இயல்பானதுமான சொற்களை விதைப்பார். அறுபதுகளில் ஈழத்தில் வீறுகொண்டெழுந்த மண்வாசனை இலக்கியத்துக்கு அற்புதமான ஊட்டத்தைக் கொடுத்தார். பிறந்த மண் யாழ்ப்பாணம், மணந்தது மட்டக்களப்பு. இந்த இரு பிரதே வழக்குகளையும் இரு பிரதேசத்து வாசகரும் ஏற்கக் கூடியதாகத் தன் புனைவுகளில் பரத்தியிருக்கிறார். பேசு மொழியை மட்டுமன்றி அங்கு பயிலப்படும் கலாசார, பண்பாட்டுக் கோலங்களையும் குலைக்காது யதார்த்தமாகச் சித்தரித்திருக்கிறார். பௌத்தம், இந்து, கிறிஸ்தம், இஸ்லாம் ஆகிய இந்த நான்கு மறைகளின் புகட்டல்களை புதிய தரிசனங்களில் படைப்புகளில் காட்டியுள்ளார். பசி, நிழல், ஒளி, நியமம், இத்தா, ஆண்மை, மொட்டு, தேர், தீ ஆகிய சிறுகதைகள் காலத்தால் மறக்கப்படாதவையென ஆய்வாளர்களால் வாய் குளிர வாழ்த்தப்படுபவை.

பஞ்சமர் இலக்கியத்தில் எஸ்.பொ. அக்கறை காட்டுவதில்லை எனச் சிலர் குற்றம், சுமத்துவதுண்டு. ஆனால் அவர் தொட்டதெல்லாம் பொன்னாகும். பஞ்சமர் இலக்கியச் சிறுகதைத் தொகுதியொன்று ''தீண்டத்தகாதவன்'' என்ற பெயரில் அண்மையில் வெளிவந்தது. ''களரி'' என்ற அவரது சிறுகதை இதிலுண்டு. குறை காண்போர் இதை வாசித்துப் பார்க்க வேண்டும். தீண்டாமைப் பிரச்சினையை அதீத உணர்ச்சி பூர்வமாகவும், யதார்த்தமாகவும் ஓர் கலைப்படைப்பாக்கி இருக்கிறார். தீண்டத்தகாத பெண்களிடையேயும் தீண்டாமை எதிர்ப்பு நெருப்பைக் கக்கிக் கொண்டிருப்பதை வாசகனின் கவனத்துக்குக் கொண்டு வருகிறார். இன்றைய பெண்ணிய இலக்கியக் கூறுகளும் இதில் பரந்துள்ளன. ''தமிழ்த் தேசியத்தைத் தொலைத்து, தமிழைப் பணம் ஈட்டுவதற்கான, அன்றேல் சில அதிகாரங்களையும் பதவிகளையும் தக்க வைப்பதற்கான...'' ஆயுதமாகக் கருதாத தமிழ்ப்பற்றாளர் எஸ்.பொ. ஈழத்தின் இனக் கலவரம் பற்றிய ''ஒரே அணி'' என்ற சிறுகதை **1956**இல் படைத்திருக்கிறார்.

''இலக்கியம் படைக்கப்படுவதுடன் முடிந்து விடுவதில்லை'' அதின் பகிர்வுதான் இலக்கியத்தின், ஆரோக்கியமான வாழ்விற்கு அடித்தளம். படைப்புகளை ஆவணமாக்கித் தொடரும் சந்ததிக்கும் கொடுக்க வேண்டுமென வற்புறுத்தும் எஸ்.பொ. ஈழத்து நாவல் இலக்கியத்திலும் தன் ''தலைச்சான்'' என்ற அந்தஸ்தை நிறுவியிருக்கிறார். சடங்கு, தீ, தேடல், மணி மகுடம் என்பன இவரது நாவல்கள்.

சடங்கு நாவலில் – அது படைக்கப்பட்ட காலத்தில் – ஒரு மத்திய தரக் குடும்பத்தில் பயிலப்பட்ட வாழ்வை புகைப்படம்பிடித்தது போல் சித்தரித்துள்ளார். ''தீ'' பால் உணர்ச்சியை மையப்படுத்திப் புனையப்பட்ட முதல் ஈழத்து நாவல் எனக் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்து வைதீக மரபுவாதிகள் இந்நாவலை மாணவர்கள் கையால் தொடக் கூடாதென அன்று முன் மொழிந்தனர். ஆனால், இந்நாவல் புத்தகக் கடையில் விற்பனைக்கு வைக்கப்பட்ட நாளே முழுப் பிரதிகளும் விற்கப்பட்டு விட்டதாகச் சொல்லப்பட்டது. ''தேடல்'' பௌத்தத்தை மையப்படுத்தி புனையப்பட்டது. வாரப் பத்திரிகையொன்றில் தொடராக வெளிவந்த போது ''கோள்மூட்டி''களின் தீச்செயலால் இடை நிறுத்தப்பட்டது. கனக.செந்திநாதன், இ.நாகராசன் ஆகியோரோடு இணைந்து எஸ்.பொ. எழுதிய நாவல் – கண்டி அரச குடும்பத்தைப் பற்றியது. ''மணிமகுடம்'' நாவலின் பெயர். அந்நியருக்குக் காட்டிக் கொடுப்பதில் பெரும்பான்மை இனமே முன் நின்றதென இதில் சித்தரிக்கப்படுகிறது. படைப்பிலக்கியக் கூறுகளான நாவல், குறுநாவல், சிறுகதை, உருவகக் கதை இலக்கணத்தை நன்கு புரிந்து கொண்டு படைப்பவர். ''அறிவென்பது துணிதல்'' என நம்பும் எஸ்.பொ. குறுநாவலிலும் சாதனை புரிந்திருக்கிறார். ''அவா'' ''வீடு'' ஆகிய பௌத்த, இந்துத் தத்துவங்களைக் கொழித்துப் பார்க்கும் குறுநாவல்களையும் படைத்துள்ளார். இவரது உருவகக் கதைகள் ''கலைமகள்'' ஸ்தாபக ஆசிரியர் கி.வா. ஜகந்நாதனால் சிலாகிக்கப்பட்டவை. இந்த மாசிகையில் வெளியாகி இருக்கின்றன.

நினைவுக்கு எட்டிய வரையில் முதல் நூல் வடிவம் பெற்ற எஸ்.பொ.வின் எழுத்துரு ''தீ'' ஆகத்தான் இருக்க வேண்டும். இப்பொழுது அவர் மித்ர ஆர்ட்ஸ் அன்ட் கிறியேசன் என்ற வெளியீட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர். பல ஈழத்துத் தமிழ் இலக்கியப் படைப்புகளை இதன் மூலமாக நூலாக்கியிருக்கிறார். இதற்காக அவரது உழைப்பு மட்டுமன்றி நிரந்தரமாகக் கிடைக்கும் ஊதியமும் கரைந்து கொண்டிருக்கிறது. கனக.செந்திநாதன், இ. இரத்தினம், எம்.ஏ. ரஹ்மான், செங்கை ஆழியான், க. கலாமோகன், தர்மன் தர்மகுலசிங்கம், மா. பாலசிங்கம், யாழூர்துரை இன்னும் பலரது படைப்புகளைத் தமிழ் இலக்கிய அக்கறையோடு நூலாக்கித் தந்திருக்கிறார். எஸ்.பொ.வின் நூல்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

எஸ்.பொ.வின் படைப்பிலக்கிய நூல்கள், அவர் குறித்த பனுவல்கள் தமிழின் பொக்கிஷங்கள். கீதை என்ற பேராழிக்குள் சுழியோடி நன் முத்துகளைக் கொட்டிருக்கிறார் ''கீதை நிழலில்'' என்ற நூலில் ஏற்கனவே ''கல்கி'' இதழில் வெளிவந்த கதைகளோடு வேறும் சில கதைகளை படைத்துச் சேர்த்திருக்கிறார். நுணுக்கமான படைப்புகள். அவரது கூர்மையான பார்வைக்குக் கட்டியம் கூறுகின்றன. ஆன்மீகத் தளத்தில் நிமிர்ந்த கீதையின் சுலோகங்கள் சிலவற்றை – லௌகீக வாழ்வின் தடத்தில் வைத்து எஸ்.பொ. விமர்சன ரீதியிலும்

வழிகாட்டல் தடத்திலும் குறுங் கதைகளுக்குள் கொண்டு வந்திருப்பது அலாதியானது. அவருக்குக் கவிதை சகாயிக்குமா? ''ஆம்'' ''இல்லை'' எனச் சிரமமாக இருக்கின்றது. ஆனால் இந்நூலின் பிற்பகுதியில் காணப்படும் சின்னஞ்சிறு கணுக்களைப் படித்துச் சிந்திக்கும் போது சமகாலத்துப் புதுக் கவிதையாளர் எஸ்.பொ. என்ற பல்கலைக்கழகத்துக்குச் சென்று கொஞ்சம் கற்பது நன்றெனவே கூறத் தோன்றுகின்றது. கவிதையும் முடியுமெனச் சாதிக்கிறார் இந்த இலக்கியயோகி.

மனதைக் கௌவிக் கொண்டிருக்கும் மற்றொரு நூல் ''?''. ஆச்சரியமா. கேள்வி (?) அடையாளமே தலைப்பு. இந்தக் குறியீட்டு மொழிக்மைய எழுத்தாளர் அசோகமித்திரனும் இந்நூலின் தனது முகவுரைக்கு ''!'' என்ற வியப்புக்குறித் தலைப்பிட்டே எழுதியிருக்கிறார். சென்னையில் வெளியாகியது. அமரர் வல்லிக்கண்ணன் போன்ற இலக்கியப் பக்குவர்களால் விதந்து பேசப்பட்டது எஸ்.பொ.வின் வசன அமைப்பு. இந்நூலில் புதிய பரிமாணத்தைப் பெற்றிருக்கின்றது. நூறாண்டுக்கு மேல் காணப்பட்ட வசன நடையோடு எஸ்.பொ. இன்றைய நடையைக் கைகோர்க்க வைக்கிறார். விசித்திரமானவர்தான்! விதைக்கப்பட்டிருக்கும் சொற்களும் அவ்வண்ணமே. தவிர்த்துத் தள்ள முடியாதளவுக்கு அடிக்குறிப்புகள் கூடத் தகவல்களால் சினைத்திருக்கின்றன. அரிய தகவல்கள் கிடைக்கின்றன. ''முல்லை'' ''முலை'' என்ற சொற்களுக்கான நதி மூலத் தேடல் அலாதியானது. முல்லை தருவதும் மானுடத்தை வாழ வைக்கும் பால். அவ்வண்ணமே ''ல்''லை இழந்த முலை சொரிவது உயிர்ச் சத்தைத் தரும் பால். தமிழ்ச் சொற்கள் ஆங்கிலத்தில் மருவியிருப்பதாகவும் நூலில் நிறுவப்பட்டுள்ளது. ''கந்தபுரி''யே CANTERBURY எனவும் ''செகப்பிரியர்'' SHAKESPEARE எனவும் (பக்:31) அறியத்தரப்பட்டுள்ளது. செகப்பிரியர் என்ற பதம் பண்டிதர் மயில்வாகனனார் இயற்றிய ''மதங்கசூளாமணி'' என்ற நூலில் கையாளப்பட்டிருப்பதாக ஆதாரப்படுத்தப்பட்டுள்ளது. இதே போல் சில சிங்களச் சொற்களுக்கும் வேர் தமிழ்ச் சொல்லென்பதை நூல் அறிதல் செய்கிறது. எஸ்.பொ.வின் உழைப்பு தமிழைச் செழிக்கவைக்கும் வளமாக்கி. நூலின் பேசுபொருள் – நூல் உருவாக்க காலத்தின் – சமூகத்தில் புழுவாக நெழிந்த அலங்கோலங்கள் தான். இவைகளோடு தான் முரண்பட்டதை ஆசிரியர் விமர்சன, நையாண்டிப் பாங்கில் அங்கதம், நகைச்சுவை என்பன கமழப் பார்க்கிறார். அதிகார வர்க்கத்துக்குப் பந்தம் பிடித்தல், இலஞ்சம் போன்ற சமூக விரோதச் செயற்பாடுகள் மிகவும் அடர்த்தியாக இருந்துள்ளன. இவைகள் பெரும்பாலும் ஆசிரியர் ஊடாடிய கல்விப் புலத்திலும் மலிந்திருக்கின்றன. எஸ்.பொ. ஈழத்துப் பெருங்கவிஞர் மஹாகவியோடு நெருக்கமாக இருந்திருப்பதை ஆங்காங்கே காணமுடிகிறது.

இலஞ்சத்தின் தொன்மையை ஔவையாரின் நன்னெறிப் பாடலில் கண்டு கொள்ள முடியும்.

''*<u>பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை</u>*
*நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் – கோலஞ்செய்*
*துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ யெனக்குச்*
*சங்கத் தமிழ் மூன்றும் தா*'' – (பக் : 59)

இதில் பாலும், தேனும், பாகும், பருப்பும் எஸ்.பொவுக்குக் கையூட்டாகத் தெரிகின்றது. இந்த மரபுச் செறிவால் ஈழத்துக் கவிஞர் மஹாகவி யாத்த குறும்பாவையும் நூலில் கவனத்துக்குக் கொண்டு வருகிறார்.

''முத்தெடுக்க மூழ்குகின்றான் சீலன்
முன்னாலே வந்து நின்றான் காலன்
சத்தமின்றி வந்தவனின்
கைத் தலத்திற் பத்து முத்தைப்
பொத்தி வைத்தான் போனான் மூச்சூலன்'' – (பக் : 27)

பத்துமுத்து இதில் கையூட்டு. இவைகள் அங்கதமாகவே சொல்லப்படுகின்றன. எவ்விதமான கழுத்தறுப்புகளுக்காகவும் குழிபறிப்புகளுக்காகவும் செய்யப்படவில்லை என்பதை வாசகர் அறிக. இவை அன்பளிப்புகளே. குசேலபாக்கியாநம், தொல்காப்பியம், பதினெண்கீழ் கணக்கு, யாழ் நூல், சிலப்பதிகாரம் ஆகிய தமிழின் முது சொத்துக்களும் நூலுக்குள் நிற்கின்றன.

''அறிவென்பது அறிந்து துணிதல்'' என்ற எஸ்.பொவின் கருத்தியலுக்கு அமைய அவரது ஆழ்ந்த பரந்த தமிழ் இலக்கிய ஞானம் இந்த 84பக்க நூலின் ஊடாகக் கிடைக்கின்றது. இத்தனையையும் அடக்கி வைத்திருக்கும் கணனியே அவரது சிரசு. ''அங்கதம் என்ற இலக்கிய வகையில் இந்த நூல், இதற்கு மேல் இப்படி ஒரு படைப்புச் சாத்தியமல்ல...'' என்கிறார் அசோகமித்திரன். இதையிட்டு ஈழத்துத் தமிழ்ப்புலம் பொறாமைப்படக் கூடாது. பெருமை கொள்ள வேண்டும்.

''நனவிடை தோய்தல்'' எஸ்.பொவின் நவீன எழுத்து நடைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். தன் வாழ்வையும் பணியையும் இதில் விபரித்திருக்கிறார். இதன் விரிவே 2000 பக்கங்களுக்கு மேலான ''வரலாற்றில் வாழ்தல்'' எனலாம். அவரது மூளை கணினியை நிகர்த்தது என்பதற்கு இந்நூலில் காணப்படும் சம்பவங்கள், பிரமுகர்கள் என்பன சாட்சியாகும். எஸ்.பொவை கலகக்காரர், சண்டைக்காரர், எதிர்ப்பிலக்கியவாதி என எதிரணியினர் பிரசாரப்படுத்தினாலும் தானொரு மனிதநேயவாதியென்பதை அவர் ''வரலாற்றில் வாழ்தலில்'' நிறுவியிருக்கிறார். ஈழத்தமிழரின் அரசியல், இலக்கிய இயங்கியல் தன்மையையும் இந்நூல் மிகப் பக்குவமாக வெளியிடுகிறது. இலக்கியத்தில் நற்போக்கு இலக்கியம் என்ற கூறொன்றை ஏற்படுத்தி அதனை நிறுவ எத்தனித்து வரும் எஸ்.பொவின் இலக்கியப் பார்வையின் போக்கையும் ஆழத்தையும் ''இனியொரு விதிசெய்வோம்'' ''தேடல் சில உண்மைகள்'' என்ற நூல்களிலும் காணமுடியும். மேடை நாடகங்களையும் படைத்திருக்கிறார். வானொலி நாடகங்களையும் படைத்திருக்கிறார். மேடைப் பேச்சு அவருக்குச் கைவந்த கலை.

இத்தகையதொரு இலக்கிய ஞானியை ஒடுக்கமுயன்ற ஞான சூனியர்களை எதிர்காலத்தில் எஸ்.பொவின் நூல்களைக் கற்க முயலும் இளைய சந்ததி நிச்சயமாக மன்னிக்காது. அதற்கு உகந்ததாக எஸ்.பொ. காத்திரமான அடித்தளத்தை மனைந்துள்ளார். ஆக, இத் தமிழ் இலக்கிய வல்லாரின் வித்துவங்கள் அனைத்துலகத்தையும் எட்ட வேண்டும். அவர் தற்போது தமிழருக்குக் கூறும் ஆலோசனையான –

''தமிழ்த்துவம் என்று சொல்லும் போது அது சர்வ தேசியமாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் எல்லாவற்றிலும் எங்களுடைய இலக்கிய வல்லபங்கள் மொழிமாற்றம் செய்யப்பட்டுச் சென்றடைய வேண்டும். மற்றொன்று அங்குள்ள சிறந்தவை தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு எங்களுடைய மக்கள் பார்வைக்கு வர வேண்டும்'' என்பது உடன் நடைமுறைக்கு வர வேண்டும். இதன் தோற்றுவாயாக எஸ்.பொவின் இலக்கிய சிந்தனைகள், படைப்பிலக்கியங்கள் ஆங்கிலம், பிரான்ஸ் போன்ற மொழிகளில் மொழி மாற்றம் பெறல் வேண்டும். இதுவே இலக்கிய நேசர்கள் எஸ்.பொவுக்கும் தமிழ் மொழிக்கும் செய்யும் பாரிய தொண்டாகும்.

# எஸ். பொன்னுத்துரையும் நானும்

– கே.எஸ்.சிவகுமாரன்



ஓர் அருமையான தமிழ் எழுத்து நடை வல்லாளனாகிய 'எஸ். பொ' என்றழைக்கப்படும் (யாழ்ப்பாணத்தில் ஒதுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்து, சென்னையில் பட்டதாரியாகி, மட்டக்களப்பில் மணம் முடித்து, நைஜீரியாவிலும் படிப்பித்து இப்பொழுது சென்னையிலும், மெல்போர்னிலும் வாழ்ந்து வரும்) எஸ். பொன்னுத்துரை அவர்களுடன் நான் கொண்ட தொடர்பை நினைத்துப் பார்க்கையில் எழுந்த ஞாபகச் சிதறல்களை பொதுசன வாசகர்களின் தகவலுக்காக இங்கே தருகிறேன்.

கொழும்பில் அரை நூற்றாண்டுக்கு முன் பள்ளிக்கூட மாணவனாக இருந்தபொழுது, விடுமுறைக்காக எனது பிறந்த நகரான மட்டக்களப்புக்குச் சென்றபொழுது வாடகைக்கு எஸ். பொ எடுத்திருந்த ஒரு வீட்டில் (சிறாப்பர் கந்தையா) அவரை முதலிற் கண்டேன். அவர் இன்னாரென்றோ அவரின் படைப்புகள் எவை என்றோ அப்பொழுது எனக்குத் தெரியாது.

பின்னர் ஒரு தடவையும் நான் மட்டக்களப்புக்குச் சென்றபொழுது அவர் படிப்பித்த மெதடிஸ்ட் மத்திய கல்லூரியில் அவரைச் சந்தித்து பிரசுரமான எனது சிறுகதைகளைக் காட்டி அவருடைய ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டேன். மிகத் தயவாகவும் அன்பாகவும் அவர் என்னிடம் உரையாடினார்.

அதன்பின்னர் ரகுமானின் "ரெயின்போ" அச்சகத்தில் அவரையும், மறைந்த ஏ. ஜே. கனகரத்னாவையும் சந்தித்து உரையாடினேன்.

அதற்குப் பிறகு அவருடைய அழைப்பின் பேரில் அவர் ஏற்பாடு செய்த மட்டக்களப்பு எழுத்தாளர் மாநாட்டில் கலந்து கொண்டேன். அங்கே கனக செந்திநாதன், மு. தளையசிங்கம், சிற்பி, பாமா ராஜகோபால் போன்ற அமரர்களைச் சந்தித்தேன். எஸ். பொ. எனக்கும் மரியாதை செய்து உபசரித்தார்.

எஸ். பொ. அதிகமாக என்னுடன் ஆங்கிலத்தில்தான் உரையாடுவார். அது எனக்கு வசதியாகவும் இருந்தது.

மட்டக்களப்பில் வாழ்ந்த திரைப்படக் கலைஞர் பாலு மகேந்திரா, பாரித்தம்பி, சச்சிதானந்தம் போன்றோர் நடத்திய "தேனருவி" என்ற ஏட்டில் கனக செந்திநாதனது "ஈழத்து இலக்கிய வளர்ச்சி", எஸ். பொ.வின் "தீ" ஆகிய நூல்களுக்கு மதிப்புரை எழுதினேன்.

எஸ். பொ. பதுளையில் ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது எனது மதிப்புரையைக் கண்டித்துப் பேசியிருந்தார் எனப் பத்திரிகைச் செய்தி மூலம் அறிந்தேன்.

எனது துணைவியார் எஸ். பொ. படிப்பித்த காலத்தில் மட்டக்களப்பு மெதடிஸ்ட் கல்லூரியில் தானும் படிப்பித்ததனால் அவரை அறிந்து வைத்திருந்தார்.

இப்பொழுது நின்று போன Weekend ஆங்கிலப் பத்திரிகையில் அவருடைய "வீடு" தொகுதியை மதிப்பீடு செய்திருந்தேன். அச் சிறுகதைகள் எனக்குப் பிடித்திருந்தன.

கொழும்பிலே "முறுவல்" என்றொரு பரிசோதனை நாடகத்துக்கு வரும்படி எஸ். பொ. என்னையும் அழைத்திருந்தார். அந் நாடகம் பற்றிய மதிப்பீட்டை "டெயிலி நியூஸ்" பத்திரிகையில் எழுதினேன். அது அவருக்குப் பிடித்திருந்தது.

நெடு நாட்களாக எஸ். பொ. அவர்களுக்கும் எனக்குமிடையில் தொடர்பே இல்லாமற் போய்விட்டது.

சென்னைக்குச் சென்ற வேளைகளில் அவரையும் சந்தித்து உரையாட நான் முயற்சி செய்தும் அவரைச் சந்திக்க முடியாமற் போய்விட்டது. அவர் அப்பொழுதெல்லாம் அவுஸ்திரேலியாவில் இருந்தார்.

எஸ். பொ. வின் சிறுகதையொன்றை ஆங்கிலத்தில் நான் மொழிபெயர்த்திருந்தேன். அது ஏதோ காரணத்தினால் பிரசுரம் காணவில்லை.

எஸ். பொ. வின் இலக்கியப் பங்களிப்புகளைத் தக்கவர் மதிப்பீடு செய்து எழுதினால், நான் பல விஷயங்களை அறிந்து கொள்ள வாய்ப்புண்டு. அவருடைய எழுத்துக்கள் எல்லாவற்றையும் படிக்கும் வாய்ப்பு இன்னமும் எனக்குக் கிட்டவில்லை.

அவருடைய 'சடங்கு' ஓர் அற்புதமான படைப்பு.

எஸ். பொ. இப்பொழுதெல்லாம் தெளிந்த நீரோடை போன்று இருக்கிறார் என அறிகிறேன். முன்னைய பரபரப்பு எல்லாம் முதிர்ச்சியனுபவம் காரணமாக அற்றுப்போய் ஆழ்ந்த மனப்பக்குவத்தையடைந்திருப்பார் என நினைக்கிறேன். அவரைச் சந்தித்து ஆய்வறிவு ரீதியாக உரையாட எனக்குக் கொள்ளை ஆசையாய் இருக்கிறது. அவருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

---

## விவாதங்கள், வாசகர் கடிதங்கள், படைப்புக்கள்

விவாதங்கள் 500 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். 'வாசகர் பேசுகிறார்' பகுதிக்கான கடிதங்கள் 200 சொற்களுக்குள் அடங்குதல் வேண்டும். ஒவ்வொரு மாதமும் 20ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கும் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்ந்துவரும் இதழில் இடம்பெறும். புனைபெயரில் எழுதுபவர்கள், தமது சொந்தப் பெயர் முகவரியை வேறாக இணைத்தல் வேண்டும். படைப்புக்கள் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படின் ஒரு மாதத்திற்குள் அறிவிக்கப்படும்.

ஆசிரியர்

# எழுத்துப் போராளி எஸ். பொ.

*- கனடாவிலிருந்து எஸ். சந்திரபோஸ்*

எஸ். பொ. எழுத ஆரம்பித்த காலம் முதல் இன்றுவரை அவர் ஒரு எழுத்துப் போராளியே ஆவார். "மனிதனுக்காகச் சித்தாந்தமேயன்றி, சித்தாந்தத்திற்காக மனிதன் என்பது மதியீனம் என்று போராடியவர். எழுத்தில் தீட்டு, தூய்மை என்று எதுவுமே இல்லை, சிந்தனையில் நேர்மையும், சொல்லில் கபடமின்மையும் இருந்தால் போதும், அதுவே உன்னத எழுத்து என்று போராடியவர்" என எஸ். பொ.வின் ஆண்மை என்ற சிறுகதைத்தொகுதிக்கு வழங்கிய பாயிரத்தில் குறிப்பிடுகின்றார். "தேவதைகள் செல்ல அஞ்சும் இடங்களுக்கெல்லாம் உல்லாச யாத்திரை போக எஸ். பொ. தயங்குவதில்லை" என்று மேலும் **இந்திரா பார்த்தசாரதி** கூறுகின்றார். ஆனால் இவர் தேவதைகள் போவதற்கு அஞ்சுமிடங்களுக்கு மட்டுமன்றி பேய்கள், பிசாசுகள் போக அஞ்சுமிடங்களெல்லாம் தமது எழுத்தின் ஆளுமையினால் பயணப்பட்டிருக்கின்றார்.

இவருக்கிருக்கும் அளவற்ற தன்னம்பிக்கையே இவர் படைப்பாற்றலின் அடிநாதம். சத்தியத்தினதும், தர்மத்தினதும் பரிபாலனமும், விடுதலைக்கான உத்தரவாதமும் எஸ். பொ. வின் எழுத்தில் மானுஷிகத்தின் ஆதாரம்.

"1946ம் ஆண்டு வீரகேசரியில் வெளிவந்த 'மலர்கள்' என்ற கவிதையுடன் என் இலக்கியப் பயணம் தொடங்கியது. 1955 வரையில் கதைகள், கட்டுரைகள், ஓரங்க நாடகங்களை எழுதிய போதிலும் 1955ன் பின்னரே எனது எழுத்துக்கள் அங்கீகாரம் பெற்றன. மார்க்ஸிஸம் மனிதகுலத்தின் ஈடேற்றத்திற்கும், பொருளியல் விமுத்திக்கும் ஏற்ற ஒரே வழி என்ற நம்பிக்கையை வரித்த அதே காலத்தில்தான் என் தமிழ் ஊழியம் முனைப்புடன் துவங்கிற்று" என எஸ். பொ. குறிப்பிடுகின்றார்.

தமிழ்மொழியில் எத்தகைய புலமையோ அத்தகைய புலமை ஆங்கில மொழியிலும் உடையவர். வரலாறு பாடத்தை தனது பட்டப் படிப்புக்கு முதன்மைப் பாடமாகக் கற்றுக்கொண்ட காரணத்தாலும், வரலாற்றை நுணுகி ஆராய்வதில் நுண்மாண் நுழைபுலம் கொண்டவர். இலங்கை, இந்திய, உலக வரலாறுகளையும், உலக இலக்கியங்களையும், மானிட சமூக வரலாறுகளையும் கற்றுத் தெளிந்தவர். இதனால் மனிதகுலம் சகல அடக்குமுறைகளிலிருந்தும் விடுபடவும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பெற்று வாழ மார்க்ஸிய சித்தாந்தமே சிறந்த மார்க்கம் என நம்பிக்கை கொண்டு இலங்கை பொதுவுடமைக்கட்சியில் இணைந்து செயற்பட்டார். அக்காலத்திலேயே டொமினிக் ஜீவா, என். கே. இரகுநாதன், கே. டானியல், நீர்வைப் பொன்னையன், இளங்கீரன், எச். எம். பி. முகைதீன், பிரேம்ஜி, த. இராஜகோபாலன் போன்றவர்களுடன் தோழமை கொண்டு சமூக, அரசியல், எழுத்துப் பணிகளை மேற்கொண்டார்.

1960களின் பின்னர் சர்வதேச கம்யூனிஸ முகாம்களில் ஏற்பட்ட பிளவு இலங்கையிலும் கம்யூனிஸ்டுகளிடையே பிளவுகள் தோன்றின. அதனைத் தொடர்ந்து கம்யூனிஸ்டு களிடையே பேரினவாத சிந்தனைகள் எழுந்தன. இதனால் கட்சியை விட்டு ஒதுங்கிக்கொண்டார். கட்சி அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண்டாலும், மார்க்ஸிஸ சித்தாந்தத்தில் எனக்கு இருக்கும் பிடிப்பு இமியும் தளர்ந்து விடவில்லை என எஸ். பொ கூறுகின்றார். அக்காலத்தில் மார்க்ஸிஸ வித்தகர்கள் என்று பாவனை காட்டியவர்களாலும், தம்மை முற்போக்காளர்கள் என்று முத்திரை குத்திக் கொண்டவர்களாலும், பல்கலைக்கழக சில பண்டிதர்களாலும், அவர்களது அங்கீகாரத்திற்குக் காத்திருந்த அடிவருடிகளாலும், எஸ். பொ.வின் இலக்கிய முயற்சிகளுக்கு இருட்டடிப்புச் செய்யும் முயற்சிகள் நடந்தன.

காற்று நிறைந்த ஒரு பந்தினை எவ்வளவுதான் முயன்று நீரில் ஆழத்திற்கு அமிழ்த்தினாலும் அப்பந்து வீறுகொண்டு நீர்மட்டத்திற்குமேல் வருவது போன்று எஸ். பொ.வின் படைப்புக்கள் ஈழத்துத் தமிழ் இலக்கியம் என்ற எல்லைகளைத் தாண்டி உலக இலக்கியத்தரத்தைத் தொட்டு நிற்கின்றது. இவரது இன்றைய வளர்ச்சிக்கு கட்டியம் கூறுவதுபோல் **மு. தளையசிங்கம்** அவர்கள் அன்றே தமது **"ஏழாண்டு இலக்கிய வளர்ச்சியில்"**

பொன்னுத்துரை புதிய பரம்பரைக்குரிய ஒரு பெரிய எழுத்தாளர்தான்... ஒரு Major எழுத்தாளர். நாடகம், உருவகக் கதை, நாவல், கட்டுரை, சிறுகதை போன்ற எல்லாத் துறைகளிலுமே தன் கைவரிசையைக் காட்டியவர். சாதாரண வாழ்க்கை விசயங்களையும் அவற்றிலுள்ள உண்மைகளையும் பற்றி அவருடைய அவதானம் மிகப்பிரதானமானது. அப்படிப் பட்ட கதைகளை அவர் எழுதும்போதுதான் உண்மையாக அவர் தன் உச்சங்களைக் காட்டுகின்றார். சாதாரண மக்களின் பேச்சுவழக்கைக் கையாள்வதிலும் அவருக்கு நிகர் அவராகவே இருக்கிறார். 'பங்கம்' போன்ற கதைகள் பிரதேசப் பேச்சு வழக்கைக் கையாள்வதிலும் சமகால சமூக ஓட்டங்களைக் கலையோடு படம்பிடித்து நிரந்தரமாக்கி விடுவதிலும் நம் ஈழத்து இலக்கிய உலகில் நிகரற்றவராக நிற்கின்றார். பொன்னுத்துரை உலக இலக்கியத்தரத்தைத் தொடுவதற்கு ஒடிக் கொண்டிருக்கும் ஒரு எழுத்தாளர்" என்று அன்று மு. தளையசிங்கம் அவர்கள் முன்மொழிந்ததனை இன்று அ. முத்துலிங்கம் அவர்கள் ஈழத்து இலக்கியங்களுள் எஸ். பொவின் படைப்பு உலக இலக்கியத் தரம் வாய்ந்தது என்று வழிமொழிந்துள்ளார்.

எஸ். பொ. தமது சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், விமர்சனங்கள், கட்டுரைகள், கவிதைகள், காவியங்கள் என்பவற்றில் தமக்கெனச் சிறப்பான ஓர் இடத்தைத் தமிழ் இலக்கியத்தில் பெற்றிருக்கின்றார். கரு, உரு, உத்தி, நடை,

கற்பனை முதலியவற்றில் புதுமையும், புரட்சியும் கலந்து சிறுகதைகளும், குறுநாவல்களும் எழுதினார். கதைகளுக்குப் பெயர் வைப்பதிலும் அவர் புதுமையைக் கையாண்டார். ஒரு எழுத்திலும், இரண்டு எழுத்துக்களிலும் சுருக்கமாகப் பெயர் சூட்டுவார். தீ, வீ, தேர், கணை, மறு, அவா, சுவை, அணி, சிதை, வீடு, முள், வலை போன்ற சில அவர் கதைகளின் தலைப்பிடு தலுக்கு உதாரணங்கள். அவருடைய சிறுகதைகளுக்கு ஏற்ற விதமான நடையைக் கையாள்வார். அவருக்கு முன்னால் தமிழ்ச்சொற்கள் கைகட்டிச் சேவகம் செய்யும்.

கதைகள் நடைபெறும் களங்களுக்கு ஏற்ப பிரதேச வழக்குப் பேச்சுமொழியை கதை மாந்தர் பயன்படுத்தும் முறையில் எழுதும் வல்லமை பெற்றவர். யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தமிழில் பல படைப்புக்களை எழுதியுள்ளார். அவற்றுள் 'பங்கம்' என்ற சிறுகதை, 'சடங்கு' நாவல், தமது இளமைக்கால சுயசரிதை பாணியில் அமைந்த ஒரு சமூகவியல், புவியியல், வரலாற்று ஆவணமான 'நனவிடைதோய்தல்' போன்றவற்றுள் யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தமிழ் முழுமையாக ஆக்கிரமித்துள்ளது. எஸ். பொ. வின் கதை மாந்தர்கள் மட்டுமன்றி பல சமயங்களில் அவரே கூட கதைகளுக்குள் யாழ்ப்பாண வட்டார வழக்கில்தான் உரையாடுகின்றார். '20ஆம் நூற்றாண்டு ஆரம்பகால யாழ்ப்பாணப் பேச்சுமொழியை ஆராய்பவர்கள் இரண்டு பேரை முக்கியமாகப் படிக்க வேண்டும் என்று நான் பரிந்துரைப்பேன். ஒருவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, மற்றவர் எஸ். பொன்னுத்துரை. அவர்களின் எழுத்துக்களில்தான் அப்பேச்சு வழக்கு அதன் உச்சத்தைத் தொட்டிருக்கின்றது' எனக் **காலம் மே 2008** இதழில் வெளியான கட்டுரை ஒன்றில் **என். கே. மகாலிங்கம்** தெரிவிக்கின்றார். அதே இதழில் **'எஸ். பொன்னுத்துரை யாழ்நிலத்துப் பாணன்'** என்ற கட்டுரையில் 'இன்று பொய்யாய் பழங்கதையாய் மறைந்து போய்விட்ட ஒரு பண்பாட்டை நமக்குக் காட்டும் ஒரே இலக்கிய ஆவணம் எஸ். பொன்னுத்துரையின் எழுத்துக்களே' என **ஜெயமோகன்** குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாண வட்டாரப் பேச்சுவழக்கு மட்டுமன்றி மட்டக்களப்புத்தமிழ், மட்டக்களப்பில் வாழும் முஸ்லீம்கள் பேசும் தமிழ், பறங்கியர் பேசும் தமிழ், பரம்பரையாக வாழ்ந்துவரும் சிங்களவர் பேசும் தமிழ் என அனைத்து மொழி வழக்குகளையும் பயன்படுத்தி "மட்டக்களப்பு மாப்பிள்ளை" என்னும் நாடகம் எஸ். பொ. வால் எழுதப்பட்டு **இலங்கை வானொலியில் "சானா"** அவர்களால் தயாரிக்கப்பட்டு தொடர் நாடகமாகப் பல வாரங்கள் ஒலிபரப்பானது. இதனைவிடப் பல ஓரங்க நாடகங்கள், உரைச்சித்திரங்கள் என்பன எஸ். பொ வால் எழுதப்பட்டு, இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகின.

மேடை நாடகங்களாக முதல் முழக்கம், வலை, முறுவல் என்னும் நாடகங்கள் இலங்கையில் மேடை ஏற்றப்பட்டன. இலங்கை வானொலியில் "கலைக்கோலம்" என்னும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் அடங்கும் நிகழ்ச்சி ஒன்றினையும் வாரா வாரம் தயாரித்துச் சிலகாலம் நடத்தி வந்தார்.

இவர் தமது கொள்கைகளில் உறுதியுடன் இருப்பதுடன், எவருடனும் சமரசம் செய்யாத சரணாகதியடையாத காரணத்தால் தமது எழுத்தைத்தவிர வேறு எந்த அமைப்புக்களிலும், அணியிலும் நிலைத்திருப்பதில்லை. விட்டுக் கொடுப்புக்கள் இல்லாதபோதிலும் அனைவருடனும் நட்புடன் பழகுவதில் பின்நிற்பதில்லை.

தமிழ்நாட்டில் வெளியான **சுபமங்களா இதழுக்கு** அளித்த நேர்காணலில், "நீங்கள் தீவிரத்தை மேற்கொள்ளக் காரணம் உங்களை மறுதலித்த முற்போக்கு இயக்கம் என்கிறீர்கள். உங்களுக்கும் முற்போக்கு இயக்கத்திற்கும் என்ன பிரச்சினை? நற்போக்கு இயக்கம் என்ற ஒன்றை ஏன் நீங்கள் ஆரம்பித்தீர்கள்?" என்று வினவப்பட்டபோது அதற்கு அளித்த பதிலில் எஸ். பொ.

"முற்போக்கு இலக்கியத்திற்கும் எனக்கும் அதிகம் முரண்பாடு இருப்பதாகச் சொல்லமுடியாது. இந்த முற்போக்குக் கோஷத்தை ஒரு கட்டத்தில் தலைமையேற்று நடத்த வந்தவர்கள் தவறான பாதையில் இட்டுச் சென்றார்கள். அது எனக்குத் தெரிந்தது. அதனால் முரண்பட்டேன். அந்த முரண்பாட்டை முன்வைத்தபோது வைதீக மார்க்சிய விமரிசனங்கள் அந்த இயக்கத்தின் தலைவர்கள் என்று தங்களைப் பிரகடனப்படுத்திக்கொண்ட கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்கள் படைப்பிலக்கியத்தில் ஆற்றல் இல்லாதவர்கள். ஓரளவில் சொன்னால் படைப்பிலக்கியத்தில் முயன்று தோற்றவர்கள். எனவே, அவர்கள் உண்மையான படைப்பிலக்கியத்தின் வீரியத்தை தலைமைதாங்கி நடத்தலாமா? அடுத்து மார்க்ஸியம் வளர்க்கப்பட்ட ரஷ்யாவில் உள்ள எழுத்துக்கள்தான் எங்கள் மாதிரிகள் என்று சொல்லும்போது எங்கள் மண்ணிலிருந்தும், எங்களுடைய தேசச் சூழலில் இருந்தும் அந்நியப்படும் ஒரு வேலையை அவர்கள் செய்தார்கள். இவ்வாறு செய்து கொண்டு இலக்கிய விமரிசனம் என்று சொன்னபோது அவர்கள் கூடுதலாக மேலை நாட்டு ஆங்கில விமரிசன அளவுகோல்களைக் கொண்டுவந்து சேர்த்தார்கள். சில பெயர்களை வைத்துப் பூச்சாண்டி காட்டினார்கள். ஒரு Double Standard. ஒன்று சோவியத்திலுள்ள யதார்த்தம் என்று சொல்லுகிறார்கள். அதேசமயம் முதலாளித்துவ நாடுகளில் இருக்கக்கூடிய விமர்சனங்களை அளவுகோலாகக் கொண்டு வந்தார்கள். இவை அனைத்தும் கால ஓட்டத்தில் நிற்காது என்ற தெளிவு எனக்கு இருந்தது.

தமிழ் மொழியினதும், இனத்தினதும் தனித்துவமான சில விழுமியங்களும் சில மரபுகளும் இருக்கின்றன. தமிழ்ச் சொற்களை நான் உபயோகிக்கும்போது அந்தத் தமிழ் இனத்தின் அடையாளங்களைப் பேணும் பணியில் நான் ஈடுபட்டிருக்கின்றேன். அந்த உண்மைகளை எல்லாம் இவர்கள் மறந்துவிட்டார்கள். நம்முடைய மரபுகளின் தொடர்ச்சியாகவே இந்தப் புதுமைத்தன்மைகள் செய்யவேண்டும் என்று வலியுறுத்தினேன். அதுவே நற்போக்கு" எனப் பதில் அளித்தார்.

ஈழத்தில் அதிகம் புனைபெயர்களுள் மறைந்து நின்று இலக்கியப் பரிசோதனைகளை நடத்தினார். தேசாபிமானியில் பொக்கன் கணபதி என்ற பெயரில் 'போகிற போக்கிலே' என்ற பத்தியும், இளம்பிறையில் கொண்டேடி சுப்பர் என்ற பெயரில் அக்கால அரசியல், கலை இலக்கியங்கள் பற்றிய விடயங்களைக் கிண்டல், நகைச்சுவையுடன் எழுதினார். துரை சண்முகம் என்ற புனைபெயரில் தினபதி பத்திரிகையின் ஞாயிறு வெளியீடான சிந்தாமணியில் எம். ஜி. ஆர் வருகிறார் என்ற துப்பறியும் நாவலைத் தொடராக எழுதி முடித்தார். இவற்றைவிட ராஜ மித்திரா, ராஜ்புத்திரா போன்ற பல புனைபெயர்களில் புகுந்து எழுத்தில் சித்து விளையாட்டில் ஈடுபட்டார்.

1959ல் பசி என்னும் தலைப்பில் வீரகேசரி வார வெளியீட்டில் மனிதனின் பல விதமான பசிகளான வயிற்றுப்

பசி, உடற் பசி, பணப் பசி, பதவிப் பசி, பட்டங்களைப் பெறும் பசி என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு சிறுகதைகள் எழுதினார்.

சிக்கலான இந்து, பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமய தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு முறையே அவா, வீடு, நியமம், இத்தா ஆகிய சிறுகதைகளை எழுதிய துணிச்சல் மிக்க எழுத்துப் போராளி எஸ். பொ.

எஸ். பொ. அங்கதச் சுவையில் அரச உயர்மட்டங்களில் இடம்பெறும் லஞ்ச லாவண்ணியங்களை 'பந்தநூல்' எனப்படும் வினாக்குறியின் (?) தலைப்புடன் 1972ல் வெளியீடு செய்தார். இந்நூல் 'நாச்சாதார்க்கும் இனியர்' உரையுடன் கூடியதாகப் பண்டைய நூற்பதிப்புப் பணிகளின் ஊடாக யாத்திரா செய்யும் பிரமிப்பினை ஏற்படுத்தும்.

எஸ். பொ. ஈழத்து இலக்கிய ஊழியத்தில் சகோதர எழுத்தாளர்களின் திறனை ஊக்குவித்தும், கௌரவித்தும் வந்துள்ளார். இதன் வெளிப்பாடாக ஈழத்தின் முதன்முதல் கூட்டுமுயற்சியாக 'மத்தாப்பு' என்னும் குறுநாவலும், சதுரங்கம், காந்தீயக் கதைகள் என்னும் இரு தொகுப்பு நூலும் வெளிவந்தன.

'மத்தாப்பு' குறுநாவலை இ. நாகராஜன், இரசிகமணி கனகசெந்திநாதன், சு. வே. (சு. வேலுப்பிள்ளை), 'குறமகள்' (வள்ளிநாயகி இராமலிங்கம்) ஆகிய நால்வருடன் இணைந்து எஸ். பொ இறுதி அத்தியாயத்தை எழுதி முடித்தார். வீரகேசரியில் ஆறு வாரங்கள் தொடராக வந்து பின்னர் இது நூலாக வெளிவந்தது.

சதுரங்கம் 1972ல் ஆர். பாலகிருஷ்ணன், வ. அ. இராச ரத்தினம், எம். ஏ. ரஹ்மான், தமிழகத்தைச் சேர்ந்த சாலை இளந்திரையன் ஆகியோருடன் இணைந்து எஸ். பொ எழுதி வெளியிட்டார்.

காந்தீய நூற்றாண்டை ஒட்டி 1969ல் ஆர். பாலகிருஷ்ணன், யாழ்ப்பாணம் தேவன், ராஜநாயகன், என். எஸ். எம். இராமையா, வ. அ. இராசரத்தினம், தெளிவத்தை ஜோசப், இரசிகமணி கனக செந்திநாதன், கே. வி. நடராஜன், எம். ஏ. ரஹ்மான், எஸ். பொ இணைந்து எழுதிய தொகுப்பு நூலாக வெளிவந்தது.

மொழிபெயர்ப்புத்துறையிலும் ஈடுபட்டு செனகல் நாட்டின் சிறந்த எழுத்தாளரான 'செம் பென் ஒஸ்மானுடைய' நாவலின் தமிழாக்கம் 1999ல் 'ஹால' என்ற நூலாக வெளிவந்தது.

கென்ய நாட்டின் புகழ்பெற்ற எழுத்தாளரான 'கூகிவா தியாங்கோ' எழுதிய நாவலை மொழிபெயர்த்து 'தேம்பி அழாதே பாப்பா' என்ற நூலாக 2001ல் வெளியிட்டார்.

எஸ். பொ வின் சிறுகதைகளில் ஒன்றான நிழல் ஏ. ஜே. கனகரெட்ணா அவர்களால் 'SHADOW' என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு CEYLON OBSERVER பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

'இனி' என்னும் தலைப்பில் கடந்த நான்கு தசாப்தங் களுக்கு மேலாகத் தாம் வைத்துள்ள இலக்கியக் கோட்பாடுகள் சம்பந்தமான அறிக்கைகள், கட்டுரைகள், சிந்தனைகள் மற்றும் செவ்விகள் போன்ற ஆவணமாக இந்நூல் 2000ம் ஆண்டில் கனடாவில் வெளியிடப்பட்டது.

'வரலாற்றில் வாழ்தல்' என்ற தமது வரலாறு, தாம் வாழ்ந்து கொண்டு இருக்கும் இன்றைய காலகட்டம் வரை ஏற்பட்ட சமூக, அரசியல், கலை, இலக்கிய வரலாறுகள், இடப்பெயர்வு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஆவணமாக இரண்டு பாகங்களாக 1924 பக்கங்களில் எழுதி வெளியிட்டுள்ளார்.

எழுபத்தி ஐந்து வயதினைத் தாண்டியும் 'மாயினி' என்ற நாவலை எழுதி முடித்து வெளியிட்டதுடன் தமிழகத்தில் வெளியாகும் 'யுகமாயினி' என்ற மாதாந்த வெளியீட்டின் நிறுவன ஆசிரியராகவும் இருக்கின்றார்.

அவர் இன்றும் இளமைத்துடிப்புடன் எழுதிக் கொண்டிருக்கின்றார். தமது சிறுகதைகளில் சிலவற்றை ஆங்கில மொழியில் மொழிமாற்றம் செய்யும் முயற்சியிலும், 19ம் நூற்றாண்டில் WIL HELM GEIGER (வில் கீல்ம் ஜிகர்) ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த 'மகாவம்சம்' என்ற நூலை 'சிங்களவர் கதை' என்ற மொழிபெயர்ப்பிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்.

'எழுத்தே என் தவம்' என்று வாழ்ந்து கொண்டிருக்கும் எஸ். பொ. உண்மையில் ஒரு எழுத்துப் போராளியே ஆவார்.


# கொழும்புத் தமிழ்ச்சங்கம்

*ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் காட்சிப்படுத்தலும் கணினிப்படுத்தலும்*

எழுத்தாளர்களே! புதிய நூல்களை வெளியிடும்போது கொழும்புத் தமிழ்ச்சங்க நூலகத்துக்கு இரண்டு பிரதிகளை அனுப்பிவையுங்கள். கொழும்புத் தமிழ்ச்சங்கம் இலங்கையிலுள்ள பெரிய நூலகங்களில் ஒன்றாகும். நீங்கள் அனுப்பும் நூல்களை **'புதிய வரவுகள்'** பகுதியில் காட்சிப்படுத்துவதோடு, ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் உள்ள பகுதியில் வாசகர் பாவனைக்கும் வைக்கப்படும். அத்தோடு அறிஞர்களால் தேர்ந்தெடுக்கப்படும் நூல்கள் கணினியில் பதிவு செய்யப்பட்டு "noolaham.com" இணையத்தின் மூலம் உலகெங்கிலும் உள்ள வாசகர்கள் உங்கள் நூல்களை அறிந்து கொள்ளவும் வாசிப்பதற்கும் வகைசெய்யப்படும். நூல்கள் எமக்குக் கிடைத்ததும் அதுபற்றி உங்களுக்குத் தெரியப்படுத்துவோம்.

**நூல்கள் அனுப்பவேண்டிய முகவரி :-**

பொதுச்செயலாளர், கொழும்புத் தமிழ்ச்சங்கம், இல. 07, 57ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.



# இந்திரன், ப.தி. அரசு தொகுத்த “எஸ்.பொ : ஒரு பன்முகப் பார்வை”

## நூல் குறித்த இரசனைக்குறிப்பு

- சின்னராஜா விமலன் -

“உயிரியல் வல்லுனர்கள் endangered Species அதாவது ‘இடருற்ற உயிரினம்’ என்று வரையறுத்த சில உயிர்களை அழியாமல் காப்பாற்ற முயல்கிறார்கள் அல்லவா? அப்படியே அருகிவரும் வார்த்தைகளை பாதுகாக்க நாம் ஏன் முயற்சிக்கக் கூடாது? என்று நான் அடிக்கடி யோசிப்பதுண்டு. அழிந்துவரும் எத்தனையோ சொற்களை புனருத்தாரணம் செய்த புண்ணியம் எஸ்.பொ.வை சேரும். அவருடைய நடையின் நிமிர்வுக்கு இதுவும் ஒரு முக்கிய காரணம். அவரை “நடையில் நின்று உயர் நாயகன்” என்று சொல்லலாம் என்பவர் வேறு யாருமல்ல அ. முத்துலிங்கமே. இந்திரன், ப.தி. அரசு தொகுத்து மித்ர வெளியீடாய் வெளிவந்த “எஸ்.பொ : ஒரு பன்முகப் பார்வை” நூலிலேயே அவர் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள், விமர்சகர்கள் எஸ்.பொ. குறித்து என்ன நினைக்கிறார்கள். நினைத்தார்கள் என்பதை பதிவு செய்யும் முயற்சியாகவே 536 பக்கங்களில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. இவற்றுள் பல்வேறு ஓவியர்களும், புகைப்படக் கலைஞர்களும் தங்கள் கலை சாதனங்கள் மூலம் பதிவு செய்த ஓவியங்களும் புகைப்படங்களும் கூட இணைக்கப்பட்டுள்ளன. இந்நூலின் நோக்கம் குறித்து தொகுப்பாசிரியர்கள் “எஸ்.பொவை விக்கிரகமாக்கி புனிதப்படுத்தப்பட்ட ஒரு பீடத்தில் ஏற்றி, விமர்சனங்களின் தீட்டுப்பட்டு விடாமல் காப்பது இத்தொகுதியின் நோக்கமல்ல” என்று தமதுரையில் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்கள். தொகுப்பில் அறிவுமதி, நீலாவணன், யுகபாரதி, த. பழமலய், வி. கந்தவனம், அம்பி ஆகியோரது கவிதைகள் இடம்பெற்றாலும் பக்கவரையறை கருதி தொகுப்பிலுள்ள கட்டுரைகள் மாத்திரம் கவனத்தில் தொகுக்கப்பட்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

தொகுப்பின் மூலம் கட்டுரையாக இந்திரா பார்த்தசாரதி எழுதிய “எஸ்.பொ.வின் ஆண்மைக்கு ஒரு பாயிரம்” அமைகிறது. எஸ்.பொ. அடிப்படையில் ஒரு Moralist. அவரை ஒரு பிரச்சினைக்குரிய எழுத்தாளராக இலக்கிய உலகுக்கு அறிவித்த ‘தீ’ என்ற நாவலில் இருந்து இன்றுவரை அவர் படைப்புக்கள் எல்லாவற்றிலுமே இந்தப் பண்புகள் அடிக்கோலாக இருந்து கொண்டு வந்திருக்கிறது. ‘தீ’ 1961இல் வெளிவந்த நாவல். இன்று இந்த நாவலை எஸ்.பொ. எழுதினாலும் வேறுமாதிரியாக எழுதி இருக்க முடியாதென்று நான் கருதுகின்றேன். இதுதான் அவர் எழுத்தின் சத்திய ஆவேசம். வேஷம் தரித்து எழுதுவதென்பது அவரால் இயலாத காரியம். முகமூடிகள் அணிவது அவர் எழுத்தின் அடிப்படைப் பண்புக்கு முரணிய செயல் என்று இ.பா குறிப்பிடுகின்றார். தொடர்ந்தும் அவர் எஸ்.பொவின் கருத்துக்கள் இன்று வேறாகவே இருக்கக்கூடும். ஆனால் அவர் எழுத்துப் பரிணாமம் எந்தெந்தக் காலகட்டத்தில் எப்படி இருந்தது என்பதை அவர் வெளிப்படையாக காட்டியிருப்பது அவருடைய இலக்கிய நேர்மையை தெளிவாக விளக்குகிறது. அதனால் தான் இலக்கியப் போராளி என்ற பட்டம் அவருக்கு சாலப்பொருந்தும்” என்கிறார்.

தொகுப்பில் கவிஞர் இன்குலாப் எழுதிய கட்டுரையே கனதியான கட்டுரையாக எனக்குப்படுகின்றது. காமம் குறித்து வெளிப்படையாக எழுதியது மற்றும் பொதுவுடமை கட்சியின் இலக்கியம் குறித்ததான அதிகாரக் கோட்பாடுகளை ஏற்க மறுத்தது. இவ்விரண்டு குறித்தும் எஸ்.பொவின் நிலைப்பாடுகளை முதன்மையாக ஆராய்கிறார் கவிஞர். எஸ்.பொ. தமது படைப்பு முயற்சியை ஒருவகை தேடல் என்பதாகவே உணர்கிறார். இஸங்களையும் போக்குகளையும் (Trends) புரிந்தவர் என்ற போதிலும் அவற்றின் வழி செல்லாது தமக்கென ஒரு புதுவழி அமைத்தலே அவருடைய படைப்பு முயற்சியாக இருந்திருக்கிறது எனக் கூறும் அவர், “தீ”யில் வெறி கொண்டெறியும் கொழுந்துகள் கட்டுப்பாடற்றவை. அடுப்புக்குள் நின்று எரியவேண்டியது கூரையை தொட்டுவிடுமோ என்ற அச்சத்தை ஊட்டுபவை. அடுத்து அவர் எழுதிய கதைகளில் இதே கொழுந்துகள் எரிந்தாலும் கட்டுப்படுகின்றன. இந்தவகைப் புதினங்களில் உணர்வுகள் வெள்ளமாகப் பாய்வதைக் காட்டிலும் கட்டுப்பாடாக ஓடுவது தான் கலை அழகுபெறும் என்று தான் கருதுவதாகவும் கூறுகிறார்.

தொடர்ந்து கூறுகையில் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர் மீது எஸ்.பொ வைக்கும் விமர்சனங்களை என்னால் முழுமையாக ஏற்க இயலவில்லை. படைப்பாற்றல் என்பது கதை, புதினம், நாடகம் முதலியவற்றைப் படைப்பது மட்டுமன்று. இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளை ஆழ்ந்து விளக்குவதும், திறன் ஆய்வுக் கோட்பாடுகளைப் படைத்தளிப்பதும் படைப்பாற்றலின் வகைப்பட்டதுதான். அந்த வகையில் இவ்விரு அறிஞர்களும் வழங்கிய பங்களிப்பினை தமிழ் முற்போக்கு எழுத்தாளர்கள் மறந்து விடமாட்டார்கள் என்று கூறும் அதே சமயம் எஸ்.பொவின் எழுத்துக்களை ஆழ்ந்து பயில்கையில் மார்க்சியத் திறனாய்வாளர்கள் அவரைப் புறக்கணிப்பதற்கு நியாயமில்லை என்பதையும் வலியுறுத்துகின்றார்.

அசோக மித்திரனின் கட்டுரையில் எஸ்.பொவின் எழுத்துக்களில் அங்கதச் சுவை பற்றி ஆராயும் அவர் “எல்லாக் காலத்திலும் ஆற்றல் மிக்கவர்கள் இருந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் அவர்களை மனம் வருந்தச் செய்வதே தம்பிறவியின் பணி என்று செயற்படும் வல்லமை மிக்கவர்களும் இருந்திருக்கிறார்கள். இலக்கியத்துறையில் ஓர் எழுத்தாளனை ஒழித்துவிடுவது என்று சில வல்லமை மிக்கவர்கள் இலக்கியத்தின் மீது உண்மையான அக்கறை கொள்ள இயலாதவர்கள் – இலக்கியக் கருத்து என்ற போர்வையில்

ஒவ்வொரு காலகட்டத்திலும் செயற்பட்டிருக்கிறார்கள். இவர்கள் செயலால் சில அயனான எழுத்தாளர்கள் சிதைக்கப்பட்டிருக்கிறார்கள். சில எதிர்ப்புக்களையும் மீறி எழுதுவதை தொடர்ந்திருக்கிறார்கள்'' என்று கூறுவதும் சிந்தனைக்குரியது.

டாக்டர் சி. உக்கிரப்பெருவழுதிப்பிள்ளை அவர்களது கட்டுரையில் எஸ்.பொ. நைஜீரிய நாட்டிலே ஆங்கிலத்துறைத் தலைவராக Literature in English கற்பிக்கும் ஆசானாக வாழ்ந்த காலத்தில் ஆபிரிக்கக் கண்டத்தின் செழுமையான இலக்கியத்தினை தமிழாக்கும் பணியிலும் அக்கறை செலுத்தி உழைத்திருப்பதான குறிப்பும் எஸ்.பொ தமிழ் இலக்கியத்தில் மட்டுமல்ல தமிழ் இலக்கணத்திலும் நிபுணத்துவமும், நுண் அறிவும் பெற்றிருக்கிறார் என்பதற்கு மதுரையில் நடந்த தமிழாராய்ச்சி மகா நாட்டிலே அவர் சமர்ப்பித்த ''ந'' என்கிற ஆய்வுக் கட்டுரை அமைந்துள்ளது எனவும், இந்தக் கட்டுரையிலே இலக்கணச் சுருக்கம் எழுதிய ஆறுமுக நாவலரும், பேராசிரியர் விபுலானந்தரும் விமர்சிக்கப் படுகின்றனர் என்ற தகவலும் கூறப்பட்டுள்ளது.

அத்தோடு மிலேனியம் என்ற ஆங்கிலச் சொல்லை அதன் பொருள் விளங்குமாறு புத்தாயிரம் என நான் அறிந்தவரையில் முதன் முதலில் அறிமுகம் செய்தவரும் எஸ்.பொவே. அவர் தனித்தமிழ் வாதியல்ல. இயல்பாக அர்த்த வீச்சுக்கு உதவக் கூடிய பிறமொழிச் சொற்களை அவர் மிகுந்த லாவகத்துடனும், தோழமையுடனும் பயன்படுத்துகின்றார் எனவும் கூறுகின்றார்.

எஸ்.பொவே புத்தாயிரம் என்ற சொல்லை அறிமுகப் படுத்தியதாகக் கூறப்படுவதைப் போன்று புலம் பெயர்ந்தவர்கள் என்ற சொற்பிரயோகத்தை முதன்முதலில் உச்சரித்தவரும் எஸ்.பொதான் என்கிறார் முருகபூபதி தனது கட்டுரையில். 1989இல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற இலக்கியவிழாவில் பேசும் போதே இந்தச் சொற்பிரயோகத்தை முன்மொழிந்ததாக கூறுகின்றார்.

அடுத்து தொகுப்பாசிரியர்களில் ஒருவரான இந்திரனின் கட்டுரையில் எஸ்.பொவின் படைப்புக்கள் ஏன் வாசகர்களை முகம் சுளிக்க வைக்கின்றன என்பதற்கான காரணம் இயம்பப்படுகிறது. எஸ்.பொ தான் பார்க்கும் ஈழத்து வாழ்க்கை எனும் நாடகத்தில் அரிதாரம் பூசி நடிக்கும் கதாபாத்திரங்களை அவர்கள் நடிக்கும் நாடக மேடையில் அல்லாமல் வேஷம் கலைத்த நிலையில் அவர்களை அவர்களது ஒப்பனை அறையிலேயே சென்று சந்திக்கிறார். இதனால் தான் எஸ்.பொவின் கதைகளை படிக்கும்போது உள்ளொன்று வைத்து புறமொன்று நடிக்கும் ஆசாடபூதி கண்டு வாசகர்கள் முகம் சுளிக்க நேர்கிறது என்கிறார்.

வெங்கட் சாமிநாதனின் 'ஒரு கலாசார சக்தியுடன் உறவாடல்' என்ற கட்டுரையில் பேராசிரியர்கள் கைலாசபதி. சிவத்தம்பி அவர்களை கடுமையாக சாடுவதோடு முற்போக்கு இலக்கியத் தர்பாரில் தலைவணங்க மறுத்த காரணத்தாலும், கைலாசபதியின் சைவ வேளாள மேலாண்மைக்கு அடிபணிய மறுத்ததாலுமே ஈழம் தந்த ஒரே படைப்பாளியும் மிகச்சிறந்த படைப்பாளியுமான எஸ்.பொ. ஒதுக்கப்பட்டார் எனக் கூறுகின்றார்.

அதே சமயம் மு. தளையசிங்கம் எழுதிய ''ஏழாண்டு இலக்கிய வளர்ச்சியில் எஸ்.பொன்னுத்துரை கட்டுரையில் பொன்னுத் துரையிடம் திறமை மட்டும் இருக்கவில்லை. பலமும் இருந்தது. அதாவது தலைமை வகிக்க வேண்டுமென்று, சர்வதிகாரம் செய்ய வேண்டுமென்று ஆசையும் இருந்தது. மற்றவர்களைப் போல் கூட்டின் தேவைக்கேற்ப தன்னை மடிக்காமல் தன் தேவைக்கேற்ப கூட்டை வளைக்க கூடிய ஓர் ஆசை. அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு முற்போக்கு கூட்டுக்குக் கூட தெரியாத மாசேதுங்கிய சாணக்கியமும் பொன்னுத்துரையிடம் இருந்தது. இருக்கிறது. முற்போக்கு கூட்டுக்கு வேறு வழி இருக்கவில்லை. அவரை வெளியே ஒதுக்குவதை தவிர. ஆனால் வெளியே ஒதுக்கப்பட்டார் என்பது அவருக்கே தெரியாத விதத்தில் ஒதுக்கப்பட்டார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு கைலாசபதி, சிவத்தம்பி போன்றவர்களோடு பழகும்போது மற்ற முற்போக்கு எழுத்தாளர்களுக்கு இருக்கும் மரியாதை இவருக்கு இருக்கத் தேவையில்லை. பட்டப் படிப்பும், ஆங்கில அறிவும் பொன்னுத்துரையை அவர்களோடு ஒத்தவராக்க அவரது இலக்கியத்திறமை அவர்களையும் விட, மேம்பாடு உடையவராகவே அவருக்கு காட்டச் செய்யும். எனவே முற்போக்கு கூட்டுக்குள்ளே இருந்தால் கடைசி மும்மூர்த்திகளில் ஒருவனாக இருந்தால் மட்டும் போதாது. அவரே பிரம்மாவாகவும், அவரே சிவனாகவும் இருக்க வேண்டும். அது கிடைக்காத வரைக்கும் பொன்னுத்துரைக்கே உள்ளே இருப்பது பிடிக்காமல் இருந்திருக்கலாம் என்கிறார். இந்தக் கட்டுரையில் முத்தாய்ப்பான ஒரு விடயம் கைலாசபதியும், சிவத்தம்பியும் சேர்ந்த மும்மூர்த்தி கூட்டில் தலைமை தாங்க விரும்பிய பொன்னுத்துரை கடைசியில் கலாநிதி சதாசிவமும், எவ்.எக்ஸ்.சி. நடராசாவும் சேர்ந்த ஒரு புதிய மும் மூர்த்திக் கூட்டுக்கு தலைமை தாங்கத் தொடங்கியது முழுத்தலைகீழான மாற்றம் மட்டுமல்ல, துருவக் கதைகளும் கூட என்று மு. தளைய சிங்கம் கூறியிருப்பதுதான்.

''ஆண்மை'' என்று 15 கதைகள் கொண்ட 400 பக்கத்தொகுதியில் இவருடைய சொல்லாட்சியின் முழுத்துவத்தை நிதர்சனமாக காணலாம் எனக் கூறும் அ. முத்துலிங்கத்தின் கட்டுரையில் எல்லாக் கதைகளுக்குமே தலைப்பு ஆண்மைதான். இப்படியாக ஒரே தலைப்பில் 15 வெவ்வேறு கதைகளுடன் ஒரு புத்தகம் வருவது புதுமை. உலகத்திலேயே இப்படி வரும் முதல் தொகுதி இதுதான் என்று நான் நினைக்கிறேன் என்கிறார்.

தொகுப்பிலே ஏ.ஜே. கனகரட்ணா எழுதிய கட்டுரையில் சில மாற்றுக்கருத்துக்களை அவதானிக்க கூடியதாகவுள்ளது. எஸ்.பொவின் இலக்கியப் படைப்புக்களையும் அவரது இலக்கிய வாழ்வையும் மீளநோக்கும் போது எனக்கு அவை இன்று ஓரளவு ஏமாற்றத்தை தருகின்றன. இவ்வளவு திறமையும் சக்தியும் வீண் விரயம் செய்யப்பட்டமைக்கு அவரது தனிப்பட்ட குறைபாடுகள் மட்டுமல்ல காரணம். யாழ்ப்பாணத்தின் எளிதில் நெகிழ்ந்து கொடுக்காத சமூக அமைப்பிலே அவர் எதிர் நீச்சல் அடித்தே தனது தனித்துவமிக்க திறனை நிலைநாட்ட வேண்டி இருந்தது. இதன் விளைவாக தவிர்க்க முடியாதவாறு அவரது திறமைகள் சிதறடிக்கப்பட்டன. பயனற்ற சர்ச்சைகள் அவரை திசைமாறச் செய்தன என்கிறார்.

இதைவிட எஸ்.பொ ஆசிரியராக கடமையாற்ற நைஜீரியா சென்ற பொழுதும் பின்னர் அவுஸ்திரேலியாவிற்கு சென்றதும் அவரிடமிருந்து நிறைய எதிர்பார்த்தேன். வேறுபட்ட கலாசாரங்களின் பண்பாடுகளின் ஊடாட்டத்தின் பயனாக முகிழ்க்கும் தமிழ்ப்படைப்புக்களை எதிர்பார்த்தேன். இன்று வரை ஏமாற்றத்தையே அடைந்துள்ளேன் எனக் கூறுகின்றார்.

எஸ்.எம். கார்மேகம் எழுதிய கட்டுரையில் 1966இல் எஸ்.பொ எழுதிய ''யோகம்'' என்ற தொடர்கதை முதல் மூன்று வாரங்களுடன் நிறுத்தப்பட்டமை குறித்தும் அத்தொடர் கதையை ''அத்த'' என்ற இடதுசாரி சிங்கள நாளேடு எதிர்த்து கிளர்ச்சி

செய்தது. ஒரு தமிழ் தொடர்கதையை எதிர்த்து ஒரு சிங்கள நாளிதழே தலைப்பு செய்தி வெளியிட்டு ஆர்ப்பாட்டம் செய்தது எனக்கு தெரிந்தவரை அதுதான் முதல் தடவை எனப்பதிவு செய்கிறார்.

மேலும் 1960இல் தமிழகத்தின் கங்கை பகீரதன் இலங்கைக்கு வந்து ஈழத்து எழுத்தாளர்கள் பத்தாண்டுகள் பின் தங்கி விட்டார்கள் என்று சொல்ல அது பெரும் சர்ச்சைக்கு வித்திட்டது. அக்கருத்தை பகீரதன் சுயமாக சொல்லி இருக்க முடியாது அது எஸ்.பொவின் வேலை எனப் பலருக்கும் சந்தேகம் என தனது கட்டுரையில் குறிப்பிட்ட பேராசிரியர் பொன் பூலோகசிங்கம் அவர்களது கட்டுரையில் பகீரதனை சீண்டி விட்டவரே எஸ்.பொ தான் என்று தெரிவிக்கிறார் அவர்.

மேலும் பேராசிரியரது கட்டுரையில் ... எஸ்.பொ. எம்.ஏ. பட்டம் பெறுவதற்காக கொழும்பு பல்கலைக்கழகத்தின் அனுமதி பெற்று ; ஈழத்து புனைகதை வரலாறு'' பற்றி ஆய்வு செய்ய இருந்தமை குறித்தும் மட்டக்களப்பு பிரதேசம் 1978இலே புயலாலும், வெள்ளப்பெருக்காலும் சீரழிந்தபோது அவருடைய ஆய்வுக்குரிய தரவுகளும் கொள்ளை போயின. மீண்டும் அவற்றை தேடித் தொகுத்து விட்ட இடத்திலே தொடர முடியாமற் போய்விட்ட குறிப்பும் காணப்படுகிறது.

அத்துடன் எஸ்.பொ. எடுத்த எடுப்பிலே எழுதியதை பிரசுரம் செய்ததாகத் தெரியவில்லை. ஊறப்போட்டு வைத்து திருப்பித்தான் பிரசுரத்திற்கு விடுவார். மொழிநடையில் அவர் செலுத்தும் கவனம் இக்கருத்தினை வலியுறுத்தும். இவ்வாறு செய்யாதவை 'இஸ்லாமும் தமிழும்', ஆண்மையின் 15ஆவது கதையும். ஒன்று அவசரத்தில் எழுதியது. மற்றது அழுகையில் வரைந்தது என்கிறார்.

கலாமோகனின் கட்டுரையில் எஸ்.பொ. ஓர் பரிசோதனை எழுத்தாளராக பலராலும் அறியப்பட்டுள்ளார். இவை வெறுமனே கரு, உருவம், உத்தி மீதான பரிசோதனைகள் அல்ல. மாறாக சமூகங்களது அத்திவாரங்கள் மீதான பரிசோதனைகளும் கூட. 'கீதையின் நிழல்' குட்டிக் கதைகள் தொகுப்பில் எஸ்.பொ. பகவத்கீதையை பரிசோதனை செய்துள்ளார் எனக்குறிப்பிடுகின்றார்.

இருபதாம் நூற்றாண்டில் இலக்கிய ஊழியத்தின் மூலம் தமிழுக்கு புதிதும், உயிர்ப்பும் புகுத்தியவர்கள் மூவர். அவர்களுள் பாரதியும், புதுமைப்பித்தனும் காலத்தால் மூத்தவர்கள், மூன்றாமவர் இன்றும் நம் மத்தியில் வாழும் எஸ்.பொ என்கிறார் பேராசிரியர் ஆசி. சுந்தரராஜா, அவருடைய இலக்கியப் பங்களிப்பினை கணக்கிலெடுக்காது இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாறு முழுமை பெறாது என்பது அவர் கருத்து.

''மெல்லக் கனவாய்'' நாவல் மூலம் பிரசித்தம் பெற்ற பா. விசாலத்தின் கட்டுரையில் எஸ்.பொ. சற்று கடுமையாகவே விமர்சிக்கப்படுகின்றார். பெண்களின் உடற் கூறுகளையும், அவர்களுக்கே அமைந்து விட்ட சில சங்கடங்களையும் கேலி செய்து கொச்சைப்படுத்தி வரும் போக்கு பல படைப்பாளி களிடமிருக்கிறது. இதற்கு எஸ்.பொவும் விதிவிலக்கல்ல. பெண்ணின் உடற் கூறுகளை கேலிப் பொருளாக்குவது பெண்ணிய சிந்தனையுடைய எவராலும் ஏற்றுக் கொள்ள இயலாததாகும் என்கிறார்.

பேராசிரியர் சாலை இளந்திரையன் அவர்களின் கட்டுரையில், இலக்கியத்துக்கு அப்பால் உள்ள எந்த நலனுக்காகவும் வளைந்து கொடுக்காத ஒரு திண்மை, சமுதாயத்தை நேர் நின்று பார்த்து அதைப்பற்றி தமக்கு சரி என்று படுவதை எடுத்துரைக்கும் நேர்மை, இவை பொன்னுத்துரையின் இயல்புகள் என்கிறார். அத்துடன் எஸ்.பொவின் தேர் கதை பற்றி கூறுகையில் ''லா.ச.ராவின் 'பாற்கடல்', ஜெயகாந்தனின் 'யுகசந்தி', செல்வராசனின் 'யுகசங்கமம்' ஆகியனவும் 'தேர்' கொண்டுள்ள கருவைச் சுற்றியுள்ளன. அவற்றிலே காணமுடியாத கலை முழுத்துவத்தை தேர் கொண்டுள்ளது என்கிறார்.

ரசிகமணி கனகசெந்திநாதனின் கட்டுரை எஸ்.பொவுக்கு எதையும் புதிது புதிதாக செய்து பார்த்து அதன் வெற்றி, தோல்விகளின் மீது மீண்டும் முன்னேற வேண்டும் என்கிற ஆர்வம் மிகுதியாகவுண்டு. அவரது எண்ணத்தில் பல பரிசோதனை களங்கள் மலர்ந்தன. அந்த வகையில் முதன் முதலில் எஸ்.பொ உட்பட ஐந்து எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதிய ''மத்தாப்பு'' எனும் குறுநாவல் பற்றியும், சி. நாகராஜன், கனகசெந்திநாதன், எஸ்.பொ ஆகிய மூவரும் சேர்ந்தெழுதிய நவரசங்களையும் சித்திரிக்கும் ''மணி மகுடம்'' நாவல் பற்றிய குறிப்புக்களையும் ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே'' என்னும் சூத்திரத்தை ஆதாரமாகக் கொண்டு ஒரு சுவையான பரிசோதனை களத்தை எஸ்.பொ. ஏற்படுத்தி இருந்தமை பற்றியும் குறிப்பிடுகிறது.

ஆர்.வெங்கடேஷ் கட்டுரையில் எஸ்.பொ. பற்றி, குறிப்பிடுகையில் இலக்கிய உலகில் பெரும் சர்ச்சையை கிளப்பிய 21ம் நூற்றாண்டு தமிழ் இலக்கியத்தை வழிநடத்தப் போகிறவர்கள் புலம் பெயர்ந்த தமிழர்களே என்ற கருத்தினை 2002ம் ஆண்டு எஸ்.பொ. சென்னை வந்தபோது எஸ்.பொவே அக்கருத்தை மாற்றிக்கொண்டு விட்டதான குறிப்பும் காணப்படுகிறது.

வி.கே.டி. பாலனின் கட்டுரையில் எஸ்.பொவின் இன்னொரு முகம் பதிவுசெய்யப்பட்டுள்ளது. எஸ்.பொ அரச திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பிரதி மதிப்பீட்டு குழுத் தலைவராக இருந்த பொழுது சினிமாவுக்கான பிரதியாக்கங்களை எழுத்தாளர் மத்தியில் ஊக்குவிப்பதற்காக திரைப்படப் பிரதியாக்க போட்டி ஒன்றை தமிழ் எழுத்தாளர்களுக்கு மட்டும் நடாத்தினார் என்பது பற்றியும். திரைப்படப் பிரதியாக்கத்தின் நுணுக்கங்களை தமிழ் எழுத்தாளர்கள் அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தில் ஒரு கருத்தரங்கையும், பயிற்சிப் பட்டறையையும் முதன் முதலாக நடாத்தப்பட்டது. இது எஸ்.பொவின் முயற்சியால் மட்டும்தான் சாத்தியமாயிற்று என குறிப்பிடுகின்றார்.

பேராசிரியர் செ. இராமானுஜம் அவர்கள் எஸ்.பொவின் ''முறுவல்'' நாடகத்தினை ஆராய்ந்து சுய கலாசாரத்தேடலின் உள்ளுணர்வு உந்துதலின் அடிப்படையில் நவீன நாடக ஆக்கம் என்ற முயற்சிப் படியில் முறுவல் முயற்சியின் ஆரம்பமும் படியின் அடித்தளமும் நன்கு அமைந்துள்ளன என்று கூறுகின்றார். அவ்வாறே ஞானக் கூத்தனின் கட்டுரையானது எஸ்.பொவின் ''அப்பாவும் மகனும்'' எனும் காவியம் பற்றி உசாவுகின்றது.

த. சுமதி எஸ்.பொவின் ஆண்மை சிறுகதை தொகுதியிலுள்ள 15ஆவது சிறுகதையை பற்றி குறிப்பிட்டு "Honour is Venerable to us because it is not of to-day. It is always an ancient virtue. We worship it to-day, because it is not of to-day" என்று எமர்சன் எழுதியதை படித்த பொழுது கிட்டாத அனுபவம் எஸ்.பொவின் இக்கதையில் உண்மையில் எனக்கு கிட்டியதை எந்தவகையிலும் எழுத்தில் பதிய வைக்க முடியாது என்றே தோன்றுகிறது என பதிவு செய்கிறார்.

சோ. சிவபாதசுந்தரம் அவர்கள் தனது கட்டுரையில் கதைகளுக்கு சிறிய தலைப்பிடும் மோகத்தை ஈழத்தில்

எஸ்.பொவே ஏற்படுத்தியவர். பல தலைப்புக்களை பெயராகவும், வினையாகவும் பொருள் கொள்ளலாம். இந்த உபாயத்தினால் கதையின் பூடகமான தொனிப்பொருளையும் வெளிப்படையான சம்பவத் தொகுப்பையும் ஒரு சேர. எஸ்.பொ காட்டுகின்றார். தமிழ் இலக்கியத்தில் இது புதியமுறை. புரட்சி என்று குறிப்பிடுகின்றார்.

ப. திருநாவுக்கரசு அவர்களின் கட்டுரை, எஸ்.பொவின் இன்னொரு பரிமாணத்தை புலப்படுத்தி நிற்கின்றது. பதிப்புத்துறையில் எஸ்.பொவின் ஈடுபாடு குறித்தும் ரெயின்போ அதிபர் எம்.ஏ. ரஹ்மானை கொழும்பில் சந்தித்தது பற்றியும் கூறுகின்றது. அத்துடன் எஸ்.பொவின் சிறுகதை தொகுப்பான "வீ" நூலுக்கு பிரமிள் வரைந்த முகப்பட்டைப் படம் நூலின் கருத்தை வெளிப்படுத்தாததால் அதனைப் பின்னட்டையாக பாவித்த எஸ்.பொ இந்த நூலுக்காக சச்சி, சௌ, நாதன், சானா, வீ.கே என்ற ஓவியப் பட்டாளத்தைப் பயன்படுத்தி உள்ளார். இலங்கை பதிப்பு வரலாற்றில் இவ்வளவு ஓவியர்கள் ஒரு கதையாசிரியரின் நூலுக்கு வரைந்தது இதுவாகத்தான் இருக்கும் என்று கூறுகின்றார்.

இது மாத்திரம் அல்ல ஈழத்தமிழ் பதிப்புலகில் சிறுகதை தொகுப்பின் ஒவ்வொரு கதைக்கும் ஓவியத்தை வடிவமைக்கும் வழக்கத்தை கொண்டு வந்தவராகவும் எஸ்.பொ காணப்படுகின்றார். புத்தக வடிவமைப்பிலே கோட்டைப் பயன் படுத்தும் வடிவமைப்பு, எழுத்துக்களைக் கொண்டே வடிவமைப்பது, ஓவியங்களை கொண்டு உள்ளே வடிவமைப்பது என்கிற பல பாணிகள் இன்றுவரை இருந்தாலும் இவற்றை எல்லாவற்றையும் பாவித்து நூலை சிறப்பான முறையில் உருவாக்கும் கலையை எஸ்.பொ பதிப்பித்த நூல்களில் முன்னோடியாக காணமுடிகிறது.

ஒழுக்கவியல் காவலர்கள் எனக் கருதிக் கொள்ளுபவர்கள் செக்ஸை முக்கியமாக கொண்டு படைக்கப்பட்ட எல்லாவித கலைப்படைப்புக்களையும் முடிந்தவரை எதிர்க்கத் தவறுவது இல்லை. ஜேம்ஸ் ஜாய்ஸின் "உலிசிஸ்", டி. எச். லாரன்சின் "லேடி சாட்டர்லிஸ் லவ்வர்ஸ்", ஆல்பர்டோ மொரோவியாவின் "வுமன் ஒவ் ரோம்" இஸ்மத் சுக்தாயின் கதைகள், தி. ஜானகிராமனின் சில நாவல்கள், பெர்டோ லுஸ்ஸியின் "The Last Tango in Paris" திரைப்படம் என்று பட்டியல் நீளக் கூடும். தீயும் அதே காரணத்துக்காக ஒரு சிலரால் வன்மையாக தாக்கப்பட்ட அதே சமயம் வேறு சிலரால் மிக உயர்வாயும் பாராட்டப்பட்டது.

மனிதனின் எல்லாவித செயல்களுக்கும் அவனது பால் உணர்வே காரணமும் ஆதாரமுமானது என்பது சிக்மன் பிராய்ட் போன்ற உளவியல் அறிஞர்களின் முடிவு. டால்ஸ்டாய் தனது "The Kreutzer Sonata" எனும் கதையில் பாலுணர்வு என்பது குழந்தைகளை நமது சந்ததிகளை உற்பத்தி செய்வதற்கு மட்டுமே உருவாக்கப்பட்டது. பாலுணர்வை நமக்கு மகிழ்ச்சியை தரும் ஒரு கருவியாகப் பயன்படுத்தியதால் தான் நமது பலதரப்பட்ட பாலியல் பிரச்சினைகள் தோன்றின. என்று எழுதுகின்றார்.

மகாத்மா காந்தியே பாலுணர்வுக்கு உரம் சேர்க்கும் உணவு உட்கொள்ளலை கட்டுப்படுத்தும் விதமாய் உண்ணாநோன்பை அடிக்கடி மேற்கொண்டாரென்றும் தன் பாலுணர்வு சுயகட்டுப்பாட்டை பரிசீலிக்கும் சோதனையாகவே அவர் இரவில் இளம் பெண்களோடு படுத்துறங்கினதும், இருபுறமும் இரு இளம்பெண்களின் தோள்களில் கைகளைப் போட்டவாறு நடந்ததும் என்றெல்லாம் உளவியல் ஆராய்ச்சி கூறுகின்றது. பாமரன் முதல் மகாத்மா காந்தி வரை அலைக்கழிக்கப்படும் இவ்வுணர்வுச் சக்தியை உண்மைக்கு உபாசகனாய் வாழும் எஸ். பொ. முக்கிய அம்சமாய் வைத்தே தன் முதல் நாவலான "தீ" யை எழுதியிருந்தார். இவ்விடத்தில் எஸ். பொ. கூறுகின்ற கருத்து புறந்தள்ளக்கூடிய ஒன்றல்ல.

"என்னுடைய இலக்கிய ஆளுமையை எதிர்ப்பதற்கு நான் செக்ஸை எழுதி விட்டேன் என்பதை காரணமாக கற்பித்து விட்டார்களே ஒழிய நான் சொன்ன முழுமையான வாழ்க்கை நெறி தமிழர்களுடைய வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட ஒன்று என்பதை அவர்களால் நிறுவ முடியவில்லை" என்பதே அதுவாகும். இதில் வேடிக்கை என்னவென்றால் எஸ். பொவை ஒரு இந்திரிய எழுத்தாளர் என்று முத்திரை குத்திய அணியை சேர்ந்தவர்களே இன்று அவரைவிட அதிகமாய் பாலுணர்வு சம்பந்தமான சிறுகதைகளையும், நாவல்களையும் படைப்பதுதான்.

இத்தொகுப்பில் பெரும்பாலான கட்டுரையாளர்களினால் குறிப்பிடப்படும் கதையாக "ஆண்மை" சிறுகதை தொகுதியிலுள்ள 15ஆவது கதை விளங்குகின்றது. இதில் எஸ். பொ. இறந்து போன மகனான மித்தியை பற்றி நெஞ்சுருக வடித்துள்ளார். எஸ். பொ. சொற்களை வைத்து வார்த்தை ஜாலம் காட்டி மகிழ்வதற்கு உதாரணமாய் "சுழி" என்ற பெயரில் தமிழ் ஆசிரியர்களின் செயல்களை விவரிப்பதற்கு ஒரே நீண்ட முடிவற்ற வாக்கியமாக ஐந்தரைப் பக்கங்களுக்கு அதனை வளர்த்துச் சென்றமை ஆதாரமாய் அமைகின்றது.

எஸ். பொ. வின் "அணி" என்ற கதை பற்றியும் தொகுப்பில் சிலாகித்து கூறப்படுகின்றது. ஒரு முடிவெட்டும் சலூன் தொழிலாளி கடைக்கு வருவோர் போவோரையும் வரவேற்று தன் தொழிலை பார்த்துக் கொண்டே வேலையோடு வேலையாக பல செய்திகளை சொல்லும் உத்தி பிரமாதமாக இதில் அமைந்திருக்கிறது. இவ்வாறான பாணியிலான நடைச்சித்திரம் ஒன்றை மறைந்த மாவை வரோதயன் அவர்கள் "தாயகம்" சஞ்சிகையில் எழுதிய "வலிகாமம் வடக்கு மண்ணின் மாந்தர்கள்" என்ற ஒரு தொடரிலும் எழுதியமைக்கு எஸ். பொவின் இந்த "அணி" சிறுகதை முன்னுதாரணமாய் விளங்கி இருக்கலாம்.

ஏ. ஜே. கனகரட்னா ஒரு சமயம் "ஈழத்து தமிழ் இலக்கியத்தின் வரலாற்றை எழுத முற்படுபவர்கள், எஸ். பொ.வின் பல்துறை சார்ந்த இலக்கியப் பங்களிப்பினை புறக்கணிக்க முடியாதவாறு அவர் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்." என்று கூறியிருந்தும் இவ்வாறான தொகுப்புநூல் ஒன்று ஈழத்தில் வெளிவராது தமிழ் நாட்டில் இந்திரன், ப. தி. அரசு தொகுப்பில் வெளிவந்துள்ளமை கூட எஸ். பொ. இன்னமும் ஈழத்தவர்களால் முழுமையான கவன ஈர்ப்புக்கு உள்ளாகவில்லை என்ற துயரத்தையே வெளிக்காட்டுகின்றது. இந்நிலை நீக்கப்பட்டு அவருடைய ஒட்டுமொத்த படைப்புக்களும் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட வேண்டியது காலத்தின் தேவைப்பாடாகும்.

இந்தக் கட்டுரையை இந்திரன் கூறிய ஒரு கருத்துடனேயே நிறைவு செய்யலாம் என எண்ணுகின்றேன். எஸ். பொ.வின் "வீ" சிறுகதை தொகுப்பை இத்தனை ஆண்டுகளுக்கு பிறகு படிக்கிறபோது கூட ஒவ்வொரு வார்த்தையும் எறும்புப் புற்றுக்குள் இருக்கும் எண்ணற்ற சுரங்கப் பாதைகளைப் போல பன்முக அனுபவங்களுக்கு அழைத்துச் செல்கின்றன என்கிறார். இது எஸ். பொவின் மேற்படி படைப்புக்கு மாத்திரம் அல்லாமல் எஸ். பொ. குறித்த இந்த நூலுக்கும் பொருந்தும் என்பது எனது கருத்து.

# காயப்பட்ட மனிதனுடன் ஒரு கைப்பொழுது

– ஜீவகுமாரன், டென்மார்க்



**சி**த்திரை 2008.

எனது சிறுகதை, கவிதை தொகுதியான ''யாவும் கற்பனை அல்ல'' நூலை மித்ரா பிரசுரத்தில் பதிப்பிப்பது என்ற முழு முடிவுடன்தான் டென்மார்க்கில் இருந்து சென்னைக்குப் போயிருந்தேன். காரணம் அண்மைக்காலங்களில் வெளிவந்திருந்த மித்ரா பதிப்பகத்தின் நேர்த்தியான வேலைப்பாடு. தவிரவும் புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் பங்களிப்பு எத்தனையோ வழிகளில் எம் மக்களைச் சென்றடையும் பொழுது இலக்கியத்துறையை தலைதூக்கி நிறுத்த அன்றாடம் போராடும் எம்மவர் நிறுவனங்களுக்கு புலம் பெயர்ந்த நாட்டில் வசிக்கும் நாம் உதவவேண்டும் என்ற என்னளவிலான கோட்பாடும் தான்.

மற்றும்படி எஸ். பொ. அவர்களின் படைப்புக்களை வாசித்திருக்கிறேனே தவிர அவரைச் சந்தித்ததோ அல்லது தொலைபேசியில் கதைத்ததோ கிடையாது. நான் தொலைபேசியில் கதைத்தது எல்லாம் மித்ரா பதிப்பகத்தின் நிர்வாகியான அவரின் இளைய மகனான இந்துவிடம்தான். எஸ். பொ. வின் வரலாற்றில் வாழ்தலை அச்சமயம் வாசித் திருக்காத படியால் இந்துவை நானே மித்ரா என நினைத்து அவரை பல தடவை மித்ரா என அழைத்ததும் உண்டு.

காலை பதினொரு மணியிருக்கும். மித்ரா பதிப்பகத்தின் முன் அறையில் அமர்ந்திருந்த இந்துவிடம் கதைத்துக் கொண்டிருந்த பொழுது வெள்ளைச் சேட்டும், கக்கத்தில் கறுத்த ஆபீஸ் பையை ஒரு கை அழுத்திப் பிடித்திருக்க, மறு கையில் நாலு முழ வேட்டியைத் தூக்கிப் பிடித்த படி, ''அப்ப நான் வரட்டோ மேனை'' என்று இந்துவுடம் விடை பெற்றபடி என்னையும் பார்த்தார்.

''அப்பா இண்டைக்கு பின்னேரம் திருச்சிக்கு போறார்... இவர் டென்மார்க்கிலிருந்து வந்திருக்கிறார்'' என அவரை எனக்கும் என்னை அவருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

நான் ''வணக்கம்'' சொன்னபடி, ''எனது இந்தத் தொகுப்புக்கு நீங்கள் முன்னுரை எழுத வேண்டும் எனப் பிரியப் படுகிறன். வாசித்துப் பாருங்கள். வாசித்த பின் எழுதலாம் எனத் தோன்றினால் எழுதித் தாங்கோ'' எனச் சொன்னேன்.

என்னை வடிவாக மேலும் கீழும் பார்த்தார் – இந்த விதமாக யாரும் அவரிடம் முன்னுரை எழுதக் கேட்டிருக்க மாட்டார்கள் போலும்.

புன்முறுத்தபடி திருச்சிக்கு கொண்டு போற பையிலை எனது கையெழுத்துப் பிரதியை வைக்குமாறு இந்துவிடம் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டார்.

புத்தக வேலைகள் தொடர்ந்து கொண்டிருந்தன.

இந்தியா போகும் பொழுது வீட்டில் இருந்தும், நண்பர்களிடம் இருந்து வழமையாக தந்து விடப்பட்டிருக்கும் நீண்ட பட்டியலுடன் அடுத்த ஐந்து நாட்களும் போத்தீஸில் எம் உறவுக்காரப் பெண்ணுக்கு கூறைப்புடைவை முதல் கல்யாணி கவரிங்கில் இடுப்பு ஒட்டியாணம் வரை வேண்டுவதற்கு ஆங்காங்கே ஆட்டோக்காரர்களுடனும் ஆக்கினைப்பட்டுக் கொண்டு ஓடிக்கொண்டு இருந்தேன்.

அப்பொழுது இந்து என்னைத் தொலைபேசியில் அழைத்து அப்பா உங்களுடன் கதைக்க விரும்புகிறார் எனச் சொல்லி தனது ரிசீவரை எஸ். பொ. விடம் கொடுத்தார்.

''வணக்கம்'', சொன்னேன்.

''சொல்லுங்கள்'' – இலக்கணம் பிசகாத தடித்த குரல் மறுமுனையில்.

''நீங்கள் கதைக்க போவதாக இந்து.....'' என இழுத்தேன்.

''ஆம் நாளைக்காலை எட்டு மணிக்கு வருகிறீர்களா... காலை உணவை ஒன்றாக அருந்தியபடி அமைதியாக இருந்து பேசுவோம்''

எனக்கு அப்பாடா என இருந்தது.

எங்கேயோ ஒரு மூலையில் என் தொகுப்பிற்கு அங்கீகாரம் கிடைத்து விட்டதாக.

அந்த நிம்மதியில் பின்பு எந்த ஆட்டோக்காரன்களுடனும் முட்டுப்படாது கேட்ட காசைக் கொடுத்தபடி அன்றைய பொழுது கழிந்தது – அன்றுதான் பருத்திவீரன் இரவுக்காட்சி பார்த்தாக ஒரு ஞாபகம்.

அடுத்த நாள் சுமார் 7.30 மணிக்கே மித்ரா பதிப்பகம் போய்விட்டேன்.

அதே வெள்ளைச் சேட்டு, அதே நாலு முழ வெள்ளை வேட்டி. ஒரு கை வேட்டியின் நுனியைப் பிடித்தபடி மறுகையில் சிகரட்டைப் பிடித்தபடி... புன்னகைத்தபடி, ''வாருங்கள்... பெருமாள் உள்ளே கூட்டிக் கொண்டு நிற்கின்றார். நான் வெளியில் நின்று ஊதிக் கொண்டு நிற்கின்றேன்'' என வரவேற்றார்.

என்னை அவரே அழைத்த தைரியத்தால் கொஞ்சம் தயங்கினாலும் ''எப்பிடிக் கதையள்'' என துணிந்தே கேட்டன்.

''அருமையாக இருக்குத் தம்பி... அதுவும் எங்கடை ஆட்களின்டை போலி வாழ்க்கையை திறமாக சொல்லியிருக்கிறியள்...''

எனக்கு ஆயிரம் பிரதிகள் விற்றுத் தீர்ந்த சந்தோஷம் அவரே தொடர்ந்தார், ''உம்மடை துடக்குக்கழிவு... மற்றது

வெள்ளம்... இந்த இரண்டையும் நான் செய்யுற சிறுகதை, குறுநாவல் தொகுப்பிலை சேர்க்க அனுமதி தரவேண்டும்'' இதற்குப் பின் எனது எழுத்துக்களுக்கு என்ன அங்கீகாரம் வேண்டும்.

மித்ரா பதிப்பகத்திற்குப் பக்கத்தில் இருந்த மகுதி எனக்கு திருப்பதியாகத் தெரிந்தது.

''ஐயா கூட்டி முடிஞ்சுது... உள்ளை வாங்க'' பெருமாள் வந்து கூப்பிட்டார்.

காலை ஏழு மணியிலிருந்து பகல் பதினொரு மணிவரையிலும், பின்பு மாலை 3 மணியிலிருந்து 7 மணி வரையிலும் எஸ். பொ. அவர்களின் வலது கைத்தடி அவர்தான் – வயது எண்பது இருக்கும்.

''பெருமாள்... ஜீவகுமாரனும் என்னுடனேயே காலை உணவருந்தப் போகின்றார்... எனவே எனக்கும் உங்களுக்கும் போலவே அவருக்கும் ஓர் இடியப்ப பாசலும் தனியே கட்டிச் சம்பலும் வாங்கி வாருங்கள்''

பெருமாள் தலையாட்டி விட்டுப் போவதை வியப்புடன் பார்த்தேன். பின்பு திரும்பி உங்கடை தமிழ் அவருக்குப் புரியுமா? என்றேன்.

பழகி விட்டார் எனத் தலையாட்டினார்.

பின்பு கொஞ்சம் இலக்கியம் கதைத்துக் கொண்டு இருக்க பெருமாள் இடியப்ப பாசலுடன் வந்தார்.

இடியப்பத்தைக் கைகள் பிசைந்து கொண்டிருக்க நானே எஸ். பொ. விடம் எனது நீண்ட நாள் சந்தேகத்தை முன் வைத்தேன் – ''சாகித்த மண்டலப் பரிசு எதற்காக அவரை சாதிப்பிரதிஷ்டை செய்தது?'' என்று.

கொஞ்சம் கொஞ்சமாக மனதைத் திறந்தார் – தன் சொந்த வாழ்வு உட்பட.

இடியப்பச்சிக்கலாக என் மனம் கனக்கத் தொடங்கியது. இரண்டு மகன்களை இளவயதிலும்... எழுதியவவை எல்லாவற்றையும் சுனாமிக்கு காவு கொடுத்த பின்பும்... எழுத்தே என் வாழ்வின் சுவாசம் என அடக்குமுறைகள் எதுக்கும் அடி பணிந்து விடாமல் தமிழகத்திலேயே ஒரு யாழ்ப்பாண இலக்கியச் சண்டைக்காரனாக வாழும் அந்த ஆலமரத்தை உற்றுப் பார்த்தேன்.

மரத்தில் விழுந்த வெட்டரிவாள் காயங்கள் ஆறியிருந்தாலும் தழும்புகள் தெரியத்தான் தெரிந்தன. தழும்புகள் ஆறுவதில்லை – அது நோவதும் இல்லை – ஆனால் தடவிப் பார்க்கும் போது மட்டும் நினைவுகள் வந்து ஊசியாய்க் குத்தி விட்டுப் போகும்.

இலங்கையில் தமிழனுக்கு இழப்பதற்கு எதுவுமேயில்லை என்ற நிலையில் சாகித்திய மண்டலமே நீ ஒரு தடவை உன் தலை குனிந்து அந்த ஆலமரத்தடியில் இருந்து வந்து குந்தியிருந்து விட்டுப் போ...

தேர் இன்னமும் காத்திருக்கிறது – நீ வந்து சாமரை வீசி விட்டுப் போவதற்கு.

(பிற்குறிப்பு : இம்முறையும் எனது மக்கள்... மக்களால்... மக்களுக்காக... வெளியீடு செய்வதற்கு சென்னைக்கு சென்றிருந்தேன். ஆனால் வேணுமென்றே தனித்திருந்து அவருடன் காலைச் சாப்பாடு சாப்பிடுவதை தவிர்த்திருந்தேன்)

## முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் நான் உறுப்பினர் ஆக இருந்தது இல்லை:



முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் நான் அங்கத்தவனாக இருந்ததில்லை என்று முன்னர் ஓர் இடத்தில் சொன்னதாக ஞாபகம் இருக்கிறது. நான் உண்மையிலே முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் ஆரம்பகாலம் தொடக்கம் அங்கத்தவனாக இருக்க விரும்பவில்லை. கட்சிக்குப் பரம ஊழியனாக இருத்தல் என்பது வேறு; கட்சிக்காக இலக்கிய ஓர்மத்தைச் சமரசஞ் செய்தல் என்பது வேறு. எத்தனையோ சந்தர்ப்பங்களில், நான் 1955 ஆம் ஆண்டு மட்டக்களப்பு வாசியாக மாறியபிறகு, கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்கள் கூட மட்டக்களப்பிலே உள்ள எழுத்து ஆர்வங்களை அணிதிரட்டி ஒரு முற்போக்கு சங்கம் ஏற்படுத்தினால் என்ன என்று என்னைக் கேட்டார்கள். நான் மறுத்துவிட்டேன்.

அடிநாளில் இருந்தே முற்போக்கு எழுத்தாளர் சங்கம் எழுத்தாளருடைய சுதந்திரத்தை மதிக்கும் ஒரு ஜனநாயக அமைப்பாகச் செயற்படவில்லை; கிளைகள் பிராந்தியத்தில் வாழும் முற்போக்கு எழுத்து சிந்தனையுள்ளவர்களாலே உருவாக்கப்படுதல் வேண்டும்; கட்சியின் சர்வாதிகாரம் எழுத்தாளர் சுதந்திரத்தினைப் பாதிக்கலாகாது என்பதில் தெளிவாக இருந்தேன்.

இந்தப் போக்கு ஆர்வமான எழுத்தை ஊக்கப்படுத்தி வழிநடத்தும் என்று எனக்குத் தோன்றவில்லை. எனவேதான் நான் முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலே அங்கத்தவனாகாமலே வாழ்ந்தேன். தமிழ் நாடகப் பிரதி ஆக்கத்திற்கு சொக்கனுக்கு முதற்பரிசும் எனக்கு இரண்டாவது பரிசும் கிடைத்த பொழுது, அந்தப் பரிசின் மூலம் மட்டக்களப்பு எழுத்துக்கு நான் கௌரவம் சம்பாதித்துத் தந்ததாகக் கல்முனை எழுத்தாளர் சங்கத்தினர் என்னைப் பாராட்டி விழா எடுத்துக் கௌரவித்தார்கள்.

(ஞானம் நேர்காணல் ''தீதும் நன்றும்'' தொகுப்பிலிருந்து – பக்கம் 32, 33)

# எஸ்.பொ.

## பேச்சிலும், எழுத்திலும் ஒரு நகைச்சுவையாளர்!

– திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

எஸ்.பொ. என்று சிறப்பித்து அழைக்கப்படும் எஸ். பொன்னுத்துரை அவர்கள் ஆழ்ந்து சிந்தித்து, சிந்தித்ததை நகைச்சுவையோடு பேச்சிலும் எழுத்திலும் தருபவராவார். எஸ்.பொ பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு நூல்களை எழுதி வெளியிட்டவரும் கூட. இந்நிலையில், வெளிநாட்டில் அவர் வதியும் போது எழுதி வெளியிட்ட 'நனவிடை தோய்தல்' என்ற நூல் நகைச்சுவையினூடாக ஒரு கால கட்டத்தில் யாழ்ப்பாண வரலாற்றைத் தர முயற்சிக்கின்றது. வரலாற்றை 'சீரியஸாக' எடுத்துச் சொல்லும் நூலாக இந்த நூல் வெளிவர வில்லை. சுமார் 50 வருட காலம் யாழ்ப்பாணமும் அதன் கலாசாரமும் என்ன மாதிரியான ஒரு போக்கைக் கொண்டிருந்தது என்பதை இந்த நூல் நகைச்சுவையினூடாக நிமிர்த்தி வைத்திருக்கின்றது. றொபெட் நொக்ஸ், குவைரோஸ் சுவாமியார் போன்ற வரலாற்று நூல்களும், வையா பாடல், மட்டக்களப்பு மான்மியம் போன்ற நூல்களும் வரலாற்றில் இருந்து மறைந்து போக விடாமல் பாதுகாக்க நூலக உலகம் எவ்வாறு தயாராக உள்ளதோ அது போன்று 'நனவிடை தோய்தல்' என்ற இந்த நூலும் தமிழ் இலக்கிய உலகத்தில் இருந்து விடுபடாமல் பாதுகாக்கப்பட வேண்டும்.

சமீபகாலமாக யாழ்ப்பாண இடப்பெயர்வு போன்ற நூல்களும், வெளிநாட்டில் வெளியிடப்படும் அந்தக்கால யாழ்ப்பாணம் என்ற தலைப்பினிலே வெளியிடப்படும் நூல்களும் அன்று நாம் இருந்த கலாசார, பொருளாதார, இலக்கிய மறுமலர்ச்சியின் ஒரு கால கட்டத்தை நினைவு கூருவனவாக இருக்கின்றன. அத்துடன் தில்லைச்சிவன் எழுதிய அந்தக் காலக் கதைகள் என்ற நூலும் இதே பாணியில் அமைந்தனவே. நாம் வாழ்ந்த யாழ்ப்பாணம் குடா நாடே ஆயினும் அது ஒரு நாட்டுக்குரிய பண்பினைத் தன்னகத்தே கொண்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. எஸ்.பொ. எழுதிய 'நனவிடை தோய்தல்' என்ற இந்த நூலும் தமிழ் மொழியின் ஊடாகத் தமிழ் மக்களின் வரலாறு, பண்பாடு என்பனவற்றைச் சலிக்காத தமிழ் நடையில் அங்கதமாக எழுதி வெளியிடப்பட்டுள்ளது. இதில் உள்ள சில விடயங்கள் அவர் பாணியில் கூற வரும் போது 'அப்படியா அன்று யாழ்ப்பாணம் இருந்தது?' இன்னும் சில விடயங்களைச் சொல்லமாட்டாரா? என ஆதங்கப்பட வைக்கின்றது.

இந்நூலில் சுவராஸ்யமாகச் சொல்லப்பட்ட சில விசயங்களை இப்போது நாம் பார்ப்போம்.

### அந்தக் காலச் சைக்கிள்கள்

கமலா சர்க்கஸ்காரர்கள் வந்து யாழ்ப்பாணத்தை ஒரு கலக்குக் கலக்கியது, இன்றைய வழுக்கத் தலைவர்கட்கும் நரை தலைவர்களுக்கும் நல்லாக ஞாபகம் இருக்கலாம். சிங்கள இனவாதத்தின் கடுப்புக்கும், கொதிப்புக்கும் இலக்கான யாழ் நூல் நிலையம் அமைந்துள்ள இடம் அக்காலத்தில் பொட்டல் நிலம். யாழ் நகர் மாடுகளின் மேய்ச்சல் மைதானம், பொதுக்கூட்டங்களின் அரங்கு அங்குதான். கமலா சர்க்கஸ் 'டேரா' போட்டு யாழ்ப்பாணக் கசவாரங்களுடைய காசுகளை வறுகி எடுத்தவனுகள். பாதாளக் கூண்டிலே நடத்தப்பட்ட மோட்டார்ச் சைக்கிள் சாகசத்தை உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பாக்க வேணும். மெக்கானிக் அப்பாமணியை வெண்ட மோட்டார்ச் சைக்கிள் யாழ்ப்பாணத்தில் இல்லை. அவர் றோட்டிலை சர்க்கஸ் 'றிக்ஸ்' காட்டி, கனகாலம் ஆஸ்பத்திரியிலை கிடந்தவர். பேந்தும் 'ரேசிலை' அவரை அடிக்கேலாது. கொட்டடித் தெய்வேந்திரன், மோட்டார் றேஸ் முத்தையா எல்லாம் எந்த மூலைக்கு? சிவன் கோயிலடிச் சீனனும் ரேசிலை விண்ணன் என்று பெயர் எடுத்தவன்.

எனக்கென்னவோ அந்தக் கமலா 'சர்க்கஸ்' சாகசங்களை மறக்கொண்ணா. அந்தரத்திலை கட்டப்பட்ட கொடிக் கம்பியிலே, ஒற்றைச் சில்லுச் சைக்கிள்களில் குடை பிடித்தும், பிடிக்காமலும் அவள் அவளுகள் செய்த 'திறிக்கீசுகள்' கொஞ்சமே? எப்படியும் சைக்கிள் ஓட வேணும் எண்ட வெறியை அவளுகளுடைய நூதனமான குண்டிநெளிப்புகளும் தூண்டியும் இருக்கலாம்.

(...பக்கம் 64–65ல் இருந்து)

### பொங்கல் எங்கள் தைப் பொங்கல்

எமது கலாசார விடயங்களை அவர் அன்று இருந்தபடியே சொல்லும் பாணி வியக்கத்தக்கது. அது யாழ்ப்பாணத் தமிழ் நடைக்கும் புதிய மெருகைத் தோற்றுவித்துள்ளது.

......... பொங்கல் முற்றத்திலே தான் நடக்கும். பொங்கல் நடக்கும் இடத்தில் மணலைத் துடைத்து, வெறுந்தரை யாக்கி இளங்கன்றுச் சாணகத்தால், அம்மா மெழுகி வைச்சிடுவா. சீனவெடி கொளுத்தி, மத்தாப்புக் கனவுகளிலே, தூங்கிய நாங்கள், எழும்பி முழிப்பது முற்றத்திலே புதுக் கோலத்திலே தான். அன்று, அதிகாலையிலே பெண்கள் தோய்ந்து முழுகி விடுவார்கள். தலைமுடியுடன் வெள்ளை 'ரவுக்கை' ஒன்றைச் சேர்த்து முடிந்திருந்தால் அம்மா முழுகிவிட்டா என்பது அர்த்தம். குத்துவிளக்குகள், சருவச் சட்டிகள், தாம்பாளங்கள் எல்லாம் புதிசு போல் இருக்கும், பொங்கலுக்கான அரிசி, பயறு, சர்க்கரை, பொங்கலுக்கு உருசி சேர்க்கும் வாசனைப் பொருட்கள் எல்லாம் தனித்தனியாக இருக்கும். வாழைப்பழத்துக்கு மூழ் வெட்டுவெது இளநீர் சீவி எடுப்பது ஆகியன பொங்கல் துவங்கும் வரை காத்திருக்கும்.

சடைச்சிருக்கும் கறுத்தக் கொழும்பான் மாமரத்துக்குக் கீழ் இருந்து தான் ஆச்சி, அம்மா, அக்கா ஆகிய பெண்டுகள் வேலை பார்ப்பினம். அம்மாவும், அப்பாவும் திருவலைக் குத்தியில் இருப்பினம். ஆச்சி எப்பவும் ஒரு மேஸ்திரி போலை. அவவுக்கென்று ஒரு பலகைக் குத்தி இருந்தது. அது அவவின்ரை முதிசம் போலை!

பொங்கல் நடத்தும் முகாமை ஓர் ஆணுக்கு.... பொங்கல் உலையில் யார் முதலில் அள்ளிப் போடுவாரோ அவர்தான் பொங்கல்காரர். அரிசி மா, மஞ்சள் மா, சிவப்புச் செங்கல் மா ஆகியன கலந்து பொங்கலுக்கான இடம் கோலமிடப்படும். பொங்கல் காரன் தோய்ஞ்சு வந்தவுடன் கோலம் போடத் தொடங்குவார். அவர் தொடக்கி வைத்தால் வசதியைப் பொறத்து மற்றவர்கள் அவருக்கு உதவி செய்யலாம். நல்ல நேரம் பார்த்து அம்மா செய்த அடுப்புக் கற்கள் மூன்று அடுப்பாக வைக்கப்படும். புதுப்பானையைக் கழுவி, அதில் அளவுக்கு நீர் வைத்து, அந்தப் பானையின் கழுத்தைச் சுற்றி மஞ்சள், இஞ்சி மா செடிகளுடன் மாவிலைத் தோறணமும் கட்டப்படும். அந்தப் பானை முதலிலே மூன்று சிரட்டைகளினால் உருவாகிய அணைப்பில் வைக்கப்படும். பால் தேங்காய்ப்பால் ஆகியன உரிய அளவிலே விடப்படும். பொங்கல்காரன் பானைக்கு விபூதிப் பூச்சுகள் வைச்சதும், பொங்கல் பானை அடுப்பிலே ஏற்றப்படும். பொங்கல் பானை வைக்கும் போது சீனவெடிகள் பம்பலாய் வெடிக்கும். பானை எத்தனை மணிக்கு அடுப்பிலே ஏற வேண்டும் என்பதனைப் பெரிய மாமா பஞ்சாங்கத்தைப் பார்த்துச் சொல்லிப் போடுவார்.

பொங்கல் அடுப்புக்குக் கண்ட கண்ட விறகுகளும் வைக்க அப்பையா விட மாட்டார். இதுக்குக்கூட அவர்தான் பொறுப்பு. நல்லாத் தணல் விழக்கூடிய, நின்று எரியக்கூடிய காட்டுக் கம்புகள், தென்னம்பாளைகள், பாளைகளைத் தடல் வேறு பூக்கம் பாளை வேறாகப் பிரித்து மல்லாக்காய்ப் போட்ட உரலிலே, ஏக அளவுக்குக் கொடுவாக் கத்தியால் வெட்டி வைப்பார். அடுப்பை மூட்டுறதுக்கு பனம் பன்னாடை ஏற்றது. எல்லாப் பக்கமும் ஒரே அளவான தீ நாக்குகளை எழுப்பி அடுப்பு எரிந்தால்தான் அவருக்குப் பத்தியம். பொங்கிப் பால் நுரைகள் பானையின் விளிம்பிலே நர்த்தனம் ஆடிச் சடுதியாகச் சரிந்து அடுப்புக்குள் கொட்டப்படும். வெண்தாடிக் கிழவர் 'அரோகரா' போடுவார். ஆச்சியின் நாக்கூட இலேசான குரவை ஒலி எழுப்பும். கொடிக்கம்பியிலே போடப்பட்டிருந்த சீன வெடிப் பட்டாசுகள் எல்லாம் ஏக காலத்தில் வெடிக்க விடப்படும். இந்தச் சமயத்திலே பென்னம்பெரிய சருவச் சட்டியிலே கழுவி வைக்கப்பட்ட பச்சை அரிசியும் பயறும் பொங்கல் பானையில் போடப்படும். பொங்கல்காரன் அடுப்பினை மூன்ற தரம் வலம் வந்து பக்தி சிரத்தையுடன் இரண்டு கைகளாலும் கோலி மூன்று தடவைகள் பானைக்குள் அள்ளிப் போடுவார். அந்த நேரம் பென்னம் பெரிய சீனவெடிக் கோவையைக் கொழுத்தும் அப்பையா மாவடிப் பக்கமாக வீசி, ஆச்சியின் ஏச்சை வாங்கிக் கொள்ளவும் தப்பமாட்டார்.

பொங்கலை யதார்த்த ரீதியில் கொண்டு வரும் எஸ்.பொ.வின் இத்தகைய பின்னோக்கிப் பார்க்கும் இந்த மொழிநடை எல்லார்க்கும் வராது என்பது வெளிப்படை.

**கனவுகாணும் உரிமை கூடத் தமிழனுக்கு இல்லையா?**

இந்த நூலில் வெளி என்ற சுவராஸ்யமான கட்டுரை காணப்படுகின்றது. இக்கட்டுரையின் சில பகுதிகளைக் கீழே தருகின்றேன்.

......... கோஷ்டி விளையாட்டுக்கும் எனக்கும் ஒரு ராசி உண்டு. நான் எந்தக் கோஸ்டியில் இருந்தாலும் அந்தக் கோஷ்டி தோற்பது நிச்சயம். இதனால் என்னை விளையாட்டுக்களில் சேர்க்கப் பஞ்சிப்பட்டார்கள். இந்த அவமானத்தாலும் நான் வாசிப்புப் பழக்கத்தை வாலாயப்படுத்தத் தொடங்கினேன். விளையாட்டுத் துறையில் அடைந்த தோல்விகள், இன்னொரு துறையிலே வெற்றி பெற வேண்டும் என்ற வெறியை என் பிஞ்சு நெஞ்சிலே ஊன்றி இருத்தல் கூடும் என்பதை இப்போது தீர்மானிக்க முடிகின்றது.

Kites- பட்டம் – காற்றாடி – கொடி என்ற சொற்கள் ஒரே பொருளைக் குறிக்கும். கொடி ஏத்தினால் நாங்களே ஆகாசத்திலே பறக்கிறது போல ஓர் உணர்வு ஏற்படும். மொறட்டுவ சிங்களவர்கள் தான் உலகத்துக்கே கொடி ஏத்தக் கற்றுக் கொடுத்தவங்க என்ற கணக்கிலைதான் இந்தக் காலத்திலை கொழும்புப் பத்திரிகைகளிலை எழுதுகிறாங்கள். கலர்ப்படங்களும் பிரசுரிக்கப்பட்டு அட்டகாசம், ஒரு புளுகைச் சொல்லி காலப் போக்கிலே அதையே உண்மை என நம்பும் வியாதி மகாவம்ச காலத்திலிருந்தே சிங்களவங்களுக்கு உண்டு. இந்த அணாப்புதல்களும், கெறுக்களுந்தான் இலங்கை பீயாப் போனதுக்குக் காரணம். யாழ்ப்பாணத்துக்கு கொடி ஏத்துற விளையாட்டிலை தனி இடம் உண்டு.

பாம்புக் கொடி தான் மிகவும் எளியது. சீனாக்காரன்களும், அவங்களைக் கொப்பியடிக்க இலங்கையின் 'சீனாப் புள்ளிகளும் ஏத்துற பாம்புக் கொடிகள், பாம்பின் உருவ அமைப்பில் இருக்கும். யாழ்ப்பாணம் பாம்புக் கொடி 'More Symbolic' படம் எடுத்தாடும். பாம்பின் தலையை உருவகப்படுத்துவது போலக் கொடி. அதற்குக் கட்டும் வாலை, நாம் பாம்பின் உடலாக உருவகப்படுத்திப் பார்க்க வேண்டும்.' சின்ன வயசிலேயே பாம்புக் கொடி கட்டப் பழகிக் கொண்டேன். அப்பையா தான் குரு. நான் பாம்புக் கொடி ஏத்தத் தொடங்கிவிட்டால் நான் குளிக்கும் போது கட்டுகிற கோவணங்களுக்கும் வந்தது ஆபத்து. அவை கொடிகளுக்கான வால்களாக மாறி விடும். பேந்து குளிக்கிறதுக்குக் கோவணம் இல்லாமல் நான் பட்ட அவதிகளை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகின்றது.

நான் பாம்புக்கொடி கட்டும் வித்தை நைஜீரியாவிலும் கொடி கட்டிப் பறந்தது. நைஜீரியாவில் இருந்து இன்று கனடாவிலும் இங்கிலாந்திலும் குடியேறியுள்ள தமிழ்ப் பிள்ளைகள் பலருக்கும் நைஜீரியாக் காற்றிலே பறக்க விடுவதற்கு எத்தனையோ பாம்புக் கொடிகளைக் கட்டிக் கொடுத்தேன் என்பதை நினைக்கும் போது இப்போதும் சுகமாக இருக்கின்றது.

ஆடிக் காத்திலை அம்மியும் பறக்கும் என்பார்கள். அம்மி பறந்ததை நான் கண்டதில்லை. அம்மி போன்ற பாரமான கொடிகள் பறந்ததைக் கண்டிருக்கின்றேன். கொடி பறக்க விடுகிற காலத்திலை காற்று எப்படி வீசும் தெரியுமே? அது ஒரு காத்துத் தான். பாம்புக் கொடி – பருந்துக் கொடி– கொக்குக் கொடி– பெட்டிக் கொடி சானாக் கொடி எத்தனை நிறங்களிலே எத்தனை வகையான கொடிகள் வானத்தை மொய்த்துப் பறந்து கொண்டிருக்கும். கொடிச் சண்டை போடுறதுக்குப் பருந்து கொடி தான் ஏற்றது. சானாக் கொடிக்கு விண் கட்டிக் கூவச் செய்யலாம். ஆனால் விண் கூவிப் பறக்க விடுவதற்கு எட்டு மூலைக் கொடி தான் விசேசம். எங்கடை அயலிலே கொடி ஏத்துறதிலை ரங்கண்ணாவை அடிக்கிறதுக்கு ஒருதரும் பிறக்கல்லே.... அவர் தபால் கந்தோரிலே பெரிய வேலை. கொடி ஏத்துறதுக்கு அவரைப் போலச் செலவழிக்க எவராலும் ஏலாது. ஒருமுறை அவர் பன்னிரண்டு அடி உயரமுள்ள எட்டு மூலைக் கொடி ஒன்று செய்தவர். இது செய்வதற்கு ஸ்பெசலாகச் சலாகைகளும் மூங்கில்களும் பிரம்புகளும் தேவைப்பட்டனவாம். எத்தனையோ கயிறு முடிச்சுகளைப் பிரித்து எடுத்துத் தான் வால் கட்டினார்கள். அது ஏற்றுறதுக்கான நூலை ரெங்கண்ணா கொழும்புக்குப் போய் வாங்கி வந்தவராம். கடைசியிலை அதைப் பூட்டுகிறதுக்குத்

திருநெல்வேலியில் இருக்கின்ற ஒரு தச்சுக்கிழவர் வந்துதான் உதவி செய்தவராம். அதைப் பறக்க விடுவதற்கு மாத்திரம் பத்துப் பேருடைய உதவி தேவைப்பட்டதாம். தனி ஆள் எண்டால் இழுத்துக் கொண்டு போயிடும். ஏத்தின பிறகு பூவரசம் மொக்கு ஒன்றைச் சுற்றித்தான் நூல் விட்டவை. பூவரச மரம்பாறிப் போகும் என்று கிழவர்கள் அந்தரப்பட்டதும் உண்டு.

அன்றிரவு முழுவதும் அயல் எல்லாம் அந்த எட்டு மூலைக் கொடி எழுப்பிய விண்கூவல் கேட்டுக் கொண்டே இருந்தது. வீடுகளிலும் அது பற்றித்தான் பேச்சு. 'கைக்குளஞ் சந்தையார் ஏத்துற ஆள் கொடியைப் 'பீட்' அடிக்க இயலாது என்று அப்பையா தன் மண்ணின் பெருமை பேசப்போய், வகையாக மாட்டிக் கொண்டார். அன்றில் இருந்து 'ஆள் கொடி' பறக்க விடுவதைக் காட்டும்படி நுழைக்கத்துவங்கினேன். நல்லூரிலே பண்டாரக் குளத்து வெளியில், ஆள் கொடி ஏறிக் கொண்டிருப்பதை அப்பையா கரிசனையுடன் என்னைக் கூட்டிக் கொண்டுபோய்க் காட்டினார். ஆள் கொடியும் பெரிசுதான். அதற்கு 'பல்பு'களும் பூட்டியிருந்தார்கள்.

ரெங்கண்ணா சும்மா இருக்கவில்லை. ராசா அண்ணரின் உதவியுடன் அடுத்த கிழமையே தன்னுடைய எட்டு மூலைக் கொடிக்கும் 'பல்பு' பூட்டிப் பறக்க வைத்தார். இரவிலே நிர்மலமான வானத்திலே 'பல்புகள்' நட்சத்திரங்கள் போல் 'டால்' வீச விண்கூவுவதன் இசை மழையாகப் பெய்ய அந்த வெண்ணிற எட்டு மூலைக் கொடி பறந்த அழகே அழகு. நான் சாகும் வரை அந்த அற்புதக் காட்சியை மறக்க மாட்டேன்.

விளையாட்டின் கைவண்ணம் அன்று ஓங்காரமிட்ட யாழ்ப்பாணத்து மண்ணிலே இன்று தமிழ் உயிர்களைப் பலி கேட்டு 'Helicopter'கள் உறுமித்திரியும் செய்தியைக் கேட்கும்போது மனம் வியாகூலம் அடைகின்றது. மீண்டும் அந்த மண்ணிலே பிரமாண்டமான ஆள் கொடிகளையும் ரெங்கண்ணாவின் எட்டு மூலைக் கொடிகளையும் பறக்கவிட்டு அழகு பார்க்க வேண்டும், என்கின்ற எனது இனிய தமிழ்க் கனவினை யாரால் கலைக்க முடியும்? ஐயா, At least கனவுகாணும் உரிமையாவது தமிழனுக்கு இல்லையா?

* * *

எஸ்.பொன்னுத்துரையின் 'நனவிடை தோய்தல்' என்ற நூல் அவரின் இளமைக்காலத்தில் காணப்பட்ட பல்வேறு விடயங்களையும் சுவராஸ்யமாகச் சொல்லுவதில் பெருத்த வெற்றியினைக் கண்டுள்ளது. அது 'கமறா' ஒன்றின் மூலம் எடுத்த புகைப்படம் போல, இப்போதும் மனக்கண் மூலம் தோன்றும் நிஜம்போல் உரைநடையில் விபரிக்கப்படும் போது வாசகனை வானில் பறக்க வைக்கின்றது. அந்தக் கால யாழ்ப்பாணத்தைப் பார்த்த வயோதிபர்கள் கூட இந்த நூலை வாசித்தால் பின்னோக்கி இருக்கின்ற விடயங்களை முன்னோக்கி வாசித்து ரசிப்பர். இரண்டாம் உலக யுத்த முடிவில் வின்சன் சர்ச்சில் தனது அனுபவங்களை நூல் வடிவில் ஐந்து பாகங்களாக வெளியிட்டார்.

ஒரு வகையில் பார்க்கப் போனால் பின்னோக்கிப் பார்க்கும் எந்த நூலும் மொழிநடையில் சுவாராஸ்யமாக எழுதப்பட்டால் அந்த நூலை வாசகர்கள் தேடித் திரிந்து பெற்று இன்ப சுகம் அனுபவிப்பர். 'நனவிடை தோய்தல்' என்ற நூலுக்கு அந்தத் தராதரம் இருப்பதையே சொல்ல வருகின்றேன்.

**காராளி முத்தையன் : சுவாராஸ்யமான விடயம்**

'நனவிடை தோய்தல்' என்ற நூலில் தனிமனித பாத்திரங்கள் பல வருகின்றன. அதில் சுவராஸ்யமான பாத்திரங்கள் பல. அதில் ஒன்று காராளி முத்தையன். காராளி முத்தையன் பற்றி எஸ்.பொ. என்ன சொல்கிறார் என்பதையும் பார்த்து விடுவோமே!

இந்த நூற்றாண்டிலே யாழ்ப்பாணத்திலே வாழ்ந்த அசகாய சூரர்களிலே முதல்மையானவன் காராளி முத்தையன். அவன் பெயரைக் கேட்டால் அழுத பிள்ளை பால் குடிக்கும்; படுத்த பிள்ளை மூத்திரம் பெய்யும் என்று சொல்லுவார்கள். (பின்னாளில் 'யக்கடயா' என்று இரும்பு மனிதன் என்றும் புகழ்பெற்று வட மத்திய மாகாணத்தை ஒரு கலக்குக் கலக்கியவனுக்குக் காராளி முத்தையனே ஆதர்சமாக விளங்கினான் என்று என் பெரியண்ணன் அடிக்கடி சொல்லுவார். 'யக்கடயா' வைக் கைது செய்த பொலிஸ் கோஸ்டியிலே என் பெரியண்ணன் சார்ஜண்டாகப் பணி புரிந்தவர்) காராளி முத்தையனின் பெயரைக் கேட்டு, வீடுகளைப் பூட்டி, ஆறுமணிக்கு முன்னரே வீட்டிலே அடைஞ்சு, பய ஜுரத்துடன் யாழ்ப்பாணப் பணக்கார வர்க்கம் வாழ்ந்து கொண்டிருந்தது. தெருவிலோ பொது இடங்களிலோ அவனைப் பற்றிப் பேசுவதற்கும் மக்கள் பயப்பட்டார்கள். அவன் தூணிலும் துரும்பிலும் ஒளிக்கக் கூடிய ஜகஜால மாயாவி என்று அக்கால மக்கள் சத்தியமாகவே நம்பினார்கள். இத்தனை மணிக்கு உனக்குச் சாவு என்று நேரம் குறித்து, கொலைகள் செய்வானாம்! பகிரங்கமாக அறிவித்து கொள்ளை அடிப்பானாம். ஒட்டை நாகேசர் பயந்து பயந்து வெண் தாடிக் கிழவருக்குக் கதை சொல்வார். ஒரு நாள், மணற்கும்பிலிலே அரிக்கன் லாம்பை வைச்சுக் கொண்டு அப்பையா மேலாண்டி மாமாவுக்குக் கதை சொல்லிக் கொண்டிருந்தார்.

"நான் நேத்து" மாரிமுத்து மச்சானைப் பார்க்க முலவைக்கு போனகனல்லே....பேந்து அவரோடை அலுப்பாந்திப் பக்கமாக ஒரு பணிவிடை.... அப்ப நான் காராளி முத்தையனைக் கண்டனான். என்ரை நிறம், என்னிலும் கட்டை என்னிலும் மெல்லிசு நம்ப மாட்டாய். முகமெண்டால் பசுபதி போலை.. மச்சானைத் தெரியும். கண்டோனை சிரிச்சவன்" என்று அப்பையா காராளி முத்தையனுக்கு மனித சாங்கங்கள் கற்பித்துப் பேசிக் கொண்டிருந்தது எனக்குப் பெரிய புதினமாகப் பட்டது. அப்பையா சொன்ன சில வாரங்களில் பின்னர் நானே காராளி முத்தையனைக் காணுவேன் என்று கனவிலும் நினைத்து இருக்க வில்லை. அந்தக் காலத்தில் சம்பத்திரிசியார் கல்லூரி விளையாட்டு மைதானம் செமினறியில் தெற்கில் கண்டி வீதியும், கிழக்கில் கோயில் வீதியும் எல்லைகளாக அமைந்திருந்தது. மைதானத்தின் தெற்கு எல்லை தேவரிக்குளம். குளத்தையும் மைதானத்தையும் உயரமான மதில் பிரித்து வைத்தது.

யாழ்ப்பாணப் புகையிரத நிலையத்தையும் அலுப்பாந்தியையும் இணைக்கும் ரயில் பாதை தேவரிக்குளத்தை ஒட்டினாற்போல வலது விலாவில் திருக்குடும்பக் கன்னியர் மடத்தை விலத்திக் கொண்டு செல்லும் அந்தக் காலத்தில் 'குட்ஸ்' வண்டிகள் இப்பாதையில் ஓடின. அந்த மைதானத்தில் நடைபெற்ற மறக்க முடியாத கிரிக்கெட் மாட்சுகளுக்கு நான் சாட்சி. எங்கள் கல்லூரிக்கும் பரியோவான் கல்லூரிக்கும் இடையில் நடைபெறும் 'மாட்சு'கள் குடாநாட்டின் கவனத்தைக் கவர்ந்து இழுத்தது. அன்றைக்கு அந்த 'மாட்ச்' தான் நடந்தது. வெயிலும் கொளுத்தத் தொடங்கியது. இருந்தாற் போல பார்வையாளர் மத்தியிலே பரபரப்பு. 'அது காராளி முத்தையன் அது காராளி முத்தையன் என்ற குசுகுசுப்பு. எல்லார் பார்வையும் மதில் உச்சியிலே தன்னந்தனியனாய் அமர்ந்திருந்த உருவத்தின் மீது

உறைநிலை பெற்றது. தூரத்தில் சிறிய உருவமாகத் தெரிந்தது. கறுப்பு நிற 'ஆம் கட்' பெனியனும் சாறமும் படு காஸுவலான பாவம், அப்பையா சொன்ன அடையாளங்களை முழுமையாகப் பொருத்திப் பார்க்க முடியவில்லை. அரை மணித்தியாலம், மிஞ்சிப் போனால் ஒரு மணித்தியாலயம் நிமிர்ந்து பார்த்தால் ஆளைக் காண முடியல்லே....

வீடு திரும்பும்போது காராளி முத்தையன் எப்படி மதிலிலை ஏறியிருப்பான் என்பதைப் பார்ப்பது என்று தீர்மானித்தோம். எந்தத் தடயத்தையும் பெற முடியவில்லை. எங்களுடைய துருதுருப்பைப் பார்த்த அலுப்பாந்தி ரயில்பாதையில் அமர்ந்து இருந்த ஒரு கிழவர் சொன்னார் ஒரு கம்பு எடுத்தான் எண்டால் உந்த மதில் என் பனைமர உயரத்தையும் காராளி முத்தையன் தாண்டிப் போவான்.... இந்தத் துளவாரங்களிலை மினைக்கெடாமல் வீட்டை போய் ஒழுங்காகப் படியுங்கோ... இந்தச் சம்பவத்தின் சில மாதங்களின் பின்னர் 'காராளி முத்தையன் கைது செய்யப்பட்டு விட்டான்' என்கிற செய்தி பரபரப்பாகப் பேசப்பட்டது. ஒவ்வொரு ஆணின் உயர்ச்சிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்று சொல்லுவார்கள். உண்மை உண்மை. ஒவ்வொரு வீரனின் வீழ்ச்சிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருந்தாள் என்பதும் மெய்.... தேவரிக்குளத்தடியில் வசித்த அவனுடைய அன்பைப் பெற்ற பெண் மூலம் தான் அவன் கைது செய்யப்பட்டான். "காராளி முத்தையன் நல்ல சூழலிலே வளர்க்கப்பட்டு இருந்தால், பெரிய மனிஷனாக வந்திருப்பான், அவன் மகா மூளைசாலி" என்று கெயில் சேர் வெளியிட்ட கருத்து ஒன்று, இன்றும் என் செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவன் ஒரு காலத்தின் தைரியத்தைப் பிரதிபலித்தான். "He, in a sense was the Robbinhood of Jaffna" முத்தையனின் பெயருடன் 'காராளி' என்கிற பட்டம் எப்படி ஒட்டிக் கொண்டது என்ற விபரம் எனக்கு தெரியாது.

மேலே சொல்லப்பட்ட விடயம் ஒரு கால கட்ட யாழ்ப்பாணத்தைக் குறிப்பிட்டுக் காட்டியது. அவற்றை நிறைவாக வாசிக்க 'நனவிடை தோய்தல்' என்ற நூலை முற்றாகப் படிக்க வேண்டும்.

**மறக்காத சிரிப்புகள் சில**

பெருமாள் கோயிலின் கிழக்கு வீதியிலே நடைபெற்ற காத்தவராயன் கூத்து இன்னமும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது. புகழ் பூத்த சண்டியன் "அழுக்கடைச்" சண்முகத்தின் மோதாவிலே நடந்தது. வேட்டையாடச் செல்லும் காத்தவராயன் ஆரியப் பூமாலை என்னும் இளவரசி மீது காதல் வயப்படுகின்றான். அவனுடைய தாய், அவளை மறந்து முறை மச்சாள்களுள் ஒருத்தியை மணந்து கொள்ளுமாறு அறிவுரை வழங்குவாள். (நாவல் பழம் போல நல்ல கறுப்பியம்மா.... என்றெல்லாம் மச்சாள் மாரின் அழகைக் கிண்டல் செய்யும் அவன் காலால் நடக்காமலே தொட்டியத்துச் சின்னான் – அவன் காற்றாய்ப் பறந்து வந்தான் தொட்டியத்துச் சின்னான் என அழைத்ததும் உதவிக்கு வரும் தோழனுடன் 'வளையல் வாங்கல்லையோ வளையல்' வியாபாரியின் வேடத்தில் ஆரியப்பூமாலையின் அரண்மனைக்கு வருவான். அவளுடைய கையிலே மாட்டிவிடும் போது வளையல்கள் பல உடையும். அந்தச் சாட்டிலே காதலர்கள் இருவரும் ஸ்பரிசம் மாத்திக் கொள்வார்கள். இந்தக் கட்டத்திலே அழுக்கடைச் சண்முகம் கம்பீரமாக விசில் அடித்துக் கூத்துக்குக்களை சேர்ப்பார். ரசிகப் பெருமக்கள் பலரும் விசிலடிச்சான் குஞ்சுகளாக மாறுவார்கள். பெண்கள் பகுதியில் இருந்து ஏதோ அருவருப்பை மிதிச்சது போலக் கூச்சல் எழும்பும். விசிலடியும், பொய்க் கோபமான எதிர்க் கூச்சலும் கொஞ்சநேரம் வலு முசுப்பாத்தியாக இருக்கும்.

...... விடிய விடிய முழிப்பதற்குக் கிடைக்கும் 'டானிக்' போல... சிவபெருமான் மாரியம்மன் போல வளையற்காரனும் தேவலோகத்தில் வாழும் மாந்தர்களாகவே கனகாலம் நினைத்திருந்தேன். இவ்வாறு பல்வேறு கட்டுரைகள் நகைச்சுவையுடன், சுவாராஸ்யமாக இந்த நூலில் காணப்படுகின்றன. விரிவஞ்சி இதனை இத்துடன் நிற்பாட்டி, இந்த நூலை வாசிக்காதவர்களும் இனியாவது வாசித்துத் தீர்க்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.


**யாழ்ப்பாணத்தில் சில எழுத்தாளர்களுக்கு ஆரம்பகாலப் படைப்பு இலக்கியங்களை எஸ்.பொவே வழங்கியுள்ளார். இதனை அவரே பல இடங்களில் கூறியுள்ளார். இதுபோல் மட்டக்களப்பிலும் சில எழுத்தாளர்கட்கு ஆரம்பகாலப் படைப்புக்களைத் தானே வழங்கி 'குதிரை ஓடிய' எழுத்தாளர்களாக மாற்றினார். இவர்கள் இன்று பிரபல்யமான இடங்களில் இருப்பதுவும் இவரின் கைவிசேஷத்தையே காட்டுகின்றது. இவற்றையும் கூட ஒரு நகைச்சுவையாக இன்றைய கால கட்டத்தில் கொள்ள முடியும்.**

**எதிர்மறைப் பாத்திரம்**

எஸ்.பொன்னுத்துரை அவர்கள் பேச்சிலும், எழுத்திலும் ஒரு நகைச்சுவையாளர் என்பதில் ஐயம் இல்லை. அவர் எழுதிய 'தீ' 'வீ' என்ற நாவல்களும் பாலியல் ரீதியான நகை உணர்வுடன் தான் அவை நகர்த்தப்படுகின்றன. இது இவ்வாறு இருந்தபோதும் கொள்கை ரீதியில் முரண்பட்டோர்களையும் நகைச்சுவையாக அணுகி அவர்களையும் பகைக்காமல் இருக்கும் வல்லமை எஸ்.பொவுக்கு இருந்திருந்தால் அதுவும் அவருக்குப் பெரும் புகழாக அமைந்திருக்கும். ஆனால் அவரின் இலக்கிய உணர்வு முறை அவ்வாறு அமைந்திருக்கவில்லை. பேராசிரியர் க. கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோரை இவர் பேச்சிலும், எழுத்திலும் தாக்கியமை தனிப்பட்ட தாக்காகவே கொள்ள முடியும்!

யாழ்ப்பாணத்தில் சில எழுத்தாளர்களுக்கு ஆரம்பகாலப் படைப்பு இலக்கியங்களை எஸ்.பொவே வழங்கியுள்ளார். இதனை அவரே பல இடங்களில் கூறியுள்ளார். இதுபோல் மட்டக்களப்பிலும் சில எழுத்தாளர்கட்கு ஆரம்பகாலப் படைப்புக்களைத் தானே வழங்கி 'குதிரை ஓடிய' எழுத்தாளர்களாக மாற்றினார். இவர்கள் இன்று பிரபல்யமான இடங்களில் இருப்பதுவும் இவரின் கைவிசேஷத்தையே காட்டுகின்றது. இவற்றையும் கூட ஒரு நகைச்சுவையாக இன்றைய கால கட்டத்தில் கொள்ள முடியும்.

# பதினாறு வயதினில் மாணவர் எஸ். பொ செய்த எழுத்துச் சேட்டை



– தம்பையா கயிலாயர்

ஆண்டு 1947

பரமேஸ்வராக் கல்லூரியில் உயர்கல்வி பயிலும் மாணவரின் மன்றம்.

புதுக்கச் சேர்ந்த மாணவர் உரை ஆற்றுகிறார். தேர்தல் கூட்டங்களில் அரசியல்வாதிகளின் ஆவேசப் பேச்சுப் போல் அமைந்திருந்தது.

மாணவரின் தொகை சுமார் பதினைந்து (15). ஆயிரக் கணக்கானோரை விளித்தல் போல் அவரின் உரை. பொதுவுடமைக் கருத்துக்கள் செறிந்திருந்தன.

அவரைப் பற்றி அறியவந்தவை:– பெயர். எஸ். பொன்னுத்துரை. சென்ற். பற்றிக்ஸ் கல்லூரியில் (J/St. Patriks College) கற்றவர். பொதுவுடமைச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் கல்லூரியில் விற்றல்; பிரசாரம் செய்தல் போன்ற செயல்களினால் கல்லூரியில் இருந்து விலக்கப்பட்டவர் என்பன.

அக்காலத்தில் பரமேஸ்வராக் கல்லூரியின் அதிபர் சி. சிவபாதசுந்தரம் M.A (Cantab) இலண்டனில் கற்றவர்.

இலண்டனில் மேல் படிப்புப் படித்தவர்கள் இலங்கைக்குத் திரும்பும் பொழுது பொதுவுடமைவாதிகளாக இருப்பர். சிலர் காலக்கிரமத்தில் அக்கொள்கையை விட்டுவிடுவர்.

அதிபர் சி. சிவபாதசுந்தரம் பொதுவுடமைவாதியாக இருந்தார். எனவே சென்ற். பற்றிக்ஸ் கல்லூரியிலிருந்து விலக்கப்பட்ட எஸ். பொ. சிரமமின்றி திரு. சிவபாதசுந்தரம் – அதிபரினால் அனுமதிக்கப்பட்டார்.

வகுப்பில் செ. கணேசலிங்கன், அமரர் திரு. கணேசர் – Govt. Analyst, நாட்டிய கலாநிதி – கார்த்திகாவின் கணவர், கட்டுரையாளர் ஒருமித்து இருப்பதை அவதானித்தார். இவர்கள் கற்றலில் முதன்மை மாணவர்களாக வகுப்பில் இருந்தனர். எங்களுடன் சேர்வதில் 'எஸ். பொ'வின் நாட்டம் தெரிந்தது.

அந்தக் காலத்தில் 'விகடன்', 'கல்கி' இரண்டு அணாவாக இருந்தது. பின் நான்கு அணாவாக விலை ஏறியது.

'மஞ்சள்' பத்திரிகைகள் – உண்மைக் கதைகள், பாதிக்கப்பட்டவரின் சுயசரிதை என்பன ஒரு ரூபாவாக இருந்தது. அந்த ஒரு ரூபா இக்கால ரூபாய் நூறுக்குச் சமன்.

'கல்கி'யின் தொடர் நவீனங்களைப் பிரித்து எடுப்பார். 'உண்மைக் கதை' மாத இதழ்களையும் வாங்குவார். நாங்கள் ஆசிரியர்கள், பெற்றோருக்குத் தெரியாமல் அவரிடம் பெற்று வாசிப்போம்.

'மடம் பெவாரி' (Madam Bevari), 'நாநா' (Nana – பிரான்ஸ் நவீனம்), 'சட்டர்ஜியின் காதலி' (Chateau's Lover), 'ரோமாபுரி மங்கை' (Woman of the Rome) அவர் தந்து நாம் வாசித்த நவீனங்கள் ஆகும்.

எங்களிலும் பார்க்க மிக வசதி படைத்தவராகக் காணப்பட்டார். நியமிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் (Nominated Member) திரு. சுப்பிரமணியம் 'எஸ்.பொ'வின் மைத்துனராவார்.

பலவித இலக்கிய இதழ்களையும், பத்திரிகைகளையும் படித்தவருக்குத் தானும் எழுத வேண்டும் என்ற எண்ணம், அவா ஏற்பட்டது.

'எஸ். பொ' எங்களிலும் இளையவர்; சுமார் பதினாறு வயதிருக்கும்.

'எஸ். பொ'வின் முதற் சிறுகதை எப் பத்திரிகையில் வெளியானது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. 'ஈழகேசரி' அல்லது 'வீரகேசரி'யாக இருக்கலாம்.

கல்யாணம் செய்த சில நாள்களில் கதையின் 'கதாநாயகன்' சோர்வாக இருக்கிறான். தாயின் விசனம்; விசாரிக்கிறாள்.

'தான் திருமணம் செய்தவள் தன் தங்கையெனத் தெரிய வருகிறது' என்றான். அதாவது 'கதைக் கதாநாயகனின்' தந்தை வேறொரு பெண்ணுடன் கூடியதால் பிறந்த பெண்பிள்ளையே அவனது மணப்பெண்.

தாய் தேற்றுகிறாள். 'கவலையை விடு. நீ எந்தப் பெண்ணையும் கல்யாணம் செய்யலாம்.

'இங்கே அப்பாவாக இருக்கிறவர் உன் தந்தை அல்ல' என்ற உண்மையைச் சொல்கிறாள்.

தந்தையும் கெட்ட சகவாசத்தில் தோய்ந்தவர். தாயும் விலக்கல்ல. அவளுக்கும் 'கள்ளக் கணவர்கள்' இருந்தனர்.

'எஸ். பொ'வின் முதற் சிறுகதையே சமூகப் பிரச்சினைகளில் ஒன்றின் துழாவலே!

அக்காலத்தில் தமிழகத்தில் வெளிவந்த மாத இதழ்களில் ஒன்று 'காதல்'. அதன் ஆசிரியர் திரு. அரு. இராமநாதன்.

வாசகரின் வட்டத்தை விரிவாக்க ஒரு யுக்தி கையாண்டார். அவர்களைச் 'சிலிர்சிலிர்க்க' வைக்க வேண்டும். அவரது பிரமாணம் இதுதான்.

'திருமணம் முடித்தவர்கள் தங்கள் முதல் இரவை விபரிக்க வேண்டும். தங்களது உண்மையான அனுபவம் என்ற உறுதி மொழியையும், அதனுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.'

'எஸ். பொ' எதிலும் வித்தியாசமானவர்; ஆற்றல் உள்ளவர்; செயலாக்குபவர்.

தன் **கற்பனை 'முதல் இரவு அநுபவத்தை'** உறுதி மொழியுடன் இணைத்துக் 'காதல்' பத்திரிகைக்கு அனுப்பி விட்டார்.

அவரின் முதல் இரவு மண வாழ்க்கை இதுதான்.

'கண்ணீர் வடிய புது மணப்பெண் படுக்கையில், இள வயதில் கெட்ட சகவாசத்தால் அவாவும், ஆற்றலும் குறைந்த நிலையில் மணமகன்; (கதையின்படி எஸ். பொ) சிகரெட்டைப் புகைக்கிறார், நிலத்தில் சுவரில் சாய்ந்தபடி'

வாசகர்களுக்கும் மட்டுமல்ல, 'காதல்' ஆசிரியர் அரு. இராமநாதனுக்கும் பெரும் ஏமாற்றமாக இருந்திருக்கும்.

எனது வீட்டுக்கு 'எஸ். பொ' வருவார். நான் இணுவை பரமானந்த வாசிகசாலையின் செயலாளராக யாழ் நாட்டை விட்டு நீங்கும் வரை இருந்தேன்.

நண்பர் பல நூல்களை வாசிகசாலைக்கு உதவினார்.

ஒரு சம்பவம் மறக்க முடியாதது.

முதற்தடவை வந்த பொழுது, எனது தாயாருடன் அளவளாவினார். தாயார் தேநீர் வழங்கினார். தேநீர் பருகி 'எஸ். பொ' விடைபெற்றார்.

பக்கத்து வீட்டு மாணவன் வந்து, கட்டுரையாளரின் தாய்க்குக் 'குசுகுசு'த்தான்.

நண்பர் பாவித்த 'எவசில்வர்' பேணி (Eversilver Tumbler) முற்றத்தில் வீசப்பட்டது.

கட்டுரையாளர் விடுவாரா!

''அம்மா, தாயே! நான் 'எஸ். பொ'வின் தங்கையையே திருமணம் செய்யப் போகிறேன்'' என்று ஒரு போடு போட்டார்.

''அப்பு, ராசா வேண்டாமெனை...''

முற்றத்தில் எறிந்த பேணியைக் கட்டுரையாளரின் தாயார், எடுத்து வந்து வீட்டில் வைத்தார்.

U. E. (University Entrance) படிக்கும் சமயத்தில், கொழும்பு மருத்துவக் கல்லூரிக்கு (Medical College) R. M. O. ()Registered Medical Officer) கற்றலுக்காகத் தெரிவு செய்யப்பட்டேன். ஆண்டு 1948ஆக இருக்க வேண்டும்.

நண்பர்கள் கணேசலிங்கன், தி, கணேசர், 'எஸ். பொ' ஆகியோரைப் பிரிய மனமில்லாமல் பிரிந்தேன்.

கொழும்புக்குப் படிக்கப் பிரயாணமானேன்.

சில மாதங்களில் 'எஸ். பொ'வும் பரமேஸ்வராக் கல்லூரியை விட்டு நீங்கி, தென் இந்தியா சென்றார். படித்துப் பட்டதாரி ஆனார்.

இந்தியாவில் இருந்து எனக்கு ஒரு தபால் அட்டை கிடைத்தது. என்னுடைய, கணேசலிங்கனுடைய அன்பையும், ஆதரவையும் பெரிதும் விரும்புவதாகவும், மதிப்பதாகவும் அதில் வரையப்பட்டிருந்தது. பின் தொடர்பு அற்றுப் போய்விட்டது.

# இவையும் அவைபோலவோ?

- த. ஜெயசீலன்

**காலமும் ஏதும் பலனை எதிர்பார்த்தா**
**யாரையும் தூக்கிப்**
**புகழ்க்கொப்பில் ஏற்றிவிடும்?**
**காலம் தனது சொந்த நலனுக்கு**
**எற்றாற்போற் தானா**
**எவரினையும் மேடையேற்றும்?**
**காலமோர் வல்லரசைப் போல்...தன்**
**இலாபத்தை**
**பார்த்தா எளியோர்மேல் பாசம்என**
**நடித்திருக்கும்?**
**காலமோர் முதலாளியாய் ''எதனைச் சுரண்டிடலாம்**
**மேலும்'' எனமுயன்றா**
**ஏழையின்முன் முறுவலிக்கும்?**
**''காலம், இயற்கை, விதி,**
**தர்மம், அறம் என்னும்**
**ஏதேதோ சக்திகளால் உலகியங்கும்**
**சரிசமனாய்**
**நாளு'' மென்று சொல்பவரே...**
**நாதியற்றோர் கீழ்ப்பட்டோர்**
**ஏழைகள் வலிமையற்றோர் சிறுபான்மை**
**எனும் நலிந்த**
**பாவச் சனங்கள்...தம்**
**படுகுழிக்குள் இருந்தெழும்பி**
**'யாவரும் சமானம்' என்று நிமிர்வதனை;**
**அடிமைத்தளை அறுக்க**
**ஆக்ரோஷம் கொள்வதனை;**
**குடிமைப் படாமல் கொடியேற்றக் கெம்புவதை;**
**பலம்முழுதை ஏவி**
**நசிக்க நினைப்போர்க்கு...**
**காலமும் அறமும் துணைபோகும்**
**யதார்த்தத்தைக்**
**காண்கையிலே 'இவையும்' ஆதிக்க சக்திகளின்**
**அருவ வடிவுதானோ...?**
**சந்தேகம் எழுகிறது**

# எஸ்.பொ.வும்

## ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும்

– A. சபாரட்ணம்



நான் 1952 முதல் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் கற்பித்தவன். 33 ஆண்டு அங்கே பணிசெய்தவன். அதற்கு முன் ஆறு ஆண்டுகள் அங்கு கற்ற மாணவன்.

B.E. மரியநாயகம் என்ற என் ஊர் ஆசிரியர், எஸ். சிவபாதசுந்தரம் (M.A. Cantab) அவர்களிடம் B.A.க்கு ஆங்கில இலக்கியம் கற்றதொடர்பினால், தன் ஆசிரியர் விருப்பப்படி, தன் பாடசாலையில், எஸ்.பொ.வுக்குப் படிப்பிக்க இடம்பெற்றுக் கொடுத்தார்.

தீவகப்பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்கள் குறைவாயிருந்த காலத்தில், ஒரு ஆசிரியர்கிடைத்தது எல்லோருக்கும் மகிழ்ச்சி. முக்கியமாக, எனக்கு நவீன இலக்கியம் பற்றிய கருத்துக்ளைப் பகிர்வதற்கு ஒரு ஆள்கிடைத்தது என்பதில் மற்றையோரிலும் இரட்டை மகிழ்ச்சி. வி.ஸ. காண்டேகர் (மராட்டிய நாவலாசிரியர்) எம் இருவருக்கும் பாலம். அவரது நாவல்களில் நான் சுவைகண்ட காலம். எஸ்.பொ.வும் அதே கருத்துடையவர். அதனால் சந்திக்கும் போதெல்லாம் நவீன இலக்கிய விமர்சனத்தில் பொழுது போகும்.

அக்கால கத்தோலிக்க கிறீஸ்தவ பாடசாலைச் சூழலை இன்றைய தலைமுறையினர் கற்பனை செய்ய முடியாது. 1949–50ல் கொழும்பு பாடசாலைகள் பலவற்றில் கூட எஸ்.எஸ்.சி (O/L)வகுப்பில் 'குடியியல்' என்றபாடம் படிப்பிப்பதில்லை. மஹரகம ஆசிரிய பயிற்சி மாணவர்கள், 'அரசியலும் குடியியலும்' கற்பவர்கள் தம் பாடத்தைப் படிப்பித்துப் பழக, கொழும்பில் அலைந்துதிரிய வேண்டியிருந்தது. அதிபர்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல் கற்று வெளியேறும் பட்டதாரிகள், பொதுவுடைமைக் கொள்கையுடன் வெளியேறுவதால், அவர்களை ஆசிரியராக நியமிக்கத் தயங்கினார்கள். சோக்கிரற்றீசை அதென்ஸ் ஜனநாயக வாசிகள் தள்ளி விலக்கியது போல, இப்புதிய பட்டதாரிகளும் தமது மத அறிவுவாய்ந்த மாணவரின் மனத்தில் நச்சுவிதையை விதைத்து, 'வாலிபரைப் பழுதாக்கி விடுவர்' என மதத்தின் காவலர்களுக்கு அச்சம். அக்காலத்தில் தீவகத்தின் ஒரு மூலையில், ஐந்து மேற்றிராணிமாரை உருவாக்கிய பாடசாலையில் முற்போக்கு வாதிகளுக்கு எப்படிப்பட்ட வரவேற்பு இருக்கும் எனக் கற்பனை செய்யலாம்.

சில மாதங்கள் எஸ்.பொ.வின் தமிழ் இலக்கியப் புதுமை மாணவரைக் கவர்ந்தது. தலைமுறை இடைவெளி குறைவாயிருந்தமையால், இளம் சமுதாயம் அவர் இலக்கிய ரசனையைச் சுவைத்தது. தன் புரட்சி வாழ்க்கை, (பற்றிக்ஸ், சென்னை கிறீஸ்தவ கல்லூரி) காலை எழுந்தவுடன் பைபிள் வாசிப்புடன் ஒரு 'சிகரெட்' போன்ற வியப்பான செய்திகள் மாணவருக்கு அவர் பின் பற்றத்தக்க 'மொடல்' எனக் கருத இடம் அளித்தது. அக்காலத்தில் ''ராஜி என் கண்மணி'' என்ற படம் யாழ்ப்பாணத்தில் திரை அரங்குக்கு வந்தது. எஸ்.பொ.தன் சென்னை விரிவுரையாளரின் மகள் ராஜி, தன் கண்மணி போன்ற கதைகள் சொல்லி மாணவர் வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்தால், தன் சொந்தச் செலவில் அவர்களுக்குப் படம் பார்க்க வசதி செய்வதாகக் கூறினார். (சில மாணவர் சென்றனர் போலும்.) இது பழைய 'சட்டம்பிமா'ருக்கு அதி தீவிர புரட்சி யாகத் தெரிந்தது. பகையுணர்ச்சி, கருத்தியல் முரண்பாடு (ideological conflict) முளைகொண்டது. அதற்குத் தூபம் போடும் கற்றல் நிகழ்வு ஒன்று எஸ்.எஸ்.சி. வகுப்பில் இடம்பெற்றது. எஸ்.பொ. ஒரு கட்டுரைக்கு, சட்டகம் அமைத்து, கரும்பலகையில் எழுதி, மாணவருடன் விவாதித்து, நல்ல கட்டுரை எழுதும் முறையைக் காட்டினார். வகுப்புக்கு வந்த பிற ஆசிரியர்கள் (பழமை பேணுபவர்)அக் கட்டுரை அதிதீவிரப் போக்குடையது எனக் கருதினர். இது பற்றி ஆசிரியர் அறையிலும் பேச்சு எழுந்தது போலும். அன்று வெள்ளிக்கிழமை வார இறுதி முடிந்து திங்கள் பாடசாலை திறந்தது. மாணவர்கள் அக்கட்டுரையை எழுதவில்லை. எஸ்.பொ. வகுப்பில் கட்டுரைக் கொப்பிகள் அடுக்கி வைக்கப்படவில்லையே என்ன காரணம் கேட்டார். பிள்ளைகள் எழுதவில்லை என்றனர். அவ்வளவு விபரமாகக் கரும்பலகையில் சட்டம் வரைந்து விளக்கியும் எழுதமுடிய வில்லையா என? எல்லா மாணவரையும் வகுப்புக்கு வெளியே நிறுத்தி விட்டார். இது சாதாரணமாக, அக்காலத்தில் எல்லா ஆசிரியரும் கொடுக்கும் தண்டனை. அதிபர் தம் அறையிலிருந்து அனைத்து மாணவரும் நிற்பதை அவதானித்தார். 'மொனிற்றர்' வர வழைக்கப்பட்டார். காரணத்தை விசாரித்தார் அதிபர். கிறீஸ்தவ மாணவர்களுக்கு ஏற்றவிடயமல்ல; அதனால் எல்லாரும் எழுதவில்லை என்று விளக்கம் கூறப்பட்டது. (அவ்வகுப்பில் தமிழ்ப் பேரறிஞர் தனிநாயக அடிகளாரின் மருமகனும் இருந்தவர்) அதிபர் பிள்ளைகளை வகுப்புக்குள் இருக்கும் படி சொல்லியனுப்பினார். ஆசிரியரை அழைத்து விசாரித்தார். கிறீஸ்தவ பாடசாலையில் பெற்றோருக்கு உவப்பில்லாத தலையங்கத்தில் கட்டுரை எழுதுவது அவர்கள் மனதைப் புண்படுத்தும் விடயம் என்பதைக் கோபம் இல்லாமல், அதிபர் கூறினார். எஸ்.பொ. தான் அச் சூழலில் படிப்பிக்க விரும்பவில்லை என்று வீடு சென்றார்.

அக்காலத்தில் ஏராளமான இலங்கை மாணவர் (பெண்களும் ஆண்களும்) தென் இந்திய கல்லூரிகளில் படிக்கச் செல்வது வழக்கம். ரயிலில் செல்வார்கள். வரும்போது பெரும்பாலும் கல்லூரிகள் ஒரே வாரத்தில் விடுமுறை விடுவதால், ரயில் பெட்டி ஒன்றை பிரத்தியேக பாவிப்புக்கு எனப் பதிவு செய்யும் சலுகையைத் தென்னிந்திய புகையிரத சேவை வழங்கியது. அதனால் 'சிலோன் கொம்பாட்மென்றில்' ஒரே கூத்தும், கும்மாளமுமாயிருக்கும்.

கொஞ்சம் forward ஆன மாணவர் கேலியும், ஆடலும் பாடலும் சற்று அதிகமாகக் காண்பிப்பர். அக்கால யாழ். பெண்

சமுகத்தினர், கொழும்பு பேராதனைக்குப் போனால் தங்கள் பண்பாட்டுக்கும் வருவாய்க்கும் ஒத்து வராது என்று இந்திய கன்னியாஸ்திரீ மடங்களில் (திருச்சி Convent) Holy Cross College, Stella Maryis College மயிலாப்பூர்) நாடிப் போனகாலம். எஸ்.பொ. போன்றவர்களின் கேலி, ஹாஸ்யம் பிடிக்காதவர்கள் அவ்விடயத்தை எல்லாம் தம் ஊர்களில் அவிழ்த்து விடுவர். இவையும் அவரது பொதுவுடைமை சாய்வும் அவருக்குமான எண்ணக் கருவை விதைத்தது போலும்.

பொதுவுடைமை கூட்டங்களில் தலைமை வகித்த சிவபாத சுந்தரம் தன் பரமேஸ்வரக் கல்லூரியில் தன் விருப்பத்துக்குரிய இளைஞனுக்கு ஆசிரியர் பதவி வழங்கியிருக்கலாமே! ஏன் எம் ஊர்க் கல்லூரிக்கு அனுப்ப வேண்டும், என்று கேட்டவர்களும் இருந்தனர்.

அந்தோனியார்கல்லூரி காவலூர் இராசதுரை, சில்லையூர் செல்வராசன், காரை சுந்தரம்பிள்ளை போன்ற பழைய கட்டுகளை உடைத்தெறிந்த எழுத்தாளர்களை உருப்படுத்தி விட்ட நாற்று மேடை. காரைநகர் போன்ற இடங்களில் கல்லூரிகளில் இடம் கிடைக்கப் பெறாத மாணவர்களுக்கெல்லாம் புகலிடமாயிருந்தது. 1930களில் சம ஆசனம் என்ற கல்வித் திணைக்களச் சட்டம் வந்தபோது, முன்னர் நின்று படித்தவர்கள் வகுப்பு ஆசனங்களில் அமர்ந்தவுடன், 'படலை கட்டிச் சைவ' மாணவர்கள் நின்றார்களாம். ஆசிரியர் விடயம் தெரியாமல் ஏன் இருக்கச் சொல்ல நிற்கிறீர்கள் என வினவியபோது, ஒரு ஏழாம் வகுப்பு மாணவன் அழகிய ஆங்கிலத்தில் "There is an impediment Sir" என்றானாம். ஆசிரியர் மலாயாவில் படித்த கிறீஸ்தவ முற்போக்கு வாதி. விஷயம் விளங்கியதும், "இவ்வளவு நாளும் ஒரு சாரார் நின்று படிக்க, நீங்கள் இருந்து படித்தீர்கள்; இப்போது அவர்கள் இருந்து படிக்க, நீங்கள் நின்று படிப்பது நல்லது தானே" என்று கூறி வகுப்பை நடத்திச் சென்றாரம். கால் உளைந்த பின் 'உயர்குல'த்தவர்களும் வாங்குகளில் அமர்ந்தனராம். அந்தப் பழங்காலத்திலேயே சாதி வேறுபாடு குறைய வழிசெய்த கல்லூரியது.

எஸ்.பொ. படிப்பித்த காலத்தில் ஒரு கிறீஸ்தவ ஆசிரியர் ஐயர் பிரகாஷ் நாராயணனின் சோஷலிஸ வாரப் பத்திரிகை வாங்கி மாணவரிடையே பிரசாரம் செய்தார். அவரை அவரின் அரசியற் கொள்கைக்காக வெளியேற்றவில்லையே எனக் கேட்பீர்கள். அவருடைய 'வகை'ப் புரட்சியரசியல் அக்கால பழமை விரும்பி (Conservative) அரசியல்வாதிகளுக்கு காஞ்சுரங்காயாய் இருக்கவில்லை. மார்க்ஸீயம் 'முரட்டுக் காளைக்கு முன் நீட்டிய செம்மை ஆடை' போலக் கசப்பை கொதிப்பை ஊட்டியது. 'நிறுவன'த்தை (Establishment)ஐ ஆதரித்தவர்களுக்கு.

எஸ்.பொ. கிழக்க மாகாணத்தில் கற்பித்து, அதை புக்ககமாகக் கொண்டு, அரசியற் கூட்டங்களில் யாழ் விரோதப் பேச்சுகளை நிகழ்த்தினார் என்று கேள்வியுற்றபோது, வழக்கமாகவே கட்சி அரசியலில் துவேஷ முள்ள நான் அவரது முயற்சிகளில் ஆர்வம் அற்றவனானேன். கனக. செந்திநாதன், சோ. தியாகராசாபிள்ளை போன்றோர் கிழக்கு மாகாண இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்று வந்து கூறும் விடயங்கள் செவியில் வீழ்ந்ததுண்டு. அரசு வெளியீட்டில் பெரியதம்பிப்பிள்ளையின் பகவத் கீதை வெளிவந்த போது, ஒரு விடுமுறையில் அதற்குப் புருவ் திருத்திய எஸ்.பொ. அந்த மேலோட்டமான பார்வையினூடாகவும் 'கீதைக் கதைகளை' எழுதிக் 'கல்கி' வார இதழில் பலகாலம் வெளியிட்டதைப் பாராட்டிச் 'செந்தி' கூறுவார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அக்கதைகளைப் படித்து, எழுதியவரின் திறமையைப் பாராட்டியதை நான் அறிவேன்.

சமீபத்தில் ஒரு இளம் எழுத்தாளருடன் எஸ்.பொ.வின் அரசியற் பின்னணி தான் அவர் ஊர்காவற்றுறை ஆசிரியப் பணிக்கு இடையூறான 'உடன்காரணி' என்பதைக் குறிப்பிட்டேன். தனியே சாதி வேற்றுமை மட்டுந்தான் காரணமென்று கூறுவது காசின் ஒரு பக்கமே என்றேன். அவர் "எஸ்.பொ.வின் பெரிய வாழ்க்கை வரலாற்றில்" ஆரிய குளத்தடி... தேனீர்க்கடைக்காரனின் உதவியுடன், ஊர்காவற்றுறைக்குச் சண்டித்தனத்துக்குப்போன விபரம் தரப்பட்டிருக்கிறதே என்றார். "ஈழத்துக் குட்டி இலக்கிய உலகம் தாங்கள் தான் உலக இலக்கியம் படைக்கிறவர்கள் என்று பெருமை பேசிக் கொண்டு, அரைப் பக்கங்களை அறிந்து கட்சி கட்டிப் போராடுகிறார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் மறுபக்கம் உண்டு என்பதைக் காண மறுக்கிறார்கள். மறைக்கிறார்கள். ஆனபடியால் உமக்குத் தெரிந்ததை எழுதும் என்றார். இதோ எழுதி விட்டேன். காசின் இருபக்கத்தையும் பார்க்க விரும்புவோர் பார்க்கட்டும்.

# புரிஞ்சுக்க முடியலியே!

*– தகவல். கொற்றை பி. கிருஷ்ணானந்தன்*

**பு**லம்பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களிடமிருந்து சிறுகதைகளைப் பெற்று "பனியும் பனையும்" என்ற பெயரில் ஒரு தொகுப்பாக வெளியிடும் முயற்சியில் இந்திரா பார்த்தசாரதியும் எஸ்.பொ.வும் இணைந்து ஈடுபட்டவேளையில் அதற்கான பிரதியை எழுத்தாளர் சுஜாதாவிடம் கொடுத்து அணிந்துரை கேட்டார்கள். எல்லாவற்றையும் வாசித்து முடித்த பின்னர் சுஜாதா சொன்னார், "அதெல்லாம் சரி. ஆனால் ஒருவித புனைத்தமிழிலை எழுதியிருக்கிறாங்களே . புரிஞ்சுக்க கஷ்டமாயிருக்கே"

இதைக்கேட்டு கடுப்புக்குள்ளான எஸ்.பொ. கேட்டார் "உங்கள் கொங்குநாட்டுத்தமிழைப் புரிந்துகொள்ள முடியுது. மட்றாஸ் தமிழைப் புரிந்துகொள்ள முடியுது, திருநெல்வேலித்தமிழைப் புரிந்துகொள்ள முடியுது, அப்படியிருக்க மட்டக்களப்புத் தமிழை ஏன் புரிந்துகொள்ள முடியாது. யாழ்ப்பாணத்தமிழை ஏன் உங்களால் புரிந்துகொள்ள முடியாது."

## என் பார்வையில்

# 'எஸ்.பொ.'

திருமதி. வனிதா நடராஜா, கண்டி

எஸ்.பொ. ஈழத்து இலக்கிய உலகில் ஆழமாகத் தடம் பதித்த படைப்பாளி. மரபு வழியில் ஜாதிய ஆசாரங்களைப் பேணும் யாழ்ப்பாணத்தின் ஒடுக்கப்பட்ட பாமர குடும்பம் ஒன்றிலே பிறந்து, "உலக இலக்கியத்தரத்தினைத் தொடுவதற்கு ஓடிக் கொண்டிருக்கும் எழுத்தாளர்" என்று இலக்கிய விமர்சகர்கள் பாராட்டும் அளவு உயர்ந்து நிற்கின்றார். ஆரம்பக் கல்வியை முறையே யாழ். பத்திரிசியார் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி என்பவற்றிற் பெற்று – பட்டப்படிப்பை தாம்பரம் கிறித்துவக் கல்லூரியில் பெற்றவர். இலங்கையில் பல்லாண்டுகாலம் ஆசிரியராகவும், சில்லாண்டுகள் திரைப்படக்கூட்டுத்தாபனத்திலும், பாடவிதான சபையிலும் கடமையாற்றியவர். "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்ற முதுமொழிக்கேற்ப ஸாம்பியாவில் ஆங்கில ஆசிரியராகப் பதவியேற்றுச் சென்று, பணியாற்றிய பின் அவுஸ்திரேலியாவிற்குப் புலம் பெயர்ந்தவர். இன்று இந்தியா, அவுஸ்திரேலியா எனப் "பறந்து" வாழ்கிறார். ஏறத்தாழ ஐம்பதாண்டு காலம் இலக்கியச் சேவையாற்றி, "இலக்கியப் பேரொளி"யாகத்திகழும் இவரது வாழ்க்கை, இளம் படைப்பாளிகட்கு தக்கதோர் முன்னுதாரணம்.

பல சர்ச்சைகளுக்கு மத்தியில் எதிர் நீச்சலிட்டு, உயர்ந்தவர் எஸ்.பொ.1950, 60 காலப்பகுதியில் ஈழத்து இலக்கியம் பெரும் உத்வேகம் பெற்றது. பண்டிதர்கள் பேணி வந்த மரபுவழி இலக்கியத்தின் தளைகளை அறுத்துக் கொண்டு, பாமர மக்கள் பாடுகளைச் சொல்லும் முற்போக்கு இலக்கியங்கள் தோன்றலாயின. கனக. செந்திநாதன், சில்லையூர் செல்வராஜன், கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி போன்றோர் சிறுகதை செல்நெறியை ஒழுங்கு படுத்தவும், மதிப்பீடு செய்யவும் முற்பட்டனர். "ஈழத்து இலக்கிய வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்" எனில் இந்திய சஞ்சிகைகள் தடை செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளும் வலுத்தன. சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இலக்கியம் திகழ வேண்டுமானால் யதார்த்தப் போக்குடையனவாக இலக்கியங்கள் அமைய வேண்டும் என்ற சிந்தனையும் அழுத்தம் பெற்றது. மரபு பற்றிய போராட்டம், தேசிய இலக்கியம் பற்றிய போராட்டம், யதார்த்தம் பற்றிய போராட்டம் எனப் பல போராட்டங்களிலும் பங்கு கொண்டு, சளையாது எதிர்நீச்சலிட்டவர் எஸ்.பொ. மரபுகளுக்கும், சடங்குகளுக்கும் அப்பால், 'மனித நேயம்' பேணப்பட வேண்டும் என்ற பெரு விருப்புடையவர். சமூகத்தில் காணப்பட்ட அவலங்களையும், அநீதிகளையும் ஏற்க மறுத்ததால், ஓயாத சர்ச்சைகளின் மத்தியில் வாழ்ந்தவர். பாமர மக்கள் பாடுகளே இவர் கதைகளுக்கும், நாவல்களுக்கும் கருப்பொருளாய் அமைந்தன. 'தன்னுணர்ச்சி' கடந்து உள்ளதை உள்ளவாறு நுவலும் இலக்கிய நேர்மை அவருக்கிருந்தது. இதைச் சொல்லலாம். இதைச் சொல்லக் கூடாது என்ற வரம்புகள் அவருக்கில்லை. "தனித்தமிழ்" என்ற 'வேலி' இட்டுக் கொள்ளவும் இல்லை. அவரது இலக்கியத் தேடல்களும், படைப்புகளும் "அவர் மானுட நேயம் மிக்கவர், அறவாதி" என்பதை நிறுவியுள்ளன. இவரது எழுத்தின் முத்திரை "துணிவு"–அவரது போக்கு 'நற்போக்கு'

1960 களில் நான் பல்கலைக்கழகத்தில், பயின்று கொண்டிருந்த வேளையில், 1961ல் வெளிவந்ததுதான் அவரது "தீ" என்ற நாவல். அது இலக்கிய ஆர்வலர்கள், விமரிசகர்கள் மத்தியிலே பெரும் சர்ச்சையை ஏற்படுத்திற்று... "என்ன மனுஷன் இவர்? பாலியல் விவகாரங்களை எல்லாம் பச்சை, பச்சையாக எழுதுகின்றார்" எனச் சாடினர் சிலர். "தீ"யைத் தீயிலிட்டுப் பொசுக்க வேண்டும்" எனச் சிலர் சூளுரைத்தனர். பிறிதொரு சாராரோ "யதார்த்தமாக எழுதுகிறார். அதில் என்ன தப்பு? என எதிர் நவின்றனர். இப்பரபரப்பால் ஈர்க்கப்பெற்று – நானும் "தீ"யை மும்முரமாகத் தேடிப் பெற்று, அறையினுள் இரகசியமாக வாசித்து முடித்தேன். அப்போது – எனது பத்தொன்பதாம் அகவையில் வாசித்த போது – பெரும் சங்கடத்தையும், கூச்சத்தையும் ஏற்படுத்தவே செய்தது. "பாலியல் தீயினால், பல்காலும் கதாநாயகன் பொசுக்கப்படுவதைத் துலாம்பரமாக விவரிப்பது அந்நாவல். நாயகன் தன் வேட்கைகளையும், அவற்றைத் தீர்த்துக் கொண்ட வகைகளையும் தற்கூற்றாக விவரிக்கும் விதத்தில் படைக்கப்பட்டிருக்கின்றது. நாயகன் மனதிலே மனச்சாட்சி. அறவழிச் சிந்தனைகள், பகுத்தறிவு என்பவற்றுக்கு எதிராக – பாலியல் வேட்கை மீதுறுகையில் படும் அவலங்களை சித்தரிப்பது. ஓரிடத்தில், கதாநாயகன்

"பழமுள்ள மரத்தை வௌவாலும்
இனிப்புள்ள இடத்தை எறும்பும்
தேனுள்ள மலரை வண்டும் நாடுவது
இயற்கையாயின்.... நான் என்ன ஜீவன்
முத்தரா அல்லது முற்று அனுபவித்து
பழுத்து, சதை இழுத்து, நிலப்புழுதிக்கு
உரமாகும் நேரத்தை எதிர்நோக்கி
இருக்கும் கிழமா?"...... எனக் கேட்கின்றான்.

நாயகன் அனுபவமாகக் கூறப்பட்டாலும், இது படைப்பாளியின் அனுபவமே. அதை ஒளிக்காது ஒப்புக் கொள்ளும் துணிவும் தனது பலங்களையும், பலவீனங்களையும் வெளிப்பகரும் நேர்மையும் எஸ்.பொ.விடம் உள. 'தீ'யின் முன்னுரையிலே "இடக்கரடக்கல் ஏன்?" என எஸ்.பொ. வினவியுள்ளார். ஆனால், இக்கருத்தில் எனக்கு உடன்பாடு இல்லை – சில

விசயங்களை 'இலை மறை காயாக'– இங்கிதமாக கூறியிருக்கலாம் – மேலும் ''தீ, சடங்கு'' முதலிய நாவல்களில் வரும் சில மகளிர் பாத்திரங்களை – பெண்ணியவாதிகள் பெரிதும் விமரிசித்துள்ளார்கள். எனினும் எஸ்.பொ. ஆக்கங்கள் ''யதார்த்தமானவை'' என்பதை மறுப்பதற்கில்லை.

கலைமகளில் அவர் எழுதிய ''சூடிக்கழிக்காத மலர்கள்'' என்ற உருவகக்கதைத் தொடர் பெரிதும் இரசிக்கப்பட்டது.

எஸ்.பொ. தாம் எழுதி வெளியிட்ட ''மாயினி'' என்ற நாவலின் 'முன்னீட்டில் –' 'இறுதியாக ஒன்று – தமிழிலே முதலாவது அரசியல் நாவலை எழுதும் முயற்சி என்று மட்டும் இதனைப் பாராட்ட மாட்டேன். மகா கசப்பான உண்மைகளின் கோப்பாகவும், சமகால இலங்கை அரசியலைப் பற்றிப் படிக்கப் போகும் வருங்கால மாணாக்கர்களுக்கு ஆவணமாகவும் இந்நூல் அணுகப்படுதல் வேண்டும் என எழுதினேன்' எனக் குறிப்பிட்டுள்ளார். 'அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்' என்பதை நிலைநாட்ட – இளங்கோ சிலப்பதிகாரத்தை எழுதியது போல – இன்றைய அரசியல் சீர்க்குலைவுகளைச் சாடும் நோக்கிலேயே அவர் ''மாயினி''யை எழுதியிருக்க வேண்டும். எதிர்வரும் சந்ததியினர் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைய விரும்பும் அவர் பெருநோக்கை இக்கூற்றுப் புலப்படுத்துகின்றது. இவர் பிற எழுத்தாளர்களுடன் இணைந்து ''மத்தாப்பு. மணி மகுடம்'' என்ற நாவல்களை எழுதியுள்ளார் – இது சமகால சகாக்களை மிதிக்காது, மதிக்கும் அவர் போக்கைக் காட்டுவது.

அவர் சிறுகதைகள் சமைப்பதில் விற்பன்னர். வீ. அவா, ஆண்மை, எஸ்.பொ.கதைகள் என அவரது பல சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு கதைக்கும் தனித்தனி உருவம் கொடுத்து நுட்பமாகக் கதையைக் கையாண்டு, வழி நடத்துவதில் வல்லவர் அவர் என்பதை இக்கதைகள் உணர்த்துகின்றன. 1980ல் வெளி வந்த ''தேர்'' நல்லதோர் எடுத்துக்காட்டு. 1983ல் வெளிவந்த ''ஆண்மை'' சமகாலப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு அற்புதமாகப் படைக்கப்பட்டுள்ளது. இந்நூல் பற்றிக் குறிப்பிடுகையில் பெரும் கல்விமானான இந்திரா பார்த்த சாரதி ஷெல்லியின் (Defence of Poetry) ''கவிதையின் காப்பிற்காக வுக்குப் பிறகு தான் உணர்ந்த 'எழுத்து' பற்றிய ஆதார அறிக்கை இதுவே'' என உள்ளார்ந்தமாகப் பாராட்டியுள்ளார்.

''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற பரந்த மனோபாவத்தால் உந்தப்பட்டு – ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஒஸ்மான் எழுதிய 'xala' (ஆண்மையற்ற) எனும் நாவலை, 'ஹால' என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்த்து – 1999ல் வெளியிட்டுள்ளார். இந்நாவல் ஆப்பிரிக்க சமுதாயத்தில், மத்தியதர வர்க்கத்தினரின் ஆடம்பரத்தையும், அங்கு நிலவும் ஆண் – பெண் உறவுகள் பற்றியும் ஆழமாகவும், யதார்த்தமாகவும் விளக்குவது.

''ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட
யாழ்ப்பாணத்தின் அழகும்
அதன் மண்வாசனை சுகித்த
மக்களும் எங்கே?
இழந்து விட்டோமா?
அந்த வாழ்க்கையின்
கோலங்களையும், உயிர்ப்புகளையும்
அழகையும், ஆன்மாவையும்
அமர இலக்கியமாக்கும்
படைப்பு முயற்சியே
நனவிடை தோய்தல்'' என்று தான் 'நனவிடை தோய்தல்' என்ற நூலை எழுதியமைக்கான காரணங்களை விளக்குகிறார் எஸ்.பொ – உண்மையில் 'நனவிடை தோய்தல்' யாழ் வாழ்க்கையை நுகர விரும்பும் அவரது வேட்கையை வெளிப்படுத்துவது – அதில் வரும் 'போர்' என்ற பகுதி – தமிழர்தம் வீர விளையாட்டினைப் பற்றியும் தென்னையை நம்பி வாழும் தொழிலாளர்களது வாழ்வியற் கோலங்களையும் சித்தரிப்பது – இடைக்கிடையே சேர்க்கப்பட்டுள்ள 'குறும்பாடல்கள்' இந்நூலுக்கு மேலும் சுவையூட்டுகின்றன. மாதிரிக்கு ஒரு பாடல்.

''மசிய அவிஞ்ச
மரவள்ளிக்கறி – கூட்டரைச்சு
இசைய அவிஞ்ச
பழைய மீன் குழம்பில்
பிசைஞ்சு குழைச்சு
பழஞ் சோற்று உருண்டை திரட்டிப் பூ
வரசம் இலையிலே
ஆச்சியிடக் கவ்வும் சுவை கனவே'' இப்பாடல் நெடுங்காலம் அயல்நாட்டில் வாழ்ந்ததால் – பிறந்த மண், அதன் வாசனை, அவை பற்றிய நினைவலைகளில் நீந்த விரும்பிய விரும்புகின்ற அவரது உள்மனதின் உணர்வுகளையும் ஏக்கங்களையும் புலப்படுத்துவது.

அளவற்ற தேடலும், அகன்று விரிந்த பட்டனுபவமும், அசைக்க முடியாத தன்னம்பிக்கையுமே இவர் படைப்பாற்றலின் அடிநாதமாய் அமைவன. இவரது சொல் வீச்சு பிறிதொருவர் மடக்க இயலாத, வெல்லும் தன்மை வாய்ந்தது. சொற்களைச் சுருக்கமாக, ஆனால் பொருட் செறிவுடன் கையாள்வது அவருக்கே வாய்த்த தனிக்கலை. யாழ் வழக்குத் தமிழை இவர் போல் கையாளத்தக்கவர் அரிது. அவரது இயலுமைகளுள் தலையானது – சோர்விலா முயற்சி எழுபது வயதிலும், சுமார் ஈராயிரம் பக்கங்களில் ''வரலாற்றில் வாழ்தல்'' என்ற பெயரில் தன் சுயசரிதையை எழுதி வெளியிடும் துணிவும், திறமையும் வேறு யாருக்கு வரும்?

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாக சிறுகதை, உருவகக் கதை, குறுநாவல், நாவல், கட்டுரை, விமர்சனம், வாழ்வியல் வரலாறு என்று இலக்கியத்தின் பல்வேறு அம்சங்களிலும் தடம் பதித்த சண்டியர் இவர். அண்மைக்காலமாக, இன்னும் ஒரு வகையிலும் பாரிய இலக்கியத் தொண்டாற்றி வருகிறார். ''மித்ரா'' பதிப்பகத்தின் மூலம் பல்வேறு நாடுகளிலும் சிதறி வாழும் ஈழத்தமிழரதும் ஆக்கங்களை பதிப்பித்து வெளியிட்டு வருகிறார். ஓரளவில் வர்த்தக நோக்குடன் இச்சேவையில் ஈடுபட்டாலும், இதுவும் ஒரு வகையில் பெரும் தொண்டே. ஈழத்தவரின் படைப்புகளான சிறுகதைகளை இயலுமான அளவில் தேடி எடுத்து – பெரும் தொகுப்பாக வெளியிடும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார். வெல்க அவர் தம் முயற்சி! அவரது ''இலக்கிய உலா'' இன்னும் தொடர்க!

# என்னைக் கவர்ந்த மாமனிதன்

– கலாபூஷணம் சந்திரா கார்த்திகேசு

எழுத்தாளர் மத்தியிலும் சமுதாயத்தவர் இடையிலும் ஓர் எழுச்சியை உருவாக்கிய தமிழ் இலக்கிய மாமனிதன் எஸ்.பொ. தமது வாழ்க்கையில் அறுபது ஆண்டுகளுக்கு மேலாகச் சமுதாயத்திற்காக எழுத்துப் பணியை ஆற்றியும், ஆசிரியராக, பத்திரிகை, சஞ்சிகை நடத்தியும், அரசியலில் வழிகாட்டியும், இலங்கை நாடு முழுவதும் சுற்றியும், நானிலமெங்கும் உலாவியும் வந்த வண்ணமிருக்கிறார்.

எஸ்.பொ.வின் எழுத்தைப் படித்தவர்களும், தொடர்பு கொண்டவர்களும், அவரைப் பார்த்துப் பேசிப் பழகியவர்களும், அவர் பால் ஈர்க்கப்பட்டவர்களும், பின்பற்றிய எழுத்தாளர்களும், அவர் பால் பிரிக்க முடியாத பிரியம் வைத்தவர்களும் ஏராளமானோர் உள்ளனர். இதற்கெல்லாம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கலாம். அவரின் உருவம் கண்டு உள்ளன்பு கொண்டவர்களாக இருக்கலாம். அவர் மேடையில் நையாண்டியாகப் பேசும் நாவன்மையைக் கண்டு அவரை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கலாம். அவரின் எழுத்தாற்றலைக் கண்டு ஈர்க்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம். அவரின் நடை, உடை, பாவனை, நளினம், தனித்தன்மை, அன்பு, அரவணைப்பு, இங்கிதமான பேச்சு, அறிவு நுட்பம், நண்பர் சகவாசம், அவர் பெற்றிருந்த அறிவாழம், தமிழ் மொழியில் அவருக்குள்ள தனிச்சிறப்புடைய கலைஞானம் இப்படி எத்தனையோ அவரிடம் உள்ள ஆளுமைகள் ஒன்வொன்றாலும் ஒவ்வொருவரும் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒளியுமிழும் மின்விளக்காகச் சுடர்விட்டு மக்கள் மத்தியில் தன் எழுத்தாற்றலால் அறிவுக்கூர்மையால் அறிவு ஞான வெளிச்சத்தைத் திசையெங்கும் அள்ளித் தெளித்து வரும் அரிய மாபெரும் எழுத்தாளர் எஸ்.பொ. என்றால் மிகையாகாது.

எஸ்.பொ. அவர்கள் சில மாதங்கள் என் வீட்டிலும் பல மாதங்கள் எழுத்தாளர் நண்பர் மா. பாலசிங்கம் வீட்டிலும் தங்கி இருந்தார். எங்கள் இருவரின் வீடும் அடுத்தடுத்து இருந்தன. அதனால் எஸ்.பொ. அவர்களை நான் பல்வேறு கோணங்களில் பார்க்கிறேன். அவருக்கும் எனக்கும் இடையில் உள்ள நட்பு, அவருடன் நெருக்கமாகப் பழகுகிற வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். அவர் அழகு தமிழில் என்னுடன் பேசியவைகள் இன்னும் நெஞ்சில் நிழலாடுகின்றன. அவரது அறிவுரைகள், ஆலோசனைகள், மனத்திண்மை, கொள்கை உறுதிப்பாடு ஆகியவை என்னைக் கவர்ந்தன. அவரது இலக்கிய உலக அனுபவம் எனக்கு வெகுவாக உதவியது. அவர் எத்தனையோ சிறப்பம்சங்களைக் கொண்டவர். தலைச்சிறந்த இலக்கியவாதி, சீர்மிகு சிந்தனையாளர். நாவன்மையும், சொல்லாற்றலும் மிக்க சொற்பொழிவாளர். நாவல் ஆசிரியராக, சிறுகதை எழுதுவதில் மன்னனாக, சிறந்த கட்டுரையாளராக சிறந்த வானொலி, மேடை நாடகம் எழுதும் வல்லவராக, ஒரு சிலர்க்கு பிரச்சனைக்குரியவராக, "கீதையின் நிழலில்" என்ற கதையின் மூலம் கீதாசாரத்தை காட்டிய ஞானியாகவும் அவரைப் பார்க்கிறேன்.

"கீதையின் நிழலில்" என்ற கதைத் தொடர் கல்கி வார இதழில் ஐம்பத்து இரண்டு வாரங்கள் வெளிவந்தது. அதில் முப்பத்தி நான்கு கதைகளை நூலாகப் போடுவதற்குத் திரு. இராஜாஜி அவர்கள் எஸ்.பொ.வின் அனுமதியை அஞ்சல் அட்டையில் கேட்டு எழுதியிருந்தார். ஆனால் எஸ்.பொ. மறுத்து எழுதினார். போடுவதாக இருந்தால் அத்தனை கதைகளையும் போடுங்கள் அத்தனையும் முத்துக்கள் அதில் முப்பத்தி நான்கு மட்டும் போட முடியாது என்று மறுப்பு எழுதினார். அதனாலேயே அவரை ஒரு ஞானி என்று குறிப்பிட்டேன்.

அவர் ஆங்கிலத்திலும் அழகாக இலக்கண இலக்கிய நயத்தோடு உரை நிகழ்த்தும் ஆற்றல் பெற்றவர். அவருடைய ஆங்கில மொழி ஆற்றலுக்கு எடுத்துக் காட்டாக, 1953ம் ஆண்டுக்கு முன்பே பல ஆங்கில நாடகங்களில் சென்னையில் அவர் படித்த காலத்தில் நடித்த நாடகங்களைக் கூறலாம். அதனை தொடர்ந்து 1953ம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற சமாதான மகா நாட்டில் அவர் எழுதி, நெறிப்படுத்தி நடித்த "சாவு" என்னும் நாடகம், எம்.ஜி.ஆர். தலைமையில் அரங்கேறி உள்ளது என்பதை அறிய முடிகின்றது. சென்னையில் பெற்ற நாடக அனுபவங்களைக் கொண்டு "முதல் முழக்கம்" "அந்த நாள்" "தலைக்கு மேலே கூண்டுக்கு வெளியே" "வலை" ஆகிய நாடகங்களை மட்டக்களப்பு மண்ணிலே மேடையேற்றி உள்ளார். எஸ்.பொ. அவர்களின் "முதல் முழக்கம்" என்ற நாடகம் இலங்கைக் கலைக் கழகப் பரிசினை முதல் தடவையாக மட்டக்களப்பு மண்ணுக்கு பெற்றுக் கொடுத்தது. ஆறு மாதங்கள் இலங்கை வானொலியின் தொடர் நாடகமாக "சானா"வினால் தயாரிக்கப்பட்ட எஸ்.பொ.வின் "மட்டக்களப்பு மாப்பிள்ளை" என்ற நாடகம் மட்டக்களப்பு வட்டாரத் தமிழ் அழகை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

1974ம் ஆண்டு எஸ்.பொ.வின் "முறுவல்" நாடகம் புனித மத்தேயு கல்லூரியின் மாணவர்களின் நடிப்பில் சுஹோர் ஹமீது

நெறியாள்கையில் கொழும்பு வை.எம்.பீ.ஏ. மண்டபத்தில் அரங்கேற்றப்பெற்றது. அந்த நாடகத்தை நானும் பார்த்தேன். அதற்கு முன்பே நானும் எஸ்.பொ.வும் சுஹேர் ஹமீதும் நன்கு அறிமுகமான நண்பர்கள். அடிக்கடி எஸ்.பொ. வின் ஆட்டுப்பட்டித் தெரு ரூமில் மாலை வேளைகளில் சந்தித்து மணிக்கணக்கில் உரையாடுவோம். அங்கு இளம்பிறை ரஹ்மான், பவுசுல் ஹமீர், ஏ. இராஜபாண்டியன், கே.ஏ. ஜவாகர், ஜோபு நஸீர் இன்னும் பல கலைஞர்களும் உரையாடல்களில் பங்குபற்றுவது வழக்கம். மது அருந்தும் பழக்கம் அவர்களிடம் இருந்தது. என்னைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் மது அருந்தக் கூடியவர்கள். உரையாடலின் நடுவில் எஸ்.பொ. "தமிழ் செய்வோமா?" என்று கேட்பார், முதல் தடவை எனக்கு விளங்கவில்லை. அது என்ன என்று நான் கேட்ட போது அவர் சொன்னார். "மதுவும் போதை தரும், தமிழும் போதை தரும் அதுதான் தமிழ் செய்வோமா" என்று உங்களுக்கு விளங்காமல் மறைமுகமாகச் சொன்னேன் என்றார். என்னால் எழுதிக் கொழும்பில் மேடையேற்றிய "தீர்ப்பு" நாடகத்தைச் சுஹேர் ஹமீதும், அந்தனி ஜீவாவுமே நெறியாள்கை செய்தனர். அதன் மூலம் தான் சுஹேர் எனக்கு அறிமுகமானார். மாணவர்களால் மேடையேற்றிய "முறுவல்" 1/2 மணித்தியாலயத்திற்குரியதே. சுஹேரின் ஆலோசனைப்படி அதை ஒரு முழுமையான நாடகமாகப் புதுப்பித்து எழுதி முடித்தார். அந்த நாடகத்தை நானே அரங்கேற்றும் பொறுப்பேற்று, நடிப்பாற்றல்மிக்க கலைஞர்களைக் கொண்டு முறுவல் நாடகத்தை 03.08.1975 இல் கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் மேடையேற்றினோம். அந்த நாடகத்தில் சண்டாளன் பாத்திரம் ஏற்று நானும் நடித்தேன் என்பதில் பெருமைப்படுகிறேன். முறுவல் நாடகப் பிரதி, நூல் வடிவில் இன்று வெளிவந்துள்ளது. அந்நூலிற்குப் பெருமை சேர்ப்பதாக நாடகத்துறைத் தலைவர், தமிழ்ப் பல்கலைக்கழகத் தஞ்சை, பேராசிரியர் செ. இராமானுஜம் முன்னுரை வழங்கி உள்ளார்.


### அவரின் முதல் சந்திப்பு

குறிஞ்சி மலர் கவிதை நூல் வெளியீட்டு விழா விவேகானந்தா மண்டபத்தில் நடைபெற்றது. அமைச்சர் திருச்செல்வம் அவர்கள் தலைமை. பலர் நூலைப் பற்றி விமர்சித்துப் பேசினார்கள். அமைச்சர் பேச்சில் செந்தமிழில் பேச வேண்டும் எழுத வேண்டும் என்றார். ஆங்கிலத்தில் கொச்சை ஆங்கிலம் இல்லை என்றார். இறுதியாக பேச மேடையில் ஏறிய எஸ்.பொ. குறிஞ்சி மலர் நூலை எழுதியவரைப் பார்த்து, குறிஞ்சி மலரை பார்த்திருக்கின்றீர்களா? என்று கேட்டார். எழுத்தாளர் இல்லை என்று தலையாட்டினார். விமர்சித்துப் பேசிய மேடையில் அமர்ந்திருக்கும் விமர்சகர்களே குறிஞ்சி மலரைப் பார்த்திருக்கின்றீர்களா? இல்லை என்று ஒரு தலையாட்டல். தலைமை தாங்கியிருக்கும் அமைச்சர் அவர்களே நீங்கள் குறிஞ்சி மலரை பார்த்திருக்கிறீர்களா? அவரும் இல்லை என்று தலையாட்டினார். மேடையில் இருக்கும் யாரும் பார்த்ததில்லை. பேச வந்திருக்கும் நானும் பார்த்ததில்லை. எழுத்தாளரைப் பார்த்து எஸ்.பொ. ஏன் ஐயா குறிஞ்சி மலர் என்று பேர் வைத்தீர் நம் நாட்டிலுள்ள ஏதாவது ஒரு மலர் பெயரை வைத்திருக்கலாமே. (சிரிப்பொலி) அமைச்சர் தலைமையுரையில் சொன்னார். கொச்சை ஆங்கிலம் இல்லை என்று எனக்கு இங்கிலிசு தெரியாது என்று கூறி எஸ்.பொ. சேக்ஸ்பியர் எழுதி உள்ள ஆங்கில வசனங்களை மளமளவென்று பேசிவிட்டு இவை யாவும் கொச்சை ஆங்கிலமே, எல்லா மொழியிலும் உண்டு, இருந்தாலும் அமைச்சருக்குப் படித்துப் பார்க்க நேரமில்லை என்று கூறித் தன் பேச்சை ஆரம்பித்தார். இதை தான் அவருடைய நக்கல் பேச்சு என்று முன் குறிப்பிட்டேன். முதல் தடவையாக அன்று பயந்து பயந்து மேட்டுத் தெருவில் பேசிக் கொண்டே வந்தேன் அவருடைய தொடர்பும் நீண்டது.

"நனவிடை தோய்தல்" என்ற நூலை படித்தேன் அது புதிய இலக்கிய முயற்சி. கால் நூற்றாண்டுக்கு முந்திய யாழ் குடா நாட்டின் மண்ணின் வாசனையை 'எக்ஸ்ரே' படம் பிடித்து காட்டுவதாக இருந்தது. அதன் நடை புதிது, ஆக்கம் புதிது, நோக்கம் புதிது, அனுபவம் புதிது இந்த முயற்சியில் எஸ்.பொ. இலக்கிய உலகில் எங்கோ உயர்ந்துவிட்டார் என்று தான் சொல்ல வேண்டும்.

இலக்கியத்தின் எல்லா துறைகளிலும் கால் பதித்தவர் எஸ்.பொ. அவரை ஒரு சிறந்த திறந்த பல்கலைக்கழகம் என்றே சொல்ல வேண்டும். ஆயினும், நம் நாட்டின் ஒரு பல்கலைக்கழகம் ஆயினும் அவர் ஆக்கங்களை ஆய்வு செய்ததாக தெரியவில்லை. வேதனைக்குரிய ஒரு விடயம்.

வரலாற்றால் உருவாக்கப் பெற்றவர் எஸ்.பொ. இன்றைக்கு வரலாற்றை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். அவரின் வாழ்வும் பணியும் என்றென்றும் வாழும் வரலாறாகத் திகழும்.



### பரதநாட்டியம் யாருடைய கலை?

தமிழ் நாட்டில் கர்நாடக இசையும், பரதநாட்டியமும் பிரதானமாக பிராமணப் பெண்களுடைய சொத்தாக இருக்கின்றன. இந்தப் பரதநாட்டியம் பற்றிய ஆய்வினால் முனைவர் பட்டம் பெற்றவர் பத்மா சுப்பிரமணியம். இவர் தகப்பன் பழம்பெரும் இயக்குநர் கே.சுப்பிரமணியம். இவர் இந்த பரதநாட்டியம் என்பது காஷ்மீர் பள்ளத்தாக்கிலே தோன்றியதாகக் கூடச் சொல்லியிருந்தார். ஆனால் உண்மையில் பரதநாட்டியம் தமிழ்நாட்டுக்குரிய ஒரு ஆடற்கலை. தமிழ் நாட்டுப் பாணர் சேரியிலே உறங்கிக் கொண்டிருந்த, முடங்கிக்கிடந்த கலை ஆர்வலர்களின் புத்தெழுச்சியாக சோழர் இந்திய சமுத்திரத்தை தமது தெப்பக்குளமாக மாற்றிப் பெருமை பெற்ற அந்த உச்சத்திலே, அது சதிர் ஆட்டமாக, நாட்டிய சாஸ்திர நுட்பங்களைப் பேணுவதாகவும் இசையுடன் இணைந்ததாகவும், இசைக்கருவிகளின் வாசிப்புடன் இணைந்த ஆட்டமாகவும் இருந்தது என்பதுதான் உண்மை. (ஞானம் நேர்காணல் "தீதும் நன்றும்" தொகுப்பிலிருந்து - பக்கம் - 21)



# எஸ்.பொ.வின் மாயினி: ஒரு பின்புல அறிமுகம்

– என். செல்வராஜா, நூலகவியலாளர், லண்டன்.

**(16.09.2008 இடம்பெற்ற லண்டன் அனைத்துலக ஒலிபரப்புக்கூட்டுத்தாபன உரையிலிருந்து)**

சைவ சமயத்தில் வழிபடுதெய்வங்களாக கற்சிலைகளாக ஆரம்பத்தில் இருந்த கடவுளர்களுக்கு மானசீகமான ஒரு உருவத்தை வழங்க எமக்கு ரவிவர்மன் என்ற ஓவியனின் திறமை தேவைப்பட்டது. அதுபோலவே பின்னாளில் கல்வெட்டுகளிலும், கற்சிலைகளிலும், கருங்கல் கட்டிடச் சிதைவுகளிலும் மறைந்து போயிருந்த பண்டைய சேர சோழ பாண்டியர்களின் வரலாற்றை அந்த மூவேந்தர்கள் வாழ்ந்த காலத்தை நாம் மானசீகமாகப் பின்நாளில் தரிசிக்க எமக்கு சாண்டில்யன், ராஜாஜி, ஜெகசிற்பியன் என்று ஒரு வரலாற்று இலக்கியப் படைப்பாளிகளின் கலை இலக்கியத் துணை தேவைப்பட்டது.

அவ்வகையில் இன்று நாம் வாழும் நவீன உலகில் நம்மைச் சூழ நடந்து முடிந்த, நடந்து கொண்டிருக்கின்ற சமகால அரசியல் வரலாற்றை இலக்கிய வடிவத்தின் வழியாகத் தரிசித்து ஜனரஞ்சகமயப்படுத்தப்பட்ட அவ்வரலாற்றை எளிதில் புரிந்துகொள்ள பல படைப்பாளிகளின் பங்களிப்புகள் கிட்டிவந்துள்ளன. ஆங்கிலத்தில் அ. சிவாநந்தனின் When memory dies, ஷியாம் செல்லத்துரையின் Funny Boy, மைக்கல் ஒந்தாஜியின் Anil's Ghost போன்ற ஆங்கில நாவல்கள் எமக்கு புதியதொரு பரிமாணத்தில் சமகால அரசியல் சமூக வரலாற்றைத் தரிசிக்க வழிசமைத்துத் தந்திருக்கின்றன. இவ்வகையில் மாயினி என்ற நாவலும் அவ்வழியொட்டிச் சமகால அரசியல் வரலாறு கூறும் ஒரு தனித்துவமான படைப்பாக மிளிர்கின்றது.

மாயினி அரசியல்வாதிகளைக் கதாபாத்திரங்களாக வைத்துப் புனையப்பட்ட ஒரு அரசியல் வரலாற்று நாவல் என்று சுருக்கமாகச் சொல்லி விடலாம். நந்தன் என்ற இந்நாவலின் கதாநாயகன் சித்த வைத்திய பரம்பரையில் உதித்து வந்த ஒரு ஆங்கில வைத்தியத்துறை மாணவன், MBBS பட்டம் பெற்ற ஒரு வைத்தியன், மூலிகை வைத்தியரான தனது தந்தை வழியில் காலம்காலமாகப் பேணப்பெற்றுவந்த ரகசிய மூலிகைகள் பற்றிய தேடலால், சித்த வைத்திய வாகடம் முன்வைக்கும் மருத்துவ முறையில் காலத்தினூடாகப் பயணித்து அனுபவம் பெற்றவன் அவன்.

நந்தன் தான் கண்ட அந்தச் செந்தூரப் பயணத்திலே தான் பெற்ற உண்மைகளை அரசியல் நிகழ்வுகளை எஸ்.பொ. என்ற படைப்பாளியின் வாயிலாக சுவையான கதையாகக் கூறியிருக்கிறான். தந்தை செல்வா, எஸ்.டபிள்யு ஆர். டீ. பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜெயவர்த்தா, ஸ்ரீமாவோ, சந்திரிக்கா, அநுரா, பிரேமதாசா போன்ற இலங்கை அரசியல் தலைவர்களையும், சிறீ விக்கிரம ராஜசிங்க மன்னன், ஹிட்லர், காந்தி, எம்.ஜி.ஆர், ராஜிவ் காந்தி, போன்ற பன்னாட்டுத் தலைவர்களையும் கூட இந்நாவலில் தன் கதாபாத்திரங்களாக்கி யுள்ளார். தமிழகத்திலும் இலங்கையிலும் வரலாற்றில் ஆதாரமில்லாது மறைக்கப்பட்ட சில அரசியல் கட்டங்கள் இந்நாவலில் வெளிச்சத்துக்கு வருகின்றன. இலங்கையில் அன்று உண்மையில் நடந்தது என்ன? இன்று என்ன நடக்கின்றது? இந்த அநியாய நிகழ்வுகளுக்குப் பின்னால் நிஜமாக நின்ற அரசியல் என்ன? அந்த அரசியல்வாதிகள் யார் என்பதன் உண்மை அறிந்து, அவர்களின் முகத்திரை கிழித்து, கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக இரத்தத்தால் எழுதப்படும் இலங்கையின் அரசியலின் சத்திய தரிசனமாக இந்நாவல் அமைந்துவிட்டது.

துணிச்சல், தேடல், உணர்வூற்று, ஆக்ரோஷம், தனித்துவம் என்ற பல்வேறு வடிவங்களில் தனது எழுத்தை அழுத்திப் பதியவைக்கும் ஈழத்துப் படைப்பாளியாக எம்மிடையே வலம் வருபவர் எஸ்.பொ. என்று இலக்கிய உலகில் அதிகம் பேசப்படும் எஸ்.பொன்னுத்துரை அவர்கள். அதிகார மையங்களுக்குப் பணியாத ஓர்மம் கொண்ட இந்தப் படைப்பிலக்கியவாதியின் பேனாமுனை இவரை ஒரு எழுத்துச் சமரன் ஆக்கி பல இலக்கிய எதிரிகளைத் தோற்றுவித்திருந்தது.

இவரது படைப்புக்கள் ஒவ்வொன்றும் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அவ்வக் காலகட்டங்களிலும் அதன் பின்னர் இன்றுவரையும் விதந்து பேசப்பட்டு வந்தது.

ஈழத்தமிழ் இனம் அடிமையான வரலாற்றையும் அதன் எதிர்வினையான போராட்ட எழுச்சியையும் சொல்லும் நாடகமான ஈடு அவற்றில் ஒன்று. சந்தர்ப்பவாத அரசியலின் அவலங்கள், சாணக்கிய அரசியலின் கொடுமைகள், தமிழ்த் தேசிய இனத்தின் ஏக்கங்கள் ஆகியவற்றை ஈடு – வரலாற்று வரிசையில் துணிச்சலுடன் அந்நாளில் முன்வைத்திருந்தது.

மனிதனை ஆட்டிப் படைக்கும் சக்தியாகிய காமத்தை ஊடுபாவாகக் கொண்டு யாழ்ப்பாண வாழ்க்கையை நெய்திருந்த எஸ்.பொவின் சடங்கு, 1971இல் வெளிவந்து அதிகம் பேசப்பட்டது. மற்றவர்கள் அதிகம் எடுத்துக் கொள்ளாத பாலியல், காமம் சார்ந்த விடயங்களை

இலக்கியத்தில் விரசமின்றி எடுத்தாளும் வல்லமை படைத்தவர் எஸ்.பொ.

மனிதரின் அடிப்படை உணர்ச்சிகள், அவர்களது ஆண்–பெண் உடலுறவு பற்றியது தான் என்ற மானிடவியல் நோக்கில் நகர்த்தப்படுகின்ற தீ என்ற நாவல் எஸ்.பொன்னுத்துரையின் மற்றுமொரு முக்கிய படைப்பு. இந்நாவல் வசதிபடைத்த ஓர் இளைஞன் தன்னுடைய வாழ்வில் சந்தித்த ஆறு பெண்களுடன் கொண்ட உறவு பற்றிய கதை. வெளிவந்த காலகட்டத்தில் மிகுந்த சர்ச்சைக்கு உள்ளான நாவல் இது.

ஆன்மீகத்தில் இவருக்கிருந்த ஆழ்ந்த ஞானத்தை கீதை நிழலில் என்ற நூலில் காணலாம். கீதையின் தாக்கத்தினால் விளைந்த சிந்தனைகளை எஸ்.பொ. இந்நூலில் விதைத்திருந்தார். எஸ்.பொவின் கற்பனைகள் கீதைக்கு எதிர்த்துருவமான கருத்துக்களையும் சமகால அவதிகளின் குரல்களையும் வெளிப்படுத்துகின்றன. பாரதியின் ஞானாதரம் நடையொழுகு, வசன கவிதையின் சொற்சூத்திரம் – சித்திரம், பகவத்கீதை – பாஞ்சாலியோக சூத்திர உரைவிளக்கத் திட்பநுட்பம் ஆகியவற்றையெல்லாம் நினைக்கத் தூண்டும் நடையை இந்நூலிலும் காணமுடிகின்றது.

இனி ஒரு விதி செய்வோம் என்ற எஸ்.பொ.வின் கட்டுரைத் தொகுதியும் இங்கு ஒரு சோற்றுப்பதமாகக் குறிப்பிடத்தக்கது. 2000ஆம் ஆண்டு வெளிவந்த இந்நூல் ஈழ இலக்கிய வரலாற்றின் ஆவணமாகக் கருதலாம். வரலாற்று ரீதியாகத் தொகுக்கப் பட்டிருக்கும் இக்கட்டுரைகளில் விவாதத்துக்குரிய பல இலக்கியக் கொள்கைகள் அந்தந்தக் கால கட்டத்தில் எப்படி அர்த்தம் கொண்டதாக இருந்தனவோ, அவ்வகையிலேயே இந்நூலில் பதியப்பெற்றுள்ளன.

எஸ்.பொ. தனது நூலுக்கு வைக்கும் தலைப்புகளே சில சமயங்களில் குழப்பத்திற்கும் சர்ச்சைக்குமுரியதாகின்றன. அவருடைய ஒரு நூலின் அட்டை மீது வெறும் கேள்விக்குறி மட்டுமே இருக்கும். அட்டையைப் பிரித்தால் 80 பக்கங்களுக்கு உங்கள் சிந்தனையை ஒரு சூறாவளியில் பறக்க விட்டது போன்ற இலக்கிய அனுபவம் கிடைக்கும். அங்கதச்சுவை கொண்ட இந்நூலை நூலகங்களில் பட்டியலாக்கும் போது எமக்கு ஏற்பட்ட சிக்கல்கள் சொல்லிமாளாதவை.

ஹால என்ற ஆபிரிக்க இலக்கிய நூல் எஸ். பொவின் தமிழ் மொழிபெயர்ப்பில் வெளிவந்திருந்தது. இது இவரது மொழிபெயர்ப்புத் திறனை வெளிக்காட்டும் உதாரணமாக விளங்குகின்றது. ஹால என்ற இந்நூல், செனகல் நாட்டு எழுத்தாளர் செம்பென் ஒஸ்மான் (1923) அவர்களின் ஆபிரிக்க நாவல். இவர் ஒரு திரைப்பட இயக்குநருமாவார். மீனவராகத் தன் வாழ்க்கையை ஆரம்பித்த இவர் யுத்தத்தின் பின்னர் கப்பல் திருத்தும் தொழிலாளியாகி, தொழிற்சங்க ஈடுபாட்டில் அந்த அனுபவங்களைத் திரட்டி நாவலாக எழுதத் தொடங்கியவர். ஹால (Xala–ஆண்மையற்ற) இவர் எழுதி இயக்கிய திரைப்படமாகவும் நியு யோர்க்கில் வெளிவந்தது. ஆபிரிக்க சமுதாயத்தில் ஏகாதிபத்தியத்தின் வாரிசுகளாக முகிழ்ந்துள்ள மத்தியதர வர்க்கத்தின் ஆடம்பரத்தையும், பாரம்பரியமான ஆபிரிக்க நம்பிக்கைகளையும் மிகச் சாமர்த்தியமாக இந்நாவலில் இழைத்துள்ளார். ஆபிரிக்கச் சமூகத்தில் நிலவும் ஆண்–பெண் உறவுகள் பற்றி யதார்த்தமாகவும் ஆழமாகவும் இந்நாவல் பேசுகின்றது.

இவரது நனவிடை தோய்தல் சாமான்ய மக்களுடைய சங்கதிகளைச் சொல்லும் ஒரு நூல். தான் வாழ்ந்த யாழ்ப்பாணத்து மண்ணினதும், அதன் மக்களினதும் வரலாற்றை பிறிதொரு கோணத்தில் நனவிடை தோய்தல் சொல்லமுனைகின்றது.

எஸ்.பொ. பற்றிய பல்வேறு பரிமாணங்களையும் வெளிப்படுத்தும் நல்லதொரு தொகுப்பு 2003இல் வெளிவந்திருந்தது. தமிழ் நாட்டிலிருந்து இந்திரன், ப.தி. அரசு ஆகிய இருவரும் **இணைந்து தொகுத்திருந்த எஸ்.பொ: ஒரு பன்முகப் பார்வை** என்ற அந்த நூல் 540 பக்கங்களில் தமிழகத்தில் வெளிவந்திருந்தது.

ஈழத்து, தமிழகத்து பிரபல எழுத்தாளர்களில் 76பேர் தற்போது அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர் எஸ்.பொவின் ஆற்றல், ஆளுமை, கோபம், இலக்கிய நேசம், ஆற்றாமை இப்படிப் பலவற்றையும் தமது கண்ணோட்டத்தில் கட்டுரைகளாகவும் ஓவியங்களாகவும் இந்நூலில் பதிவு செய்திருக்கின்றார்கள். அறிவுமதி, அம்பி, கந்தவனம், நீலாவணன், யுகபாரதி, ஆதிமூலம், வீரசந்தானம், மருது, நெடுஞ்செழியன், மாருதி, பாலு, மகேந்திரா, புகழேந்தி, இலங்கைநாதன், இந்திரா பார்த்தசாரதி, அம்பை, இன்குலாப், காலமோகன், காசி ஆனந்தன், தளையசிங்கம், முத்துலிங்கம், ஏ.ஜே. கனகரத்தினா என்று 76 பேர் கொண்ட ஒரு படைப்பாளிகள் கூட்டம், தமிழகம், மலேசியா, இலங்கை என்று ஒரு படை திரட்டி, அந்தப் பட்டாளமே எஸ்.பொ. பற்றிய தங்கள் மனப்பதிவுகளை இப்பாரிய தொகுப்பில் பதிவு செய்துள்ளார்கள். இந்த ஒரு நூலே எஸ்.பொவின் படைப்புலக ஆளுமை பற்றி நாங்கள் விதந்து கூறச் சாட்சியமாகின்றது.

இரண்டு தொகுதிகளில் வெளிவந்த வரலாற்றில் வாழ்தல், எஸ்.பொ. வின் விரிவான வாழ்க்கை வரலாற்று நூலாகும். எஸ்.பொ. தனது சுயசரிதையின் ஊடாக இலங்கை இந்தியத் தமிழர்களின் இலக்கியம், பண்பாடு, அரசியல் ஆகியவை குறித்த வெளிப்படையான ஒரு நூற்றாண்டுக் காலப்பதிவை மேற்கொண்டுள்ளார். 1932இல் யாழ்ப்பாணம், நல்லூரில் பிறந்த எஸ்.பொன்னுத்துரை, 1981இல் பிறந்த மண்ணை விட்டுப்பிரிந்து நைஜீரியாவில் சிலகாலம் பணியாற்றிய பின்னர் அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளார். இந்நூல் வெறும் நிகழ்வுப் பதிவாக மட்டுமல்லாது படைப்பாற்றல் கொண்ட ஒரு கலைஞனின் மதிப்பீட்டுப் பார்வையாயும் தனிப்பட்ட வாழ்க்கை அனுபவங்களைச் சுவைபடச் சொல்லிச் செல்லும் சுயவரலாற்று நூலாயும் அமைந்துள்ளது.



# எஸ்.பொ. சில நிகழ்வுகளின் பகிர்வு

*பாடும்மீன் சு. ஸ்ரீகந்தராசா*

*– அவுஸ்திரேலியாவிலிருந்து*

எஸ்.பொ! தமிழ் இலக்கிய உலகைக் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கலக்கிக்கொண்டிருக்கும் ஒப்பற்ற தனித்துவமிக்கதோர் இலக்கியச் சக்திமிக்க இரண்டு எழுத்துக்கள். எஸ்.பொ. என்றாலே பலருக்குக் கலக்கம். இன்னம் சிலருக்கு நடுக்கம். ஆனால் அந்த எழுத்துக்குரியவரின் எழுத்துக்களிலே எல்லோருக்குமே விருப்பம்.

எனது பள்ளிப்பருவத்திலே, எஸ்.பொ. என்றால் யாரென்று தெரியாத நிலையில் அவரது நாடகமொன்றை நெறியாள்கை செய்தேன். தினகரன் வெள்ளிவிழா மலர் என்று ஞாபகம். அதிலே "தினை விதைக்காதவர்கள்" என்ற ஒரு நாடகம் வெளிவந்திருந்தது. எழுதியவர் எஸ்.பொன்னுத்துரை. அதை வாசித்த போது அது எனக்குப் பிடித்துப் போகவே அதனை நண்பர்களோடு சேர்ந்து தயாரித்தேன். அதில் சேனரதன் என்ற பாத்திரத்தில் நான் நடித்தேன். அதுதான் எஸ்.பொ. அவர்களுடன் ஏற்பட்ட முதலாவது ஈர்ப்பு. அப்போது எஸ்.பொன்னுத்துரை என்றால் யாரென்றோ, அவர்தான் எஸ்.பொ. என்றோ, எஸ்.பொ. என்பவர் ஒரு பெரிய எழுத்தாளர் என்றோ எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

ஆனால், பின்னர் பத்தாம் பதினோராம் வகுப்புக்களில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அவரது "தீ"யையும், "வீ"யையும் வாசிக்கும் பாக்கியம் பெற்றேன். அந்தவயதிலே அது பாக்கியம்தானே! வாசிக்க வாசிக்க இன்பக் கிழுகிழுப்பு. உள்ளத்தில் மட்டுமல்லாமல் உடலிலும் எழுச்சி ஏற்படுத்திய தீயையும், வீயையும் பலதடவைகள் வாசித்து இன்புற்றேன். அதுவரை வாசித்துத் தள்ளிய இந்தியச் சஞ்சிகைகளிலும், துப்பறியும் நாவல்களிலும் இல்லாத தூய்மையையும், இலக்கியச் செறிவையும், என் இதயம் உணரத் தொடங்கியது, முதன்முதலாக தமிழ் மொழியின் வித்தியாசமான நடையழகொன்றை என் மூளை பதிவுசெய்யத் தொடங்கியது.

தீயையும், வீயையும் வாசித்த பின்னர் எஸ்.பொ.வின் நூல்களை வாசிக்கத் தேடினேன். புத்தகக் கடையொன்றிலே, எஸ்.பொ. "?" என்று ஒரு நூலைக் கண்டேன். வாங்கி வாசித்தேன். 2147 ஆம் ஆண்டிலே தான் சஞ்சரிப்பதாகக் கொண்டு, 1972 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட அந்த நூலின் பெயரே "?" என்பதுதான். அப்போது எனக்குப் பத்தொன்பது வயது. அதை வாசிக்கும்போது சில விடயங்கள் சுவையாக இருந்தாலும் பல விடயங்கள் எனக்குப் புரியவில்லை. பின்னர் அரசசேவை அனுபவம், பல்கலைக்கழகப்பட்டம் எல்லாம் சேர்ந்தபின்னர் அதை மீண்டும் வாசித்தபோது ஒவ்வொரு வரியையும் உணர்ந்து படித்துச் சுவைத்தேன். கேலியும், கிண்டலும் நிறைந்த சொல்லாட்சி அந்த நூல்முழுவதும் தூவிக்கிடக்கின்றது. அத்துடன் எஸ்.பொ. தீர்க்கதரிசனம் மிக்கதோர் அபூர்வமான எழுத்தாளர் என்பதை அந்த நூல் எனக்கு உணர்த்தியது. அவர்மேல் பற்றும், மதிப்பும் பன்மடங்கு அதிகரித்தது.

1970 களில் ஒரு நாள் மட்டக்களப்பு நகர மண்டபத்திலே பட்டி மன்றம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. "ஈழத்து இனப்பிரச்சினையை ஒத்துழைப்பு மூலம் தீர்க்க முடியும், முடியாது" என்பது தலைப்பு. முடியும் என்றதலைப்பிலே பேசுவதற்கு ஏற்பாட்டாளர்கள் என்னிடம் கேட்டார்கள். அது எனது சொந்தக் கருத்துக்கு முரணானதாக இருந்தபோதிலும் அந்தப்பக்கத்தில் பேசுவதற்கு ஒரு பேச்சாளர் தேவைப்பட்டதால், எந்தப்பக்கத்திலும் என்னால் பேசமுடியும் என்று அவர்கள் நம்பியதால், என்னிடம் கேட்டார்கள். எனது கட்சியின் தலைமைப் பேச்சாளர் எஸ்.பொ. மற்றவர் மாலா இராமச்சந்திரன். பட்டிமன்றம் ஆரம்பிப்பதற்குப் பதினைந்து நிமிடங்களுக்கு முன்னர்தான் நான் இருவரையும் முதன்முதலாகச் சந்திக்கிறேன். தலைமைப் பேச்சாளரான எஸ்.பொ.விடம் சென்று, "நான்தான் ஸ்ரீகந்தராசா" என்றேன். என்னை ஏற இறங்கப் பார்த்தார். தனது கட்சியில் பேசுவதற்கு ஒரு பொடிப்பிள்ளையை ஒழுங்கு செய்திருக்கிறார்களே என்று அவர் நினைத்திருக்கலாம். எதிர்தரப்பில் பேசுவதற்கு வந்திருந்தவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள். எஸ்.பொ. பேச ஆரம்பிக்கும்போதே அவர்களைப் பார்த்து, "குட்டியாடு குடலேறக் கொழுத்தாலும் வழுக்கல் வழுக்கல்தான்" என்று எள்ளினார். தொகுப்புரையின்போது, "எனது கட்சியிலும் குட்டியாடு ஒன்று இருக்கிறது. ஆனால் இது குட்டியிலேயே முற்றிய ஆடு என்பதை உணர்ந்திருப்பீர்கள்" என்று என்னைச் சுட்டிக்காட்டிப் பேசினார். பட்டிமன்றம் முடிந்தபின்னர் என்னிடம் "துடிப்பாக இருக்கிறீர். பேச்சு நன்றாக வருகிறது" என்று அளவோடு பாராட்டினார்.

1977 இல் என்று நினைக்கிறேன். ஆண்டு சிலவேளை வேறாக இருக்கலாம். கலாசார அமைச்சின் தமிழ் நாடகப் போட்டிகள் கொழும்பில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, அவரைக் கண்டேன். மிகுந்த ஆவலுடன் அவரை அணுகிக் கதைத்தேன். அடுத்த நூல் என்ன என்று கேட்டேன். "ஓர் ஆமத்துறுவின் காதல்" என்று சொன்னார்.

1992இல் அவுஸ்திரேலியாவில் அக்கினிக்குஞ்சு ஆசிரியர் யாழ். எஸ். பாஸ்கரின் வீட்டிலே எஸ்.பொ. அவர்களை நெருக்கமாகச் சந்தித்து உரையாடும் வாய்ப்புக்கிடைத்தது. சிட்னியிலே வாழும் எஸ்.பொ. அவர்கள், அன்றுமுதல் மெல்பேணுக்கு வரும்போதெல்லாம் என்னைத் தொடர்பு கொள்வார். அடிக்கடி தொலைபேசியிலும் பேசிக்கொள்வோம். உலகப்புகழ் பெற்ற ஒரு மாபெரும் எழுத்தாளரான எஸ்.பொ. அவர்களுடன் இவ்வாறு மிக அன்னியோன்னியமாக அளவளாவுவது என் வாழ்வில் கிடைத்த மிகப்பெரிய வாய்ப்பு. அவரைப்பற்றி முன்னர் நான் கேள்வியுற்ற சுவையான கதைகள்,

உலவிய வதந்திகள், அவரது மேடைப்பேச்சுக்களில் இடம்பெற்ற சாடல்கள், சொற்பிரயோகங்கள் இப்படிப் பல்வேறு விடயங்களைப் பற்றி நேரடியாக, நெருக்கமாக, நட்பாக அவரோடு பேசுவது இனிமையான அனுபவம். எந்த விடயத்தைப் பற்றியும் அவர் நமக்கு எடுத்துச் சொல்லும்போது புதியதொரு பல்கலைக்கழகத்திலே பயில்வதைப் போன்ற உணர்வு ஏற்படும்.

1993 இல் மெல்பேணில் நடைபெற்ற பொங்கல் விழாவில் அவரது "வலை" என்ற நாடகம் எனது நெறியாள்கையில் அரங்கேறியது. எஸ்.பொ.வின் வசன நடையை, அதுவும் அந்த வரலாற்று நாடகத்திலே அவர் வடித்து வைத்திருக்கும் வார்த்தைச் சாலங்களை கருத்து மாறாமல் உச்சரிக்க வைப்பதிலும், பொருத்தமான நடிப்பை நடிகர்களிடம் இருந்து வெளிப்படுத்தச் செய்வதிலும் மிகவும் கரிசனை எடுத்துக் கொண்டேன்.

எஸ்.பொ.விடம் மேதாவித்தனமாகச் சில கற்றுக்குட்டிகள் பேச முற்படுவதுண்டு. அப்போதெல்லாம் அவர் இலேசான ஒரு புன்சிரிப்பை உதிர்ப்பார். எதுவும் தெரியாதவர்போலவே அமைதியாக இருப்பார். அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அவரோடு கதைப்பவர்களுக்கு அவர் ஒரு நல்லாசிரியராக நடந்துகொள்வார். மிகப்பெரிய பண்டிதர்களையும், எழுத்தாளர்களையும், பேராசிரியர்களையும் தாக்கு தாக்கென்று தாக்கி விமர்சிக்கும் எஸ்.பொ. அவர்கள், வளர்ந்து வரும் எழுத்தாளர்களையும், தமிழ் ஆர்வலர்களையும் ஒருபோதும் மட்டம் தட்டியதில்லை. எப்போதும் ஊக்கமளித்து, ஊற்சாகப்படுத்தி அவர்களுக்கெல்லாம் ஏணிப்படியமைத்துக் கொடுப்பதையும் தனது பணியாகவே கருதுகிறார்.

எஸ்.பொ.வின் எழுத்துக்களைப் படிப்பது இன்பம். இந்த உலகில் அது எல்லோருக்கும் கிடைக்கலாம். எப்போதும் கிடைக்கலாம். அவரது பேச்சுக்களைக் கேட்பது இன்பம். அது பலருக்குக் கிடைத்தது, கிடைக்கும். அவரோடு உறவாடக் கிடைப்பதோ ஆனந்தப் பேரின்பம். அது சிலருக்குத்தான் கிடைக்கும். அந்தச் சிலரில் நானும் ஒருவன் என்பதிலே எனக்குப் பெருமை. அவர் வாழும் காலத்தில் வாழ்வதற்கும், அவர் நடந்துதிரிந்த என்தாயக மண்ணிலே நடந்துதிரிவதற்கும், இப்போது அவர் புலம்பெயர்ந்த இந்த நாட்டிற்கே புலம் பெயர்வதற்கும், அவர் அடிக்கடி சென்று தங்கும் தமிழ் நாட்டிலும் சென்று அவரைச் சந்திப்பதற்கும் என்போன்ற சிலருக்கு கிடைத்த வாய்ப்பு வாழ்வின் மகத்தான கொடுப்பினை.

இப்போது வருடத்தில் பாதி தமிழ் நாட்டில், மீதி அவுஸ்திரேலியாவில் என்றவாறு வாழ்ந்து கொண்டிருக்கும் எஸ்.பொ. அவர்கள் இந்த வயதிலும் எழுத்து ஊழியத்திலும் நூல்பதிப்புப் பணியிலும் முழுநேரமும் ஈடுபட்டுள்ளார். இப்படியே தளராத உடல் நலத்தோடும், சளைக்காத தமிழ்ப்பணியோடும் நூறாண்டுகாலத்தையும் தாண்டி அவர் வாழவேண்டும் என்று மனதார வேண்டுவோம். வாழும்போதே அவருக்கு மலர் வெளியிடும் "ஞானம்" இதழைப் பாராட்டுவோம்.



இளைஞர்களை விருந்தோம்பும் எஸ்பொ. 1992 இல் உலகத்தமிழ்ப்பண்பாட்டு மாநாட்டில் அரங்கேறிய பண்டாரவன்னியன் நாடகக் கலைஞர்களுடன். இடமிருந்து வலமாக – யாழ் எஸ். பாஸ்கர், எஸ்பொ, சிவா, இயக்குனர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா, செல்வராஜா, கிருஷ்ணமூர்த்தி.

## மூன்றாம் உலக இலக்கியத்திற்கு நாம் ஏன் முதன்மை தரவேண்டும்?



சொயங்கோவினுடைய தனித்தன்மையைப் பற்றி எடுத்துச் சொல்வதானால், அவருக்கும் ஆங்கில மொழியும் ஆங்கில நாடக மரபுகளும் நன்றாகவே தெரியும். இவை அத்தனைக்கும் மேலாக, அவர் நைஜீரியாவின் ஜொருபா இனத்தைச் சேர்ந்தவர். அதைப் பெருமையாகவும் கருதினார். ஜொருபா இன மக்களிடையிலே Talking Drum என்ற ஓர் இசைக்கருவி உண்டு. பேசும் மத்தளம். அதன் இறைநுட்பங்களையும், ஜொருபா மக்களுடைய தனித்துவமான கலை விழுமியங்களையும் சொயங்கோ தன்னுடைய ஆங்கில நாடகத்தில் புகுத்தியபொழுது ஒரு புதிய சுவையினை நாடக ஆர்வலர்கள் அநுபவித்தார்கள். இந்தப் புதுமைகளை ஆங்கில நாடக மேடையிலே புகுத்தியதினாலும், அவர் ஒரு மேதையாகவும் போற்றப்பட்டார். மொழிக்காகவும் இலக்கியத் தேடல்களுக்காகவும் இவர்கள் தடங்களுடைய நாட்டின் சுதேச மக்களுடைய இயல்புகளைக் கொச்சைப்படுத்தாமல் அந்த இயல்புகளை மேன்மைப்படுத்தி வந்தனை செய்து எழுதிக் கொண்டிருந்தார்கள். எனவே, என்னுடைய நைஜீரிய வாழ்க்கையிலே முதலாம் இரண்டாம் உலக நாடுகளின் இலக்கியங்கள் மட்டுமல்ல, மூன்றாவது உலக நாடுகளின் இலக்கியம் என்கிற தனிவகையும் உண்டு என்பதை முழுமையாக உணர்ந்தேன். பிறந்த மண்ணை நேசித்து, அந்த மண்ணிலே வாழும் மக்களை நேசித்து, மனித நேயத்தை முதன்மைப்படுத்தும் புதிய வகை இது. அந்த மனிதநேய இலக்கியத்தை நோக்கித்தான் எதிர்கால எழுத்துக்கள் பயணிக்க வேணடும் என்ற ஞானமும் எனக்கு நைஜீரிய வாழ்க்கையிலே ஏற்பட்டது என்கிற உண்மையையும் கூறவேண்டும்.

(ஞானம் நேர்காணல் "தீதும் நன்றும்" தொகுப்பிலிருந்து – பக்கம் – 160, 161)

எமது பட்டறிவுப் பார்வையில்

# எஸ்.பொ

- குறமகள்



**எஸ்.பொ.வின் உள்ளார்ந்த சக்தி பிரமாண்டமானது. அவரது ஆக்க இலக்கியங்களின் முன் எந்த ஒரு தமிழ் எழுத்தாளனும் எதிர் நிற்க முடியாது. கருவுக்கும் அதன் சூழலுக்கும் ஏற்றதான மொழி, ஏற்ற நடையையும் உருவத்தையும், உத்தி முறைகளையும் எஸ்.பொ கையாளுவது போல வேறு யாரும் செய்யவில்லை. எழுத்தில் அவர் தொடாத துறையுமில்லை சொல்லாத சேதியுமில்லை என பரந்துபட்ட வாசகியான எம்மால் சொல்ல முடியும். அந்தத் தனித்துவம் எங்கும் பரிமளிக்கும்.**

எஸ்.பொ. என்றதும் ஏன் இந்த எழுத்தாளர் உலகம் பரபரப்பு அடைகிறது? விவாதத்துக்குரிய மனிதராய் பார்க்கிறது. எழுத்தில் இவர் தொடாத துறை இல்லை என்பதாலா? அல்லது கோட்பாட்டு ரீதியாகச் சிலருடன் கண்டனங்களும் கலகங்களும் கரித்துக் கொட்டலுமான காரணத்தினாலா?

எது எப்படியோ, எஸ்.பொவை அறிந்த காலந்தொடக்கம் என் அனுபவத்துக் குட்பட்ட பார்வையில், என் சிற்றறிவுப் புலத்திலிருந்து, ஒத்த அல்லது ஒவ்வாத கருத்துக்களை எடுத்து வரையலாம் என நினைக்கின்றேன்.

படித்த விடுதிக் கல்லூரியில் தமிழ் செய்தித்தாள்கள் சஞ்சிகைகள் எடுப்பதில்லை. ஓய்வுநேரப் பொழுது போக்கு ஜேன் ஒஸ்ரின், வில்லியம்ஸ் கொலின்ஸ் போன்றோரின் செவ்விய ஆங்கில நாவல்கள் அகராதியின் துணை கொண்டு வாசித்து முடிய ஒரு மாதம் எடுக்கும். வீடு வரும்போது இந்திய சஞ்சிகைகள் வீரகேசரி தினகரன். ஆயினும் எழுத்தாளர் யார் எனும் ஆர்வம் இருந்ததில்லை.

நேரே பயிற்சிக்கலாசாலை வந்தபின் சுதந்திரன் சிறுகதைப் போட்டியில் பங்குற்றி இரத்த பாசம் எனும் சிறுகதைக்குப் பரிசு பெற்ற பத்மா சோமகாந்தன் எனது தோழியானார். அவரே நான் அறிந்த முதலாவது எழுத்தாளராவார்.

கலாசாலைச் சிறுகதைப் போட்டிக்கு நடுவராய் இருந்த புதுமை லோலன், தி.ச. வரதர் தொடர்ந்து மகாகவி போன்றோர் அறிமுகமாகவும் ஈழகேசரியில் பிரசுரமான எமது ''போலிக் கௌரவம்'' கண்டு கனக. செந்திநாதன் வந்து அறிமுகம் செய்து ஊக்கம் தந்ததோடு தமது தொடர்பிலுள்ள அத்தனை எழுத்தாளர்களையும் தெரிய வைத்தார். அவ்வாறு அறிமுகமானவருள் ஒருவர் தான் எஸ்.பொ.

1960ம் ஆண்டென நினைக்கிறேன் ஒருநாள் வீட்டுக்குப் போவதற்காக சுன்னாகம் பேருந்து நிலையத்தில் இறங்கிய போது இரசிகமணியும், கவிஞர் நாகராஜனும், எஸ்.பொவும் நின்றிருந்தனர். செந்தி என்னிடம் வந்து எஸ்.பொவை அறிமுகம் செய்தார். ''நாங்கள் ஒரு குறுநாவல் எழுதப் போகிறோம். அவரவர் கற்பனையால் அதை இணக்கிச் செல்ல வேண்டும். புதியதொரு பரிசோதனை முயற்சி, நீங்களும் ஒரு அத்தியாயம் எழுத வேண்டும்'' என்றார். ஒப்புதல் கொடுத்தேன்.

எஸ்.பொவுக்கு அப்போது தான் என்னைத் தெரிகிறது. அவர் கண்களில் ஒரு அவநம்பிக்கை. சிறிதாகச் சிரித்துக் கொண்டே கூர்மையாக அளவெடுக்கிறார். செந்தியைப் பார்த்து 'யோசிப்பம்' என்கிறார். குதியுயர்ந்த சப்பாத்தும் பச்சைப் பொட்டும் 'இது எங்கை எழுதப் போகுது' என்று நினைத்தார் போலும். என் பங்குக்கு நானும் ''படிக்கிற பெடியன் போல கிடக்கு அதுக்குள்ள பெரிய எண்ணம்'' என நினைத்துக் கொண்டே சென்று விட்டேன். அந்தக் குறுநாவல் தான் 'மத்தாப்பு'.

மீண்டும் நாம் ஒருவரும் சந்திக்கவில்லை. முதலாவது அத்தியாயம் பத்திரிகையில் வந்ததைப் பார்த்தமும், 'ஓ, என்னைச் சேர்க்க வில்லைப் போலும்' என நினைக்கவும் இரு நாட்களின் பின் மூவருடைய கையெழுத்துப் பிரதிகளும் என்னிடம் வந்தன. எஸ்.பொ.விடம் இந்த நான்கும் போய்ச் சேர அவர் எல்லாவற்றையும் கொண்டு கூட்டி முடிக்க வேண்டும். 1958ம் ஆண்டுக்கலவரத்தையும் அதனுட் புகுத்தி ஆழமான அரசியல் செய்தியைச் சொல்லும் அர்த்தம் பொதிந்த நாவல் ஆக்கிவிட்டார்.

காத்திரமான செய்தியைப் புகுத்தியமை எமக்கு ஒரு மலைப்பு. ''ஆள் நராய்ங்கல் ஆனாலும் விசயகாரன்'' எனும் மதிப்பும், உயர் எண்ணமும் நட்புந்தோன்றின. அதுமாத்திரமல்ல அந்த நாவலுக்கான விளம்பரங்கள், விமர்சனங்கள், பாராட்டுக்கள் புதிய முயற்சி என முத்திரை குத்தப்படுதல் போன்றவற்றால் பதுங்கியிருந்த எம்மையும் வெளிச்சம் போட்டுத் தூக்கிக் காட்டியது.

மனிதர் ஒவ்வொருவரும் ஒரே மாதிரியல்லர் விரும்பத்தக்கதும் வெறுக்கத்தக்கதுமான பண்புகள் பழக்க வழக்கங்கள், மனவெழுச்சிகள் எல்லாம் கலந்திருக்கும். இதனை உணர்ந்து கொண்டால் மனிதநேயமும் நட்பும் இணைந்து செயற்படும். நின்று நிலைக்கும், ஏற்றுக் கொள்ளத்தக்கன அல்லனவாயினும் நேசிக்கமுடியும்.

இன்னொரு நிகழ்வு. டொமினிக் ஜீவாவின் "தண்ணீரும் கண்ணீரும்" நூல் வெளியீட்டு வைபவம். இலங்கை தமிழர் எழுத்தாளர் சங்கம் எடுக்கிறது. இவற்றிற்கு நான் புதியவள். ஆகையால் கடைசி வாங்கில் ஒருமூலையில் அமர்ந்து மௌனக் கிரகிப்பு. ஒரு எழுத்தாளனுக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும் என நினைத்துக் கொண்டே அடிக்கடி ஜீவாவைப் பார்த்துக் கொள்கிறேன். சாதீயம் பற்றியும் வெளிவெளியாய் பேசப்படுகிறது.

எஸ்.பொ. பேசினார். கசந்தது எனக்கு. 'பண்பெனப் படுவது பாடறிந்தொழுகல்' யாரிவர்? எதற்காக இப்படி பேசுகிறார். பாவம் ஜீவா" ஆனால் இதுதான் இலக்கிய நேர்மை என்கிறார் எஸ்.பொ. அவரது சொற்சாதுரியங்களிலும் பேச்சுவன்மையிலும் விமர்சனம் என்றால் இப்படித்தான் பேசவேண்டுமாக்கும் என நான் நினைத்துக் கொண்டாலும், என்னுள்ளம் அதை ஏற்றுக்கொள்ள மறுகிறது.

இதேபோல என் மதிப்புக்கும் கௌரவத்துக்கும் உரிய சில அறிஞர்கள் எஸ்.பொ.வின் கண்டனத்துக்கும் கேலிக்கும் உள்ளாக்கப்படும் போதெல்லாம் எனது ஏழை மனசு ரொம் வலிக்கும். வேதனைப்படும். இலக்கிய நேர்மை, சத்தியமும் உண்மையும் தான் என்தாரக மந்திரம் எனக் கூறுவதுபோல எழுதுகிறாரா? ஆனால் மனிதப்பண்பாடு எனும் மரபு மீறப்படுகிறதா? எதற்கும் மறுபக்கம் என்று ஒன்று உளவே. இவைதான் எனது அனுபவக் குறைவான அந்த நாளைய சிந்தனையாக இருந்தது.

எஸ்.பொவின் சிறுகதைகள் மிகப்பரவலாகப் பேசப்பட்டவை. 'வீ' எனும் தொகுதி வந்தபோது அதனைத் திருப்பித் திருப்பி வாசித்ததுண்டு. கதைகளெல்லாம் இரண்டெழுத்துத் தலைப்புகள் பல சொற்களுக்கு அகராதி பார்க்க வேண்டும் போல். பேச்சுத் தமிழ் என்றாலுங்கூட புரியாமல் பிரதேசத் தமிழோ என எண்ண வைத்தது. கிணறு என்றால் கூவம் எனப் போட்டிருக்கும். சிலசமயம் மட்டக்களப்பு பேச்சுத்தமிழோ? எளிமையான சொற்களுக்கும் அகராதியோ நிகண்டோ பார்த்து வேறு சொற் பிரயோகம் செய்கிறாரோ என எண்ணவும் வைக்கும். திரும்ப வாசிக்கும் போது பூடகமாக ஏதும் சொல்ல வருகிறாரோ என மூளைக்கும் வேலை கொடுக்க வேண்டும்.

மூன்று மாதக் கருவைச் சுமந்து கொண்டு கொழும்பில் நின்ற ஒரு நாளில் 'தீ' எனும் நாவல் கிடைத்தது. பல அனுபவங்கள் எங்களுக்கு தெரியாது நம்பவும் முடியவில்லை.

கல்வி என்பது புனிதமானது தெய்வீக உற்பத்திக்கான காலம். எத்தகைய உச்ச இன்பத்தை அடைந்தாலும் முறையாக வருவது. இதனைக் கெட்ட பழக்கம் எனச் சொல்வதில்லை. முறைதவறின் சாவான பாவச் செயல் எனும் பண்ணையில் வளர்க்கப்பட்டவர்கள் பலர். கட்டுப்பாடான வளர்ப்பு முறை 'தீ'யின் அருவருக்கத் தக்கதான வர்ணனைகள் ஓங்காளத்தை வருவித்தன. நினைக்கவே சத்தி சத்தி. அதன் மேலும் "உடைப்பும் அடைப்பும், அடைப்பும் உடைப்பும்" என்பன சுருங்கச் சொல்லி விளங்க வைத்தன. (எதனை வெறுக்கிறோமோ அந்தத் தொடர் இன்றும் நினைவில். வேடிக்கை)

விமர்சனங்களை பார்த்தும் கேட்டும் ஆபாசங்களும் எழுதப்பட வேண்டியது தான் என ஏற்றுக் கொள்ள வேண்டியதாயிற்று. சடங்கில் வந்தவையும் புதிதாக இருந்தாலும் இவையெல்லாம் எழுத்தில் சகஜம் எனப்பழக்கப்படுத்தி செமிக்க வைத்தாயிற்று. புனித காதல் பற்றி விலாவாரியாக எழுத மட்டும் தெரிந்தால் மட்டும் போதாது. அதற்கு மாறானவையும் உண்டு என ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் கிடைத்தது.

அதுமாத்திரமல்ல ஒரு நல்லவன் எப்படிக் கெடுக்கப்படுகிறான் என்பதை அசூசைப் படத்தக்க உத்தியைக் கையாண்டு எழுதியதால் அவை தவறான வழிகள் என்பது புரிய வைக்கப்படுகிறது. எனும் உணர்வும் ஏற்பட்டது.

எழுத்தாளர்களை ஏதாவது கூட்டத்தில் சந்திக்க முடிகிறதே தவிர, ஆண்களைப் போல் அங்கே, இங்கே, வீட்டில், தெருவில் எனச் சந்தித்து அளவளாவ முடிவதில்லை. வீட்டுப் பொறுப்பு, பாடசாலை வேலை, குழந்தைகள் பராமரிப்பு, அதனால் தொடர்புகள் குறைவு.

1964ம் ஆண்டு இளம்பிறை மலர் ஒன்றுக்கு கதைஒன்று தருவதாக ஒப்புக் கொண்டேன். கொழும்புக்குப் போன இடத்தில் ஒரே மைந்தனுக்கு நோய் கண்டு மருத்துவமனையில் இருந்தோம். கதை வேண்டி எஸ்.பொவும் ரஹ்மானும் வந்து விட்டார்கள். விளம்பரங்கள் கொடுத்துவிட்டோம் என்ன செய்வது எனவே, மறுநாள் வரும் படி சொல்லி விட்டேன்.

நோயின் தன்மை எனக்குப்புரியவில்லை. மொய்யலில் (Coma) படுத்திருக்க, நித்திரை என நினைத்து இரவிரவாக எழுதிமுடித்தேன். தாலிபோன்றதொரு அடையாளம் ஆண்களுக்கும் தேவை என்பதை நேரடியாக சொல்லாமல் இனம்மாறிய ஒரு தலைக் காதல் மூலமாகச் சொல்லி, 'ஆறாத் தழும்பு' எனத் தலைப்பும் இட்டு கொடுத்துவிட்டேன். ஏற்கனவே வீரகேசரிக்கு 'சலனம்' கதை அனுப்பியிருந்தோம். அந்தவார முடிவில் மகன் மறைந்து விட்டார். இருகதைகளும் பிரசுரமாகிவிட்டன.

ஆறாத்துயரம், இளம்பிறைக் கதையில் எஸ்.பொ. ஒரு ஜிகினா வேலையை ஒட்டிவிட்டார்.4,5 வரிகள் எம்முடையதல்ல. ஒரு இனத்தின் மீது வடு சொல்வதுபோல. எனக்குப் பிடிக்கவில்லை. அத்தோடு ஏன் இந்தத் தலைப்பை 'ஆறாத்தழும்பு' எனவைத்தேன். அதனால் அக்கதையை எனது சிறுகதைத் தொகுதியில் சேர்க்கவில்லை. பின்னர் ஒரு மகன் பிறந்தாலும், அது இன்றும் ஆறாத் தழும்புதான்.

சில நாட்களின் பின் எஸ்.பொ. இரசிக மணியுடன் காங்கேசன்துறை வந்தார். துக்கம் மேலிட ஒரு சொல் கூட பேச முடியவில்லை. மரணப் படுக்கை குற்றமுள்ள நெஞ்சாக்கி விட்டது. எஸ்.பொ. மனமுடைந்து செந்தியோடு ரொம்பத்துக்கப்பட்டுப் பேசினாராம்.

ஒருமுறை எஸ்.பொவும் மனைவியும் வீடுவெந்தனர் உபசரித்தோம். நகைச்சுவை ததும்பும் கதைகளைச் சொல்லச் சொல்ல அமைதியாகப் புன்முறுவல் பூக்கும் என் கணவர் கூட வாய்விட்டுச் சிரித்து மகிழ்ந்தார். மனைவியார், ''தேநீரும், சிகரெட்டுமாக இரவு முழுவதும் எழுதித் தள்ளிக்கொண்டே இருப்பார். எழுதியதாளெல்லாம் நிலத்திலே பறந்திருக்க அவர் படுத்து விடுவார். காலையிலே நான் ஒவ்வொன்றாகப் பொறுக்கிப் பக்கம் பார்த்து அடுக்கி விடுவேன்'' என்றார். அவவும் தன்பங்குக்கு சிரிப்புக் கதைதான். இத்தகைய சோடிகளைக் காணும்போது எமக்கும் கொள்ளை மகிழ்ச்சி. 'அவன் காரியம் யாவினுங் கை கொடுக்கும் மாதரறம்' அல்லவா – பேசிக் கொண்டிருக்கும் போதே வெற்றிலைத் தட்டமும் முன் வைக்கப்படுகிறது. கதைபேசிக் கொண்டே வெற்றிலையை எடுக்கிறார். இருபக்கமும் தடவித் துடைக்கிறார். காம்பையும் நுனியையும் கிள்ளுகிறார். சுண்ணாம்பை எடுத்து பிற்பக்கத்திலே அழகாகப் பூசுகிறார். அனிச்சையாகவே தொழில் நடக்கிறது. சிறிது சீவலை கறுவாவுடன் நடுவே வைக்கிறார். கலைத்துவத்துடன் நன்றாக மடிக்கிறார் மெல்ல நீட்டுகிறார். எஸ்.பொ. அதை வாங்கி வாயுள் வைக்கிறார் வாய் பேசுகிறது. காது கேட்கிறது. கண் பார்க்கிறது. ஆனால் இங்கே கைவண்ணம் தம்மையறியாமலே நடக்கிறது. இதனை பார்க்காதது போலப் பார்த்து, ரசிக்கிறது என் கலையுள்ளம். அரசர்களின் அடப்பைக்காரர் இப்படித்தான் ஒரு கலையாகச் செய்வார்களோ!

அந்த அந்நியோன்னியம் எனக்கு நன்றாகப் பிடித்துக் கொண்டது. பிறகென்ன ஈயடிச்சான் கொப்பிதான்.

குறிப்பறிந்த தாம்பத்தியம். வேறென்ன வேண்டும் உலகத்தில்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்குப் போன பின் என் எழுத்துலகம் ஒதுங்கிவிட்டது. எழுத்தெல்லாம் கல்லூரிக்காகவே. அது சமுகசேவையாகியதே தவிர வெளியுலகம் பார்த்ததில்லை. அகில இலங்கை ரீதியான பேச்சுப் போட்டி நாடகப் போட்டி விளையாட்டுப் போட்டி, பாடசாலை விழாக்கள் என நாடகம், நாட்டிய நாடகம், பேச்சுக்கள், வில்லுப்பாட்டு என எழுதுவதும் பழக்குவதும் ஆற்றல் அனைத்தையும் பிரயோகிக்கத்தக்க களமாக அமைந்ததால் சொற்பொழிவுகளைத் தவிர எழுத்தாளர்களைச் சந்திக்கும் வாய்ப்பு குறைந்து விட்டது. வருடத்துக்கு ஓரிரு சிறுகதைகள் மட்டும்.

அடுத்ததான சந்திப்பு கனடாவில் தான் எஸ்.பொ. வருகிறார் என்றும், அந்தக் கூட்டத்துக்கு நான் தலைமை தாங்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்கள். பழைய நட்பைப் புதுபிக்க ஆயத்தமாயிருந்தேன். தலைமையுரையை சிறிது நகைச்சுவை கலந்தும் பேசினேன். அவர் கவலையோடு என்னைப் பார்த்துக் கொண்டிருந்தார். 1965ம் ஆண்டளவில் கண்டபின் 35 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஒரு சுற்றுப் பருத்து ஒக்ஸிசன் சிலின்டருடன் நடமாடுவதைக் கண்டு பழைய குறமகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தார் போலும். 30 வருடக் கதையாக 1990இல் 'குறமகள் கதைகள்' எனும் சிறுகதைத் தொகுதி விட்டு 300 நூல்கள் கொடுபட்டு ஒருவாரத்துள் ஓயாத குண்டு வீச்சினால் போட்டது போட்டபடி 500 பிரதிகளோடு சகலதையும் விட்டு ஓடவேண்டி நேரிட்டது. திரும்ப வீடு போகும் சந்தர்ப்பம் வரவில்லை சொல்லி முடித்தேன். ரொம்பக் கவலைப்பட்டார். தான் கட்டாயம் உதவி செய்வேனெனக் கூறி என் சிறு கதைகளைத் தரும்படி தொல்லைப் படுத்திப் பெற்றுக் கொண்டார். தேடிப்பிடித்தும் நண்பர்களிடம் பெற்றும் கொடுத்துவிட்டோம்.

இந்தியாவுக்கு சென்றபின் 'உள்ளக் கமலமடி' எனும் தொகுதியையும் 'குறமகள் கதைகளை' இரண்டாம் பதிப்பாகவும் போட்டு, என்தூசி தட்டிப்போன 'எழுத்தாளர்' பெயரை நிலை நிறுத்திய பெருமை எஸ்.பொ.வையே சாரும். அதனால் ஆய்வுக் கட்டுரைகளில் நேரத்தைச் செலவழித்துக் கொண்டிருந்த என்னால் இப்போது குறுநாவல்கள் சிறுகதைகளில் ஈடுபடமுடிகிறது. இதற்காக எஸ்.பொவை நன்றியுடன் நினைவு கூருகிறேன். சமூக சேவைகளில் ஈடுபாடு கூடியமையால் யாராவது உந்து சக்தியாக செயற்படும் போதுதான் எழுத்துத்துறையில் ஈடுபடமுடிகிறது வழக்கம். சில வருடங்களாக இரசிகமணியின் இடத்தை எஸ்.பொ. நிறைக்கிறார்

எஸ்.பொ.வின் உள்ளார்ந்த சக்தி பிரமாண்டமானது. அவரது ஆக்க இலக்கியங்களின் முன் எந்த ஒரு தமிழ் எழுத்தாளனும் எதிர் நிற்க முடியாது. கருவுக்கும் அதன் சூழலுக்கும் ஏற்றதான மொழி, ஏற்ற நடையையும் உருவத்தையும், உத்தி முறைகளையும் எஸ்.பொ கையாளுவது போல வேறு யாரும் செய்யவில்லை. எழுத்தில் அவர் தொடாத துறையுமில்லை சொல்லாத சேதியுமில்லை என பரந்துபட்ட வாசகியான எம்மால் சொல்ல முடியும். அந்தத் தனித்துவம் எங்கும் பரிமளிக்கும்.

''வரலாற்றில் வாழ்தல்'' எனும் 2000 பக்கங்களைக் கொண்ட சுயசரிதையில் அவரது பயணங்களோடு கூடிய அந்தந்தப் பிரதேச வரலாறு, புவியியல், அரசியல், கல்வி, சமூகவியல் சார்ந்த நிறைந்த தகவல்கள் கிடைக்கின்றன. அந்தந்த இடங்களில் தமிழன் கலாசாரத்தையும் கொடுத்து அவர்களின் கலாசாரத்தை எங்களுக்கும் தருகிறார். உதாரணமாகப் பேரப் பிள்ளையின் சுட்டித்தனத்தைச் சொல்லும்போது, பிள்ளைகளின் வளர்ப்பு முறை இதுதான் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

தன் எழுத்துப் பணிக்கு ஏற்றதாக மனைவியை பிள்ளைகளை நண்பர்களை அச்சகத்தை அவர்களை அறியாமலே பயிற்சி கொடுத்துப் பெற்றுக் கொண்ட கெட்டித்தனமும் சுட்டித்தனமும் வேறொருவருக்கு வருமா! மீண்டும் அவரது முத்து விழாவில் சந்திப்போம்.

# வி. ஜீவகுமாரனின் 'சங்கானைச் சண்டியன்'

# அணிந்துரை




- தி. ஞானசேகரன்

"யாவும் கற்பனையல்ல" என்ற சிறுகதைத் தொகுதியினையும், "மக்கள்... மக்களால்... மக்களுக்காக..." என்ற நாவலையும் தந்து தமிழ் இலக்கிய உலகில் தனது இருப்பினை ஆழமாகப் பதித்துக் கொண்ட வி. ஜீவகுமாரனின் மற்றுமொரு கதைத் தொகுப்புத்தான் இந்தச் "சங்கானைச் சண்டியன்". இத்தொகுப்பில் பத்துச் சிறுகதைகளும் இரண்டு குறுநாவல்களும் அடங்கியுள்ளன.

ஒவ்வொரு எழுத்தாளனும் தான் பயிலும் இலக்கிய உலகில் தனது முத்திரையைப் பதிப்பது தரிசனத் தனித்துவத்தினாலேயே. அவ்வகையில் ஜீவகுமாரனின் கதைகளில் ஓர் இலக்கியச் சிரத்தை இருக்கும். களமும், சூழலும் தத்ரூபமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். ஆத்மபலத்தோடு தானுணர்ந்த வலிகளைப் போக்கிக் கொள்ளும் தன்மையும் மானிடப் பெறுமானம் கொண்ட மனிதநிலைச் சித்தரிப்பும் முனைப்புற்றிருக்கும். இவை யாவும் இத்தொகுப்பிலுள்ள கதைகளிலும் தனித்துவத்துடன் தரிசனம் தருகின்றன.

இத்தொகுதியிலுள்ள முதலாவது சிறுகதை "வேட்டை". வன்னி மண்ணை மூன்று குறுநில மன்னர்கள் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் நடைபெறுகிறது. இதன்மூலம் ஒரு சரித்திரச் சிறுகதையை வாசிக்கும் உணர்வு வாசகனுக்கு ஏற்படுகிறது. இந்தக் கதையின் தொடர்ச்சியாக இலங்கையில் இனக் கலவரத்தின்போது நடைபெற்ற வேறொரு கதையை இணைத்துப் புதுமை செய்கிறார் ஜீவகுமாரன்.

தென்னிலங்கை முழுவதும் தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. தமிழரின் கடைகள், சொத்துக்கள் அனைத்தும் சூறையாடப்பட்டுக் கொண்டிருந்தன. பாணந்துறைப் பிரதேசத்தில் பல கடைகளின் சொந்தக்காரர் வைத்திலிங்கம் முதலாளி. அவரது கடையையும் அவரையும் நோக்கி ஒரு கூட்டம் வந்து கொண்டிருக்கிறது. சாராயம் விற்கும் யாமினியும் அவளது மகன் விஜயசிங்காவும் அங்கு வருகின்றனர். சிங்கள மொழியில் "கொல்லுங்கடா அவனை" என வைத்திலிங்கம் முதலாளியைச் சுட்டுகிறாள் அவள். அடுத்த கணம் அவளது மகன் விஜயசிங்காவின் கையில் இருந்த நீண்ட கத்தி வைத்திலிங்கத்தாரின் நடு நெஞ்சில் பாய்ந்தது.

இந்தக் கதையைப் படித்து முடித்ததும் வாசகர் மனதில் பலவாறான உணர்வுகள் தொற்றிக்கொள்கின்றன. முன்னைய கதையில் செம்பருத்தி மன்னனைச் சுட்டி விரலை நீட்டுகிறாள். பின்னைய கதையில், யாமினி வைத்திலிங்கம் முதலாளியை நோக்கி விரலைச் சுட்டுகிறாள். இங்கே குறியீடாக ஆசிரியர் தான் கூறவந்த செய்தியைச் சொல்லாமல் சொல்லிவிடுகிறார். சிறுகதைக்குரிய ஒருமைப்பாடு குன்றாமல் சரித்திரக் கதையுடன் பிற்பட்ட காலக் கதையை இணைத்துவிடும் பாங்கு ஆசிரியரின் படைப்பாற்றல் திறனுக்குச் சான்றாக அமைகிறது. இத்தொகுப்பில் உள்ள உச்சமான கதைகளில் இதுவும் ஒன்றாகும்.

"நானும் ஒரு அகதியாக..." என்ற சிறுகதையில் கிராமப்புறம் சார்ந்த காட்சிகளையும் அவற்றுடன் கூடிய வாழ்க்கைக் கூறுகளையும், 'உஞ்சு' என்னும் நாயினது பார்வையில் சித்தரிக்கின்றார் ஆசிரியர். முருகன் கோயில், கொடிகாமம் ஸ்ரேஷன், இயக்கச் சண்டைகள், வைரவர் கோயில் வேள்வி, காதல் முறிவினால் ஏற்பட்ட தற்கொலைகள், கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட றோஸி எனும் நாய்க்கும் உஞ்சுவுக்கும் ஏற்பட்ட காதல் அனுபவங்கள், அதனால் ஏற்படும் வலிகள் போன்ற பல்வேறு விடயங்களை தற்புதுமையுடனும் கலாநேர்த்தியுடனும் சித்தரிக்கும் பாங்கு சிறப்புடையது. ஆசிரியர் இக்கதையினூடே சமூக விமர்சனமாகப் பல விடயங்களைச் சொல்லிச் செல்வது அவரது திறமைக்குச் சான்றாக அமைகிறது. எடுத்துக்காட்டாக "எனக்கு இந்தச் சண்டைக்கான காரணங்களே விளங்குவதில்லை... பஞ்சத்தால் மடிந்து கொண்டிருக்கும் எதியோப்பியாவும் சரி, பணத்தில் புரளும் அமெரிக்கா என்றாலும் சரி, இந்த இரண்டுக்கும் இடையில் தத்தளித்துக் கொண்டிருக்கும் எங்கள் நாடுகள் என்றாலும் சரி... எங்கள் நாட்டு மக்கள் புலம்பெயர்ந்து போய் வாழும் நாடுகளிலும் சரி இந்தச் சண்டைகளுக்குக் குறைவே இல்லை. அங்கே பெரும்பாலும் நடைபெறும் சண்டைகள் சாப்பாட்டுச் சண்டைகளல்ல. பதிலாக கௌரவச் சண்டைகள்... தாங்கள் தாங்களாகவே தமக்கு முடிகளைத் தூக்கி வைத்துக்கொண்டு தங்களுக்குள் பிடிக்கும் சக்கரவர்த்திச் சண்டைகள்" இத்தகைய விவரணங்கள், ஆசிரியர் தமது அறிவையும் அகன்ற அனுபவத்தையும் பொருத்தமான இடங்களில் பயன்படுத்திக் கொள்ளும் முறைமைக்குச் சான்றாகின்றன.

"கிராமத்துப் பெரிய வீட்டுக்காரி", "மெயில் லோஞ்ச்" ஆகியவை ஒருசேரப் பார்க்கவேண்டிய கதைகள். இக்கதைகள் நிறைவேறாக் காதலின் வலிகளைச் சித்தரிப்பவை. வாழ்க்கையின் கூறுகளை நேர்மையாகவும் உருக்கமாகவும் விவரிக்கும் இக்கதைகள் மானிடத்தின் இலளிதங்களை, இனிமைகளை மட்டுமன்றி, இன்னல்களை, இடர்களை, இழப்புக்களை கலாநேர்த்தியுடன் சித்தரிக்கின்றன. ஒரு சிறுகதையைப் படித்து முடித்ததும் அது தரும் உணர்வுகள் படிப்பவர் மனதில் தொற்றிநிற்குமானால் அல்லது

அதிர்வினை ஏற்படுத்துமானால் அதனை ஒரு சிறந்த சிறுகதையாகக் கொள்ளலாம். இத்தகைய சிறப்புக்களை இக்கதைகளிலே நாம் காணக்கூடியதாக உள்ளது.

"கழிப்பு" என்ற சிறுகதையில், நம்மவர்கள் சிலர் புலம்பெயர்ந்து சென்ற பின்னரும் சாதி ஏற்றத்தாழ்வுகளையும் மேட்டுக்குடிப் பெருமைகளையும் கைவிடாது பேணிக்காத்து வரும் ஒரு நிலையைக் காண்கிறோம். அகமன அழுக்குகள், வாழ்நிலை வக்கிரங்கள், எவ்வாறெல்லாம் நம்மவர்கள் சிலரை புலம்பெயர்ந்த பின்பும் ஆட்டிப்படைக்கின்றன என்பதை இக்கதையிலே தரிசிக்க முடிகிறது.

"செல்வி ஏன் அழுகிறாள்?", "வலி" ஆகிய கதைகளில் போர்க்கால அவலங்களும், அழிவுகளும், இடப்பெயர்வுகளும் மிக அவதானிப்புடன் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. "செல்வி ஏன் அழுகிறாள்?" என்ற கதை இடம்பெயரும் போது ஏற்படும் அவலங்களையும், அகதி முகாமொன்றில் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் சொல்லொணாத் துயரங்களையும் சித்தரிக்கின்றன. "வலி" என்ற கதை அகதி முகாமொன்றில் ஏற்படுகின்ற சிறுவர் துஷ்பிரயோகத்தை வெளிப்படுத்துகிறது. இக்கதைகளில் மனித இன்னல்கள், மனித அவல நிலை உள்ளீடாகவும் நேரடியாகவும் எடுத்துப் பேசப்படுகின்றன.

மக்கள் வாழ்வியலின் நெருக்கடிகளிலிருந்துதான் இலக்கியம் தோன்றுகிறது. வாழ்வியல் நெருக்கடிகளுக்கு எதிர்வினை என்ற முறையிலேதான் படைப்புக்கள் அமைவதையும் கண்டுகொள்ளலாம். அவ்வகையில் "அகால மரணம்" என்ற கதையில், இயக்கத்தில் சேர்ந்து போர்க்களத்தில் இறந்துவிட்ட ஓர் இளம்பெண்ணின் உடலை நிர்வாணப்படுத்திக் காட்சிப்படுத்துகின்ற ஓர் இழிநிலைமையைக் கண்ட அவளது வயோதிபப் பேரன் தன்னுயிரைத் தானே மாய்த்துக்கொள்ளும் அவலத்தைக் காண்கிறோம். சிறுகதை என்பது, குறித்த ஒரு சூழ்நிலையின் அடியாக அல்லது சம்பவத்தின் அடியாக ஏற்படுகின்ற உணர்வு நிலையின் தர்க்கரீதியான பரிணாமமாகும். மேற்படி உணர்வு நிலை தொய்வடையாத வகையில் செறிவான சொற்களால் செய்நேர்த்தியுடன் இக்கதையைக் கட்டியமைத்திருக்கிறார் ஜீவகுமாரன்.

புலம்பெயர் நாடுகளுக்கு எமது பெண்கள் திருமணமாகிச் செல்லும்போது சிலருக்கு ஏற்படும் துரதிர்ஷ்டமான நிலைமைகளைப் பத்திரிகைகள் வாயிலாகவும், பலர் சொல்லக் கேட்டும் அறிந்திருக்கிறோம். சிலர் அனுபவ ரீதியாகவும் அறிந்திருப்பார்கள். "கோமதி" என்ற குறுநாவலில், புலம்பெயர்ந்த நாடொன்றுக்குத் திருமணமாகிச் சென்ற பெண்ணொருத்திக்கு ஏற்படும் அவலத்தையும் அதன் காரணமாக அவளது மனநிலை பாதிக்கப்படுவதையும் காண்கிறோம். நமது பாரம்பரியச் சமூகப் பெறுமானங்களின் தகர்வை, இடிபாடுகளை, மாறிவரும் சமூக விழுமியங்களுக்கும் அவலங்களுக்கும் மத்தியில் தமது இருப்பை அர்த்தப்படுத்திக் கொள்ள முயலும் ஒரு மனிதனின் நாடித்துடிப்பு இங்கே பதிவு செய்யப்படுகிறது. அவளின் மீது எமக்கு பரிவும் பாசமும் ஏற்படுகின்றன. எளிமையும் இனிமையும் சேர்ந்த நடைச்சிறப்பு இக்குறுநாவலுக்கு மேலும் வளம் சேர்க்கிறது.

இத்தொகுப்பின் மகுடக் கதையாக அமைவது "சங்கானைச் சண்டியன்" என்ற குறுநாவல். "கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்குப் பின் என்பது போல இலங்கையில் ஆயுதப் போராட்டத்திற்கு முன்... ஆயுதப் போராட்டத்திற்குப் பின்... மேலும் ஆயுதங்கள் மௌனமாகிவிட்ட காலம் என மூன்று கட்டங்களாகப் பிரித்துக் கொள்ள முடியும். அவ்வகையில் இது ஆயுதப் போராட்டத்திற்கு முன்னான கதை!

அனைத்துத் தொகுதிகளிலும் "எங்களையே அனுப்புங்கள்... உங்களுக்கு தனித்தமிழ் நாட்டைப் பெற்றுத் தருவோம்" என தமிழர் கூட்டணியினர் வாக்குறுதியளித்து பாராளுமன்றம் சென்ற காலகட்டத்தில் நடந்ததாகப் புனையப்பட்ட கதை!

இவ்வாறு ஓர் எள்ளலுடன் இந்தக் குறுநாவலை ஆரம்பித்து சுவை குன்றாமல் நகர்த்திச் செல்கிறார் ஜீவகுமாரன். சங்கானைக் கிராமம், அவரது படைப்பியல் தொழிற்பாட்டுக்குத் தளமாக அமைகிறது. இக்குறுநாவலில் தனது இலக்கு பற்றிய பூரணத் தெளிவோடு ஆசிரியர் தனது சிருஷ்டியில் ஈடுபட்டிருப்பதை உய்த்துணர முடிகிறது.

போரினால் இன்று தமிழ்க் கிராமங்கள் பல சிதைவடைந்துள்ளன. ஒரு காலகட்டத்தில் சங்கானைக் கிராமம் எத்தகைய பலத்தோடும் பலவீனத்தோடும் இருந்தது. அங்கு வாழ்ந்த மக்களின் எண்ணங்கள், சிந்தனைகள், நம்பிக்கைகள், சடங்குகள், சந்தோஷங்கள், சண்டித் தனங்கள், பழக்க வழக்கங்கள், குணவியல்புகள், முரண்படுகின்ற தன்மைகள், குடும்ப உறவின் ஒப்பில்லாப் பெருமைகள், அவர்கள் வாழ்ந்த சூழல், அவர்களது அரசியல் குரோதங்கள், அவற்றினால் ஏற்படுகின்ற கொலைகள் இவையாவும் எப்படி இருந்தனவோ அப்படியே இக்குறுநாவலில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இற்றைக்கு மூன்று, நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணக் கிராமங்களின் இயக்கம் எவ்வாறிருந்தது என்பதை அறிந்து கொள்ள விரும்பும் ஓர் ஆய்வாளனுக்கு இந்த சங்கானைச் சண்டியன் குறுநாவலைச் சிபாரிசு செய்யலாம் எனக் கொள்ளுமளவிற்கு இக்குறுநாவல் ஆவணப் பெறுமானம் வாய்ந்தது.

ஜீவகுமாரனின் கதைகளின் சமூகப்பெறுமானம் யாது? என்று நோக்கினால், அவரது கதைகள் பலவற்றிலும் மனித நேயமே அடிநாதமாகத் தொனிக்கிறது. மனித அவல விடுவிப்புத்தான் உண்மையான கலை இலக்கியத்தின் தேடற் பொருளாகும். ஜீவகுமாரனின் கதைகள் பலவும் இவற்றையே எமக்கு எடுத்தியம்புகின்றன.

ஜீவகுமாரனின் இத்தொகுப்பு தமிழிலக்கியத்திற்கு ஒரு சிறந்த வரவு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவருக்கு மேலும் பல வெற்றிகள் கிட்டவேண்டுமென வாழ்த்துகிறேன்.

**வெளியீடு : மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்**
**இலங்கையில் கிடைக்குமிடம் : பூபாலசிங்கம் புத்தகசாலை**



# மானாமக்கீன் ஓசையில்லா ஓசைகள் 06

**'கலாபூஷணம்' இல்லாமலேயே காலன் கவர்ந்த 94 – அகவை ஒலிபரப்பாளர்!**

இலங்கை வானொலி வரலாற்றில் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்த ஒலிபரப்பாளரும் கலைஞரும் ''ரேடியோ மாமா'' அவர்களாவே இருக்க முடியும்.

'ரேடியோ சிலோன்' என்றொலித்த, அந்தப் பூர்வீக, காலத்திலேயே 'ஒலிச்சுடர்' பரப்பியதால் 'சிறுவர் மலர்' சிறுவர்களுக்கு மட்டுமன்று அனைவருக்குமே அவர் 'ரேடியோ மாமா!'

தமிழின் மீதிருந்த அளவு கடந்த பற்றுதலால் தமது, இறுதிக் காலங்களில் 'வானொலி மாமா' என அழைக்கக் கேட்டுக் கொண்டார்.

சாவகச்சேரி, சங்கத்தானையின் ஒரு சதாசிவத்தாரால் 06.12.1914ல் முத்தாக சரவணமுத்து மாமா என் போன்றவர்களுக்குக் கிடைத்தார். பிரியும் பொழுது அகவை 94!

ஒலிபரப்புத் துறையில் இப்படி வாழ்ந்து, மறைந்தவர் வேறு யார் அபிமானிகளே!

வானொலி ஒலிவாங்கியைத் தவிர வேறெங்குமே ஓசை எழுப்பிப் பழக்கமில்லாதவர் அவர்!

அதனால் தான் 'கலாபூஷணம்' என்ற ஓசை அன்னாரது பெயருக்கு முன்னால் ஒலிக்கவில்லை!



2006ல் தமது 92வது பிறந்த நாளை துணைவியார் மகேஸ்வரியுடன் கொண்டாடி மகிழும் ரேடியோ மாமா

''என்ன மாமா இப்படி இந்து சமயக் கலாசாரத் திணைக் களத்தாரின் நோக்கும் போக்கும்?'' எனக் காணும் பொழுதெல்லாம் புலம்பினால், ''விட்டுத் தள்ளும் மருமகனே! எங்களதூர் தவில்காரருக்கும், தம்பூராக்காரருக்கும் அவர்கள் கொடுத்திருப்பதே பெரிய விடயம்'' என்பார்!

(ஆனால், அதே திணைக்களத்தார், அந்திம கிரியைகள் நிகழ்ந்த பொழுது ஒலிவாங்கியிலும் ஒலிவாங்கி இல்லாமலும் அழாமல் அழாதது வேறு விடயம்!)

இந்த அற்புதமான அமைதியான மனிதர், ஓர் அதிசயத்தைப் புரிந்து விட்டே மறைந்தார்!

மாமா அவர்களது செல்லமகள் – தலைமகள் – நிர்த்திய கலாநிதி என்னிடம் தந்த அந்த 'மரண அறிவித்தல்' தாளைப் பார்த்து அப்படியே அதிர்ந்து போனேன்!

**தன் கையால் தனக்கு மரண அறிவித்தல்!**

மாமா தனக்குத் தானே அறிவித்தல் தயாரித்திருந்தார். தன் கையாலேயே எழுதியிருந்தார்!

காலன் தன்னை அழைக்க விரைவில் வந்து விடுவான் என்றுணரத்தலைப்பட்ட மாமா 23.12.2008 தேதியிட்டு (கிட்டத்தட்ட மறைவுக்கு ஓராண்டுக்கு முன்) தமிழ் இதழ்கள் ஓரிரண்டைத் தேர்ந்தெடுத்து, தனது கடிதத் தலைப்பில் பிரசுரத்திற்கு மரண அறிவித்தல் எழுதியிருந்தார்! அதைத் தனது அருமைச் செல்லமகள் 'கலா' வாழ்ந்து கொண்டிருந்த அமெரிக்காவுக்கு அஞ்சல் செய்திருந்தார்!

அதில் இரு இடங்களே வெற்றிடமாக இருந்தன. பூதவுடல் பயணிக்கும் தேதியும், தகனம் நிகழும் நேரமுமே!

அத்துடன், ஒரெழுத்தும் ஆங்கிலம் உபயோகிக்க வில்லை. தாம் இறுதி வரை வாழ்ந்த வெள்ளவத்தை இல்லத்திலேயே கடைசி ஓய்வுறக்கத்தை விரும்பினார். (இப்பொழுது, பெரும்பாலானோர் விரும்பி உறங்குவது வாடகைச் சவக்காலை அல்லவா!)

இப்பக்கத்தில் அன்னாரின் கையெழுத்திலான மரண அறிவித்தலைச் சமர்ப்பித்து, நினைவலைகளில் ஓசையிடும் பல ஒலிகளிலிருந்து ஒன்றிரண்டைச் சிந்தி எனது அஞ்சலியைச் செலுத்த அனுமதி தரவேண்டும் அபிமானிகளே!

## மரண அறிவித்தல்

### சதாசிவம் சரவணமுத்து

அண்மையில் காலஞ்சென்ற மகேஸ்வரியின் கணவரும், இளைப்பாறிய அரச கரும மொழித் திணைக்கள அத்தியட்சகரும், (முன்னாள் வானொலி மாமா); சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த காலம் சென்ற சாதாசிவம், காலம்சென்ற பொன்னம்மா அவர்களின் மகனும், காலம் சென்ற டாக்டர் எஸ். பொன்னுச்சாமி, காலம் சென்ற விக்டோரியா பொன்னுச்சாமி, (யாழ்ப்பாணம் அப்போதிக்கரீஸ்) அவர்களின் மருமகனும், நிர்த்திய கலாநிதி பால கணேசன் (அமெரிக்கா) டாக்டர் அசோகன் (ஐக்கிய இராச்சியம்), பரதன் (மலேசியா) ஆகியோரின் தகப்பனாரும், பாலகணேசன் (அமெரிக்கா), மக்சீன் அசோகன் (ஐக்கிய இராச்சியம்), மரீனா பரதன் (மலேசியா) ஆகியோரின் மாமனாரும், பிரசன்னா கஜந்தன் ஹரேன், சஞ்சிவ், அஞ்சலி, அபினேஷ், வித்தியா ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அண்ணாரின் பூதவுடல் ...................... அன்று இல. 6, இரஞ்சன் வீதி, ஸ்டேசன் வீதி, வெள்ளவத்தையிலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு, கனத்தை இந்து மயானத்தில் காலை/ மாலை மணிக்கு தகனம் செய்யப்படும்.

*இல. 6, இரஞ்சன் வீதி,*
*புகையிரத நிலைய வீதி வழி,*
*வெள்ளவத்தை.*

### தமிழகச் சிறார்கள் தவமிருந்த ரேடியோ மாமா!

அந்த 1947ல் 'கல்கண்டு' இதழின் தமிழ்வாணன் ஒரு புறத்தில் கவர்ந்திழுத்திருந்தார் என்றால், தமிழ்நாடு முழுமைக்கும் தெரிந்திருந்த சாவகச்சேரி – சங்கத்தானை சரவணமுத்து மாமா மறுபுறத்தில் வசியப்படுத்தியிருந்தார்.

அந்த வகையில், அந்த 12 – அகவையில் 'சிறுவர் மலருக்குக்' கதையும், குட்டி நாடகமும் எழுதும் ஆவல் தோன்றியது. 'நாயின் உதவி' என்றொரு பக்கக் குட்டிக்கதை போனது.

ஒரே கிழமையில், அச்சமயம் மூன்றே சதத்திற்கு விற்கப்பட்ட அஞ்சல் அட்டையொன்று என்னை வந்தடைந்தது.

அதில் மிகமிகச் சுருக்கமாக "அன்பு மருமகனே, மக்கீன். உங்கள் "நாயின் உதவி" கதை அருமை. நீங்களே அதை வாசிக்க அடுத்த கிழமை வரலாம்! வணக்கம். இப்படிக்கு, ரேடியோ மாமா.

இன்றைக்கும் என்வசம் பொக்கிசமாக இருக்கும் அந்த அஞ்சலட்டை நான் என் குடும்பத்துக்கு விட்டுச் செல்லும் ஒரு முக்கிய ஆவணமாக அமைந்து விட்டது.

அந்த அட்டைதான் வானொலி நிலையப் படிகளை மிதிக்கவும், கலையகத்தைக் காணவும் வைத்தது. பின்னர் 10 ஆண்டுகள் முஸ்லிம் ஒலிபரப்பில் சேவையாற்றவும், தமிழ்த் தேசிய ஒலிபரப்பு நாடக அரங்கில் கணக்கற்ற நாடகங்களை எழுதிக் குவிக்கவும் வழி செய்தது.

ஒரு 'கற்பனை நாய்' எனக்குச் செய்த பாரிய உதவிகள் அவை.

அவர் 'சிறுவர் மலர்' நிகழ்ச்சியை நடத்திய சமயம் அது இலங்கை வானொலியின் பொற்காலம்!

அருமை ரேடியோ மாமா அவர்கள் எங்களுக்கு தமிழ் உணர்வைப் புகட்டினார்கள். தமிழன்னைக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமைகளைச் சொல்லிக் கொடுத்தார்கள்.

சகல இன மருமக்களையும் பங்குபெற வைப்பதில் அல்லது நிகழ்ச்சிகளில் இனமோ, மதமோ, கலாசார வேறுபாடுகளோ வித்தியாசப்பட்டு விடாதபடி பார்த்துக் கொள்வதில் அவருக்கு நிகர் அவரே!

இலங்கைச் சிறார்களுக்குச் சரிசமனாகத் தமிழகச் சிறுவர் சிறுமியர் அவர் குரலைக் கேட்க ஒவ்வொரு ஞாயிறும் மாலை 4.15க்கு (பின்னர் 11.15 பகல்) தவமிருந்தனர். வாரந்தோறும் ஆயிரக் கணக்கில் அஞ்சலட்டைகள்!

பொங்கலும் தீபாவளியும் வந்தால் சிறுவர் மலருக்குக் கொண்டாட்டம்தான்! அதே போல் ஈஸ்டரும் கிறிஸ்மஸும் வந்தால் கேட்க வேண்டியதில்லை. ஈகைத் திருநாளாம் நோன்புப் பெருநாளும், தியாகத் திருநாளாம் ஹஜ்ஜுப் பெருநாளும் கலையகத்தில் களைகட்டி இருக்கும்.

இத்தனைக்கும் மாமா பழுத்த சைவம்!

திருக்கேதீஸ்வர திருப்பணி சபை, கதிர்காம யாத்திரிகள் தொண்டர் அமைப்பு, அகில இலங்கை இந்து மாமன்றம் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டினார். பிற்காலத்தில் முக்கிய பதவிகளும் வகித்தார்.

கடந்த ஆண்டில், கிட்டத்தட்ட இதே காலகட்டம். எங்கள் குருவிக் கூட்டுக் குடும்பத்தில் மிக முக்கிய நிகழ்வு எங்கள் டாக்டர் மகளாரின் திருமணம். முஸ்லிம் சம்பிரதாயங்கள் பின்பற்றப்பட்ட வைபவத்தில் அவரே குடும்பத்தின் மூத்த பெரியவராக நின்று வைபவத்தை நடத்திக் கொடுத்தார். நாங்கள் அதைப் பெரும் பாக்கியமாகக் கருதினோம்.

ஒரு வானொலி மனிதர் எவ்வாறு ஒருவரது சிறுவயதிலிருந்து அவரது முதுமைப் பருவம் வரை ஊடாடினார் என்பதையும், அதற்கு இறைவனின் திருவருள் இருந்தது என்பதையும் நினைக்கும் பொழுது நானும் குடும்பத்தினரும் மெய்சிலிர்த்துப் போகிறோம்.

இப்பொழுதும் என் கரங்களில் இந்த பேனா இருக்கிறதென்றால், என்னையும் ஓரிருவருக்குத் தெரியும் என்றால், அதற்கு சங்கத்தானை சரவணமுத்து மாமா அவர்களும் தலையாய காரணம்.

எப்பொழுதும், என்றென்றைக்கும் அவருக்கே உரிய அமைதியோடு அடக்கத்தோடு ஆனந்தமாக ஒய்வுறக்கம் கொள்வாராக. ஓர் அடிக்குறிப்பு:

பிரபல படைப்பிலக்கியகாரர் புலோலியூர் க. சதாசிவம் (ஞானம் – இணை ஆசிரியராக இருந்தவர்) அமரரான பின்பு 'கலாபூஷணம்' வழங்கிக் கௌரவித்தது போல் இந்த 94 வயது வானொலிக் கலைஞருக்கும் செய்திடல் இந்துக் கலாசாரத் திணைக்களத்தாரின் கடமை. அப்பொழுதுதான் நீங்கள் அஞ்சலி செலுத்த வந்ததற்கும் அர்த்தம் இருக்கும்.

### மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கப் பொற்கிழி!

மலேசியப் படைப்பிலக்கியத்தின் உலகளாவிய அறிமுகத்திற்கு முழுமுதற் காரணராகத் திகழும் சை.

பீர்முகம்மது அவர்கள் ஏற்கெனவே 'ஞானம்' அடையாளப்படுத்திய ஒருவர் தான். நானும் என் பங்குக்கு இரு இதழ்களுக்கு முன் ஓசையிட்டிருந்தேன்.

இப்பொழுது புது ஓசை. புகழ்ந்து பாராட்டப்பட வேண்டிய ஓசை!

என் பேனா, அபிமானிகளுக்கு அறிமுகப்படுத்திய அவரது, 'பயாஸ்கோப் காரனும் வான்கோழிகளும்' சிறுகதைத் தொகுப்பு இவ்வாண்டு பொற்கிழி ஒன்றைப் பெற்று விட்டது!

மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ஆண்டு தோறும் சிறந்த ஒரு நூலுக்கு "டான்ஸ்ரீ மாணிக்க வாசகம் புத்தகப் பரிசு" விருது வழங்கி ஏழாயிரம் மலேசிய வெள்ளிகளை பரிசளித்து வருகிறது. (இலங்கை நாணயத்தில் சுமார் 25,000) அந்த வகையில், 2005–2006–2007–2008 ஆண்டுகளில் வெளிவந்த 21 சிறுகதைத் தொகுப்புகளிலிருந்து சிறந்ததாக பீர்முகம்மதுவின் நூல் தேர்வாகி பொற்கிழி வழங்கப்பட்டுள்ளது.



இப்பரிசுத் திட்டத்தை மலேசிய முன்னைநாள் அமைச்சர் மாணிக்கவாசகம் நினைவில் அவரது குடும்பத்தினர் ஏற்படுத்தியுள்ளனர். இவ்வாண்டு பரிசளிப்பு விழாவில் மதுரை, காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கற்பக குமாரவேல் சிறப்பதிதியாகக் கலந்து கொண்டார்.

இங்கு பிரசுரமாகியுள்ள படத்தில், (இ.வ.) மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் பெ. இராஜேந்திரன், முன்னாள் துணை அமைச்சர் டத்தோ சுப்பிரமணியம், சை. பீர்முகம்மது (மாலையுடன்), கற்பக குமாரவேல் (காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) ஆகியோர் காணப்படுகின்றனர்.

இலங்கை இலக்கிய உலகத்தினரின் இதயம் நிறைந்த பாராட்டுகள்.

**அடிக்குறிப்பு**

(பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பில் 'ஞானம்' பிரசுரித்த சிறுகதையும் அடங்கும்)

---

குறுங்கதை




திருமண வைபவம். மணமக்கள் பால், பழம் பரிமாறும் நேரமது. பசும் பால், சர்க்கரை, தேன், வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் ஆகியவை கலந்த தீம் சுவைக்குழம்பை முதலில் மணப்பெண் மணமகனுக்கு மூன்றுமுறை ஊட்டுகிறாள்.

நிகழ்வை சபையோர் பாராவண்ணம் பட்டுச்சால்வை ஒன்றைத் திரைச்சீலையாகப் பாவித்து சால்வையின் இரு முனையிலும் இருவர் இழுத்துப் பிடித்து, காட்சியை மற்றவர் பாராதவண்ணம் மறைக்கின்றனர்.

வீடியோ கலைஞர்கள் திரைச்சீலையுள் ஆக்கிரமிக் கின்றார்கள்!

எங்கிருந்து, எப்படி வந்தாரோ தெரியாது! மணமகனின் தந்தை பண்டிதர் பொன்னம்பலம் பறந்தடித்து அவ்விடத்திற்கு வந்து விட்டார். வந்ததும் வராததுமாக, "வீடியோக்காரர், வெளியே போங்கோ" என்றார்.

"ஐயா! நாங்க படம் எடுக்க...", கலைஞர் குழுத்தலைவன் அதிர்ச்சியோடு பதிலளித்தான்.

"அதனைப் படம் எடுக்கத் தேவையில்லை"

"இது வழக்கம் ஐயா! எங்கேயும் நாங்க இப்பிடித்தான் படம் எடுக்கிறனாங்கள்"

"இஞ்சை அது தேவையில்லை"

"ஐயா, மகன் வெளிநாடலலே! Embassy க்கும் படம் காட்டி Sponsor Certificate எடுக்க வேணுமல்லே! Embassy பால், பழம் ஊட்டலையும் பாக்குது"

"காட்டினால் அவங்க எதைத்தான் பாக்காங்கள்? ஆனால், அந்தரங்கத்தைக் காட்டி அனுமதி பெறும் அவசரம் எங்களுக்கில்லை! நீங்க எல்லோரும் உடனை திரைக்கு வெளியே போங்கோ" பண்டிதர் உரக்க ஆணையிட்டார்.

– யாவும் கற்பனையே

# படித்ததும் கேட்டதும்



## கே.விஜயன்

**'தீ'யை தீயிலிடுங்கள், சடங்கை சாக்கடையில் வீசுங்கள் - கோஷங்களுக்கு கோவிந்தா.**

எஸ். பொன்னுத்துரை சர்ச்சைக்குரிய ஓர் எழுத்தாளர். அவர் எழுத்தும் கையாண்ட மொழியும், பாத்திர வார்ப்புகளும், நிகழ்வுகளும், உள்ளடக்கமும் ஏற்படுத்திவிட்ட நேரிடை விளைவு இது. அவர் மீது ஒட்டுமொத்தமாகவே ஒரு குற்றச்சாட்டினை சுமத்தி எழுத்துலகில் ஒரு தீண்டத்தகாதவர் என்ற பழிபாவத்தைச் சுமத்தி ஒதுக்க முனையும் சக எழுத்தாளர்கள் ஏராளம்! 'தீ', சடங்கு என்பன அசிங்கமான படைப்புகள். அக்கா தங்கைகளோடு இருந்து படிக்க முடியாதவை. என உதாரணங்கள் முன்வைக்கின்றனர். ''அப்படி இந்த எழுத்தாளன் தீ, சடங்கு இவற்றில் என்னத்தை எழுதிப் போட்டான்'' என்ற மண்டைக்குடைச்சலோடு அலசப் போனால் ஓர் உணர்வு தட்டுகிறது நமது திறனாய்வு. உலகம் எவ்வளவு அசிங்கமாக நிர்வாணப்பட்டு சடலமாகக் கிடக்கிறது என்ற சமாச்சாரத்தின் நறுமணம் தலை கிறுகிறுப்பை உண்டாக்குகிறது.

'60கள் ஈழத்து இலக்கியத்தின் உன்னத காலம்! முற்போக்குச் சக்திகள் அதன் மூலவர்கள்! யாழ்ப்பாணத்து சாதியப் போராட்டங்கள் அவர்களின் மூலக்கரு; அவற்றைப் படைத்தவர்கள் சமுதாயப் போராளிகள், வர்க்கப் போராட்டத்தை கூர்மைப்படுத்தியவர்கள்...! என்றவாறான ஆயிரத்தெட்டு ஆய்வுகள் இன்றும் இலக்கிய மேடைக் கச்சேரிகளில் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இங்கே (முற்போக்கின் இடத்தை தமிழ்த் தேசியம் கைப்பற்றி, தற்போது தேசிய இன பாலம் போடும் இலக்கியக்காரர் – தலைதூக்கும் காலம் – அந்த கதை கிடக்கட்டும்) புகழப்படுபவர்களில், போராளிகள் என்று சித்திரிக்கப்படுபவர்களில் எஸ். பொ. ஓர் அநாமதேயம். 'தீ', 'சடங்கு' இரண்டும் அதற்கான காரணிகள். சிறுகதைகள் சில பதிவு செய்த 'கோழி மிதிக்கினம்' போன்ற உடல் உறவு உவமான சொற்களும் அவற்றுள் அடைக்கலம்.

'உருவம்', 'உள்ளடக்கம்' குறித்த இலக்கிய சர்ச்சைகளின் பிரதிபலிப்பாக பிரவாகமெடுத்த சாதியம், மற்ற வர்க்கப் போராட்ட சித்திரிப்புக்கள் முன்பாய்ச்சல் போட்டுக் கொண்டிருந்த ஓர் ஓட்டப்பந்தயத்தின் போதுதான் எஸ். பொ. ஒரு கிளையோட்டமாக பாலியல் ஊற்றெடுத்தார். தமிழ் இலக்கியத்தில் தேடற்கரிதாகவே இதுவரை காலம் காணப்பட்ட, உடலுறவு சமாச்சாரங்களை அவர் எழுத்துக்கள் வெளிப்படுத்தின.

'செக்ஸ்' இல்லை என்றால் உயிரினங்கள் இல்லை என்ற உயிரியல் யதார்த்தம் நூறு விகிதம் சரியானது என்ற வாதம் உண்மையானபோதும், தமிழ் இலக்கியத்தில் அது வேண்டாம் என்ற புனித கோஷம் எதிர்ச்சக்தியாக நிமிர்ந்தது.

'வர்க்கப் போராட்டத்தை பின்தள்ளுகிறது' என்கின்ற முற்போக்காளர் ஒரு பக்கம் 'மனுஷன் அடிக்கும் உடலுறவு சித்திரம் அச்சச்சோ மனசை விட்டு போகுதில்லை பண்பாடு அழிகிறது' என்ற ஓலமுடன் மரபுக்காரர்களின் கூப்பாட்டு நிமிர்வு மறுபக்கம். மத்தளத்திற்கு இரு பக்கமும் அடி என்பதற்கமைய எஸ். பொ. விற்கு ஈழத்து இருபக்க எழுத்தாளர்கள் நடுவிலும் முன்னும் பின்னுமாக உதை.

தமிழ் புனைகதை உலகில் சிதம்பர ரகுநாதன் 'முதலிரவு' செக்ஸ் சமாச்சாரத்தைச் சொல்லப்போய் கோர்ட்டு வரைக்கும் இழுத்துக்கொண்டு போய்விட்டார்கள். 'தமிழை அசிங்கப்படுத்திப்போட்டான்' என்ற குற்றச்சாட்டு. எஸ். பொ. மீது மட்டுமே Tom and Jerry கார்ட்டூன் படமாக இன்றும் ஓட்டலும் விரட்டலுமாக மேடைகளில் அரங்கேறுகின்றது.

நான் எனும் ஒரு தனிமனிதனின் பாலுணர்ச்சிகளை 'தீ' எடுத்துக் கொள்கிறது. அது வெளிவந்து ஒரு தசாப்த காலத்தின் பின்னர் சடங்கு வெளிவருகிறது.

முதலில் அதன் தோற்றம் சுதந்திரனில் தொடர் கதையானது. 'சடங்கு' மங்களகரமான பெயராகவிருக்கவே ஐயாவிற்கு 'தீ'க்கு கொடுத்த கொடுப்பிலே இப்போ சடங்கு, சம்பிரதாயம் என்றெல்லாம் ஆரம்பித்து சடுகுடு ஆட்டம் போடப்போறார் என நகைப்புடன் குமைந்து கொண்டவர்களை 'சடங்கு' குய்யோ முய்யோவென கிளித்தட்டு ஆட்டம் போட வைத்துவிட்டது.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்து கிளறிக்கல் சேவண்ட் உலகம் இருக்கிறதே அச்சமூகம் இன்று காணாமல் போய்விட்டது போலும். அது ஒரு தனியானதொரு சமூகம் என்பதை அற்புதமாக அழகியலோடு வெளிக்கொணரும் எஸ். பொ. அச்சமூகத்தின் உடலுறவு சமாச்சாரத்தைச் சடங்கில் துல்லியமாக ஓவியமாக்குகிறார்.

உடலுறவு அசிங்கமானதா? இல்லை மனித பரிணாமத்தின் உயிர்ப்புக் கூடமா? தேடல் கலைஞனுக்குரியதுதானே. அதைச் செய்யுங்கள். எஸ். பொ.வின் தீ, சடங்கு இரு புதினங்களும் உடலுறவு விவகாரத்தை கூச்சநாச்சமின்றி சொல்பவை. தமிழுக்கு இவை புதியவை. நம்மவர்கள் ஆங்கிலத்தில் வாசித்து இன்புற்ற இஞ்சும் புளி, தமிழில் சுவைக்காத ஊறுகாய், பலருக்கும் ஜீரணமாகவில்லை.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, அதன் இலக்கிய செயற்பாட்டு அமைப்பு என்ற குளவிக் கூட்டின் ராஜ

தேனீக்களில் எஸ். பொ.வும் ஒருவர். நமது நல்ல பல படைப்பாளிகளின் உற்பத்திக்களன் இதுதான். **அரசியல் கோட்பாடும் சமூக உணர்வும் மட்டும் உன்னதமான படைப்பாளிகளை உருவாக்கிவிடுவதில்லை. கலைத்துவம் சூழ்ந்த பிரக்ஞையிலும் விசாலித்த கண்ணோட்டத்திலும் பெருகிப் பாய்வதே வித்தியாசமான படைப்புக்கள். மனித வுணர்வுகளின் வேர்களை இரத்தமும் சதையுமாக எல்லோராலும் கொண்டுவர முடியாது. எஸ். பொ. படைத்திருக்கிறார் என்றால், அவர் ஒரு பிறவி எழுத்து பிரம்மன் என்பதே அர்த்தமாகும்.** எழுதுபவரெல்லாம் கலைத்துவமிக்க எழுத்து பிரம்மாக்களாகி விடுவதில்லை.

''தமிழன் என்றொரு இனம் உண்டு
தனியே அவர்க்கொரு குணம் உண்டு''

என்ற பாடலின் அர்த்தப்பொதிவிற்கு ஏற்ப ''ஈழத்தமிழ்ச் சாதிக்கென்றே ஒரு குணம் உண்டு. அதுதான் பேச்சுக்கும் செயலுக்கும் இடையில் காணப்படும் அதலபாதாளம். தமிழ் தேசியம் பேசுவான். ஆனால் வீட்டில் ஒரு தேசியத் தலைவனின் படமும் இருக்காது. காந்தியும், நேருவும், நேதாஜியும் வீட்டில் நிழல் படங்களில் புன்னகை செய்து கொண்டிருப்பார்கள். இலக்கியத்திலும் இதுவே தலைவிதி. பிறமொழியில் வந்தால் அணு அணுவாக ரசித்து புகழ்பாடுவான். தமிழில் அவன் தலை உருளும்.

60களில் நம் இலக்கியத்தில் ஏற்பட்ட கோட்பாட்டு கோஷங்களின் வரைவிலக்கணம் என்ன? எழுத்தில் நம் மண் இருக்கவேண்டும்; அதன் மணம் இருக்க வேண்டும்; நம் மாந்தர் இருக்க வேண்டும்; நிகழ்வுகள் வேண்டும், உணர்வுகள் வேண்டும், இவை தானே. 'தீ', 'சடங்கு' இரண்டிலும் அருமையாக இருக்கின்றனவே. தீ ஒரு தனிமரத்தின் கதை என்றால் சடங்கு ஒரு சமூகம் என்ற தோப்பின் பாலியல் உணர்வின் உள்ளார்த்தத்தை சொல்ல முயற்சிக்கும் கதையாகும்.

மூன்று பிரதான பாத்திரங்களைக் கொண்ட ஒரு படைப்பிற்கு 'புதினம்' என்ற சொல் பொருத்தப்பாடாக அமையுமா? என்ற கருத்து மோதல் என்னவானாலும் இப்படைப்பினை ஒரு சமூகத்தின் பிரதிபலிப்பாக கூறுதல் இயலுமா? என்ற வினா எழுப்புபவர்களும் உளர்.

அடக்கப்படும் வர்க்கம், ஆளும் வர்க்கம் நேரிடையாகக் கூறுவதானால் சுரண்டும் வர்க்கம், சுரண்டப்படும் வர்க்கம் என இருவேறுபட்ட வர்க்கங்களுக்கிடையேயான சமூகப்போராட்ட சித்திரிப்புக்களே மக்கள் இலக்கியம் என அடித்துச் சொன்ன சாதியப் போராட்டங்களை மட்டுமே யதார்த்த படைப்புக்களுக்கான வரைவிலக்கணமாக அமைத்துக்கொண்டு எழுதினார்கள். எஸ். பொ.வின் இவ்விரு படைப்புக்களும் பிறிதொரு கிளையாக வெளிவந்தவை. ஆனால் ஓர் உண்மையை அவதானித்தல் வேண்டும். அக்கிளைநதி இன்னும் பிரவாகிக்கவில்லை என்ற யதார்த்தமே அது. ஏனெனில் வேறு எழுத்தாளர்களின் எழுத்தாக்கம் அத்திசையில் ஊற்றெடுக்காததே இதற்கான காரணியாகும். எழுத்தாளுமை, இலக்கியத்திறன், வாழ்வின் சகல மட்டத்திலுமான உறவு அனுபவங்கள் போதாமை சம படைப்பாளிகளிடம் குறைந்து விட்டனவோ.

'தீ'யை தீயில் போடவேண்டும்.

சடங்கை சாக்கடையில் வீச வேண்டும்! என்ற புதுக்கவிதை வாக்கியங்கள் எஸ். பொ.வின் படைப்புக்களுக்கு அர்ச்சனைகளாகின.

எனினும் 'சிறப்பானது' என சொன்னவர்களும் உளர்.

'தீ' ஒரு புதிய பாதை வகுக்கிறது. அந்தப் புதிய பாதைக்கு அது ஓர் அறிமுகமாகவிருப்பதாலேயே அதன் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது என்பது மு. தளையசிங்கத்தின் கூற்று.

'நிச்சயமாக ஒன்று சொல்வேன். எமது அரசியல் நிலைகளின் காரணமாக இன்னும் நூறாண்டு காலத்தில் நமது வாழ்க்கை நிலைகள் மாற்றம் அடையலாம். அப்போது நூற்றாண்டுகளுக்கு முன்னர் ஒரு யாழ்ப்பாணத்து கிளறிக்கல் சேவண்ற் எப்படி வாழ்ந்தான் என்று அறிய விரும்பும் சரித்திர மாணவன் ஒருவன் நிச்சயமாக எஸ். பொ.வின் சடங்கைப் படித்தே ஆகவேண்டும் என்று வ. அ. இராசரத்தினம் அடித்துச் சொல்கிறார்.

அதன் சிருஷ்டி கர்த்தாவை இத்தகைய படைப்புக்களை, மேலும் மேலும் ஆய்வு செய்து முத்தெடுப்பதால் தமிழ் இலக்கியம் என்ன சவச்சாலைக்கா போய்விடும். குத்தல்களுக்கு கோவிந்தா போடுங்கள்.

## திராவிட இயக்கத்தவரால் ஏன் சத்தான இலக்கியம் படைக்க முடியவில்லை?



**இலக்கியத்துக்குத் தேவையான ஏதோ ஒன்றைத் தமிழ்நாட்டு இலக்கியக்காரர்கள் இழந்து விட்டார்கள். அந்த ஏதோ ஒன்றுக்கு வணிகநோக்கம் மட்டுமல்ல, வேறு பல காரணங்களும் இருந்தன. திராவிட இயக்கங்களினுடைய தலைமைத்துவம் வந்தபிறகு தமிழர்கள், தமிழ்மொழி, தமிழ்ச்சிந்தனை, ஆகியன மேலோங்கும் என்ற ஓர் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் அண்ணாதுரை தொடக்கம் இன்றுவரை மாறி மாறித் திராவிடக் கழகங்கள் ஆட்சியில் இருந்தபோதிலும், தமிழ் அதனுடைய முக்கியத்துவத்தை இழந்து ஆங்கிலம் பாடசாலைகளில் கல்வி மொழியாக மாறிக் கொண்டிருக்கும் சூழலிலே தமிழ்நாடு தன் தேசியத்தை, தமிழ்த் தேசியத்தை இழந்துவிட்டது. இன்றும் தமிழர்களிலே பலர் தங்களைத் தமிழர்கள் என்று அடையாளப்படுத்துவதிலும் பார்க்க இந்தியர்கள் இன்று அடையாளப்படுத்த முந்தி நிற்கிறார்கள். தேசிய அடையாளம் தப்பல்ல. ஆனால், தமிழ் மொழியின் மூலமும் தங்களுக்கு ஓர் அடையாளம் இருக்கிறது என்பதைத் துறந்து விட்டார்கள். அந்தத் தமிழ்த் தேசிய உணர்வைத் துறந்தவர்களினால் தமிழ்மொழி மூலம் சத்தான இலக்கியங்கள் படைக்க முடியும் என்று நான் கருதவில்லை.**

(ஞானம் நேர்காணல் ''தீதும் நன்றும்'' தொகுப்பிலிருந்து - பக்கம் 131)

# சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்

குறிஞ்சிநாடன்

கேணிப்பித்தன், ச. அருளானந்தம் அவர்களின் ''கனவு மெய்ப்பட வேண்டும்'' ''அற்புதமான வானம்'' ஆகிய இருநூல்களின் வெளியீடும் ''வாழும் போதே வாழ்த்துவோம்'' நிகழ்வும் திருகோணமலை விவேகானந்தா கல்லூரியில் 25.10.2009 கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். தண்டாயுதபாணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் திருமதி. ந. ரஞ்சனி, வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் திரு. சி. இளங்கோவன் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், ஒபர் சிலோன் நிறுவன தலைவி செல்வி எஸ். சூரிய குமாரி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தலைமையுரையாற்றிய திரு. எஸ். தண்டாயுதபாணி அவர்கள் ''ச. அருளானந்தம் சிறுவர் இலக்கிய எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒருவராக இருக்கிறார்'' நல்ல கருத்துகளை எளிமையுடன் கூறக் கூடியவர். பிள்ளைகளை பண்படைய வைக்கும் விதத்திலான இவரது கருத்துக்கள் சிறந்தவை. இதற்காகவே இவர் போற்றப்படவேண்டியவர். இதுவரை 30இற்கும் அதிகமான நூல்களை வெளியிட்டமைக்கு இவரது கல்விப் புலம் காரணமாய் இருக்கலாம் என தெரிவித்தார்.

சிறுவர் சிந்தனைக் கதையான ''அற்புதமான வானம்'' நூல் நயவுரையை நிகழ்த்திய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. தவநாதன் அவர்கள் தனதுரையில் ''இந்த நூல் என்னை மீண்டும் இளமைக்கால வாழ்க்கைக்கு கூட்டிச் சென்றது. ஒவ்வொரு விடயமும் தனித்துவமானதாக ஆராயப்பட்டுள்ளது. வானியல் தொடர்பான மாணவர்களுக்கு இது ஒரு வானியல் நூலாகவும் புவியியல் தொடர்பான மாணவர்களுக்கு ஒரு புவியியல் நூலாகவும் பௌதீகவியல் தொடர்பான மாணவர்களுக்கு இது ஒரு பௌதீக நூலாகவும், இலக்கிய ஈடுபாடுள்ளவர்களுக்கு இது ஒரு சிறந்த இலக்கிய நூலாகவும் ஒரு கற்கின்ற சமூகம் தேடுகின்ற அனைத்து விடயங்களும் இதில் காணப்படுவதாகத்'' தெரிவித்தார்.

தொடர்ந்து ''கனவு மெய்ப்பட வேண்டும்'' நாவலின் நயப்புரையை கவிஞரும், அதிபருமான திரு. எஸ். யோகானந்தம் நிகழ்த்துகையில் ''உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டுவருபவனே எழுத்தாளன். ச. அருளானந்தம் தனம், பலம், பலவீனம், இரண்டையும்'' இந்நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். வேதனைகள், விரக்திகள் மத்தியிலே பிறந்தவை இவரது படைப்புக்கள். திருகோணமலையின் அழகினை இவரது படைப்புகளில் ஒன்றாக காணலாம். வ.அ. இராசரத்தினத்திற்கு பின்னர் சொல்லாட்சி, உருவம் என்பவற்றில் கூடிய அக்கறை செலுத்துபவராக இவர் காணப்படுகின்றார் என தெரிவித்தார்.

திருமதி ந. ரஞ்சனி அவர்கள் பேசுகையில் ''இன்று எவ்வளவு நூல்கள் வெளிவந்தாலும் வாசிப்பு பழக்கம் குறைந்தே வருகிறது. மாணவர்கள் இணையத்தளத்தில் வாசிப்பை விடுத்து ஏனைய விடயங்களில் ஈடுபடுகின்றார்கள். வாசிப்பில் ஈடுபடும் மாணவர்கள் பெற்றோரின் தலையீடின்றியே முன்னேற முடியும். ச. அருளானந்தம் ஓய்வுபெற்ற பின்னரும் நூல்கள் பல எழுதி சமூகத்திற்கு நிறையவே செய்துள்ளார் என தெரிவித்தார்.

திரு. சி. இளங்கோவன் அவர்கள் ''இவரின் படைப்புக்கள் காலத்தின் தேவையானவை. எதிர்கால சந்ததிக்காக, பிஞ்சு உள்ளங்களில் வீரியமான விதைகளை விதைக்கும் ஆசிரியர் பாராட்டப்பட வேண்டியவர்'' எனத் தெரிவித்தார்.

ஏற்புரை நிகழ்த்திய ச. அருளானந்தம் அவர்கள் ''எந்த எழுத்தாளனும் புத்தகம் எழுதி பிழைத்தது கிடையாது. மற்றவர்களை நான் வாழவைப்பனே தவிர குழிபறிக்க நினைக்க மாட்டேன். எனது படைப்புகள் மூலம் நான் என்றும் வாழ்வேன். மரணம் தான் எனக்கு ஓய்வு. அதுவரை நான் இயங்கிக் கொண்டு தானிருப்பேன். மிகவிரைவில் நான் முழுநேர எழுத்தாளனாக மாறப் போகிறேன்'' எனவும் தெரிவித்தார்.

நூல் வெளியீட்டுடன் ''வாழும் போதே வாழ்த்துவோம்'' நிகழ்வாக அதி விசேட அதிதிகள் பாராட்டும் கௌரவிப்பும் நடைபெற்றன.

**- தகவல் சின்னராஜா விமலன், திருகோணமலை.**

### கவிதைத்தொகுதி வெளியீட்டுவிழா

கமல சுதர்சனின் 'அவல அடைகாப்பு' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா 'அறிவோர் கூடல்' முன்றலில் நடைபெற்றது. 'இலக்கியச்சோலை' இ.து. குலசிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் செல்வி தி. சிவதர்சினி அறிமுகவுரை ஆற்றினார். வெளியீட்டுரையை கவிஞர் கொற்றை பி. கிருஷ்ணானந்தன் நிகழ்த்தினார். நூலுக்கான நயப்புரையை படைப்பாளர் திரு. சி. நிமலன் ஆற்றினார். மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் திரு. இரா. இராஜேஸ்கண்ணனும், தமிழ்த்துறை உதவிவிரிவுரையாளர் திரு. த. அஜந்தகுமாரும் நிகழ்த்தினர். தொடர்ந்து கருத்துரைகளை ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. வ.க. பாலசுப்பிரமணியம், விமர்சகர் திரு. கந்தையா, வட அல்வை. க. சின்னராஜன், ஆசிரியர் பா. இரகுவரன் ஆகியோர் ஆற்றினர். நூலாசிரியர் திரு. தி. கமலசுதர்சன் ஏற்புரையாற்றினார். வெளியீட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

**- தகவல் - செல்வி தி. சிவதர்சினி, *(அறிவோர் கூடல்)***

## புரவலர் புத்தகப் பூங்கா ஆண்டு விழா

அண்மையில் புரவலர் புத்தகப் பூங்கா ஓராண்டு பூர்த்தி விழா நிகழ்வுகள் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. அடாத மழை பெய்தாலும் பார்வையாளர்கள் நிறைந்து வழிந்தது.

மேற்படி விழா திருமதி வசந்தி தயாபரன் அவர்களின் கணீரென்ற குரலில் தமிழ்மொழி வாழ்த்துடன் ஆரம்பமானது. மேற்படி வைபவத்திற்கு தலைமை வகித்த கலாநிதி அ. சண்முகதாஸ் பின்வருமாறு கூறினார். ஈழத்து தமிழ் இலக்கியத்திற்கு புரவலர் ஹாஸிம் உமர் அளப்பரிய சேவை யாற்றி வருகிறார். அவரது தன்னலங்கருதாப்பணியால் புத்தகம் வெளியிட முடியாமல் தவித்த சுமார் இருபது பேர் நன்மை பெற்றுள்ளார்கள். ஓராண்டு காலத்தில் சொந்தச் செலவில் இருபது எழுத்தாளர்களின் நூல்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். எழுத்தாளர்கள் என்றும் அவருக்குக் கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள். ஆற்றில் வெள்ளம் பாயும் போது நல்லவையும். கெட்டவையும் அடித்துச் செல்லப்படும். அதுபோல வெளியிடும் நூல்களிலும் தரமானவை தரமற்றவை என இருக்கலாம். நல்லவைகளைத் தெரிந்து கற்க வேண்டியது வாசிப்பவர் கடமையாகும். நூலாசிரியர்களை ஊக்குவிக்கும் பொறுப்பும் சுவைஞர்களுக்கே உண்டு என்றார்.

நூல் அறிமுகத்தை பதிப்பாசிரியர் கலைச் செல்வன் செய்தார். புரவலர் புத்தகப் பூங்காவினால் வெளியிடப்பட்ட இரண்டு நூல்கள் சாகித்ய பரிசைப் பெற்றுள்ளன. மத்திய மாகாண அரசு சிவனு மனோகரன் நூலுக்கு பரிசு வழங்கியுள்ளது. இது எங்களுக்கு பெருமிதம் தருகிறது. வெறும் சிறுகதையும் கவிதைகளும் அல்லாமல் கட்டுரைகள் விஞ்ஞான நூல்கள் ஆராய்ச்சி நூல்கள் என்பனவும் இடம் பெறவேண்டும். எழுத்தாளர்கள் இதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றார்.

புரவலர் புத்தகப் பூங்காவில் பதினாறு நூல்கள் வெளியிடத் துணையாய் இருந்த ஞானம் ஆசிரியர் வைத்தியகலாநிதி தி. ஞானசேகரன் அவர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

பவானி தேவதாஸ் எழுதிய 'விடுமுறைக்கு விடுமுறை' ஜோ. ஜெஸ்ரின் எழுதிய 'வெற்றிலை நினைவுகள்', மு. சடாட்சரன் எழுதிய 'மேட்டுநிலம்', மருத நிலா நியாஸ் எழுதிய 'வேர்கள் அற்ற மனிதர்கள்' என்ற நான்கு நூல்களையும் தினகரன் பிரதம ஆசிரியர் திரு. சிவசுப்பிரமணியம், தினக்குரல் ஆசிரியர் தனபாலசிங்கம், ஞாயிறு பதிப்பாசிரியர் திரு. பாரதி இராசநாயகம், விஜய் பத்திரிகை ஆசிரியர். திரு. இராசசிங்கம் ஆகியோர் வெளியிட்டு வைத்தனர்.

புரவலர் ஹாசிம் உமர், தன்னை வாழ்த்த வந்த முத்தப்ப செட்டியார் அவர்களை அந்த கௌரவத்தை டாக்டர் தி. ஞானசேகரனுக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டார். திரு. றபீக் அவர்கள் நன்றியுரை கூறினார்.

## சேமமடு பதிப்பகத்தின் 50 நூல் வெளியீடு

கொழும்பு சேமமடு பதிப்பகம் இருபது மாதங்களில் 50 நூல்களை வெளியிட்டு சாதனை புரிந்துள்ளது. மேற்படி விழா நிகழ்வு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. மேற்படி விழாவில் கொழும்பு றோயல் கல்லூரி உப அதிபர் மா. கணபதிப்பிள்ளை இராமநாதன், இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜா, கொழும்பு நல்லாயன் கன்னியர் மட ஆசிரியர் சி.அ. ஜோதிலிங்கம், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி உப அதிபர் த. இராசரத்தினம் களனி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் தி. கணேசராசா ஆகியோர் நூல் அறிமுக உரையை நிகழ்த்தினர்.

## மலேசிய எழுத்தாளர் பீர்முகம்மது நூலுக்கு 'ஞானம்' வாழ்த்து

மலேசிய எழுத்தாளரும் பன்னாட்டுத் தமிழ்ப் பேசும் எழுத்தாளர் உலகத்தில் பழக்கப்பட்ட பெயரும், 'ஞானம்' குடும்பத்தைச் சேர்ந்தவருமான சை. பீர்முகம்மதுவின் புதிய சிறுகதைத் தொகுப்பு கடந்த மாதத்தில் அறிமுக விழா கண்டது.

மலேசியாவின் மாவட்டங்களில் ஒன்றான தமிழ் மக்கள் செறிந்து வாழும் கிள்ளான் நகரில் அப்பகுதி வாசகர் இயக்கம் வைபவத்தை ஒழுங்கு செய்திருந்தது.

அதன் தலைவர் பாலகோபாலன் நம்பியார், அமைப்பாளர்களுள் ஒருவரான எழுத்தாளர் எஸ்.எம். ஆறுமுகம் ஆகியோர் ஏற்பாட்டில், ''தமிழ் இலக்கியத்தை விரிவாக்கியவர்'' என்ற தலைப்பிலான ஜெயகாந்தனின் ஆவணப்படத் திரையீட்டுடன் ஆரம்பித்த விழாவில் திருமதி அல்லிமலர் மனோகரன் தமிழ் வாழ்த்திசைத்தார். திரு.க. முருகன் ஏ.எம்.என். ஏ.எம்.எஸ். வரவேற்புரை நல்க, மலாயா பல்கலைக்கழகப் பேராசிரியர், முனைவர் கிருஷ்ணன் மணியம் நூலாய்வு செய்தார்.



(சை. பீர்முகம்மது, 'ஞானம்' சஞ்சிகையின் வாழ்த்துப் பத்திரத்தை மானா மக்கீனிடமிருந்து பெறுவதைக் காணலாம்.)

வாழ்த்துரைகளை, இலங்கையிலிருந்து சிறிப்பு அழைப்பாளராகச் சென்றிருந்த தமிழ்மணி மானா மக்கீன், கிள்ளான் சங்கபூஷணம் சித. ஆனந்த கிருஷ்ணன் ஆகியோர் வழங்கினர்.

இவ்விழாவில் ஒரு விசேட அம்சமாக, 'ஞானம்' சஞ்சிகையின் சார்பில் ஆசிரியர் ஞானசேகரன் அனுப்பியிருந்த பாராட்டும் வாழ்த்தும் கொண்ட செய்தி மானா மக்கீனால் வாசித்தளிக்கப்பட்டு பீர்முகம்மதுக்கு வழங்கப்பட்டது. இலங்கை இலக்கிய ஆர்வலர்கள் சார்பில் சந்தன மாலையும் அணிவிக்கப்பட்டது.

விழா, செந்தமிழ்ச் செல்வர் ஓம்ஸ். ப. தியாகராஜன் தலைமையில் நிகழ்ந்ததுடன், அவரே நூலை வெளியிட்டும் வைத்தார். முதல் பிரதியை மலேசியத் தொழில் அதிபர் டத்தோ டாக்டர் ஹாஜீ முஹம்மது ஹனிஃபா சார்பில் அன்னாரது பிரதிநிதி பெற்றுக் கொண்டார்.

# வாசகர் பேசுகிறார்

114வது நவம்பர் மாத ஞானம் கிடைத்தது. எனது ''சமகால ஈழத்தமிழ் கவிதை'' ஒரு சுருக்கக் குறிப்பு பிரசுரிக்கப்பட்டு இருந்தது.

பொதுவாக ஈழக் கவிதை விமர்சகர்கள், அறிஞர்கள் அனைவருமே ஒரு பட்டியலை ஒப்பித்தல், தமக்கு இசைவானவர்களின் பெயரைமட்டும் முன்னிலைப் படுத்தல், தம்கருத்துக்கு உட்படாதவர்களை திட்டமிட்டு புறக்கணித்தல் போன்ற விடயங்களை நன்கு கையாண்டமையை, கையாண்டு வருகின்றமையை கருத்தில் கொண்டு ஈழக்கவிதைக்கு எவரெவர் எவ்வெவ் வகைகளில் பங்களிப்புச் செய்தனரோ அவர்களில் அனேகமாக அனைவரையும், குழுமனப்பாங்கு இன்றி, என் அறிவுக்கு எட்டிய வரையில் உள்வாங்க முயற்சித்து இருந்தேன். சில விடுபடல்கள் ஏற்பட்டு விட்டமை தவிர்க்க முடியாததே.

1. 80களில் தோற்றம் பெற்று எழுதிய வவுனியா திலீபன், இளைவன் போன்றோரின் பெயர்களும், 90களின் பின் தோன்றிய கிழக்கைச் சேர்ந்த, மலையகத்தைச் சேர்ந்த சில கவிஞர்களின் பெயர்களும் விடுபட்டு விட்டன.
2. 90களின் பின் வெளிவந்த பல நூல்களும் தவறவிடப்பட்டுவிட்டன.

உ+ம்

1. தான்தோன்றிக் கவிராயர் (சில்லையூர்) – ஊரடங்கப் பாடல்கள், 2.சி. சிவசேகரம் – தேவி எழுந்தாள், வடலி, போரின் முகங்கள், மறப்பதற்கு அழைப்பு, 3. ச.வே. பஞ்சாட்சரம் – நாடும் வீடும், 4. வே. ஐயாத்துரை – கவிஞர் ஐயாத்துரை கவிதைகள், 5. வ.ஐ.ச. ஜெயபாலன் – உயிர்த்தெழுகிற கவிதை, 6. அ. யேசுராசா – பனிமழை, 7. மு. புஸ்பராஜன் – மீண்டும் வரும் நாட்கள், 8. நிலாந்தன் – ஒ யாழ்ப்பாணமே – யாழ்ப்பாணமே, 9. சோலைக்கிளி – வாத்து, 10. அஷ்ரப் சிகாப்தீன் – காணாமற் போனவர்கள், 11. ஔவை – எல்லை கடத்தல், 12. மைத்ரேயி – கல்லறை நெருஞ்சிகள், 13. சடாகோபன் – மண்ணில் தொலைந்த மனது தேடி, 14. ஸ்ரீபிரசாந்தன் – நிமிர்நடை, அந்தரத்து உலாவுகிற சேதி, 15. யாத்திரீகன் – உயிரோடிருத்தல், 16. கனிவுமதி – அப்புறமென்ன, கட்டாந்தரை, 18. தவ. சஜீதரன் – ஒளியின் மழலைகள், 19. கு. ரஜீபன் – வலிகளைத் தாங்கி, 20. பவித்ரன் – உரசல் ஓசை, 21. தானா விஷ்ணு – நினைவுகள் மீழ்தல், 22. தீபச்செல்வன் – பதுங்கு குழியில் பிறந்த குழந்தை, 23. அனார் – எனக்கு கவிதை முகம், 24. தி. திருக்குமரன் – திருக்குமரன் கவிதைகள், 25. இ.சு. முரளீதரன் – நுங்கு விழிகள், நளதமயந்தி, 26. துவாரகன் – மூச்சுக்காற்றால் நிறையும் வெளி, 27. பெரிய ஐங்கரன் – எனக்கு மரணமில்லை, வானவில், ஞானக்கன், 28. பல கவிஞர்களின் தொகுப்பு–

1. வேற்றாகி நின்ற வெளி, 2. வெளிச்சம் கவிதைகள்

இவை சேர்க்கப்பட வேண்டும். இவ் விடுபடல்களுக்கு காலமும், நேரமும், சூழலும், தொடர்பற்றிருந்த நிலைமையும் காரணம் எனலாம். மேலும் இதுவே முடிந்த முடிவு அல்ல. இச் சுருக்கக் குறிப்பு விரிவு பெறும் சந்தர்ப்பத்தில் மேலதிக தகவல்கள் இணைக்கப்படவும் வேண்டும். ஈழக் கவிதையின் பல்வேறு பரிமாணங்களும் பாரபட்சமின்றி ஆய்வுசெய்யப்படவும் வேண்டும்.

இது இவ்வாறிருக்க. 90களிலும் அதன் பின்பும் வந்த கவிஞர்களின் பட்டியலில் என்னால் சேர்க்கப்பட்டிருந்த த. சிவசங்கர், அஸ்வகோஸ், த.ஜெயசீலன், ச. முகுந்தன், அமரதாஸ், இயல்வாணன் ஆகியோரின் பெயர்கள் விடுபட்டுள்ளன.

இது தவறுதலாக நடந்ததா எனப்புரியவில்லை.

**- அருணன்**

***

(90களிலும் அதன்பின்பும் வந்த கவிஞர்களில் தங்களால் சேர்க்கப்பட்டிருந்த மேற்குறிப்பிப்பிடப்பட்டிருந்த ஆறுகவிஞர்களின் பெயர்களும், கணனி மூலம் பிரதி பண்ணும் போது தவறுதலாக விடுபட்டுவிட்டன. தவறுக்கு வருந்துகிறோம் – ஆசிரியர்)

***

பிரபல எழுத்தாளர் ''செங்கை ஆழியான்'' அவர்கள் ''சாஹித்திய இரத்தினா'' விருது பெற்றமையைக் கௌரவிக்குமுகமான ஞானம் 113 ஆவது இதழில் அவரது புகைப்படத்தைப் பிரசுரித்திருந்தீர்கள். இதன் மூலம் ஞானமும் சிறப்புப் பெறுகிறது. தாங்கள் இருவருமே பாராட்டுக்குரியவர்கள் ஆகிறீர்கள்.

தங்கள் 114 ஆவது ஞானம் இதழில் ''சமகால ஈழத்துக் கவிதை'' என்னும் தலைப்பில் அருண் அவர்கள் கவிஞர்களையும் அவர்களது கவிதைகளையும் பற்றி சிறப்பான முறையில் ஆராய்ந்திருந்தார். அதில் காணப்பட்ட சிறுகுறையொன்றை சுட்டிக் காட்டுதல் தகும் என்றே இதனைக் குறிப்பிடுகிறேன்.

கட்டுரை ஆசிரியர் குறிப்பிடும் காலப் பகுதியில் பத்திரிகைகள் வாயிலாகவுகம், நூல்கள் மூலமும் கவிதைகளை வெளியிட்ட ஏன் இன்றுவரை (சிலர்) எழுதிக் கொண்டிருக்கிற கவிஞர்கள் சிலரின் பெயர்களும் சேர்க்கப்பட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். அவர்களில் சாகித்திய மண்டலப் பரிசுபெற்றவர்களும் அடங்குகிறார்கள். அவர்களை விட வேறு கவிஞர்களும் இருக்கலாம். எனினும் நான் அறிந்தவரை பின்வருவோரைக் குறிப்பிட விரும்புகின்றேன். திமிலைத்துமிலன், புலவர் ஜின்னாஹ் ஷரிபுத்தீன், ஜீவா, ஜீவரெத்தினம், மு. சடாட்சரன், பசீல்காரியப்பர், அன்பு முகைதீன், மருதூர்க் கனி, பாண்டியூரான், செ. குணரெத்தினம், இராஜபாரதி என்போர்

**துறையூர் க. செல்லத்துரை**

***

114ஆவது ஞானம் கிடைத்தது. துவாரகனின் பேட்டியைப் பிரசுரம் செய்திருந்தீர்கள். மெத்த மகிழ்ச்சி. அதைவிடப் பெரு மகிழ்ச்சி என்னவெனில் சேவியரின் அட்டைப்படமும் கட்டுரையும்.

உண்மையில் சேவியர், ஒரு நடமாடும் நூலகம். முதுபெரும் எழுத்தாளர் முதல், இளம் எழுத்தாளர் வரை அவரது வாசிப்புத் தேடல் இன்றும் நீண்டுகொண்டே போகிறது. வாசிப்புத்தான் அவரது பக்கபலம். எதைப் பற்றிக் கேட்டாலும் அக்கு வேறு ஆணி வேறாக விளக்குவார். ''துவாரகனைப் பேட்டி காணப்போறேன்'' என்று நான் சொன்ன போது, சேவியர் துவாரகனைப் பற்றி சொன்ன விடயங்கள் வியப்பைத் தந்தன. அவரது நவீன இலக்கிய அறிவு ஆச்சரியம் தந்தது. துவாரகனிடம் நான் கேட்ட கேள்விகள் பல என்னுடையவை அல்ல. சேவியருடையவை. நான் திருகோணமலைக்கு வந்த புதிதில் வறுமையால் வாடினேன். அப்போது எனக்கு சேவியரைத் தெரியாது. ஆனால் நான் வறுமையால் வாடுவதை யார் மூலமோ அறிந்து, என் வீடு தேடி வந்து ஒரு தொகைப் பணத்தை என் கையில் புதைத்து விட்டு ''இந்த விடயம் யாருக்கும் தெரிய வேண்டாம்'' என்று சொல்லி விட்டுப் போனார். என் மனைவியின் முகத்தில் ஆனந்தக் கண்ணீர்.

பின்னர் ஒரு நாள் சுதர்சன் தான், என்னை அவர் வீட்டிற்கு அழைத்துப் போனார். அவருடன் பேசும் போது எவ்வளவோ விடயங்களை அறிய முடிந்தது. உச்சரிப்புத் தெளிவு, சொற்சிக்கனம், சொல்லுக் சொல் இடைவெளி இவையாவுமே அவரின் பேச்சுச் சிறப்புக்கள்.

சுதர்சன் குறிப்பிட்டதைப் போல வடக்கு மாகாண கல்வி அமைச்சில் யாராலும் அவருடைய இடத்தை நிரப்பமுடியாது. இனி **''பரிசு நூல்கள் தெரிவின்போது அவருடைய ஆளுமை ஒதுக்கப்படும்''** என்பதுதான் இலக்கியவாதிகளின் வேதனையாவுள்ளது.

**அன்புடன், பெரிய ஐங்கரன்**

***

அன்புடையீர்!

தங்கள் 'ஞானம்' சஞ்சிகையின் 100வது (ஈழத்து நவீன இலக்கியச்) சிறப்பிதழ் காணக் கிடைத்தது. சகோதரர் மானா மக்கீன் அளித்தார். உண்மையில், அஃதோர் அதிசய இலக்கியப் படையல். தயாரிப்பு நேர்த்தியும் செம்மையும் மனத்தை ஈர்க்கின்றன. உள்ளார்ந்த ஈடுபாடும் உழைப்பும் பக்கங்கள் தோறும் பளிச்சிடுகின்றன.

பொதுவாக, இலங்கைத் தமிழிலக்கியம் குறித்து விரிவாக அறிந்துகொள்ளும் வாய்ப்பு எங்களுக்கு இல்லை. ஞானம் சிறப்பிதழ் அந்த வாய்ப்பை அளித்தது. குறிப்பாக, இலங்கை தலித் இலக்கியம், மலையக இலக்கியம் குறித்து இப்போதுதான் அறிகிறேன். எப்போதும் முரண்பட்டே கிடக்கம் தமிழ் இலக்கிய உலகம் இலங்கையிலும் அப்படித்தான்.

கோட்பாட்டு அடிப்படையில் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்து கிடக்கும் இலக்கியவாதிகளும் ஏடுகளும் ஒருவர் மற்றவரை மதிப்பதில்லை. இவ்விதிக்கு மாறாக எல்லாவகையான கோட்பாட்டு இலக்கியங்களையும் ஒருங்கிணைத்திருப்பது உவகையூட்டுகிறது. சங்க இலக்கியத்தில், குறிப்பாகப் புறநானூற்றில், அன்று நிலவிய எல்லா வகையான சமய நம்பிக்கைகளும் தத்துவக் கோட்பாடுகளும் ஒத்த நிலையில் வைத்தெண்ணப்பட்டுள்ளன. அப்பால் அந்த இணக்க நிலையைக் காண முடியவில்லை. மலேசியாவில் தயாரிக்கப்பட்ட ''தமிழ்க் கவிதைக் களஞ்சியம்'' அந்த இணக்க நிலையைப் புதுக்கியது. தங்கள் ஞானம் சிறப்பிதழில் அந் நிலை மறுநிர்மாணம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டு கழிபேருவகை கொண்டேன். பிரிந்த மனங்களை ஒருங்கிணைக்கும் பணியை இலக்கியவாதிகள் செய்ய முடியும். செய்ய வேண்டும். ஏடுகள் அதற்குக் களமாதல் வேண்டும். தங்கள் ஞானம் சிறப்பிதழ் அப்படி அமைந்துள்ளது.

பா நாடகங்கள், நாடக எழுத்துருக்கள், கீர்த்தனை இலக்கியம் குறித்தெல்லாம் யாரும் கண்டுகொள்வதே இல்லை. அவற்றையும் ஆவணப்படுத்தியிருக்கிறீர்கள். புலம்பெயர் இலக்கியம் புதிய வரவு. அறிமுகம் என்ற வகையில் நிறைவாகவே செய்திருக்கிறீர்கள். மனம் நிறைந்து வாழ்த்துகிறேன். வாழ்க! வளர்க!

**அன்பு ப.மு. அன்வர், மலேசியா.**

***

ஞானம் நவம்பர் இதழில் நண்பரும், எழுத்தாளருமான நந்தினி சேவியர் அறிமுகம் மிகச் சிறப்பாக இருந்தது. யோகாவின் 'மாறுவது எது?' ஒரு வித்தியாசமான பார்வை.

சமகால ஈழத்தமிழ்க் கவிதை – ஒரு சுருக்க குறிப்பை எழுதிய கவிஞர் – மலையகம் பற்றிய அவரது பார்வை மிகக் குறைவாக உள்ளது.

சுய ஆக்கம், மொழி பெயர்ப்பு, தழுவல் என்று அறுபதுகளில் இருந்து இன்று வரை எழுதிக்கொண்டிருக்கும் 'பண்ணாமத்து கவிராயர், அவர்களை மறந்தே விட்டார், மற்றும் கவிதைக்காக சாகித்திய பரிசு பெற்ற தமிழோவியன், கவிஞர் குறிஞ்சித் தென்னவன், குறிஞ்சி நாடன், க. பலிங்கதாசன் இப்படி பல மலையகக் கவிஞர்களை மறந்தே விட்டார். வாசுதேவன் மலையக கவிதைகளில் அடையாளம் காட்டியவர் என்றார் – வாசுதேவன் கவிதைகளை படித்திருக்கிறேன் – அவர் மலையகம் பற்றி எழுதவே இல்லை. இவரது பார்வையில் சு. முரளிதரன் மட்டுமே பதிந்துள்ளார் – அண்மையில் புரவலர் புத்தக பூங்காவின் மூலம் – பொன்பூபாலன் 'இதயமுள்ள பாரதி', வெளிமடை ரபீக் – மேகவாழ்வு' போன்ற கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. பல பெண் கவிதாயினிகளும் உள்ளனர். மகாகவிக்கு பின்னர் சிறப்பான குறும்பாக்களை எழுதிய கவிஞர் குறிஞ்சி தென்னவன். வடக்கு – கிழக்கில் வெளிவரும் படைப்புகளை தேடி படிப்பவர்கள் மலையகப் படைப்புகளை தேடி படிக்க வேண்டியது கட்டாய தேவையாகும். இலங்கை இலக்கிய வளர்ச்சி பற்றி எழுதுபவர்கள் மலையகத்தை மறந்து விடக் கூடாது.

**அந்தனிஜீவா**

***

# எஸ்.பொ. பற்றிய குறிப்புகள்

| | | |
|---|---|---|
| பெயர் | :– | சண்முகம். பொன்னுத்துரை |
| பிறந்த திகதி | :– | 24.05.1932 |
| பிறந்த இடம் | :– | நல்லூர், யாழ்ப்பாணம் |
| தாய், தந்தையர் | :– | அம்மாக்குட்டி, சண்முகம் |
| ஆரம்பக் கல்வி | :– | யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரி<br>யாழ். பரமேஸ்வராக் கல்லூரி |
| உயர் கல்வி | :– | அண்ணாமலைப் பல்கலைக்கழகம்<br>சென்னை கிறித்தவக் கல்லூரி |
| கல்வித் தகைமை | :– | பி. ஏ. பட்டதாரி |
| தொழில் | :– | தமிழ் ஆசிரியர் (யாழ்ப்பாணம், மலைநாடு, கொழும்பு, மட்டக்களப்பு)<br>ஆங்கில ஆசிரியர் (நைஜீரியா) |
| மனைவி | :– | திருமதி ஈஸ்வரம் பொன்னுத்துரை |
| பிள்ளைகள் | :– | டாக்டர் அனுர, புத்ர (அகால மரணம்), மித்ர (மாவீரரானவர்), இந்திர, மேகலா |
| எழுத்துலகப் பிரவேசம் | :– | 1947ல் வீரகேசரியில் |
| இலக்கியத்துறைகள் | :– | சிறுகதை, நாவல், நாடகம், திறனாய்வு, கட்டுரை, Creative essays, வானொலி நாடகம், மொழிபெயர்ப்பு<br>கவிதை, கதைப்பாடல், குறுநாவல், உருவகக் கதை, வரலாற்று ஆய்வு, பதிப்பு முயற்சிகள் |
| வாழ்விடங்கள் | :– | இலங்கை, நைஜீரியா, அவுஸ்திரேலியா, தமிழ்நாடு |

**படைப்புகள் :–**

**நாவல்கள்**

- தீ (1961)
- சடங்கு (1971)
- மத்தாப்பு (1962) (கூட்டு முயற்சி)
- தேடல்
- மணி மகுடம் (கூட்டு முயற்சி)
- மாயினி

**சிறுகதைத் தொகுப்புகள்**

- வீ (1966)
- சதுரங்கம் (கூட்டு முயற்சி) (1971)
- அவா (1993)
- ஆண்மை (1994)
- கீதை நிழலில்
- பூ
- எ.பொ. கதைகள் (2005)
- உறவுகள்

**கட்டுரைகள்**

- இஸ்லாமும் தமிழும் (1975)
- காந்திய தரிசனம் (1969)
- காந்திய கதைகள் (1969)
- ? (அங்கத நூல்) (1972)
- எஸ்.பொ. அறிக்கை (1972)
- நனவிடை தோய்தல் (1992)
- நீலாவணன் நினைவுகள் (1994)
- பெருங்காப்பியம் பத்து (1997)
- பனிக்குள் நெருப்பு
- தீதும் நன்றும் (ஞானம் நேர்காணல் 2007)
- முன்னீடு
- இனி (இனி ஒரு விதி செய்வோம்)

**தன்வரலாறு**

- வரலாற்றில் வாழ்தல் (2003)

**கவிதை**

- அப்பையா (1972)
- அப்பாவும் மகனும் (1999)

**நாடகங்கள்**

- வலை (1972)
- முறுவல் (1994)
- ஈடு
- சாவு (1952)
- முதல் முழக்கம் (1957)
- அனாதைகள்
- அந்த நாள்
- கூண்டுக்கு வெளியே

**படைப்புகள் இடம்பெற்ற பத்திரிகைகள், சஞ்சிகைகள்**

வீரகேசரி, சுதந்திரன், தேசாபிமானி, ஈழகேசரி, தினகரன், இளம்பிறை, கலைச்செல்வி, தேனருவி, தமிழமுது, மலர், மரகதம், ஆகியவற்றிலும் இந்தியச் சஞ்சிகைகளான கணையாழி, பிரசண்ட விகடன், காதல், ரசிகன், ஆனந்தபோதினி, கலைமகள், தாமரை, சரஸ்வதி, கல்கி, எழுத்து யுகமாயினி ஆகியவற்றிலும் அவுஸ்திரேலியச் சஞ்சிகைகளான அக்கினிக் குஞ்சு, மரபு ஆகியவற்றிலும் எஸ்.பொ.வின் எழுத்துக்கள் வெளிவந்துள்ளன.

**எஸ்.பொ.வின் புனைபெயர்கள்.**

"நான்", "சொக்கன் கணபதி மகன் மொக்கன் கணபதி மகன் பொக்கன் கணபதி", "மண்டாடிச் சுப்பர் மகன் கிண்டாடிச் சுப்பர் மகன் கொண்டோடிச் சுப்பர்", "வெள்ளங்காடு வீ. வியாகேச தேசிகர்", "எழுவானூர் ஏகாம்பரன்", "அபிமன்யு", "பழமைதாசன்", "புரட்சிப் பித்தன்", "பிருகன்னளை", "ராஜ்", "மித்ர", "துமிலைத்திமிலன்", சிலருடைய இயற்பெயர்களையே புனைபெயர்களாகக் கொண்டு தான் கரந்துறைந்ததாகவும் எஸ்.பொ.பதிவு செய்துள்ளார்.